உ

சிவமயம்

சொக்கம்பட்டிச் சமஸ்தானம் ஸ்தானாதிபதி

ஸ்ரீ பொன்னம்பலம்பிள்ளையவர்களியற்றிய

வாசுதேவநல்லூரென்னும்

# வாசுதேவனூர்த்தலபுராணம்

மூலமும்,

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர்

## மு. ரா. அருணாசலக்கவிராயர்

இயற்றிய

அரும்பதவுரையும்,

இவை

ஷை வாசுதேவநல்லூர் தர்மகர்த்தர் ஸ்ரீமாந்

## சொ. பழநிக்குமாருப்பிள்ளை

அவர்கள் பொருளுதவியால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிடப்பெற்றன.

1910.

SUNDRA... HIGH COURT VAKIL TINNEVELLY.

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS சென்னை

சிவமயம்.

# முகவுரை.

அநாதிமல முத்த சித்துருவாகிய பரமேசுவரன் ஆன்மாக்களுய்யும்பொருட்டுத் தமது பெருங் கருணையாற் றந்தருளிய நூல்கள் வேதாகம புராணேதிகாசங்களென்பனவாம். இவற்றுள் வேதாகம சாரமே புராணங்களாம். இவை பதினெட்டு வகைப்படும். அன்றி உபபுராணங்களும் பதினெட்டுண்டு. மற்றும் தலபுராணங்கள் எண்ணிறந்தன. இவற்றுள் சைவபுராணங்களே மிகச் சிறந்தனவாகும். அருட்பெருஞ்சோதியாகிய சிவபிரான் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்தருளும் ஒவ்வோர் தலங்களின் புராதன பெருமை, ஆங்காங்குள்ள தீர்த்தவிசேடம், மூர்த்திவிசேடம், அங்கு வந்து பேறுபெற்றோர் சரிதம் ஆகிய இவையிற்றை விரித்துக் கூறுவதே தலபுராணங்களாகும். இத்தகைய புராணங்கள் யாவும்; சூதமுனிவர், அகத்திய முனிவர் முதலிய தவசிரேஷ்டர்களாற் கூறப்பெறுதலின் முனிப்புரோக்த மென்பர்.

இப்புராணங்கள் யாவும் ஆஸ்திக மதத்தின் பலபிரிவினர்க்கும், வேண்டப்படும் கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, பெரியோர் வழிபாடு முதலிய பொது விலக்கணங்களையும்; சுத்தாத்துவித சைவசித்தாந்திகட்கு இன்றியமையாதனவாகிய விபூதி ருத்திராக்ஷங்களையணிதல், சைவாசாரியரைப் பரவுதல், சிவபிரானைத் துதித்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபூசை செய்தல், சிவபுண்ணியங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலய தரிசனஞ்செய்தல் முதலிய புறத்திலக்கணங்களையும்; சிவபிரானுடைய அருட்சரிதைகளை நினைப்பினும் பேசினும் கேட்பினும் கண்டம் விம்முதல், நாத்துடித்தல், உதடு துடித்தல், சரீரம் நடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவியர்வுறுதல், சரீர நடுங்குதல், ஆநந்தக்கண்ணீர் பெருகல், பரவசமுறுதல் முதலிய உடலிலக்கணங்களையும்; பஞ்சாட்சரத்தைச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானை இடைவிடாது நினைவுற்றுக் கல

த்தல் என்னும் அகத்திலக்கணங்களையும் நன்கு விளக்கி நற்கதியிற் சேர்ப்பிக்கும் தன்மையனவேயாம். நல்வினை யாற்றினோர் அடையும் நற்கதிப் பேற்றையும், தீவினை யியற்றினோர் எய்தும் துன்பத்தையும், வழுக்கிவிழுவார்க்கு ஊன்றுகோல் போன்று துன்பமுற்றுழி வந்து தண்ணருள்சுரந்து உய்யக்கொள்ளும் சிவபெருமானின் திருவிளையாடல்களையும் எல்லார்க்கும் அறிவித்துத் தெளிவிப்பது இச்சிவபுராணங்களே யென்பது யாவரும் அறிந்துகொள்ளத்தக்கதொன்றேயாம்.

ஆதலின் பிறவிப் பெருங்கடலைக் கடப்பிக்கும் நாவாயும், மலப்பிணித்துயரை நீக்கும் சஞ்சீவியும் இப்புராணங்களே யெனக்கொள்ளலமையும்.

இத்தகைய பெருமைபெற்ற தலபுராணங்களிலே ஒன்றாகிய இவ்வாசவனூர்ப்புராணம் பாண்டிநாட்டிலே சங்கரநாராயணசாமிகோயிற்கு வடமேற்கிலிருக்கிற வாசுதேவநல்லூர் என்னும் வாசவனூர் சிவக்ஷேத்திரத்தின் பெருமையையும், அங்கே திருக்கோயில் கொண்டருளும் சிவபிரான் றிருவருள் மகிமையையும், ஆண்டுள்ள புண்ணிய தீர்த்தமாகிய நிட்சேப நதியின் சிறப்பையும், அவண்வந்து பேறுபெற்றார் சரிதங்களையும் இனிது விளக்கி நிற்பதேயாம். இச்சரிதம் ஆதியில் பரமேசுவரன் பார்வதிதேவிக்கு உபதேசிக்குங்கால் கேட்டிருந்த நந்தியெம்பெருமான் வேதநாதசன்மருக்குக்கூற, அவர் மார்க்கண்டமுநிவருக்குச் சொல்ல, அவர் வியாதமுனிவருக்குப்புகல, அவர் சூதமுனிவருக்குபதேசிக்க, அச்சூதமுநிவரே நைமிசாரணிய வாசிகளுக்குக் கட்டளையிட்டருளினா ரென்பது இப்புராணம் நைமிசாரணியச் சருக்கம் உ௯-வது செய்யுளால் வெளியாகின்றது.

இப்புராணத்துள்ளே நாடுநகர வருணனைகளும், கற்பனைகளும், வனவருணனைகளும், பத்திச்சுவை மிக்க தோத்திரங்களும், மற்றும் பல நயங்களும் ஆங்காங்கு நன்கு அமைந்துள்ளன. சிலேடை மடக்கு முதலியனவும் சொற்சுவையும் பொருட்சுவையும் சந்த இன்பமும் எதுகை மோனை முதலிய நயங்களும் பற்பல கவிகளிற் காணப்படுவன. இந்நூல்பாயிரமும், கரு. சருக்கமுமாக ௬௩௨ செய்யுட்களால் அமைவுற்றது.

இதனைப் பாடியவர் சொக்கம்பட்டிச் சம்ஸ்தானத்தில் வித்துவானும், ஸ்தானாதிபதியுமாக இருந்து மதிநுட்பத்தால் மிகச் சிறந்தவரென்று பலரும் புகழ்ந்துரைக்கும் பொன்னம்பலம்பிள்ளையவர்களேயாவர். முற்காலத்துப் பெரிய சம்ஸ்தானங்களிலெல்லாம் தக்க வித்துவான்களே மந்திரிகளாக இருந்துவந்தனரென்பதற்கு இப்பிள்ளையவர்கள் சரிதம் தக்க சான்றாகும். அரசர்கட்கும் மந்திரிகட்கும் கல்விஞானம் அவசியம் வேண்டற்பாலதே. அதினும் மந்திரிகள் கல்விஞான முற்றவர்களாயின் அந்த மன்னர்க்குப் பெரும்புகழ் உண்டாதல் திண்ணம். இதனை இப்பிள்ளையவர்கள் தம் அரசர்க்கு ஆபத்துவந்த எத்தனையோ சந்தர்ப்பங்களில் தம் மதிநுட்பத்தால் அவற்றை விலக்கியும், மற்றும்பல சமயங்களில் புகழ்ச்சியையும் வெற்றியையும் உண்டாக்கியும் வந்தமையே வலியுறுத்தாநிற்கும். "மதிநுட்ப நூலோடுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற்பவை" என்ற தேவர் திருவாக்குக்கு இலக்கியமாவார் இவரே. மதிநுட்பந்தரத்தக்க நூலாராய்ச்சியற்ற தானாதிபதிகளால் நம் நாட்டில் எத்தனை குறுநில மன்னர் வறியராயினர், கெட்டொழிந்தனர். தற்போதுள்ள ஜமீந்தார்களாவது தம்முன்னையோர் சரித்திரங்களையுணர்ந்து தக்க பண்டிதர்களை மந்திரிகளாகக் கொண்டு ஆட்சிபுரிவார்களாயின் நம் நாட்டுக்கும் தமிழுக்கும் தமக்கும் நலமும் சிறப்பும் புகழும் உண்டாகுமென்பதை யுணர்வார்களாக. இப்பிள்ளையவர்கள் காலம் சற்றேறக்குறைய 80 வருஷங்கட்கு முற்பட்டதென்பர்.

இங்ஙனம் சிறந்த இப்புராணம் தாலபத்திரச் சுவடிகளில் அருகி வழங்கப்பட்டிருத்தலைக்கண்டு மனம்பொறாது அச்சிட்டுப் பலர்க்கும் உபகரிக்கக்கருதி வாசவனூராகிய வாசுதேவ நல்லூரில் பரம்பரைச் சைவ வேளாள குலத்திலுதித்தவரும், செல்வமும், கல்வியும், சிவநேயமும், மிக்கவரும், விருந்தோம்பலாதிய உத்தமகுணங்களைக்கொண்டவரும், பரோபகாரியும்; ஆகிய ஸ்ரீமாந் சொ. பழநிக்குமாருப்பிள்ளையவர்கள் தம்பாலுள்ள ஓலைச்சுவடியை மதுரைக்குக்கொண்டுவந்து மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவானும் நூற்பரிசோதகரும், சிவரகசியம், புதுவைத்தலபுராணம், பாவநாசத்தலபுராணம், சங்கரநாராயணசாமிகோயிற்புராணம், திருக்குற்றாலத்தலபுராணம் முதலியபல

புராணங்களை ஆராய்ந்து அரும்பதவுரையும், வசனமும் எழுதிச்சேர்த்து அச்சிடுவித்தவர்களும் ஆகிய எனது சேஷ்டசகோதரர் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களிடத்தில் கொடுத்து இதனை ஆராய்ந்து அரும்பதவுரையெழுதிச்சேர்த்து அச்சிட்டுத்தரவேண்டுமெனக்கூறி அதற்குவேண்டும் பொருளையும் உதவினார்கள். அவர்கள்கருத்தின்படியேமிக்க அழகாகப்பதிப்பிட்டு வெளியிடலாயிற்று. அரும்பதவுரையை அங்கங்கே சேர்த்துப்பதிப்பிட்டிருத்தல் படிப்பவர்கட்கு மிகப்பெரும் பயன் தருவதேயாகும். மற்றைத் தருமகர்த்தர்களும் இப்பிள்ளையவர்களைப் பின்பற்றித் தங்கள்தங்கள் பரிபாலனத்துட்பட்ட ஸ்தலபுராணங்களை இங்ஙனமே வெளியிடச்செய்வார்களானல் நம் தமிழும் சைவமும்செழித்துத் தழைக்கு மென்பதிற் றடையுண்டோ! சிவபுராணங்களை யெழுதினவர், படித்தவர், கேட்டவர், பொருள் கூறினோர், இதற்குப் பொருளுதவினோர் ஆகிய இவர்கள் இம்மையிற் சகல இன்பத்தையும் அநுபவித்து மறுமையில் ஒவ்வோரெழுத்திற்கு ஒருகற்பகாலம்வரை கயிலாசத்தில் வீற்றிருப்பார் என்று உபதேசகாண்டம் உபதேசிக்கின்றது. அதனை,

> "எழுதி யன்பருக கீந்தவர் திருமுறை யெழுதித்
> தொழுது தம்மனைத் தொகுப்பவர் பெருநலந் துய்த்தீண்
> டொழுகு காலம்வீற் றிருவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
> கழிவி லாப்பெருங் கயிலையுற் றருங்கதி யடைவார்."

என்னும் அருமைச்செய்யுளாற் காண்க.

ஆதலால் பரமபதியாகிய சிவபெருமான் திருவிளையாடல்களைக் கூறும் இப்புராணத்தை அச்சிடுவித்த உத்தமகுண சிவநேயச் செல்வராகிய ஸ்ரீமாந் பழநிக்குமாருப்பிள்ளையவர்கள் இம்மையிலெல்லா இன்பமும் அநுபவித்து இன்னும் பற்பல சிவபுண்ணியங்களைச் செய்து நெடுங்காலம் வாழ்ந்திருக்கும்படி திருவருளைச் சிந்திக்கின்றேன். சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

வித்தியாபாநுப் பத்திராதிபர்

மதுரை.

சிவமயம்.

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோதகர்

மு. ரா. அருணாசலக் கவிராயர் செய்த

# சிறப்புப்பாயிரம்.

---*---

திருமலிதன் னிடத்தில்வந்து தீர்த்தமா டினர்க்குயர்ந்த செல்வ மின்ப, மருவுகல்வி யாயுண்முத்திப் பெருவாழ்வு வழங்குமிந்த வண் மை யாலே, பெருகுபுகழ் திரண்டுபல வுருவாகி யெழுந்ததுபோற் பிறங்குஞ் சீர்சால், பருமைமிகு வெண்டரள மலைகொழிக்கும் பொ ருனைநதிப் பாண்டி நாட்டில். (க)

பருவம்வரிற் சிவமாவ ரென்பதறி யத்திகிரிப் பகவன் மூன்று ளருவுருவத் திருமேனி யென்னுமருட் சிவலிங்க மாங்குற் றலத் திருநகர்க்கு வடகீழ்பாற் சிவனுமந்தத் திருமாலுந் திகழ்தன் பேரா லொருவரெனுஞ் சங்கரநா ராயணர்கோ யிலின்வடமேற் குளதோர் தானம். (உ)

அத்தலம்யா தெனிற்செழியன் போர்க்குடைந்து தேவர்களுக் கரையன் சென்னி, வைத்தமரு மணிமௌலி யிழந்துவிட்டா னென் னுமவ மானந் தீர்த்த, சுத்தநீர் நிட்சேப நதிவான்கங் காநதிபோற் றோன்ற யாரு, மெய்த்தபெரும் புலவர்கள்சூழ் வாசவனூ ரெனும் பெயரால் விளங்கு மன்றே. (ந)

ஆயவிந்தத் தலத்திலெம்மா னர்த்தநா ரீசரா யமர்த லாதி, மே யபல சரித்திரமும் புனைந்துரையா விளம்பாமன் மெய்ம்மை யாகத் தூயசொக்கம் பட்டியிற்று ரைபதியா யிருந்தரசன் றுணையா யுற்ற ஞாயமுணர் தருபொன்னம் பலம்பிள்ளை புராணமென நவின்றிட் டானால். (ச)

அன்னநய புராணமிது காறுமிலை மறைகாய்போ லமர்ந்த தோ ர்ந்தே, யென்னருங்கண் டுவப்பெய்தச் செய்வமென வெண்ணி யெ ன்பா லீந்தி தற்கு, நன்னரரும் பதவுரையொன் றெழுதியச்சி லிட் டுநீ நல்கென் றூற, வின்னதன்றே வுடலெடுத்த பயனிவன்யா ரெ ன்னில்யா விசைப்பன் கேண்மின். (டு)

# சிறப்புப்பாயிரம்.

முன்சொலுமவ் வாசவனூர் வேளாள ரெனும்பொருளை முழுதுங் காட்டற், கின்சொலுமீ கையும்பொருளாக் கைக்கொண்டு கன்னென்ன விருந்து வாழ்வோன், பின்சொலொன்று சொல்லாமன் முன்சொலே நிலைநிறுத்தும் பெற்றி வாய்ந்தோன், தென்சொல்வாரியிற்றிளைத்த சொக்கலிங்க சீமான்றன் செம்மலானோன். (௬)

பத்திதனின் மார்க்கண்ட னும்பழநிக் குமாரெனப் பகரும் பேரான், புத்திரபாக் கியமுதலப் பாக்கியமும் வளர்ந்தோங்கிப் பொருந்துஞ் சித்த, சுத்தியுளா னிவன்பெருமை யார்சொலவல் லாரன்னான் சொன்ம ரும, லெத்திரமுஞ் சிறிதுமிலை னுரையெழுதி யச்சினிலிட் டீந்தேன் மாதோ. (௭)

இவனருமைக் குணங்களெலாந் தெரிந்தன்றோ வித்தலத்துக் கேற்ற மான, சிவதரும பாலனஞ்செய் தர்மகர்த்த னெனமேலோர் சிறப்ப'வைத்தா, ரவனியின்மற் றுளதலங்கட் காயபுரா ணமுமவ்வா றச்சி விட்டுப், பவமறுமவ் வத்தர்ம கர்த்தர்தரிற் புகழோடறம் பவிக்கு மன்றே. (௮)

# சாற்றுக்கவிகள்.

வாசுதேவநல்லூர் மகா-ள-ள-ஸ்ரீ
பழநியாண்டிப் புலவரவர்க ளியற்றியவை.

தருநிழற்சிம் மாசனம்வாழ் சதமகன்வேண் டுதற்காத்
தண்கயிலை யிருந்தெழுந்து தருவுயர்வா சவனூர்
மருவிவளா ருமாதேவி யென்னுமிடப் பாக
வல்லிசிந்தா மணிநாதர் மான்மியந்தென் மொழியிற்
பொருளுயர் புராணமதாப் புரிந்தனன்சொற் புகழே
பொங்குகங்கா குலந்தனிற்பொன் னம்பலமே லான
திருவுயர்பொன் னம்பலசி காமணியெத் திசையுந்
தினந்துதித்து மதிக்குமதித் திடமுயர்நா வலனே. (க)

பூமேவு புண்ணியப் பொன்னுளு நாளு
மேமேவு சாலி வேலிதென் மண்டலம்
வெண்பொன சலந்தனின் மேவிய கோவின்
கண்பே ரருள்சேர் கௌரிவி ளைய
தரியரன் பங்கமர்ந் தானெனச் சொல்வர்யான்
றெரிய விரும்புகேன் றெரிசனந் தாவெனப்
புன்னை வனந்தனிற் புரிகுவாய் தவசதற்
கன்னகா லையினி லருளுது மெனற்கு
மரன்பெரி தென்று மரிபெரி தென்றுந்
திரம்பல பேசித் திரிகுவ தான
சங்கபத் மாவெனுஞ் சர்ப்பங்கள் வந்தங்
கிங்கித மாத்தவ மியற்றிய வதற்குஞ்
சங்கர நாரணர் தமதுரு வொன்று
யங்கெழுந் தற்புத மானகாட் சியதருள்
புன்னை வனப்பொன் புரந்தனைச் சார்ந்து
மன்னிய வாசவன் மாநகர் வாசச்
சிந்த வனந்தனிற் சிந்தையி னுவந்து
சந்ததம் வாழ்வுயர் தானுமெய்ஞ் ஞானக்

கோமகள் வாமங் குடிகொளக் கொடுத்துத்
தாமனு வயித்யசிந் தாமணி நாதர்
மான்மிய மெல்லாம் வரைந்தா ராய்ந்து
தான்வியந் துரைக்கத் தக்கது வாக
முன்வட மொழியின் மொழிந்தவை யெல்லாந்
தென்மொழி யதனாற் செய்தனன் புராணங்
கங்கை குலத்திற் கருணையி னுருவா
யெங்குந் துதித்திட விப்புவி வந்து
தென்மலைச் சார்பிற் றிரிகூ டாசலத்
தன்னசத் திரமுத லாலயபல் பணிகளுஞ்
சித்திர சபையிற் செப்போடு வேய்ந்து
மித்தரை யதனி லேற்றம தான
தடவரை புரிசைய தாகச் சூழும்
வடகரைச் சம்ஸ்தா னத்தினில் வாழுஞ்
சின்னணைஞ் சேந்திர திடசிம் மேறு
மன்னவன் றன்முன் மந்திரி யாகி
மன்னவை யெல்லா மகிழ்வாக் குரைக்கும்
பொன்னம் பலவற் புதநா வலனே
யக்கா லஞ்சொல் லருமைப் புராண
மிக்கா லத்தச் சிட்டு விளக்கினன்
வருவிருந் தொக்கல் வருந்தா தருந்தத்
தருதரு வெனவனந் தந்தா தரிக்குந்
தனதனை யனைய தாகவித் தலத்திற
கனதன நிறைந்த கனகமா மேரு
சிதம்பரம் பழனி செந்திற் கந்தன்
பதம்பர வித்தினம் பணியுநன் னியமக்
கட்டளை வைத்ததற் கான வகைப்பொருள்
திட்டம தாய்ச்சேர்த் திடுந்திட சீலன்
சீவனுக் குரமே திகழுநற் பொருளெனப்
பாவலர் பாடிய பனுவலின் படியே
வாரம தாய்த்தே வாரமெய்ப் பொருளின்
சாரமெ லாந்தன தகத்தினி லுணர்ந்தோன்

ஞானநூல் விசாரணை நன்றென் றறிந்து
தானநு பவத்திற் சற்குண மிகுந்து
தினமன் றுவந்து சிவார்ச்சனை புரிந்தும்
பணமுடன் வாழும் பாக்கிய யோகச்
சொக்கலிங் கேந்திரன் சுகதவந் துதித்த
மக்களின் மூன்றா மலிங்கவே டுணையாய்ப்
பெருமையிற் சிறந்து பேர்கு ணிறைந்து
தருமகர்த் தாவெனுந் தன்மைநன் மையதாய்ச்
சிவதெரி சனையுடன் றிருவிழா முதல
நவநவ மாக நடாத்து விவேகன்
கழனி விளைநெற் கனதனம் பெற்றுவாழ்
பழனிக் குமாருவிற் பன்னமே லோனே. (௨)

---

வாசுதேவநல்லூர் மகா-ள-ள-ஸ்ரீ பழனியாண்டிப் புலவரவர்கள்
மாணாக்கராகிய மகா-ள-ள-ஸ்ரீ

## திருமலையாண்டிக் கவிராயரவர்கள் பாடியவை.

சிந்தகமா வனந்தல்புரிந் தவனுமலன் சேயவனுஞ் சித்த மன்ன
சிந்தகமா வனத்துமையை யிடம்வைத்தோ னெனத்துதிக்குந் திக
ழுஞ் சென்மனுஞ், சிந்தகமா வன்வணக்கஞ் செய்யுமன்பர் செறிகின்
ற தேவை தன்னிற், சிந்தகமா வனந்தனிலே முளைத்தெழுந்த சிவசி
ந்தா மணிநா தற்கே. (௩)

செந்தமிழின் காப்பியத்தை யியற்றுதலா னமதுபவந் தீரு நீலக்
கந்தரன்றன் பதஞ்சேர வேதுவே யிதுவென்னக் கருதி மேழிச்
சுந்தரமாந் துவசத்தன் வடகரையின் சமஸ்தானந் துலக்குநீதி[ தோர்.
மந்திரிபொன் னம்பலநற் கவிமன்னன்முன்பிசைத்தான்மகிழ்ந்து மா

மருக்கமலத் தடஞ்சூழு மூற்றுமலைச் சமஸ்தான வாசல் வித்வான்
திருக்கமலப் புலவரிது விந்நூலைச் சீர்திருத்திச் சிறக்கச் செய்தா
னிருக்கமல வேதமுத லாய்த்தோர்க ணிறைகின்ற திகழுஞ் ஞான
வருக்கமல வத்தேவை நகர்வாழும் பழனிக்கு மாரு வேளே. (௫)

கங்கைகுலத் துதித்துவந்த பழனிக்கு மாருவென்னுங் கன வான் மைந்த, னங்குணவான் சொக்கலிங்க நரேந்திரனுந் தர்மகர்த்தா வான நாளின், மங்கையிடத் தானவற்கே நிலவளனும் பலவ ளனு மன்னச் செய்தே, யிங்கிதமாம் பணிவிடைக ளியற்றியபின் சிவபதவி யெய்தி னனே. (௪)

அன்னவன்றன் றனையர்களி லவனிசக மாதரிவை யசத்தே யான மின்னனிக ராமெனவே விரத்தியுற்று முமுட்சுவாய் விளங்கி நின் றே, தன்னையுணர்ந் திடயோக ஞானசா தனமுயன்று சனகன் போ லே, மன்னுமெம்பி ராமலிங்க சுகுணனுமுன் னுதிக்கப்பின் வந்து தித்தோன். (௫)

பூமகளு நாமகளுஞ் சயமகளும் புகழ்மகளும் பொருந்தி வாழ் வோன், காமனையே நிகர்க்கின்றோன் கவிவாணர் தங்களுக்கே கனக மாரி, சேமமுறப் பொழியெழிலி சேரலராங் கரிகளையே செயிக்கு ஞ் சிங்கந், தாமமணி திண்புயத்தான் சைவசிகா மணியான தகை மை யாளன். (௬)

சிந்தனையைச் சந்ததமுந் தேவியிடத் தான்பதத்திற் செலுத் து மன்பன், புந்திமகிழ் தர்மகர்த்தா வாகிநிகழ் காலத்திற் பூத லத் தோர், வந்தனஞ்செய் விழாவதனிற் பத்தியுலா நன்கியற்றி மகிழச் செய்தோன், முந்துமிவன் மூதாதை யாற்றிருத்தல் செய்வித்த மு ன்னு நூலே. (௭)

நித்தமுமே யுளத்தாய்ந்தப் பரமசிவன் கிருபையினு னிமல ஞான, வுத்தமராம் பத்தர்குழாம் படித்துய்யத் தமதுபொரு ளுதவி யாலே, சித்திரமாய் விளங்கவச்சிற் பதித்திடவே செய்வித்தான் றெய்வ பத்தி, வித்தகனும் பழனிக்கு மாருவள்ள லெனுஞ்சுகுண மேலோன் றனே. (௮)

தலைவன்கோட்டைச் சம்ஸ்தான வித்துவான்

வாசவனூர் மகா-௱-௱-ஸ்ரீ

## தி. கந்தசாமிப் புலவரவர்கள் இயற்றியவை.

திங்கள்வெண் பிறையுந் தெண்டிரைநதியுந் திகழ்புரி சடிலநா
யகனு, மங்கயற் கண்ணி யகிலநா யகியு மயிற்கரத் தெந்தைசெவ்
வேளுங், கொங்கலர் நிம்பங் கமழ்புய வழுதி குலத்துதித் தரசியற்
றியமா, றுங்கம தாலெந் நாட்டினு மகிமை துன்னிய கன்னிநன்
னாட்டில். (க)

கொண்டல்கண் டுயிலும் புன்னையங் காவிற் குறுகிநோற் றுயர்
சங்க பதும, ரண்டரும் வியப்பச் சங்கர நாரா யணர்திருச் சேவை
பெற் றுய்ந்த, வண்டலத் துக்கோ ரோசனை யெல்லை வாயுதிக் கினி
ற்சிந்த வனமொன், றுண்டதிற் றேவேந் திரனடைந் தன்பா யுலகி
டைப் பலதலத் துள்ள. (௨)

ஐயவெம் மூர்த்தங் களினுமற் புதமா மத்தநா ரீசுரப் பதிட்
டை, செய்துபூ சித்த செயலினாற் றேவை செழிப்புறு வாசவ னூ
ரென், றெய்திரு பெயர்த்த லத்தின்மான் மியமுன் னிசைவட மொ
ழியிலுள் ளவற்றைப், பையவண் டமிழில் வடகலைத் தானு பதி
பொன்னம் பலக்கவி வல்லோன். (௩)

தெவிட்டலி லமுத மெனப்புரா ணமதாய்ச் செய்தன னஃ
தையங் நகரிற், பவித்திரம் புரிகங் காகுல திலகன் பழனிக்கு மாரு
வே ணெஞ்சக், குவிப்பொடு நோக்குங் காலையி னூடு குளிர்நகர் தல
நதி மூர்த்தி, தவிப்பறு சிந்த வனமுயர் மகவான் றனிமகு டபங்க
மவ் வவற்றில். (௪)

உளசில கவிபின் னமுற்றிருக் ததையோர்ந் தூற்றும லைச்சமத்
தானக், கிளர்புகழ் வித்து வானுமை யன்பு கெழுதிருக் கமலப்பா
வலனால், வளமுறப் பூர்த்தி செய்தன னன்னோன் மகிழ்வெளத் தி
ரனர னன்புற், றிளகிரு தயச்சொக் கலிங்கமால் சுதனெம் பிராம
லிங் கேந்திரன் பின்னோன். (௫)

பத்திமா னெக்கா லமுந்தர்ம கர்த்தா பழனிக்கு மாருமெய்ச்
சிமா, னத்தியா வரும்பார்த் தெளிதினன் குணர்ந்து நன்னெறி
யொழுகியுய்த் திடுவா, னுத்திகூர் தருநல் லச்சினிற் பதித்தா னுவந்
தூரும் புகழ்விளக் கினனென், றத்திமெல் லுரிச்சிந் தாமணி நாக
னருள்மழை பொழிந்தனன் மாதோ. (௬)

வாசுதேவநல்லூர் மகா-ள-ள-ஸ்ரீ

## பழனியாண்டிப் புலவரவர்கள் செய்த

# புராணசாரம்.

---

பொன்னூ ரும்பொன் வாழ்வுயர்பூப் பொன்னூ மன்னும் பொன்னகரின், மன்னூர் வழுதாய் வந்துவந்தே வணங்க விணங்கும் வரங்கொடுத்துத், தன்னூ கழதி ஞகமக டனக்கோர் பாகந் தனைக்கொடுத்துத், தென்னூ டோங்குந் தேவைவளர் சிந்தா மணிமெய்ச் செழுஞ்சுடரே. (க)

சதமா மகனு மிலருமிர சதமா வரையி லுறையுமிறை, பதமா மலரைப் பணிந்தேத்திப் பாண்டி யன்பொன் மகுடபங்க, மதமாப் புரிந்தா னவனுட்டென் வண்போர்த் தலமொன் றமைத் தோங் கென், றிதபா வேண்டத் தேவைவள ரெழில்சேர் சிந்தா மணித் தேவே. (உ)

மூந்தத் தருவிந் திரன்பாவித் தமிழ்நாட் டுயர்வு தருந்தேவை
வந்தெத் தினமு மாறுதே வருநிட் சேப நதிபடிய
மூந்தப் போன மகுடம்வர முடிமீ தணிந்துன் னடிபணியச்
சிந்தத் தருநீ மூலில்வாழுஞ் சிந்தா மணிமெய்ச் செழுஞ்சுடரே. (ங)

கயிலை யினில்வச் சிறாங்கனுருக் கரந்தின் குவந்து கனமிருந்த
சுயில முறைசிந் தவனமதிற் றுன வினமாய்த் தழைந்தோங்கிப்
புயிலும் பழைய படிவடிவாய்ப் பரம பதம்பெறற் றிடவருளிச் [ரே.
செயிமென் மணிசேர் தேவைவளர் சிந்தா மணிமெய்ச் செழுஞ்சுட

மேவுதநம்பி மனைசுனையில் வீழ்ந்தா ளவளைத் தான்றேடி
நீத மறையோன் செல்வழியி னிறைகும் பனைக்கண் டடிதொழுது
பேதுமிலதா யுள்ளமெலாம் பேசி முனிசொல் படியழைக்கச்
சீத மதிவ தனப்பெண்வருந் தேவைச் சிந்தா மணித்தேவே. (ரு)

மலய மலைக்கும் பனுங்கங்கை வற்று நதிகள் பலவுமொரு
கலய மமைத்துப் புதைத்ததைரா கவனுங் கணேயே விடவதுவந்
நிலய மதினா டுருவவுமே னின்றய வருநிட் சேபநதி
சிலய மிகச்சூழ் தேவைவளர் சிந்தா மணிமெய்ச் செழுஞ்சுடரே. ()

வாரி யெனப்பன் மணிவரையின் வாரித் தீர்த்த வாரிநதி
பாரி னுயர்வா கவரவெதிர் பத்தர் குழுச்சீர் பாடிவரந்
தாரி யமுஞ்சூழ் தொனித்துவரச் சுகமே மிகத்தோ யமதாடிச்
சீரி னுயர்தே வையின்வாழுஞ் சிந்தா மணிமெய்ச் செழுஞ்சுடரே.

பாக மிருக்குங் குயிலேயிடப் பாக மிருக்கப் பார்த்தெவரும்
யோக மிருக்கு முணக்குமைசேர் யோக மிருக்கு தெனப்பணிய
வாக மிருக்கு மறியாதா யாக மிருக்குந் தூவத்தவர்சேர்
சேக மிருக்குஞ் சிந்தவனத் தேவைச் சிந்தா மணித்தேவே. (௮)

ஆல மமுத மாப்பருகி யமரர் தமைக்காத் தூன்பருக்காய்க்
காலன் றனக்காய்க் காலினையெக் காலுங்கருத்தி லிருத்தியரு
ளேல வருபொன் னிரவிவர்ம னென்போன் மின்போ லேதுலங்கிச்
சீல மிகுந்தா னிருக்கவைத்தா டேவைச் சிந்தா மணித்தேவே. (௯)

பாரான் குலசே கரவரசன் பாரா தூரத்திற் பயந்தபிதாப்
பேரா லுனைப்பே ராதமைக்கப் பெருநோ யவன்பொன் னுருநோவ
வேராப் பகலும் வருத்தல்கண்டு விரும்புன் னடியில் முடிவணங்கிச்
சீரா லயஞ்சித் திரமெழுதத் தீர்த்தாய் சிந்தா மணித்தேவே. (௰)

வாழி வேத வழிவழுவா மறையோர் வாழி மன்னர்களும்
வாழி வைசியர் வாழியருள் வாய்த்த புகழ்ச்சூத் திரர்வாழி
வாழி யறஞ்செ யிடப்பாக வல்லி வாழி வாசவனார்
வாழி சிந்தா மணிநாதர் வாழி வாழி வாழியவே. (௧௧)

# சருக்க அகராதி.



| பக்கம் | சருக்கப்பெயர். | பாட்டு எண் |
|---|---|---|
| க௰க | இடப்பாகம்பெற்ற சருக்கம் ... ... | ககூ |
| க௰சா | இந்திரன் மகுடபங்கம்பெற்ற சருக்கம் ... | உஎ |
| ககக | இந்திரன் வரம்பெற்ற சருக்கம் ... ... | ருங |
| கஉஉ | இரவிவர்மன் பதம்பெற்ற சருக்கம் ... ... | சகூ |
| கஙங | குலசேகரனுக்குக்குட்டரோகந்தீர்ந்த சருக்கம் | ஙரு |
| எஅ | சம்பராரிச் சருக்கம் ... ... ... | சஉ |
| சசா | சிந்தவனச் சருக்கம் ... ... ... | ருசா |
| உசா | தலவிசேடச் சருக்கம் ... ... ... | ங௰ |
| அஎ | திருக்கல்யாணச் சருக்கம் ... ... ... | சாசா |
| உ௰ | திருநகரச் சருக்கம் ... ... ... | உஎ |
| கஉ | திருநாட்டுச் சருக்கம் ... ... ... | ஙஉ |
| ருகூ | திருவவதாரச் சருக்கம் ... ... ... | கூஉ |
| ஙங | நதிவிசேடச்சருக்கம் ... ... ... | ஙரு |
| ரு | நைமிசாரணியச் சருக்கம் ... ... ... | ங௰ |
| க | பாயிரம் ... ... ... ... | கசா |
| சக | மூர்த்திவிசேடச் சருக்கம் ... ... ... | உஉ |

உ

கணபதி துணை.

# வாசவனூர்ப் புராணம்.

## பாயிரம்.

N.A.V. SOMAS... HIGH COURT VAKIL TINNE...

### காப்பு.

விநாயகர் வணக்கம்.

பொன்ன கச்சிலை யான்புகழ் சூதனூர்
சொன்ன தேவைப் புராணந்தென் சொல்வழி
பன்ன வேசண் பகத்தரு நீழலின்
மன்னு மைங்கரன் றாளை வழுத்துவாம்.

சிவபெருமான்.

தேர்கொண்ட நெடுவீதித் தேவைவளர் சோதிநடஞ் செய்யு மாதி, நீர்கொண்ட செம்பவளக் காடன சடாமகுட நிமல மூர்த்தி, யேர்கொண்ட மால்வணங்கி யேத்துசிந்தா மணிநாத வெம்மான் கஞ்சத், தார்கொண்ட மலர்ப்பதத்தைத் தலைக்கொண்டு பிறவிவினை தவிர்க்க லாமே. (௧)

இதுவுமது.

வேறு.

இருநீர்மதி முடியார்தம திடமீதினோர் பிடியார்
திருமாலெனும் விடையாரெழி றிகழ்மான்மழு வுடையா
ரொருபாலன பொடியார்புலி யுடையாரதிர் துடியா
ரருணையகர் கருணாகர ரடிமாமலர் பணிவாம். (௨)

---

(அரும்பதவுரை) நகம்-மலை. சிலை-வில். தேவை- வாசுதேவநல்லூரென்னும் வாசவனூர்.

(௧) கஞ்சத்தார் - தாமரைமலர்மாலை.

(௨) இருநீர் -பெரியசலம், கங்காநதி. ஒரு -ஒப்பற்ற. பாலன - பால்போன்ற. பொடியார் - விபூதியணிந்தவர். துடியார் - உடுக்குடையவர்.

இதுவுமது.

அம்போதயன் றனையாய்வரு மலர்மாமுடி துருவத்
தம்போதய னடிதேடவுந் தனியேமுத லானோன்
கும்போதயன் புகழுஞ்சனற் குமரர்க்கரும் பொருளைச்
சொம்போதயன் றேவைப்பரன் றுணைத்தாண்மலர் பணிவாம். (ங)

நடராஜர்.

அம்புவியி னுள்ளசரா சரங்க ளாட வமரர்முனி வரர்முதலோ ரருள்பெற் றுடத், தும்புருநா ரதரிசைகள் செவியூ டாடத் தும்பி முகன் குமரன்முன்பு துதிசெய் தாட, நம்புமைமா ருளமுழ வொலி செய் தாட நதியாட மதியாட முடியு மாடச், செம்பொன்மணி மன் றத்தே திருக்கூத் தாடுந் தேவைநட ராசர்பதஞ் சென்னி சேர்ப் பாம். (ச)

சந்திர சேகரர்.

கொந்திசையு மலர்க்கூந்த லிமயமகட் கொருபாகங் கொடுத்த கோவை, முந்தியபூ மதுவயல்க டொறும்பாயுந் தேவைவளர் முக் கட் டேவை, நந்திருந்த செங்கரத்து மாதவர்மா தவர்பிரமர் நயந்த தேவ, ரிந்திரசே கரர்பரவுஞ் சந்திரசே கரரிருதா ளிறைஞ்சு வாமே.

இடப்பாகவல்லியம்மை.

தலப்பாகந் தனிலுயர்ந்த தேவைவளர் கரும்பையன்பர் தமிழ்ப்பா மாலை, சொலப்பாகந் தருதேனை யிமயவரை யிளம்பிடியைச்

---

(ங) அம்போது - அழகிய தாமரைப்பூ. தனை - அளவு. ஆய்வரும்-ஆராய்தற்கரிய. துருவ - தேட. தம்போதயன் - தூணிலே தோன்றிய விஷ்ணு. கும்போதயன் - கும்பத்திற் பிறந்த அகத்தியமுனிவர். சொம்பு...... ...........அயன் - ஐயன். (போலி)

(ச) உமை - உமாதேவி. முழவு - மிருதங்கம்.

(ரு) கொந்து - பூங்கொத்து. மாதவர் - பெரியமுனிவர். தேவர்-தேவராகிய. இந்திரசேகரர் - தேவேந்திரனைச்சேர்ந்த கூட்டத்தார்.

(சு) தலப்பாகம் - பூமியின்பகுப்பு. பாகம்-பக்குவம். சுருதி - வேதத்தின். முன் - முன்னுள்ள பிரணவப்பொருள். புகல் - சொல். நூல்நுவல்-

சுருதி முன்பு, கலப்பாகந் தாவெனவே செவிதாழ்த்தோர் கலப்பான கனியை நானு, வலப்பாக மொழியாளை யிடப்பாக நாயகியை வணங்கல் செய்வாம். (௬)

இதுவுமது.

தெருள்விளைந்த மனத்தாளைச் சீர்விளைந்த பதத்தாளைச் சிறக்குங் கார்போ, லிருள்விளைந்த குழலாளை யெழில்விளைந்த வுருவாளையிருக்கின் றென்றே, மருள்விளைந்த விடையாளை மதிவிளைந்த முகத்தாளை வாரி போல, வருள்விளைந்த கண்ணாளை யிடப்பாக நாயகியையகத்துள் வைப்பாம். (௭)

சேண்பக விநாயகர்.

அன்பர்பவத் தறிபிடுங்கி யிருவினையா நிகளமதை யறுத்துவீட்டி, வன்புபுரி யறுவர்பகை தவிர்த்துமல மலைதகர்த்து மாயையாய, துன்பசமுத் திரமுழக்கி முத்தமிழ்மும் மதம்பொழிந்து சுகமே நல்கு, மின்புறுசண் பகக்களிற்றி னிணைமலர்த்தா டுணையெனநெஞ் சிருத்து வாமே. (௮)

சுப்பிரமணியர்.

துயரோட வமரர்தம துலகுகுடி யேறியின்பந் துய்த்து வாழச், செயிரோட வவுணர்கிளை சிதைந்தோடச் சயமுகத்தான் சிங்கன் மெய்விட், டுயிரோடக் கிரியோட மரமோடன் றிறத்துளைசெய்

---

சாத்திரங்களாற் சொல்லப்படுகின்ற. அப் பாகு அம்-அந்தத்தேன்பாகுபோன்ற அழகிய.

(எ) தெருள் - தெளிவு. இருக்கு - இருக்கின்றது. (மருஉ) இன்று - இல்லை. மருள் - மயக்கம்.

(அ) பவத்தறி - பிறவியாகிய தம்பம். நிகளம்-தளை. வீட்டி - கெடுத்து. அறுவர் - காமமுதலியஆறுபகைவர். உழக்கி - கலக்கி.

(௯) துய்த்து - அநுபவித்து. செயிர் - கோபம். அவுணர்-அசுரர். சிங்கன் - சிங்கமுகாசுரன். கிரியோடு -கிரவுஞ்சமலையுடன். அ மர மோடு- அந்த (சூரபன்மனுகிய) மாமரத்தின் வயிறு. அன்று - அக்காலம். இற - கெட.

தோடும் வேலான், மயலோட வள்ளியிரு பதம்பரவு மெந்தைபதம வணங்கல் செய்வாம். (கூ)

மூவர்கள்.

பவக்கடலைக் கடத்துமொரு தோணிபுரத் தமிழ்விரகர் பதத்தை வாழ்த்தி, யவக்குணத்துக் குண்டரிடுங் கன்மிதப்பிற் கடல்கடந்தா ரடிகள் போற்றி, யெவர்க்குமறி வதற்கரிய சிவனையொரு பெண்மு னிவற் றிடத்தூ தேவுந், தவக்கொழுந்தாய்த் தமிழ்மாரி பொழியு மொரு சுந்தரன்ற டலைமேற் கொள்வாம். (க0)

மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆசகன்ற பதஞ்சலியும் வியாக்கிரபா தனுங்காண வரிமன் றத் திற், றேசுறநின் றுடுமெழிற் சிவன்றனக்கே நன்னேசஞ் செலுத்தி ச் செய்ய, வாசகங்க ளறுநூறுங் கோவையொரு நானூறும் வழுத் து நாவார், பாசமறுத் துயர்ந்தமுத்தர் மாணிக்க வாசகர்தாள் பணி தல் செய்வாம். (கக)

சண்டேசுரர், அகத்தியர்.

வேறு.

தந்தை தாண்மலர் தன்னைத் தடிந்துமே
யெந்தை தாளினி லெய்திய கோவையுஞ்
சந்த மார்தென் மலைமுனி தாளையுஞ்
சிந்தை மீது குடியெனச் சேர்த்துவாம். (கஉ)

முனிவர்கள்.

கோத மன்னிரு கோகன கத்தைநேர்
பாத மும்மெய்ப் பராசர் சரணமும்

---

(க0) தோணிபுரம் - சீகாழி. தமிழ்விரகர் - தமிழறிவிற்சிறந்த திருஞான சம்பந்த சுவாமிகள். குண்டர் - சமணர்.

(கக) ஆசு - குற்றம். அரிமன்றம் - பொன்னம்பலம். வாசகம் - திருவாசக நூல். கோவை - திருக்கோவையார்.

(கஉ) தந்தை - எச்சதத்தனுகிய பிதா. எந்தை - சிவபிரான்.

(கங) கோதமன் - கௌதமமுனிவர்.

வேத முற்ற வியாதர் பதங்களுஞ்
சூதர் தாளுந் துணையெனப் போற்றுவாம். (கங)

அவையடக்கம்.

சுற்ற மற்றபல் கோடி யிரவிமுன்
னுற்ற மின்மினி மின்னுத லொக்குமால்
கற்று ணர்ந்த கவிஞர்மு னியானுமோர்
சொற்ற மிழ்க்கதை சொல்ல நினைந்ததே. (கச)

உற்ற மைந்தர்க ளொன்று பிதற்றிடிற்
பெற்று ளோரதை நன்றெனப் பேசுவார்
சிற்று ணர்ச்சியி னேன்றெளி வில்சொலுங்
கற்று ளோர்கள் வியத்தல் கடனரோ. (கரு)

வேறு.

ஆவின்பா லுடன்புனல்சேர்ந் தாலுநறு மணமருவி யலர்மென் றோட்டுப், பூவின்பா லுருறினும் வேட்கையுற்றுக் கொள்வரது போ லுந் தேவைத், தேவின்பா லங்கதையைத் தெளிவிலா தேயுரைத்த சிறியேன் சொல்லு, நாவின்பாற் கலைதரித்த பெரியோர்க ளிகலாதந் நலங்கொள் வாரே. (கசு)

பாயிர முற்றுப்பெற்றது.

ஆகத்திருவிருத்தம். கஎ.

---

## முதலாவது:—நைமிசாரணியச் சருக்கம்.

எஞ்ச லின்றிய மாதவர் மொழிகுவ தென்ன
விஞ்சு வேதவா கமங்களுஞ் சாத்திர விரிவும்

---

(கச) இரவி - சூரியன். மின்மினி - மின்மினிப்பூச்சி.

(கரு) சிற்றுணர்ச்சி - சிற்றறிவு. வியத்தல் - மகிழ்தல். கடன் - முறை.

(கசு) தோடு - பூவிதழ். வேட்கை - ஆசை. இகலாது - விரோதியாது. அந்நலம் - அந்நன்மையை.

(க) எஞ்சல் - குறைதல். விஞ்சு - மிஞ்சுகின்ற. பஞ்சரம் - கூடு. பார்ப்பு - குஞ்சு. அம் - அழகு. சுகம் - கிளி. நைமிசாரணியம் - முனிவர்கள் தவஞ்செய்யும் ஒரு வனம்.

பஞ்ச ரம்புகு பூவையுந் தன்சிறு பார்ப்பு
மஞ்சு கங்களும் புகல்வது நைமிசா ரணியம். (௧)

வேத முந்திக மூங்கமுந் தோத்திர விரிவு
நாத மும்பர விந்துவுந் தருமமு நயந்து
தீத கன்றிடு புண்ணிய மும்பர சிவமா
மாதி யும்பொருந் தியதுதென் னைமிசா ரணியம். (௨)

கரண நான்கையு மொடுக்கியே கள்ளமார் புலனைத்
திரண மாக்கியே யொருவழிச் செலும்வகை செலுத்தி
யரணி லாத்தவம் புரிந்திடு மோனமா முனிவர்க்
கரண மாவது புகழ்தரு நைமிசா ரணியம். (௩)

மாக மூடுற வளர்ந்தபூங் கொன்றைமா மரத்துச்
சேக கன்றதோர் கொடிசுற்றி நிற்பது செப்பின்
பாக மீதினிற் பனிமலை மகள்குடி யிருக்கு
மேக நாயக னிற்பது போலவே யிலங்கும். (௪)

முகில்க ளவ்வன வேள்வியின் புகையென மொய்க்கு
நிகரில் பூங்கவிர் மலர்களோ மாக்கினி நிகருந்
தகைமை வண்டின வொலிமறை யுறழமேற் சாரும்
புகரில் புன்னைவீழ் மலர்பொரி தூவுதல் பொருவும். (௫)

அகத்திற் சம்புவைத் தணிதிகழ் மலர்க்கணீ ருகுத்து
மிகுத்த மெய்ப்பணித் துரையறு தலந்தெரி வித்துச்

(௨) அங்கம்-வேதத்தினுறுப்புக்கள், அவை: சந்தோபிசிதம், சோதிடம், நிகண்டு, நிருத்தம், மந்திரம், வியாகரணமென்பன. நாதம் - நாத தத்துவம். பர - கடவுளின். விந்து - அடையாளம்.

(௩) கரண நான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். புலன் - இந்திரியம். ஒருவழி - ஒப்பற்ற சுழுமுனைநாடிவழி. அரணம் - காவல்.

(௪) மாகம் - ஆகாயம். சேகு - வயிரம்.

(௫) வேள்வி - யாகம். கவிர் - முண்முருக்கமரம். தகை - அழகு. உறழ - ஒப்ப.

(௬) அகம் - உள்ளிடம், (மனம்). சம்பு - நாவல், (சிவபிரான்). மலர்க்கணீர் - மலரின் கள்ளாகிய நீர், (மலர்போன்றகண்களினீர்). உகுத்து -

சுகத்தை யுற்றுக்கோ டீரந்தாங் குதலினுற் சுருதி
புகச்செய் நைமிசா ரணியமா முனிவரைப் பொருவும். (சு)

மானை யம்புலிக் குட்டிதா யெனமரு வுறுமெம்
மானை யம்புலிக் குட்டிதா யென்னுமா தவர்க
டான வாரண வார்ப்பன முழங்கிய தகைமைத்
தான வாரணங் கரத்தினு லரிதனைத் தடவும். (எ)

காத்தி ரம்பவ னுசன நட்புறுங் கசடார்
காத்தி ரம்பவ நாசங்கண் டியமனுற் கடிதஞ்
சாத்தி ரங்கலை யாமனஞ் சேருமா தவத்தோர்
சாத்தி ரங்கலை யாரண முழக்கொலி தழைக்கும். (அ)

சாரங் கங்கலை புலியவே தத்தொலி கேட்டுச்
சாரங் கங்கலை புலியுடன் வரும்விரிந் தகர
வீர மாமல ரிழிந்ததேன் கரத்தினுல் விசிறி
வீர மாமல ரியாளியு மிகவினை யாடும். (கூ)

வேறு.

நாக மம்பரஞ் சேர்நறுஞ் சோலையின்
னுக மம்பர நாத முழங்கிடும்

---

சொரிந்து. மெய்ப்பணித்து - உடலை வணங்கச்செய்து. உரையறுதலம் - சொல்லளவையற்ற இடம், (பேச்சற்ற இடம்). அஃதாவது: மௌனநிலை. சுகம்-கிளி, (இன்பம்). கோடீரம் (கோள்தீரம்)- வலியபுணர்க்கரை, (சடை).

(எ) எம்மானை - சிவபிரானை. அம்புலிக்குட்டி - இளஞ் சந்திரன். தான - இடத்திலுள்ள. ஆரண ஆர்ப்பன -வேதமுழக்கம்போல. தான - மதத்தையுடைய. வாரணம் - யானை. அரிதனை - சிங்கத்தை.

(அ) காத்திரம் - கிரி. பவனுசனம் - பாம்பு. கசடு - குற்றம். காத்திரம் - உடலின். பவநாசம் - பிறப்பினழிவு. கண்டு - தெரிந்து. கடிது - விரைவாக. அஞ்சாத்திரம் - பயப்படாத உறுதி. கலையா-சிதருத.

(கூ) அங்கம் - வேதாங்கம். கலை - (ஏனைய) சாத்திரம். புலிய - புல்லிய. சாரங்கம் - மான். கலை - ஆண்மான். கரவீரம் - அலரியின். விசிறி - சிதறி. மா - பெரிய. மல் - வலியுடைய. அரி - சிங்கமும். யாளியும் - யாளியானையென்னு மொரு மிருகமும்.

(க0) நாகம் - புன்னைமரம். அம்பரம் - ஆகாயம். நா- (முனிவரது)நாக்கில். கமம் - நிறைவாகிய. பரநாதம் - சிவமுழக்கம். யோகமாதவர்க்கு -

யோக மாதவர்க் கூண்டரு மாங்கனி
யோக மாதவர்க் கொப்பென லாகுமால். (௧௦)

இந்த வாறு வளங்க ளிசைந்துசேர்
தந்த வார்நைமி சாரணி யந்தனிற்
பந்த வாதை யொழித்துப் பரனையே
முந்த வாதர முற்றுள்கு வார்சிலர். (௧௧)

சடைசெ றித்து மரவுரி தன்னையே
யிடையி றாக்கிவெண் ணீறுட லிற்றரித்
தடைநி ரைத்த நிழலிருந் தண்ணலா
முடையு மெய்ப்பொரு ளுட்டெளி வோர்சிலர். (௧௨)

சாக்க ரத்திற் கருவி தணந்துபின்
பாக்கி யுற்றதோர் மூன்றிட மும்மகன்
றாக்க மேவு மதீதத் தொடுங்கியே
தேக்க மின்றரு டேக்கிநிற் போர்சிலர். (௧௩)

ஊசி மீதி லொருபத மூன்றியே
நாசி மேலிரு நாட்டத்தை நாட்டியே
வாசி தன்னை யொடுக்கி மௌனமாய்ப்
பேச ருந்தவம் பேணிநிற் பார்சிலர். (௧௪)

---

யோகஞ்செய்கின்ற முனிவர்க்கு. ஊண் - உணவு (ஆக). தரும் - (சோலை) கொடுக்கும். மாங்கனியோ - மாம்பழமோ. கம் ஆதவர்க்கு - ஆகாயத்தில் வருஞ் சூரியருக்கு.

(௧௧) வார் - நீண்ட. பந்தவாதை-(ஆணவமலத்தின்) கட்டாகியதுன்பம். ஆதரம் - அன்பு. உள்குவார் - நினைப்பார்.

(௧௨) செறித்து - நெருக்கிக்கட்டி. அடை - இலைகள். நிரைத்த-வரிசைப்படுத்திய.

(௧௩) சாக்கரம் - பஞ்சாவத்தையினொன்று; அஃது: தெளிவு. கருவி- அகக்கருவி புறக்கருவிகளாகிய தத்துவங்கள். தணந்து - நீங்கி. பின்பு - அதன்மேல். ஆக்கி - ஆக்கப்பட்டு. உற்றது - பொருந்தியதாகிய. மூன்றிடம் - சொப்பனம், சுழுத்தி, துரியங்களினிடத்தை. அகன்று - நீங்கி. அதீதத்து - துரியாதீதத்தில். ஒடுங்கி - ஐக்கமுற்று. தேக்கம் - தியக்கம். தேக்கி - நிறைந்து.

(௧௪) வாசி - சுவாசம்.

அரிய மூலத் தழலை யெழுப்பியே
பெரிய வாயில்க ணீக்கிப் பிரான்பதம்
தெரிக பால மதனிற் செறிந்திடு
முரிய தெள்ளமு துண்டுறை வோர்சிலர். (கரு)

பெருக்கும் புற்றுடன் மூடிப் பிறங்கிட
விருக்க மன்னதன் மேன்முளைத் தோங்கிடத்
திருக்கு மூன்றுடை யான்பதஞ் சிந்தைசெய்
திருக்கு மோன முனிவர் நேகரே. (கசு)

நேய மாதி நியமத்தி னீந்துமா
காய மேற்புகைக் கான்மண்டி யோங்கவும்
பாய மாரவிப் பாகங்க ணல்கியே
தூய வேள்விசெய் வார்க டொகைசில. (கஎ)

இப்ப டித்தவ வேடத்த ரியாவருஞ்
செப்பு வேத முழக்கஞ் செழித்திட
மெய்ப்பு டன்றவ மேசெய் திருக்குநா
ளொப்ப கன்ற வொருதினந் தன்னிலே. (கஅ)

சிவந்த நீள்சடை கட்டித் திருவெண்ணீ
றுவந்த வக்க மணிதரித் தோங்கியே
தவம்பொ ருந்து மரவுரி சாத்தியே
சுவந்த ரும்புகழ்ச் சூதன்வந் தெய்தினான். (கக)

---

(கரு) மூலத்தழல் - மூலாக்கினி. வாயில்கள் - பஞ்சேந்திரியங்களை. கபாலம் - பிரமரந்திரம். அமுது - சிவானந்தம்.

(கசு) உடல் - சரீரத்தை, பிறங்கிட - விளங்க. விருக்கம்-விருக்ஷம். திருக்கு - கண்.

(கஎ) நேயம் - நெய். நியமத்தின் - கிரமப்படி. ஈந்தும்-சொரிந்தும். புகைக்கால் - (ஓமப்) புகைக்காற்று. பாய் - பரவுகின்ற. அம் ஆர் - அழகு நிறைந்த. அவிப்பாகம் - தேவர்கட்குக் கொடுக்கும் உணவு.

(கஅ) மே - மேன்மை.

(கக) அக்கமணி - உருத்திராக்கமணி. சுவம் - மங்களம்.

வந்த சூதனை மாதவத் தோர்மிகச்
சிந்தை கூர்ந்தெதிர் சென்று தொழுதுபின்
னெந்தை நீயிவ ணெய்திய தெங்கட
முந்தை யோர்தவ முற்றிய தாமென்றார். (உ0)

ஆச னத்தி லவனை யிருத்தியே
யீச னைப்பென் றருக்கிய மீந்துபின்
பூச னைத்தொழின் முற்றிப் பொருந்துப
தேச னைத்தொழு தின்னன செப்புவார். (உக)

வேறு

இரவினிற் பெரியன் சோம னில்லினிற் பெருமை நன்மை
யுரவினிற் பெரிது வாரி யொளியினிற் பெரியன் பாநு
குரவிற் பெரியன் பொன்னே குவட்டினிற் பெரிது மேரு
வரவினிற் பெரியன் சேட னருளினிற் பெரிய னீயே. (உஉ)

போதமே தருமீ ரொன்பான் புராணமு மெமக்கு நன்று
யாதியிற் புகன்று யின்ன மன்புட னடியேங் கேட்கும்
காதையொன் றுளதே தென்னிற் கார்க்குழ லிமய மாதோர்
பாதியா னுறைந்த தேவைப் பதியதை நவில்க வென்றார் (உ௩)

என்றசொற் செவியிற் கேளா விருந்தவன் விரும்பி நீவிர்
நன்றிது புகன்றீர் நுங்கட் கன்னது நவில வேண்டி
யின்றிவ ணடைந்தே மியாமே யிசைக்குமுன் னிசைத்தீர் ஞான
மொன்றிய மனத்தின் செய்கை யொன்றென றெரிந்த தாமால்.

---

(உ0) எந்தை - எங்கள் பிதாவே. முற்றியது - முடிந்தபயன்.

(உக) அருக்கியம் - முனிவர்கட்குச் செய்யு முபசாரத்தொன்று. முற்றி - முடித்து. உபதேசனை - உபதேசஞ்செய்யுஞ் சூதமுனிவரை.

(உஉ) பெருமை - உயர்ச்சி. சோமன்-சந்திரன். இல் - இல்லறம். உரவு - வலிமை. வாரி - கடல். பாநு - சூரியன். குரவு - குரு. பொன் - வியாளன். குவடு - மலை. அரவு - பாம்பு.

(உ௩.) போதம் - ஞானம். காதை - கதை.

(உச) கேளா - கேட்டு. இருந்தவன்-பெரியதவமுடைய சூதர். இவண் - இவ்விடம். ஒன்றிய - பொருந்திய.

ஆதலா லுரைத்துங் காசி யணிதிகழ் காஞ்சி யாரூர்
மேதகு திருக்கா ளத்தி வெண்காடு தில்லை காழி
யோதரு மருணை கூட லுடனுயர் தலங்கட் கெல்லா
மாதியா மருளே நல்குந் தேவையே யதிக மாமால். (உரு)

அந்தமாக் கதையை யீச னம்பிகைக் கருள்போ தோர்பா
னந்திகேட் டிருந்து வேத நாதசன் மருக்குச் சொன்னான்
புந்திமார்க் கண்டற் கன்னான் புகன்றன னவன்பா லன்புற்[மின்
றெந்தைகேட் டெமக்குச் சொன்னா னியாமுமக் கிசைப்பக்கேண்

அரனுமைக் கருளும் போதி லத்தல மகிமை முற்றுந்
தெரிவரி துனக்குச் சற்றே செப்புது மெனச்சொற் றானே
லரியவக் காதை தன்னை யறிவிலாச் சிறியேங் கூறற்
கரியதே யெனினு நுங்கட் கறிந்தன வுரைத்துங் கேண்மின்()

காதையாஞ் செந்தேன் றன்னைக் கன்னமா மடையுட் போக்கி
யோதுள வயலிற் பாய்ச்சி யுழுபடை யறிவாக் கொண்டே
யேதமார் காம மாதி களைகடிந் திசையே சேரும்
போதமே வித்தி ஞானம் பழுத்தின்பம் புசித்து வாழ்மின். ()

என்றுபின் சிவனையுள்ளத் தெண்ணிக்கண் முகிழ்த்துச்செங்கை
தன்றனிச் சிரமேற் கூப்பிச் சங்கரா வமல நாதா
மன்றல்சேர் தேவைச் சிந்தா மணியருட் கடலே தேவே
கன்றுமான் மழுவுஞ் சேருங் கரதலத் திறையே யென்று(உகூ)

---

(உரு) உரைத்தும் - சொல்லுவோம். மேதகு-மேன்மைதங்கிய. வெண்காடு - திருவெண்காடு. காழி - சீகாழி. கூடல் - மதுரை. ஆதியாம் - முதன்மையாகும்.

(உசு) எந்தை - வியாசர்.

(உஎ) தெரிவு - தெரிதல். சற்று - சிறிது. சொற்றானேல்-சொன்னானெல். அரிது - அருமையுடையது. அறிந்தன - தெரிந்தனவற்றை.

(உஅ) கன்னம் - காது. ஓது-சொல்லுகின்ற. உளவயல் - மனமாகிய வயலில். உழுபடை - கலப்பை. ஏதம் - குற்றம். கடிந்து - நீக்கி. வித்தி-விதைத்து. பழுத்து - பழுக்கச்செய்து, (பிறவினை).

(உகூ) முகிழ்த்து - மூடி. தனி - ஒப்பற்ற. மன்றல் - மணம். கன்று-வளையல். கரதலம் - கைகள்.

தோத்திரம் புகன்று கண்ணீர் சொரியமெய்பனித்துச்சொல்லு
நாத்திரந் தடுமா றெய்தப் பரவச நண்ணிப் பின்பு
நேத்திரம் விழித்து நெஞ்ச நெக்குநெக் குருகி வேத
சாத்திர முழங்கும் பாண்டி நாட்டணி சாற்ற லுற்றான். (௩௦)

1- நைமிசாரணியச் சருக்கம் முற்றுப் பெற்றது.

ஆகத் திருவிருத்தம் - ௩௭.

## இரண்டாவது:—திருநாட்டுச் சருக்கம்.

தேரு மாமுகி லங்கசன் குடைநிறஞ் செறிந்தே
யாரு நீள்விசும் பாறுசென் றவன்முர சருந்திக்
காரு லாவவன் கரிபரி நிறங்கொடுங் கருதி
யோரும் போதவன் றாதைதன் னுருக்கொடு மீண்ட. (௧)

மீண்ட மேகமும் பூதலத் துடன்சமர் விளைக்க
நீண்டு வெற்பொடு கானெலாந் தனித்தனி நிரந்தே
யாண்டு மின்வடி வாள்விதிர்த் திடிமுர சார்த்துத்
தூண்டு வில்லெடுத் தணிமழை யம்பெனத் தொடுத்த. (௨)

வரையின் வாரணக் கோடுகு மணிவரை மணித
வரையெ டுத்தமால் பாயலின் மணியுடன் வாரி
வரையின் வீழருவி களபுவி மாமக டனக்கு
வரையு நாண்முலை மேலணி மாலைபோல் வயங்கும். (௩)

---

(௩௦) பனித்து - நடுங்கி. தடுமாறு-தடுமாறுதல். நெக்கு-நெகிழ்ந்து.

(௧) அங்கசன் குடைநிறம்-மன்மதனுடையகுடையாகிய சந்திரனது வெண்ணிறம். விசும்பு ஆறு - ஆகாயவழி. அவன் - அம்மன்மதன். முரசு-முரசவாத்தியமாகிய கடல். உலாவு - பரந்த. கரி பரி - யானையாகிய இருள் தாங்குகின்ற. நிறம் - கருநிறம். கொடும் - கொண்டும். தாதை - பிதாவாகிய விஷ்ணுவின். உரு - (கரு) நிறம். மீண்ட - திரும்பின.

(௨) பூதலம் - பூமி. சமர் - சண்டை. நீண்டு- நீளச்சென்று. நிரந்து-கலந்து. ஆண்டு - அவ்விடங்களில். விதிர்த்து - அசைத்து. அணி - அழகிய. தொடுத்த - கோத்தன.

(௩) வரையில்-அளவில்லாத. வாரணக்கோடு-யானைக்கொம்பு. உகு-சொரிகின்ற. மணி - முத்துக்கள். வரைமணி - மூங்கில் முத்துக்கள். தவ

சந்த மேமுத லாகிய பொருளெலாந் தாங்கி
முந்து மைவகை நிலத்தையுங் கடந்தொலி முழக்கிச்
சிந்தை கூர்ந்ததெண் கடலெனுங் கணவனைச் சேர்ந்த
நந்து லாவிய வைகையென் றுரைக்குமா நதியே. (ச)

அன்ன மாநதித் தீரமே பாண்டிநா டாகு
முன்னி யந்தநாட் டணிபிர மனுஞ்சொல முடியா
துன்னி யாமவை முழுவது முரைத்திட லரிதா
மென்னி னுந்நமக் கறிந்தன சிற்சில விசைப்பாம். (ரு)

புதிய பூம்புன லோதையு மள்ளர்கள் புகுந்து
முதிய வேரியிற் குளங்களி னிசப்புறு முழக்கு
மதிரு மன்னவர் வாச்சிய வொலியுமொன் றாகித்
துதிசெய் நீள்கட லொலியென வெங்கணுந் தொனிக்கும். (சு)

அருள்வி ளைந்திடு மறிவினாற் காமங்க ளகற்றித்
தெருளு ளோர்களுண் ணெக்குநெக் குருகுதல் சிவணப்
பெருகு சேர்தரு கலப்பையாற் களைகளைப் பேர்த்து
மருவு செய்களிற் றெளிசமைப் பவர்சிலர் மாதோ. (எ)

குரவை யோதைமேற் கொள்ளவே விரைகளைத் தூற்றிப்
பரவு நீரொடு பைந்தருப் பழனுகு தேனும்

---

ரை - வில்லை. மால்பாயின்மணி - விஷ்ணுவின் படுக்கையாகிய நாகரத்தி னம். வரையுநாள் - விவாகஞ்செய்யுந் தினத்தில். வயங்கும் - விளங்கும்.

(ச) சந்தம் - சந்தனம். ஐவகை-குறிஞ்சிமுதலிய ஐந்துவிதம். நந்து-சங்கம். உலாவிய - திரியப்பட்ட.

(ரு) தீரமே - கரையினிடத்தே. அணி-அழகுகள். உன்னி-நினைத்து. அறிந்தன - தெரிந்தவற்றுள்.

(சு) ஓதை - ஒலி. மள்ளர் - உழவர். முதிய ஏரி-பழைய குளம். அன் னவர் - அத்தன்மையுடைய உழவர். வாச்சியம் - மருதநிலப்பறை.

(எ) சிவண - ஒப்ப. பெருகு - (நீர்) பெருகுதல். செய்களில்-வயல் களில். தெளி - ஒழுங்குபட்ட சேறு.

(அ) குரவை யோதை-மங்கலமாக ஒலிக்கு மள்ளிகள்வாயொலி. தூற்றி - தூவி. உகு - சொரியப்பட்ட. விரவி - கலந்து. பழனம் - வயல். நிரப்பி - நிறைத்து.

விரவி யோர்மடை மேவலாற் பணைதொறு நிரப்பி
யரன ருள்பெறு பவரெனச் சிலர்மகிழ் வடைவார். (அ)

நறிய தாமரை முதற்களை நீக்கியே நயந்து
செறியு மள்ளிய ரவயவ நீரினிற் றெரிய
வறிவின் மள்ளர்க ளவைகளை யெனக்கையா லரித்து
வறிது நின்றிட வன்னவர் நகைசெய்வர் மன்னோ. (கூ)

மருவு யிர்த்தமுக் கனிதரு நறுவுடன் வளமார்
தருவு யிர்த்தபூ மதுவுமே பாய்தலிற் சாலி
திருவு யிர்த்தபாற் கடன்முகி னிறங்கொடு திகழ்ந்தே
பொருவில் வான்வரை வளர்ந்துநீள் கதிர்மிகப் பொலிந்த. (க0)

கூன்கு யத்தினால் விளைந்தநெற் கதிர்க்குலை கொய்து
நான்கு திக்குயர் வரையெனப் போர்செய்து நயந்து
வான்கு றட்பெரும் பகட்டினாற் சரித்துவை மாற்றி
மீன்கு லத்தினைத் தொடும்படி நெற்குவி விப்பார். (கக)

ஆறி லொன்றுநா டரசனுக் கீந்துபின் னைந்து
கூறு மவ்வவர்க் காக்கியே யினியதங் கூறி
னீறி லாவதி திகளுட னிரவலர்க் களித்து
மாறி லாமணி நெற்குவை தொலைவுறு மருதம். (கஉ)

---

(கூ) நறிய - நல்ல. செறியும் - நெருங்கும். மள்ளியர்-உழத்தியர். வறிது - (கைக்கப்படாமல்) சும்மா. அன்னவர் - அம்மள்ளியர்.

(க0) மரு - வாசனை. உயிர்த்த - செய்த. நறு - தேன். மது - தேன். சாலி - நெற்பயிர். உயிர்த்த - பெற்ற. பாற்கடல் முகில் - பாற்சமுத்திரத்தினித்திரை செய்யும் திருமால். பொருவில் - ஒப்பில்லாத.

(கக) கூன் குயம் - வளைந்த அரிவாள். வான் - பெரிய. குறட்பகடு- குள்ளமாகிய எருமைக்கடா. சரித்து-சரியச்செய்து, (மிதிப்பித்து). வை- வைக்கோலை. மீன்குலம் - நக்ஷத்திரக் கூட்டம். குவிவிப்பார் - குவியச்செய்வார்.

(கஉ) நாடு - விரும்புகின்ற. கூறு - பங்கு. அவ்வவர்க்கு - தென்புலத்தார் முதலியோர்கட்கு. ஆக்கி - ஆகச்செய்து. ஈறு - முடிவு. அதிதிகள் - புதிதாய்வரும் விருந்தினர். இரவலர் - யாசகர். மாறு - விரோதம். குவை- குவியல்கள். மருதம் - மருதநிலத்தின்கண்.

சோலை தோறுமே கனிநறுப் பெருக்கத்தின் றுழனி
யாலை தோறுமே கரும்படு மார்ப்புய ரன்ன
சாலை தோறுமே சாற்றிருக் கொலிதிகழ் காலை
மாலை தோறுமே யரன்றிரு விழாவொலி மன்னும். (கங)

வருந்தி யேபுலம் புவதுசூற் சங்கின மதுக்க
ளருந்தி யேயலம் வருவது வண்டின மலரே
பொருந்தி யோடுத லாற்றினிற் புனல்கள்கண் ணீரே
சொரிந்து நிற்பது சோலையின் மதுமலர்ச் சும்மை. (கச)

கறையி ருப்பது மன்னவர் தந்திருக் கரவேல்
சிறையி ருப்பது பறவைகண் மனிதர்தஞ் சிந்தை
குறையி ருப்பதி யாசக ரிலரென்றுட் கொண்டு
பொறையி ருப்பது கனிதனைத் தாங்கிய பொழில்கள். (கரு)

தாவ ரும்புனன் மடுவின்மா மணிகளைத் தரங்கந்
தேவ ருந்துதி செய்திடு புரவலர் செங்கை
பூவ ரும்படி நிதிகளை வாரியே புகழ்ந்தி
யாவ ராயினுங் கொண்மினென் றீதல்போ லெறியும். (கசா)

மெல்லத் தென்றல்வந் தசைதர வண்டுபாண் மிழற்ற
வள்ளற் பங்கயத் தொகுதிபைந் தாளினின் றுடப்

---

(கங) நறு - தேன். துழனி - முழக்கம். ஆலை-கரும்பாட்டும்யந்திரம். ஆர்ப்பு - முழக்கம். சாற்று - சொல்லுகின்ற. இருக்கொலி - வேதவோசை. மன்னும் - பொருந்தும்.

(கச) அலம் வருவது - சுழல்வது. அலர் - மலர் (பழிமொழி). கண்ணீர் - கள்ளாகிய நீர். மலர்ச்சும்மை - பூங்கொத்து.

(கரு) கறை - இரத்தம், (குற்றம்). சிறை-சிறகு, (சிறைச்சாலை). பறவைகள் - பக்ஷிகள். யாசகரிலரென் றுட்கொண்டு குறையிருப்பது மனிதர் தஞ்சிந்தையெனக் கூட்டுக. பொறை - சுமை. பொழில்கள் - சோலையில்.

(கசா) தாவரு - கெடுதலற்ற. மடுவில் - நீர்நிலைகளில். மாமணிகளை- மாணிக்கங்களை (வாரி). தரங்கம் - அலை. பூவரும்படி - பூமியின்வருவாயாகிய. எறியும் - (பக்கங்களில்) வீசும். தரங்கமெறியுமெனக்கூட்டுக.

(கஎ) பாண்மிழற்ற - இசைபாட. அள்ளல்-சேறு. தொகுதி-கூட்டம். பிள்ளைத்தெங்கு - இளந்தென்னையினின்றும். இழி - இறங்குகின்ற. மந்தி-

பிள்ளைத் தெங்கிழி மந்திவால் வளைமுத்தைப் பெருங்கோட்
டள்ளிச் சிந்துவ வாடுநர்க் கிடுகுந ரனைய. (கஎ)

மொய்த்த தெண்டிரை கொழித்திடு முதுசுனை யொருசார்
பைத்த சைவலக் கொத்துநீண் டொழுகொளிர் பான்மை
நெய்த்த வொண்சுவைப் பாற்கட னீங்கிய நெடுமால்
சுத்த நீர்க்கட லணைமிசைத் துயில்வது மானும். (கஅ)

மணம்பொ ருந்துவ மனைதொறு மாமலர் தோறும்
பணம்பொ ருந்துவ நாகமுஞ் செல்வர்தம் பாலுங்
குணம்பொ ருந்துவ மாதர்தம் முலையும்விற் குதையுங்
கணம்பொ ருந்துவ கழகமுங் கடிகையுட் கிடையும். (கசு)

அரைப டுந்திமிர் சாந்தமு மழகிய கலையு
முரைப டும்பசும் பொன்னுமோ தியசெழுங் கவியுஞ்
சுரைப டும்பணைக் குழலுமொண் சுவையதீம் பாலுங்
கரைப டுந்தட வாவியுந் தொண்டர்தங் கருத்தும். (உ0)

நடைவி டாதுறு வீதியின் பரியுநற் குடியு
மடைவி டாதநீ ரேரியு மாதர்பல் கலனுந்

---

குரங்குகள். வால்வளை - வெள்ளியசங்கின். பெருங்கோட்டு - பெரியகரைகளில். ஆடுநர்க்கு - கூத்தாடுகின்றவருக்கு. இடுகுநர் - கொடுப்பவர். அனைய - ஒப்ப.

(கஅ) கொழித்திடும் - ஒதுக்கும். ஒருசார் - ஒருபக்கத்தில். பைத்த- பசுத்த. சைவலக்கொத்து - பாசித்திரள். ஒழுகு - நிகழ்கின்ற. ஒளிர்பான்மை - விளங்குகின்ற தன்மை. நெய்த்த - நெய்ப்பசையுள்ள. துயில்வது - உறங்குவது. மானும் - போலும்.

(கசு) மணம் - விவாகம், வாசனை. பணம் - படம், பொற்காசு. குணம் - குடம், நாணி. கணம் - உயிர்க்கண முதலிய நாற்கணம், க்ஷணம். கழகம் - கல்வி பயிலிடம். கடிகையுட்கிடை - நாழிகையினுள்ளிடம்.

(உ0) அரைபடும் - அரைக்கப்படும், பாதியாகும். திமிர் - பூசுகின்ற. கலை - சந்திரகலை. உரை - உரைத்தல், சொல். சுரைபடும்-துளையுண்டாம், பசுவின் முலையிலுண்டாகும். பணை - பருத்த. குழல் - இசைவாசிக்குங் குழல். கரைபடும் - கரையுண்டாகும், நெகிழ்ந்துருகும்.

(உக) நடை - நடத்தல், ஒழுக்கம். பரி - குதிரை. மடை - நீர்செல்லும் வழி, கடைப்பூட்டு. ஏரி - குளம். கலன் - ஆபரணம். தொடை (பா

தொடைவி டாதுபோர் வீரர்கைச் சிலையும்வான் சுரும்பு
மிடைவி டாதுபே ரெழில்கொள்பட் டிகையுமில் லறமும். (உக)

வேறு.

வரித்தும் பிகளே மருவாம்பன் மலர்கொப் பளிக்கு மருவாம்பல், விரிக்கும் பழனம் பசுங்கதிர்கள் விளைக்கும் பச்சைப் பசுங்கதிர்க, டரிக்குந் துடவை வலம்புரிவாய்த் தவழ்ந்து முழங்கும் வலம்புரிவா, யிரித்துள் ளுடையும் பணைக்கயலை யிமைப்பிற் குதிக்கும் பணைக்கயலே. (உஉ)

தொடியார் நடைபெண் குஞ்சரமே தொடரா விழிதைக் குஞ்சரமே
படியா ரளகங் கரும்புயலே பாக மொழிக்குங் கரும்புயலே
யடியா ருருக்கொ டவம்பணில மிதென்ப போலார்த் திடும்பணிலங்
குடிலை தெறற்கஞ் சக்கரமே குறிமா தவர்க்கஞ் சக்கரமே. (உங)

---

ணங்) தொடுத்தல், பூமாலை. சிலை - வில். இடை - இடுப்பு, நடுவில். பட்டிகை - அரைஞாண்.

(உஉ) வரி - கீற்று. தும்பி - வண்டு. மருவு -பொருந்துகின்ற. மரு- வாசனை. ஆம்பல் - கள், தேன். பசுங்கதிர்கள் - பசிய காந்திகளை. பச்சைப்பசுங்கதிர்கள்-மிகப்பசிய (நெற்) கதிர்களை. பழனம் விரிக்குமெனக் கூட்டுக. தரிக்கும் - தங்கும். துடவை -பூந்தோட்டத்திலுள்ள. வலம்புரிவாய்- நந்தியாவட்டத்தினிடத்து. வலம்புரிவாய் - வலம்புரிச்சங்கத்தின் வாய். இரித்து - சோர்ந்து. (விகாரம்) பணைக்கு - வயலுக்கு. அயலே - பக்கமே. பணைக்கயல் - பருத்த கெண்டைமீன்கள்.

(உங) தொடியார் - வளையலணிந்த பெண்கள். பெண்குஞ்சரம்-பிடியானை. தொடரா - (நியாயமின்றிச்) செல்லா. சரம் - பாணம். படியார் - பூமியிற்சேரும். அளகம் - கூந்தல். கரும்புயல் - கரியமேகம். பாகம் -(சொல்லின்) பக்குவம். ஒழிக்கும் - கெடுக்கும். கரும்பு,-உயல் - பிழைத்தலை. அடியார் - தொண்டர். உரு - சாரூபம். கொள் - கொள்கின்ற. தவம்பணிலம் - தவஞ்செய்கின்ற இடம். இது என்ப போல் - இத்தகைமென்று சொல்வனபோல. ஆர்த்திடும் - முழங்கும். பணிலம் - சங்குகள். குடிலை - வஞ்சகத்தை. தெறற்கு - கெடுத்தற்கு. அஞ்சக்கரமே - பஞ்சாக்ஷரங்களையே. குறி - எண்ணுகின்ற. மாதவர்க்கு - முனிவர்க்கு. அம் - அழகாம். சக்கரம் - சனமம்.

இயலோர் சிங்கா தனம்படைப்பா ரெவருஞ் சிங்கா தனம்படைப்பார்
செயலோர் தவமா தரித்திடுவார் தீங்கு கெழுமா தரித்திடுவார்
சுயமாங் கவிகை மதியுடையார் தொடையா லறவோர் மதியுடையா
ரயரா தரன்மேற் கருத்தடுப்பா ரன்றே சனனக் கருத்தடுப்பார். ()

காவிற் பயிலும் புளினமிசை கமடம் பயிலும் புளினமிசை
மேவிக் குரம்பின் கரும்பகடு விம்ம மேயுங் கரும்பகடு
வாவிக் கருகாங் கற்கடக மடவார் கரத்தாங் கற்கடகங்
கூவிக் குழையு மாங்குயிலே குவிபோ ரடுக்கு மாங்குயிலே. (உரு)

தடமுத் திடுமன் னந்தினமே சலசம் படுமன் னந்தினமே
மிடல்குஞ் சறைக்கஞ் சுகமடுக்கும் வீர ருடல்கஞ் சுகமடுக்குந்
தொடர்மா மகத்த விரும்புகையே சூழ்வா னவான் விரும்புகையே
யடர்சோ லையுமேற் கற்பகமே யகலா மாதர் கற்பகமே. (உசு)

---

(உச) இயலோர் - தமிழறிஞர். சிங்காது - குறையாமல். படைப்பார் - அடைந்திருப்பார். செயலோர் - ஒழுக்கமுடையோர் கெழுமாது - பொருந்தாது. அரித்திடுவார் - கெடுத்திடுவார். சுயம் - சொந்தம். கவிகை மதியுடையார் - குடையாகிய சந்திரனையுடைய மன்மதனார். தொடை - பாணம். மதியுடையார் - அறிவு கெடமாட்டார். அயராது - சோராது. கருத்து - மனம். சனனக்கரு - பிறவியாகிய கருவை.

(உரு) காவில் - சோலையில். பயிலும் - பழகும். புள் இனம் - பறவைக்கூட்டம். இசை - இராகத்தை. கமடம் - ஆமை. புளினம் - மணற்குன்றின். மிசை - மேல். குரம்பின் - செய்கரையின். கரும்பு - கரும்புகளை. அகடு - வயிறு. விம்ம - புடைக்க. கரும்பகடு - கரியஎருமைக்கடா. அருகு - பக்கம். கற்கடகம் - ஞெண்டு. கற்கடகம் - கற்பதித்த கங்கணம். குழையும் - உருகும். போர் - நெற்போர். குயில் - மேகம்.

(உசு) தடம் - வாவிகளில். முத்திடும் - முத்துக்களைச் சொரியும். மன்-மிகுதியாகிய. நந்தினம் - சங்குக்கூட்டம். சலசம் - தாமரையில். படும் - உண்டாம். மிடல் - வலியுடைய. குஞ்சு அறைக்கு - குஞ்சுகளிருக்கும் சிறு வீட்டில். அஞ்சுகம் - அழகிய கிளி. மடுக்கும் - கலக்கும். கஞ்சுகம் - சட்டையை. மா மகத்து - பெரிய யாகத்தில். அவிரும் -விளங்கும். வான்-வானுலகத்தார். விரும்புகை - விரும்புதல். அடர் - நெருங்கிய. மேல் - மேன்மை. மிடலென்பது சந்தநோக்கித் திரிந்திலது.

நாலு புறத்துங் கவிர்பூப்ப நடுவோர் தெங்கு மடல்விரித்துச்
சீல முடன்மே னோக்கிநிற்ற றிசைநான் கினுநான் கனல்வளர்த்துச்
சாலுஞ் செங்கை விரித்துமர வுரிபோர்த் திடையோர் தாளூறநின்[மே
றேலுங் கதிர்விண் மணிநோக்கி யியற்றுந் தவத்தோர்க் கிணைபெறு.

துன்னி நிமிர்கோங் கரும்புமுலை சுமந்து கொடிநுண் மருங்கொசியக்
கன்னி வாடித் துகிலுடுத்துக் காமத் தளிர்க்கை மலர்சிதறி
வன்னக் கனிவாய்க் குயிற்குரலால் வாழ்த்தி மலர்க்க ணீர்துளிக்கப்
பொன்னின் சோலை மகளிர்நிற்றல் பூசித் தரனைத் தொழுதனவாம்.()

வீயா விருக்கின் மதன்கணையா யெவர்மே னியினும் வடுவிளைத்தோங்
காயா வருமு னமக்கும்வடுக் கண்டோ நமது வடிவாகி
மாயா வசுரன் வேல்வடுப்பட் டொழிந்தா னென்ன மாமரங்க[கும்.
ளாயா நின்றிக் குறைவிலக்கற் கரனைத் தொழல்போற் றலைவணங்

கள்ளுண் டனம்வேள் சிலைநாணுக் கட்டுண் டனந்தூ தேவலு
ழைத், தெள்ளுண் டனமா யினுமொருகா லிகன்மா ருதபுத் திரனு
யிரை, யள்ளும் பழிகூர் புனற்கழுவை யரியெம் முருக்கொண் டகற்
றினனென், றுள்ளு தொறுமுண் மகிழ்ந்தினரோ டுரைப்ப போல்
வண் டினமிசைக்கும். (௩0)

---

(உஎ) கவிர் - முண்முருக்கு. நான்கு அனல்- நான்கு பக்கமும் வளர்க்குந் தீ. ஏலும் - பொருந்தும். கதிர் - கிரணங்களையுடைய. விண்மணி - சூரியனை.

(உஅ) துன்னி - நெருங்கி. மருங்கு -இடை. ஒசிய-வளைய. கன்னி- அழியாத. வாடி- வேலியாகிய. காமம் - ஆசை. பொன்னின் - அழகுடைய. தொழுது அனவாம் - வணங்குதல் போலாம்.

(உகூ) வீயா - பூவாக. இருக்கில்-இருக்குங்காலத்தில். வருமுன்-தோன்றுதற்கு முன்பு. வடு - குற்றம், (பிஞ்சு). அசுரன் - சூரபன்மன். வேல்- (முருகக்கடவுள்) வேலாயுதம். ஆயா - ஆய்ந்து. வணங்கும் - வளையும்.

(௩0) வேள் சிலை - மன்மதன் வில். நாண் - கயிறு. தூதேவல் - தூதாகிய ஏவற்றொழில். எள்ளுண்டனம் - இகழ்ச்சிப்பட்டோம். ஆயினும் - ஆனாலும். ஒருகால் - ஒருகாலத்தில். இகல் - வலி. மாருதபுத்திரன் - வாயுவின் மகனாகிய வீமன். அள்ளும் - வாரும். பழிகூர் - நிந்தைமிக்க. புனற்கழுவை - நீரிலுள்ள கழுமரத்தை. அரி - கிஷ்ணன். உள்ளுதொறும் - நினை

தன்னை வலம்வந் தவர்க்குநலந் தரலான் மூவர் திருவுருவு
மன்னு மிகையான் மேலுயர்ந்து மலர்சா மரங்கள் கமுகசைப்பக்
கன்னி யரம்பை மடலேந்தக் காலா ளிரதம் பாய்மாவோ
டன்ன நாகஞ் சூழநிலத் தணைவீற் றிருக்குந் தருவரசே. (ருக)

என்று நாட்டின் வளமதனை யினிதா யுரைத்த மொழிசெவிகேட்
டொன்று மிதயங் களிகூர வுணர்ந்து தவத்தா லைம்புலனும்
வென்ற முனிவ ரனைவோரும் வியந்து சூதன் றனைநோக்கித்
துன்று நகரின் வளமுமினஞ் சொல்லென் றுரைக்க வவைபகர்வான்.

2 திருநாட்டுச்சருக்கம் முற்றுப்பெற்றது.
ஆகத் திருவிருத்தம் எக.

## மூன்றாவது:—திருநகரச் சருக்கம்.

மையை யொத்தபூங் குழலுமை மாதுபங் குறையு
மெய்யற் கர்ச்சனை மூன்றுகா லத்திலும் விரும்பிச்
செய்யத் தேவர்க ளனைவரு மகிழ்ந்துசிக் கிரத்தி
னெய்தச் செய்ததோர் கனகசோ பானமா ரிஞ்சி. (க)

இலங்கு மேருவா மென்பதா யழகுற வியற்றித்
துலங்கு நீண்மணி குயிற்றுகோ புரத்தினிற் றொகுத்த

---

க்குந்தோறும். இனர் - சுற்றத்தார். உரைப்பபோல் - சொல்லுவனபோல். கிருஷ்ணன் வண்டுருவங்கொண்டு கழுமரத்தை யகற்றிய கதை பாரதத்திற் காண்க.

(ருக) மூவர் - திரிமூர்த்திகள். மிகை - உயர்ச்சி. மலர் - விரிந்த. கன்னி - அழிவில்லாத. அரம்பை - வாழை, (தெய்வப்பெண்). மடல் - பூந்தட்டு. காலாள் இரதம்பாய் மா - காற்றையாள்கின்ற இனிமை பரவிய மாமரம். (வீரர், தேர், குதிரை). அன்ன - அத்தன்மையுடைய. நாகம் - புன்னைமரம், (யானை). நிலத்தணை - பூமியாகிய ஆசனத்தில். தரு அரசு - மரமாகிய அரசு.

(ருஉ) ஒன்றும் - பொருந்தும். ஐம்புலன்- மெய் முதலிய பஞ்சேந்திரியங்கள். வளம் - வளங்கள்.

(க) மை - மேகம். கனகசோபானம் - பொற்படி. ஆர் - அரிய. இஞ்சி - கோட்டை.

(உ) ஆய் - போன்று. குயிற்று - பதிக்கப்பட்ட. தொகுத்த - சேர்த்த. ஆய் - ஆக. (எச்சத்திரிபு)

நலங்கொள் பற்பல வாயிலின் வழியதாய் நாளும்
வலங்கொண் மாநவக் கிரகங்கள் சென்றிடு மாதோ. (௨)

மாட மாளிகை மிசைத்தருங் கொடிகள்பூ மகட
னீடு செங்கர மீதுவெண் டுகில்கொடு நித்தம்
பீடு சேர்மதன் குடைக்கறை மாற்றல்போற் பெருவா
னூடு செல்லும்வெண் மதியுட னுரிஞ்சிமே லுலாவும். (௩)

பத்தி நான்கினும் பளிங்குயர் மாடங்க ளுடுத்து
மத்தி யிந்திர நீலமண் டபமொன்று வயங்க
றத்தி யேயலை புரளும்வெண் பாற்கட றணிலே
யத்தி காத்தகைக் கரியமா றுயிறல்போ லாமால். (௪)

வச்சி ரத்தினு லியற்றிய மாடமா ளிகைமேற்
பச்சை யொன்றிய மரகதத் தசும்புறு பான்மை
யிச்சை கொண்டெழி னான்மருப் பியானைவெண் முதுகி
னிச்ச யம்பெற விந்திரன் பொலிவது நிகர்க்கும். (௫)

வெயில்கொள் வெண்சுதை மாடமும் பன்னிற விளக்கம்
பயிலு மாடமு நிரைநிரை தயங்கனம் பரனிவ்
வயினு றைந்தன னென்றவன் மலரடி காண்பான்
கயிலை யாதிய வரைவந்து நிற்பது கடுக்கும். (௬)

புதுமை தந்தமா ளிகையினிற் சிகரியிற் புயல்கள்
கதுவ னீங்குதன் மகுடநங் காவலற் கருளு

---

(௩) மிசை - மேல். தரும் - கட்டும். (தாற்பரியம்) பூமகள் - பூமி தேவி. பீடு - பெருமை. கறை - கறுப்பு. உரிஞ்சி - தேய்த்து.

(௪) பத்தி - வரிசை. உடுத்து - சூழப்பட்டு. மத்தி - நடுவில். தத்தி தாவி. அத்தி - யானையை.

(௫) பச்சை - பசுமை. தசும்பு - குடம். நான்மருப்பியானை - அயிரா வதமாகிய வெள்ளையானை. நிச்சயம் பெற - உறுதியாக.

(௬) நிரை நிரை - வரிசைவரிசையாக. தயங்கல் - விளங்கல். வயின் - இடம். காண்பான் - காணும்பொருட்டு. கடுக்கும் - போலும்.

(௭) சிகரி - கோபுரம். புயல் - மேகம். கதுவல் - பற்றுதல். காவல ற்கு - இந்திரனுக்கு. கழல் - கால். மானும் - போலும். மதுகை - வலி.

ரீதுமெ னுவந்து காண்டலுங் கழல்விலங் கிட்ட
மதுகை வேந்தனுட் டெல்லையென் றகறலு மாலும். (எ)

சாலச் சித்திர மெழுதுமுன் மண்டபந் தாங்கி
நீலத் தூண்பளிங் கியற்றுதூ ணிரண்டெதிர் நிற்றல்
கோலக் கண்ணனு மண்ணனுங் கூருருக் கரந்து
காலற் காய்ந்தவன் விழவுகாண் பானிற்றல் கடுக்கும். (அ)

இசையு மேழ்நிலை மாளிகை மேடையி லிவரா
வசையி லாவெழின் மாதர்கால் பெயர்நடை வளங்கண்
டசைத ருந்திரை வர்ன்கங்கை யருகுறு மனங்கள்
பிசகி லாநடை கற்குவ மெனப்பெரி துவக்கும். (கூ)

உயரு மாளிகை மேடையின் மடவிய ருண்டாட்
டயர்க ழங்குமேற் செல்கையும் வருகையு மன்னூர்
வியன்வி சும்பெல்லை யறிந்தினம் வருகென விடலு
மியலு ணர்ந்தவா வந்துவந் துரைத்தலு மிணையும். (கய)

அருந்தண் வாவிதோய் மாதரார் முகத்தொடம் புயமுந்
திருந்து மோதிசை வலத்தொடுங் கண்ணொடு சேலு [ணங்கல்
மிருஞ்செவ் வாம்பல்வா யொடுமொன்றோ டொன்றெதிர்ந் தி
பொருந்து கேளினர் வரவெதிர்ந் தளாவுதல் போலும். (கக)

---

(அ) சால - மிக. கண்ணனும் -கிருஷ்ணனும். அண்ணனும்-(அவன்) தமையனாகிய பலராமனும். உருக்கரந்து - வடிவமாறி. விழவு - திருவிழா.

(கூ) இவரா - எழுந்து. நடைபெறு - நடந்து செல்கின்ற. கற்குவம்- படிப்போம்.

(கய) உண்டாட்டு - விளையாடல். அயர் - செய்கின்ற, கழங்கு - கழற்சிக்காய். வியன் - பெருமை. விசும்பு - பொன்னுலகு. இயல் - (அப்பொன்னுலகி)னியற்கையை. உணர்ந்தவா - அறிந்தவிதம். இணையும் - போலும்.

(கக) அம்புயம் - தாமரையரும்பு. ஓதி - கூந்தல். சைவலம் - பாசிக்கொத்து. சேல் - கெண்டைமீன். இரு - பெரிய. இணங்கல் - கலத்தல். கேளினர் - இனத்தார் (ஒருவருக்கொருவர்) எதிர்ந்து - எதிர்ப்பட்டு. அளாவுதல் -கலத்தல்.

கந்த நாண்மலர்க் கருங்குழற் கவிரிதழ் மடவார்
விந்தை வாண்முக மதிநலங் கண்டுமெய் புளகுற்
றிந்து காந்தமு முருகுமே லிப்புவி மாந்தர்
சிந்தை வேட்பது பெரிதன்று தேவர்க்கு மஃதே. (கஉ)

இலகு வாவிதோய் மாதர்கண் ணெழுதுமஞ் சனமுங்
குலவு கொங்கையின் மெழுகிய குங்குமக் குழம்புந்
திலக சிந்தூர முங்கரைந் தொன்றுசே ருத்லா
லலருங் கங்கைநீர் யமுனைசோ ணையுங்கலந் தனைய. (க௩)

ஆடும் வாவியி லொருத்திகா லாமையென் றொருத்தி
நீடு கைகளா னீவியுந் தமதுகண் ணிழலை
யோடு மீனெனத் தடவியுங் கரத்திலுவ் றுருதே
தேடும் வான்பொரு டவறினர் போலுளந் திகைப்பார். (க௪)

கடிம ணஞ்செய்மங் கலமுழ வொலியுங்கன் னியர்த
மடிபெ யர்த்திடு சிலம்பொலி யுஞ்சிவ னடியார்
படிது லங்கவாழ்த் தொலியும்பா வலர்செய்பண் ணொலியு
மிடிமு ழங்கல்போன் முழக்கிடு மெங்கணு மம்மா. (க௫)

சுருதி யோதுத லோதுவித் திடல்பகர் சுருதி
கருதி யவ்விதி வேட்டல்வேட் பித்திடல் கனிவாய்த்

---

(கஉ) கவிர் - முண்முருக்கம்பூ. விந்தை - ஆச்சரியம். புளகுற்று - மயிர் சிலிர்த்து. இந்துகாந்தம் - சந்திரகாந்தக்கல். வேட்பது - விரும்புவது. அஃதே - (பெரிதன்றென்பதைச்) சுட்டுப்பொருள்.

(க௩) அஞ்சனம் - மை. மெழுகிய - பூசிய. திலகம் - பொட்டு. அலரும் - விரியும். யமுனை - யமுனாநதி. சோணை - சோணாநதி. கலந்தனைய- ஒன்றுசேர்ந்தாற்போலும். [யமுனை - கறுப்பு. சோணை - சிவப்பு.]

(க௪) ஆடும் - ஸ்நானஞ்செய்யும். கால் - பாதத்தை. நீவியும் - தடவியும். உறுது - அகப்படாமல்.

(க௫) கடி - வாசனை. மணம்- விவாகம். முழவு - வாச்சியம். பெயர்த்திடு - நடக்கின்ற. படி - குணம்.

(க௬) அவ்விதி - அந்தவிதிப்படி. வேட்டல் - விவாகஞ்செய்தல். சட்கருமம் - ஆறுதொழில். தினமுமென்றதி லும்மை தொக்கது.

தருதல் கோடலென் றின்னசட் கருமமோ ராறு
மொருதி னந்தவா தந்தணர் வீதியி னெழுங்கே. (கசு)

குன்றில் வாவிய சிங்கவாண் குழவியிற் குமர
ரொன்று தேரினைக் கடவுதல் கரிபரி யுகைத்த
லென்றும் வார்சிலை நூன்மனு நூன்முறை யியற்றல்
வென்றி வன்படை யியற்றுத லருமன்னர் வீதி. (கஎ)

ஆரந் தேனகில் குங்கும நரந்தமு மளைநெய்
கீர மாதியுங் கமுகுநெற் குவைகிளர் கரும்பும்
வார மாநவ மணியுங்கொண் டுறைதலால் வைசியர்
பார வீதிநாற் றிணையுமொன் றாகிய படித்தால். (கஅ)

வருவி ருந்தினை யெதிர்ந்தழைத் திடன்மனை தோறுந்
திருவ ளர்ந்துகொண் டிருத்தன்மா தவஞ்செயத் துணித
லொருசொல் வாசகஞ் செலுத்துதல் பூசுரர்க் கொழுக்கந்
தருதன் மேழியர் தழைத்திடும் வீதியிற் றழைக்கும். (கக)

தெய்வ சிந்தனை பாவலர்க் குதவிசெய் திறமை
சைவ நன்னெறி வழாமைதன் னுயிரின்மன் னுயிரு
முய்வ தாக்குதல் சிவதொண்டர்க் குறுபணி யியற்றன்
மெய்வ ரும்புகழ் பெற்றிடு மேழியர் வீதி. (உ0)

வேறு.

மறைகண்மிக் கோலம் பண்ணு மதன்சிலைக் கோலம் பண்ணு
மறிஞர்வாய் கலைவா சிக்கு மரும்பன்னீர் கலைவா சிக்குந்

(கஎ) வாவிய - தாவிய. குழவியில் - குட்டியைப்போலும். கடவுதல் - செலுத்துதல். உகைத்தல் - செலுத்துதல். சிலைநூல் - தநுசாத்திரம். இயற்றல் - செய்தல். படை - ஆயுதம். அரு - நீங்கா.

(கஅ) ஆரம் - சந்தனக்கட்டை. நரந்தம் - கஸ்தூரி. அளை - தயிர். கீரம் - பால். கமுகு - பாக்கு. (ஆகுபெயர்) கிளர் - விளங்குகின்ற. வாரம் - அன்பு. நாற்றிணை - நான்குநிலம். படித்து - தன்மையுடையது.

(கக) திரு - செல்வம். பூசுரர் - பிராமணர். மேழியர் - வேளாளர்.

(உ0) வழாமை - தவறாமை. உயிரின் - உயிர்போல.

(உக) மிக்கு - மிகுந்து. ஓலம்பண்ணும் - முழங்கும். மதன்சிலை - மன்மதன்வில். கோல் அம்பு அண்ணும் - கோலாகிய பாணத்தைப் பொரு

துறைதொறு மனங்கோ டாமை தூயவர் மனங்கோ டாமை [ம்.
நிறையின்னார் நொடிகண் டார்க்கு நெறியுண்டா நொடிகண் டார்க்கு

இருகவா னரம்பை மாத ரியலும்வா னரம்பை மாத
ரொருவிலா மலங்கு வாவி யோடுநீர் மலங்கு வாவி
தருகந்தக் குவளை யோர்பாற் றரங்கந்தக் குவளை யோர்பால்
மருமலர் தருமஞ் சாரு மனைதொறுந் தருமஞ் சாரும். (உ௨)

ஆடவர் புயமுஞ் சாந்த மாக்கிய குணமுஞ் சாந்த
மாடமெஞ் சாத ரங்கம் வைப்பதுஞ் சாத ரங்கம்
பாடுவர் தகத்தே வாரம் பற்றுவ ரகத்தே வாரந்
தேடகங் கரங்க ளைந்துஞ் செபிப்பரக் கரங்க ளைந்தும். (உ௩)

கடகரி துதிக்கை காட்டுங் கங்குலிந் துதிக்கை காட்டு
நடநவி லிடமுங் கஞ்ச நாரியர் முகமுங் கஞ்ச
மிடனெலா நெற்கொட் டார மெறிசங்கி னெற்கொட் டார
மடன்மல ரிசைவண் டோட்ட மருங்கெலா மிசைவண் டோட்டம்.

---

ந்தும். கலை - கல்விநூல். கலை - ஆடைகளில். வாசிக்கும் - மணக்கும். துறை - நீர்த்துறை. அனம் கோடு - அன்னப்பறவை, சங்கு. கோடாமை - கோணாமை. நொடி - சொல். கண்டு - கற்கண்டை. ஆர்க்கும் - நிறைக்கும். நெறி - நீதி. நொடி - சிறுகதை. கண்டார்க்கும் - தெரிந்தவர்க்கும்.

(உ௨) கவான் - தொடை. அரம்பை மாதர் - வாழையினழகு. இயல் - சாயல். ஒருவிலாமல் - நீங்காமல். வாவி - தாவி. மலங்கு - ஒருமீன். வாவி - தடாகத்தில். கந்தக்குவளை - வாசனையுள்ளநீலோற்பலம். தரங்கம் - அலைகளில். தக்கு - தங்குகின்ற (விகாரம்) வளை - சங்கு. மரு - வாசனை. மலர்தரு - விரிகின்ற. மஞ்சு - அழகு.

(உ௩) சாந்தம் - சந்தனம். மாடம் - மாளிகை. எஞ்சாது - குறையாது. அரங்கு - சிற்றறைகளில். அம் - அழகாக. வைப்பதும் - வைக்கப்படுவதும். சாதரங்கம் - ஒருவகையிரத்நம். தக - பொருந்த. வாரம் - அன்பு. அகங்கரம் - அகந்தை. (விகாரம்) களைந்து - நீக்கி. அக்கரங்கள் ஐந்து - பஞ்சாக்கரம்.

(உ௪) கடகரி - மதயானை. கங்குல் - இராக்காலம். இந்து - சந்திரன். உதிக்கை - தோன்றுதல். நடம் - நடனம். நவில் - செய்கின்ற. கஞ்சம் - தாளம். கஞ்சம் - தாமரை. ஈன் - பெறும். எற்கொட்டு ஆரம் - பிரகாசத்தைக் கக்குகின்ற முத்துக்கள். மடல் மலர் - இதழாகிய மலரில். இசைவண்

வேறு.

வாம நீணகர் வாரி யுடுத்திய
பூம டந்தைதன் பொற்பினுக் கேற்கவே
நாம மிட்ட வரனும மிட்டதோர்
காமர் சேர்தில கந்தனை யொக்குமால். (உரு)

ஏவை வென்றக ணிந்திரை யென்றபொற்
பாவை யும்மகன் பாவையுந் தாடொழுங்
காவை நேர்குழற் கன்னிகை பாகன்வாழ்
தேவை யென்ற திருநக ராமரோ. (உகா)

அந்த மாநக ரத்தி னழகினை
யிந்த வாறு சிறிதுரைத் தேமினி
முந்து மாதல மொய்வள மும்மியா
நுந்த மக்குத் தெரிய நுவலுவாம். (உஎ)

3 திருநகரச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் கoகா.

## நான்காவது:—தலவிசேடச் சருக்கம்.

கானமர் பங்கய வாலய மொன்றிய காமர் விரிஞ்சனுமே
வானவர் தந்தொகை யாவு மாஞ்சிலை வாவி யெழும்பறவை

---

டு ஒட்டம் - இராகம் பாடும் வண்டுகளுடைய செல்லுகை. மருங்கு - பக்கம். இசை - பொருந்துகின்ற. வண் - வளந்தங்கிய. தோட்டம்,—

(உரு) வாமம் - அழகு. நாமம் இட்டவரன் - நாமந்தரித்த நாயகனாகிய விஷ்ணு. நாமம் - அதிசயம். (ஆக) இட்டது - வைத்ததாகிய. ஓர் - ஒப்பற்ற. காமர் - அழகு. திலகம் - பொட்டு.

(உகா) ஏவை - பாணத்தை. இந்திரை - இலக்குமி. மகன் (அவ்விலக்குமியின்) புத்திரனாகிய பிரமனது. பாவையும் - சரசுவதியும். காவை - சோலையை.

(உஎ) மொய் - கூடுகின்ற. நுந்தமக்கு - உங்களுக்கு.

(க) கான் - மணம். விரிஞ்சன் - பிரமன். சிலை - கல். வாவி- தாவி. ஆனும் - நிலைக்கும். ஆசில் - குற்றமில்லாத.

யானும் விலங்குரு வாக நினைந்துள மாசி றவம்புரியுந்
தேனலர் தண்பணை சூழும் வளம்பதி தேவை வளம்பதியே.()

யாதக மெத்தனை யேனு மிமைப்பினி னீறு படுத்திமகா
போதம் விளைத்திடு ஞான தலத்திடை போத விருத்திடுமா
லாதி மகத்துவ நாத முதற்பொரு ளானவர் பொற்பயனூர்
சீதா ருக்கரி யாருறை மெய்ப்பதி தேவை யருட்பதியே. (உ)

மாவரை கட்கிறை யானதொர் வெற்பினை வார்சிலை யிற்குனியா
கோவர வப்புரி நாணி யிசைத்தரி கூர்கணை யிட்டெதிரா
மூவ ரியற்றிய மாய புரத்தழன் மூள நகைத்தமகா
தேவ ரிருப்பிட மான திருப்பதி தேவை யருட்பதியே. (௩)

பாசு பதக்கணை வாள்விசை யற்கருள் பார்பதி பக்கனுளா
ரேசி ருக்கயி லாச வரைப்பர மேசர் கழற்பணியா
வாசவன் மிக்குரை யாடும் வரப்படி வாகொ டுதித்துடனத்
தேச மகத்திறை பேர்புனை மெய்ப்பதி தேவை யருட்பதியே.

மாபசி நோய்பிடி காலர்க டோர்கள் வாதைசெ யாநகரங்
கோபதி வாழம ராவதி யேதுதி கூரெழில் சேர்நகரஞ்
சோபமொ டாகுல நீண்மர ணாதிகள் சூறுமி லாநகரந்
தீபம தாய்முனி வோருள மார்பவர் தேவைநன் மாநகரம்.(௫)

---

(உ) ஞானதலம் - திருக்கைலாசமலை. போத - மிக. ஆதி - முதன்மை. நாதம் - முப்பத்தாருவது தத்துவம். பொற்பு - அழகு.

(௩) மா - பெரிய. சிலையின் - வில்லைப்போல. குனியா - வளைத்து. கோ - மேன்மை. இசைத்து - கட்டி. அரி - விஷ்ணுவாகிய. எதிரா - எதிர்த்து. மூவர்- இரணியன், இரணியாக்ஷன், வித்துன்மாலி.மாயம்- வஞ்சகம்.

(௪) ஏசில் - நிந்தையில்லாத. பணியா - பணிந்து. உரையாடும் - பேசும். வரப்படி - வரத்தின்முறை. வாகு - அழகு. மகத்திறை பேர்புனைமெய்ப்பதி- வாசவனூர்; இக்காலத்து வாசுதேவனல்லூரென வழங்கிவருகின்றது; இதுவும் முன் வாசவனல்லூரென வழங்கி, அதன் மரூஉவாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

(௫) கோபதி - இந்திரன். துதிகூர் - துதிசெய்கின்ற. சோபம்-சோர்வு. ஆகுலம் - வருத்தம்.

வேறு.

அப்பதி நினைப்பா ரரனையுண் ணினைப்பா ரயனர சினையுமே னி
னையா, ரப்பதி காண்பார் சிவபுரங் காண்பா ரந்தகன் புரத்தினைக்
காணா, ரப்பதி புகுவார் கயிலையிற் புகுவா ரரும்பவக் கருக்குழி பு
குதா, ரப்பதி பிறந்தார் திருவருட் பிறந்தா ரன்றியெக் காலமும்
பிறவார். (௬)

அத்தலந் தனையோர் காற்சொலக் கேட்டோர்க் கசுவமே தப்பல
னடைய்யு, மத்தலந் தனையே யொருதரம் புகன்றோர்க் கம்புயன் பதவி
யே சேரு, மத்தலந் தனையே யிரண்டுகான் மொழிந்தார்க் கரியமால்
பதவியுண் டாகு, மத்தலந் தனையே மூன்றுகான் மொழிந்தா ரரன்
கயி லாயத்தி னமர்வார். (௭)

காசியி னிறக்கக் கமலையிற் பிறக்கக் கனகமன் றத்தினைக் காணப்
பேசரு மருணை சலந்தனை நினைக்கப் பேறுதந் தருளுமித் தலத்தை
நேசமாய்க்கண்டா ரிறந்தவர் பிறந்தார் நினைத்தவ ரியாவர்க்கு மினிதா
வாசகன் றிருந்த ஞானவீட் டின்ப மாகுநா மறைந்திட லரிதே. (௮)

அங்கா தனிநே ரிரவுதா னுறங்கா ரநேகரா லரன்கங்குல்
விரதந், தன்னையே காசித் தலத்திருந் தியற்றித் துயிறுறந் தவர்பல
ன் சார்வார், மன்னுமோர் நிசியி னவண்டைந் துறங்கின் வாயுவோர்
பத்தையு மொடுக்கி, யென்னையா ளுடையோன் றருள மிருந்துஞ்
சமாதியாம் பெரும்பல னெய்தும். (௯)

மூதியநீள் பசியின் றுயினு மொரேகா தசிதனின் முழுமுத லு
றையப், பதியிருந் துணவு நீத்துளோர் கௌரி பதியுறை பதியினிற்

---

(௬) அந்தகன்புரம் - யமபட்டணம்.

(௭) அம்புயன் - பிரமன்.

(௮) கமலை - திருவாரூர். கனகமன்றம் - சிதம்பரம்.

(௯) அரன் கங்குல் - சிவராத்திரி. துறந்தவர் - நீங்கினவர். வாயு
வோர்பத்து - தசவாயுக்கள். சமாதியாம் - யோகத்தினாலுண்டாகும்.

(௰) அப்பதி - அந்த வாசவனூர். பதிவார் - தங்குவார். மதியின்வ
ளர் - சந்திரனுடைய வளர்ச்சியாகிய. பதினொன்றில் - பூருவபக்க ஏகாதசி
யில். நோற்போர் - தவஞ்செய்வோர். எம்மனோர் - எம்போல்வார்.

பதிவார், துதிசெய்விண் மதியின் வளர்பதி ஞென்றி லுண்வுடன்
றுயிலது துறந்து, விதிமுறை நோற்போ ரெய்துறு பேற்றை யெம்
மனோர் விளம்புதற் கெளிதோ. (௧௦)

அத்தல மதிலோ ரெட்டுணை யேனு மதிதிகட் கன்னம தளித்
தோர், வித்தகன் மேவும் வெள்ளியங் கிரியி னநேககற் பங்கண்
மே வுறுவா, ருத்தம மாம்பொன் னெவ்வள வளித்தோ ரம்முறை
மேருவி னுறைவார், சத்திய மீது வேதமே மொழிந்த தன்மையே
நுங்களுக் கறைந்தேம். (௧௧)

பஞ்சபா தகங்கள் புரிந்தவ ரெனினும் படிறுகோ ளொடுகொடு
மிடியு, மிஞ்சின ரெனினு மவயவங் குறைந்த புலையரே யெனினு
நம் விமலன், வஞ்சியோ டுறையுந் தேவையி லொருநாள் வாசமே
செய்திடி லவர்க, ளெஞ்சலின் றுரங்குந் திருக்கையி லாயத் தெம்
பிரா னுருவுகொண் டுறைவார். (௧௨)

நவமணி கொழிக்குந் திரைகொணிட் சேப நதியென வருபொ
ரு நதியாற், பவமறு ஞானந் தழைந்திரு வேதம் பரவுநற் றேவை
யிற் படர்ந்தே, தவமிக வுடைய வாசவன் றனக்காய்ச் சார்ந்துவந்
நகரிடை மருவுஞ், சிவனிடம் பழுத்தங் கடைந்தவர் நுகர்ந்து செ
னனநோய் செயுமிடர் தீர்வார். (௧௩)

தென்மலை யருகே நந்திமா நகர மென்பது சீர்பெறு மதனி,
னன்மறை முழுது முணர்ந்துளான் வேத நம்பியென் றொருவனீ

---

(௧௧) எட்டுணை - எள்ளளவு.

(௧௨) படிறு - பொய். எஞ்சல் - குறைதல். எம்பிரானுருவு - சாரூப பதவி.

(௧௩) நிட்சேபநதி - (இந்திரன் மகுடம்) புதையலாக இருந்த ஆறு. இருவேதம் - ஆரியவேதம், தமிழ்வேதம். படர்ந்து - சென்று. ஆய் - ஆக. (எச்சத்திரிபு) இங்ஙனம் வருமிடந்தோறுங்கொள்க. சார்ந்து வந்நகர் - குற்றியலுகரந் திரியாமற் புணர்ந்தது. மேல்வருவனவுமது. பழுத்துச் சிவனிடம் அங்கடைந்தவரெனக்கூட்டுக. நுகர்ந்து - (தம்மை) விழுங்கி.

(௧௪) தென்மலை - சிவகிரிக்குப் பக்கத்திலுள்ளமலை. தொன்மையோர் - (தனக்கு முன்னுள்ள) பழையோர். புகட்டி - ஊட்டி. புரப்பான் - காப்பான்.

சுரர்க்குத், தொன்மையோர் முதலாங் பூசனை புரியுந் தொழிலுளான் வளர்க்குநற் கிளிக்குப், பொன்மலை வில்லான் றனக்கபி டேகஞ் செய்தபால் புகட்டியே புரப்பான். (கச)

அன்னவன் றேவி யம்பிகா பதியென் பவளொரு தினத்தது கண்டு, பன்னுபூங் கிள்ளை தனக்கருத் தியவிப் பாலியா தென்னலும் பனவன், சின்னமா மதிசேர் வேணியன் றனக்குச் செய்யபி டேகப்பா லெனலுங், கன்னமோ ரிரண்டுங் கரங்களாற் புதைத்துக் கவலையங் கடலுளாழ்ந் தயர்ந்தாள். (கரு)

இந்தவா றிவன்செய் ததிற்சிவத் துரோக மிம்மையி லிவணடுத் தெனக்கு, வந்ததிப் பிறப்பை மாற்றினுந் திரும்ப வருபவத் தினும் விடா தெனவே, சந்தமார் சுவர்க்கத் தினளகன் றேகித் தமியளாய்த் தேவையின் குடபாற், சிந்துரமருவுங் கிரிக்கணீள் கயத்திற் சென் றுட னாழ்ந்தன ளன்றே. (கசு)

பாரியைக் காணு தழுங்கிநம் பியுமந் நெறியிடை யவடடம் பற்றி, நாரிபாகனையே நெஞ்சுற வெண்ணி நாடியே வரும்வழி யதனில், வாரிநீர் முழுதும் வாரியுண் டடக்கு மாமுனி யரனிடத் துமைசேர், சீரிய றேவை மாநகர் தனக்குத் தென்குட திசையினிற் சிறந்த.

குன்றிடை யிருத்தல் கண்டடி தொழலுங் குறுமுனி யவன் றனை நோக்கி, யின்றிவ ணடைந்தா னியாவனீ விரைவி னெய்திய

(கரு) தேவி - மனைவி. கிள்ளை - கிளி. அருத்திய -ஊட்டிய. யாது- ஏது. பனவன் - வேதநம்பியாகிய பிராமணன். கன்னம் - காது. அயர்ந்தாள் - சோர்ந்தாள்.

(கசு) இவண் - இவ்விடத்தில். வருபவம் - வருபிறப்பு. சந்தம் - சந்தனம். சுவர்க்கம் - கொங்கை. குடபால் - மேற்றிசைப் பக்கம். சிந்துரம் - புளியமரம். கயம் - தடாகம். ஆழ்ந்தனள் - (விழுந்து) அழுந்தினள். [இக்கயம், பாப்பாத்தி கசமென வழங்கிவருகிறது.]

(கஎ) அழுங்கி - அழுது. தடம் - அடிச்சுவடு. வாரிநீர் - கடற்சலம். தென்குடதிசை - தென்மேற்குத்திக்கு.

(கஅ) அடைந்தான் - வந்தவன். யாவன் - எவன். கருமம் - வேலை. அருச்சனை - பூசை. வெருவி - பயந்து.

கருமமியா தென்ன, மின்றயங் கியவே ணியர்க்கருச் சனைசெய் நம்பியான் வெருவியென் மனையாள், சென்றவ டன்னைத் தேடியீண் டடைந்தேன் சேவடித் தெரிசனம் பெற்றேன். (௧௮)

சுகம்பெரு கன்பாய் வளர்த்தது தனக்குத் தூயமூ ரலிற்புர மெரிக்கு, நகம்பொரு சிலையாற் காட்டிய பாலை நான்கொணர்ந் தளித்ததெம் மனைபார்த், தகம்பெறு சினமா யாதுபால் கிளிக்கென் றறைந்தன ளதற்கியா னைந்து, முகம்பெறு மிறைவற் காட்டுபா லென மொழிக்குழல் வெருவியாண் டயர்ந்தாள். (௧௯)

வேறு.

தையல் பாகனு ரவிடேகப் பாலெனச் சாற்ற
மெய்ம்ம றந்துமே நாரிதான் மெலிவுற நடுங்கி
யைய கோசிவத் துரோகத்துக் காளதா கினமேற்
செய்ய லாவதெ னுயிரிருந் தென்னெனச் சென்றாள். (௨0)

சென்ற தோர்வழி யெங்கணுந் தேடியுங் காணேன்
மன்று ளாடிதன் மணிமுடிக் கபிடேகஞ் செய்த
பின்றை வாருபா லென்றிடாப் பிழைவந்து பிடித்த
தென்று துன்புற முனிவன்முற் பவமுணர்ந் திசைத்தான். ()

வேறு.

கயிலை யரன்பணி விடைநீ செய்தனை காதலி யென்பவளும்
பயிரவி சங்கரி பரிகல மேந்திய பாணி தளர்ந்தனது

(௧௯) சுகம் - கிளி. மூரலில் - சிரிப்பால். நகம் - மலை. பொருசிலையாற்கு - மோதுகின்ற வில்லாகவுடைய சிவபிரானுக்கு. அறைந்தனள் - சொன்னாள்.

(௨0) நாரி - பெண். மேல் - இனிமேல்.

(௨௧) பின்றை - பின்னர். வாரு - அள்ளுகின்ற. பாலென்றிடா - பாலென்று சொல்லாத. முற்பவம் - பூருவசன்மம்.

(௨௨) காதலி - மனைவி. பரிகலம் - போசனபாத்திரம். பாணி-கை. வையகமீதின் - பூலோகத்தின்மேல். நுதல் - சொல்லப்பட்ட. இயல்பெறு- நல்லிலக்கணம்பெற்ற.

மயலத்து மீறின ளாதலி னிருவரும் வையக மீதினுதி
வியல்பெறு நரருரு வாகுக வெனவர னிட்டன னொருசாபம்.

அந்தரி கைக்கிளி யத்துணை யுங்களை நோக்கலி னஞ்சுகமும்
வந்திடு நும்புடை யென்று மிசைத்தனன் வரமது பிசகாதே
முந்திய மானிட ராக வுதித்தீர் முயலு மொழிக்கிளியு
முய்ந்திட நும்மிடை வந்தது தேவை யுதித்தபி ரானருளால்.

என்றுரை கூறிநின் னுயகி சேர்வரை யிங்கிது நீயுமவ
டன்றிரு நாமம் விளம்பி யழைத்திடு தானே வருகுவளிக்
குன்றுநின் னுமம தாகுமெ னுமுனி கூறலு நம்பியிட
ரின்றியு மம்பி காபதி யேயென் றுனென வந்தனளால். (உச)

இருவரு மொன்றாய் வந்துள மகிழ்வா யிந்த மகாமுனிவன்
றிருவடி பூசனை புரிதர வோர்புன றேடி விரைந்தவர்தாம்
வருபொழு தின்புறு நிட்சே பப்பெயர் மாநதி கண்டருகே
யுருகிய வன்பொடு சென்று படிந்தன ரூழ்வினை யோடுகவே.

பைம்புன லாடிய நம்பியு மம்பிகா பதியு மணைந்துமுனி
யம்புய வார்கழல் பூசை புரிந்துட னாசியி னன்னெறிபெற்
றிம்பர் சுகத்தொடு வாழ்ந்தபின் கயிலைக் கேகி யிருந்தனராற்
கம்பமில் கிளியுஞ் சாப மகன்றுமை கரமலர் சென்றதுவே. ()

வேறு.

பவமறு கங்கை யமுனைநற் கோதா வரிநிகர் பகருநிட் சேபஞ்,
சிவமொரு புறமா யுமையொரு புறமாய்த் திகழ்ந்தசிற் சொரூபமா

---

(உச) அந்தரி - உமாதேவி. அத்துணை - அதுவரை. நும்புடை-உங்களிடம். பிசகாது - தவறாமல். உய்ந்திட - பிழைக்க. நாமம்விளம்பி - பெயரைச் சொல்லி. இக்குன்றும் - இம்மலையும். நின்னுமம் - உன்பெயர். என - என்றுசொல்லி.

(உரு) படிந்தனர் - மூழ்கினர். ஓடுக - ஓட.

(உசா) ஆசியின் - ஆசீர்வாதத்தால். இம்பர் - இவ்வுலகில். சுகம் - இன்பம், (கிளி). கம்பம் - சலனம்.

(உஎ) நிட்சேபம் - நிட்சேபமென்னுநதி.

மு.தலைத், தவமிசை முனிவர் பரவுமித் தேவைத் தலநிகர் மற்றொரு தலமும், புவனமூன் றினிலு மிலையிஃ தூண்மை பொய்யென்றார் நர கிடைப் புகுவார். (உஎ)

வேறு.

தேவையென் றொருக்காற் சொல்லச் செடிகொண்மும் மலங்க ணீங்குந், தேவையென் றொருக்காற் சொல்லச் சித்திமுத் திகளுஞ் சேருந், தேவையென் றொருக்காற் சொல்லச் சித்தசுத் திகளுண் டாகுந், தேவையென் றொருக்காற் சொல்லச் சிவனவ னென்ன வா ழ்வார். (உஅ)

கொலைகளா வொடுகட் காமங் குருத்துரோ கங்க ளான
தொலைவறு பாவ மெல்லாந் தேவையென் றொருக்காற் சொல்ல
நிலைபிரிந் தேகு மென்றா னிருத்தனு றுறையு மந்தத்
தலமுறு மகிமை முற்றுஞ் சாற்றலாந் தகைமைத் தாமோ. (உகூ)

என்றிவை சூதன் சொல்ல விருதய மகிழ்ந்து நேய
மொன்றிய முனிவ ரெல்லா முனற்கருந் தலவி சேட
நன்றினை யுரைத்தா யின்ன நதிநலம் விளம்பு கென்னக்
கன்றுதன் மறந்த சிந்தை கனிந்துவாய் மலர்ந்து சொன்னான்.

4 - தலவிசேடச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் ௯௩.

---

## ஐந்தாவது:—நதிவிசேடச் சருக்கம்.

சித்தி ரப்பொழிற் சிவசயி லந்தினுத் தரபால்
வைத்த தோர்பஞ்சக் குரோசனன் குறுகடை மரபா
னுய்த்த சம்புவ னொருவனா ன் மறைவழி யொழுகா
மொய்த்த பஞ்சமாக் கினியினின் றருந்தவ முயன்றான். (க)

---

(உஅ) செடி - தீநாற்றம்.

(உகூ) நிலை - இருப்பிடம்.

(௩0) உனற்கரு - நினைத்தற்கரிய. கன்றுதல் - வாடுதல்.

(க) சித்திரம் - அழகு. பஞ்சக்குரோசன் - ஐந்துகூப்பிடு தூரத்தினுள் ளவன். நான் - நான்காகவுற்ற. குறுகடைமரபான் - சூத்திரவருணத்தவன் ஒழுகா - நடந்து.

அற்றை நாளயோத் தியினோரந் தணன்மக னேது
சற்றி லாதிள மையிற்பதைத் திறப்பவித் தன்மை
கொற்ற ராமநின் னரசியற் குறையெனக் குரிசி
லுற்ற நாரதா தியர்தமை வினவவோர்ந் துரைப்பார். (௨)

குறைவின் மாதவஞ் சூத்திர னியற்றுகொள் கையினுன்
மறைவ லான்மக விறந்ததென் றுரதை மாற்றுந்
திறமை நாடுவான் றம்பியர்க் கூய்த்திசை மூன்று
மறிவி னுடைவிட் டிராகவன் றென்றிசை யணைந்தான். (௩)

தென்றி சைப்புலஞ் செல்கனுந் தவனிலை தெரிந்தாங்
கொன்று சிந்தையி லியாதுவேட் டருந்தவ முஞற்ற
லென்ற லுங்கயி லையிலுடம் பொடுசெலற் கியாதுன்
றொன்று போர்குலஞ் சம்புவன் சூத்திர குலமே. (௪)

எனவு ரைத்தலு மனுமுறைக் கிதுதவ றென்னச்
சினவி வெய்யவாட் படையெறிந் தவனுயிர் செகுப்பப்
பனவன் மைந்தனு மாவிபெற் றனன்பகர் தவசி
தனைய டும்பழி ராகவன் றணந்தவா றுரைப்பாம். (௫)

காய்வி டக்கள னன்றியிப் பவங்கடப் பரிதென்
றாய்த ருஞ்சிவ மலையிற்பஞ் சக்குரோ சமதிற்
சாய்கை யுஞ்செய்தோர் சிவப்பிர திட்டையுந் தடமு
மேய தன்பெயர்க் கமைத்ததி னின்புற மூழ்கி. (௬)

---

(௨) ஏது - காரணம். குரிசில் - அரசனாகிய அவ்விராமன்.

(௩) கூஉய் - அழைத்து. நாட - தேட.

(௪) தவன்நிலை - தவஞ்செய்யுஞ் சம்புவன் நிலைமை. உஞற்றல் - செய்தல். தொன்று - முன்னாள்.

(௫) சினவி - கோபித்து. எறிந்து - வீசி. செகுப்ப - கொல்ல. பனவன் - பிராமணன். தணந்த - நீங்கிய.

(௬) காய் - சுடுகின்ற. களன் - கண்டத்தையுடையசிவபிரான். ஆய்தரு - ஆராயப்படு. சிவமலை - சிவசைலம். சாய்கை - தங்குமிடம். (புறவழிக்கு) தடம் - தீர்த்தம்.

சிவன்ற னக்கபி டேகமுஞ் செய்துதே மலரா
லுவந்த வில்வத்தா லருச்சனை புரிந்துள முருகி
நிவந்த மேருவில் லாளவென் றிறைஞ்சிமுன் னிற்கக்
கவன்ற வன்பழி யிரவிமுன் னிருளெனக் கழிந்த. (௭)

அகன்ற வேலையிற் றேவிபங் கனையடி வணங்கிப்
புகன்ற செஞ்சிலை ராகவன் பொருக்கென வெதிர்வந்
துகந்த மாருத புத்திரா தியபடை யோடு
மகங்கு லாஞ்சிந்த வனத்தின்றென் மேற்கெல்லை வந்தான். (௮)

வந்த மர்ந்ததற் பின்னர்நித் தியகர்மம் வழுவா
திந்த வேலையி லியற்றநன் னதியிலை யென்னச்
சந்த ராகவன் வினவலுஞ் சாம்புவன் கருத்தின்
முந்து காரண முணர்ந்துநின் றோருரை மொழியும். (௯)

தங்கு தென்புல முயர்ந்தெனச் சம்புகும் பனைமுன்
னங்கு போகென வவன்வர வங்கையிற் கரக
கங்கை யாதிபல் புனல்சிறி தொருகடத் தமைத்துச்
சிங்க லின்றியே யிம்பர்சே மித்ததொன் றுளதால். (௧௦)

விரைவி னிற்கணை தொடுத்ததை வெளிப்படுத் தென்ன
வுரைசெய் ராகவ னுதைகணை சிதைத்துளூ டுருவக்

---

(௭) நிவந்த - உயர்ந்த. கவன்றவன் - கவலையடைந்த இராகவன். கழிந்த - நீங்கியது; இது முற்றிறுதி தொக்கது. மேல் வருவனவற்றிற்குங் கொள்க.

(௮) புகன்ற - சொல்லப்பட்ட. மாருதபுத்திரன் - அனுமன். மகங்குலாம் - யாகங்கள் விளங்கும். சிந்தவனம் - புளியங்காடு.

(௯) வேலை - காலம். சாம்புவன் - குரங்குத் தலைவரி லொரு பெரியவன்.

(௧௦) உயர்ந்து - உயர்ந்தது. (விகாரமொழி.) கரககங்கை - கமண்டலத்திலுள்ள கங்காநதி. கடம் - குடம். சிங்கல் - குறைதல். இம்பர் - இவ்விடத்தில். சேமித்தது - காவலாகப்புதைத்துவைத்தது.

(௧௧) உரைசெய் - புகழைச் செய்கின்ற. உதை - செலுத்துகின்ற. சிதைத்து - (குடத்தை) உடைத்து. உள் - நடுவில். அவனிநண்பன் - பூமிக்கு நாயகனாகிய ராகவன்.

கரைபு ரண்டுநீர் பொங்கிமேற் கதித்தெழு நதிமான்
றிரைசெய் கைகளா லவனிநண் பணைவந்து சேர்ந்த. (௧௧)

கும்ப மென்றமே ரனங்கடக் கூட்டினீர் முட்டை
கெம்பி டாதிடப் புவியடை கிடக்கச்சாம் புவனு
நம்பி யேதுவா னன்கிரா கவன்கணை பொரிக்கப்
பம்பி வந்தது கங்கைவெள் ளோதிமப் பார்ப்பு. (௧௨)

அதிகப் பூநதி பலவுமோர் கடத்தமைத் தறவோன்
றுதியிப் பாரிடைச் சேமித்த தாலதிற் றோன்று
நதிநிட் சேபயா றென்றும்மைப் பாறென்று நாம
நிதிநிட் சேபமொத் திடுமிதி னிறைவடி வுரைப்பாம். (௧௩)

தேவ நாயகன் றிருமுடி பெறச்செய்து மயிலை
மேவி வாரணத் துவசமுற் றுடன்றசூர் வீட்டித்
தாவில் சத்தியுங் கொள்வதான் முருகனே சரியா
மாவி யாவையும் புரக்குநிட் சேபவாற் றணியே. (௧௪)

சங்கு சக்கர மருவியுந் தக்கமீ னாமை
யங்க முற்றிடங் கரையழித் தமர்கயங் காத்து

---

(௧௨) அனம் - அன்னப்பறவை. கடம் - குடமாகிய. நீர் - சலமாகிய. கெம்பிடாது - (மேற்) கிளராமல். புவியடைகிடக்க - பூமி (அம்முட்டையை) அடைகாக்க. நம்பி - சிறந்தோன். ஏதுவால் - காரணத்தால். பொரிக்க - குஞ்சு பிறப்பிக்க. பம்பி - நெருங்கி. ஓதிமப்பார்ப்பு - அன்னத்தின் குஞ்சு.

(௧௩) அதில் - அந்த இடத்தில். பூ - பூமியிலுள்ள. நிட்சேபம் - புதையல். நாமம் - பெயர். நிதி - திரவியம்.

(௧௪) தேவநாயகன் - இந்திரன். திருமுடி பெறச்செய்து - (உக்கிரகுமார பாண்டியனு விழந்த) மகுடம் பெற்றுக்கொள்ளச் செய்து, (சூரபன்மனுவிழந்த கிரீடம் பெற்றுக்கொள்ளச் செய்து). மயிலை - மீன், (மயில்வாகனத்தை). வாரணத்துவசம் - நீட்சிபொருந்திய சங்கின் பிறப்பு, (கோழிக்கொடி). உடன்ற - பகைத்த. சூர்வீட்டி - வியாதியைக் கெடுத்தது, (சூரபன்மனைக் கொன்று). தா - வருத்தம். சத்தி -வலி, (வேல்). சரியாம்- ஒப்பாம். [வசம் - பிறப்பு].

(௧௫) சக்கரம் - சக்கரவாகப்பறவை, (சக்கராயுதம்). மீன் ஆமை அங்கம் - மீனும் ஆமையும் அவ்விடத்து அழகு, (மச்சங் கூர்மத்தின் சரீரம்)

மங்க லத்தல ருறையுமிந் திரைக்குமால் பெறலாற்
செங்கண் மாலொக்குஞ் சிறந்தவைப் பாறெனு நதியே. (கரு)

சுருதி வாய்தொறுந் தொனிக்கமா லுந்திதோன் றுதலா
லிருக மண்டலந் தொடுகையா லெழிலனந் தாங்கும்
பெருமை மேவிமுத் தாரமும் பெற்றிடுந் தகவாற்
பொருகல் லோலநிட் சேபநன் னதியயன் போலும். (கசு)

ஆல மேவியுங் களங்கறுத் திடுதலா லங்கண்
பால மேய்ந்தளி பாண்டரங் கம்பயின் றிடலாற்
சூலங் கூர்ந்தசங் காரமுங் கொண்டிடுந் துணிவான்
மால மார்ந்தநிட் சேபநன் னதியரன் மானும். (கஎ)

கங்கை பெற்றதாற் கயமுகந் துதிக்கையுங் கதுவி
யங்கு சங்கொடு நிற்கையா லாகுவா கனத்தாற்
பொங்கு தானமுந் தருவதாற் கொடியுறப் பொலிவா
னங்க ணேசனுக் கிணையும்வைப் பாறெனு நதியே. (கஅ)

---

இடங்கரை -இடத்தையும் கரையையும், (முதலையை). அமர் - தங்கிய. கயம் - குளம், (யானை). அலர் - நீர், (தாமரைமலர்). இந்திரைக்கு மால்பெறலால்- கரடிகள் முழுங்கும்பெருமை யடைதலால், (இலக்குமிக்குஆசை) பெறச்செய்தலால். [இந்து- கரடி.]

(கசு) சுருதி - ஒலி, (வேதம்). வாய் - இடம், (வாய்). மால் உந்தி - பெரிய நீர்ச்சுழி, (விஷ்ணுவின் உந்திக்கமலம்). இரு - பெரிய. கமண்டலம்-மேகமண்டலம், (சலபாத்திரம்). தொடுகை - தொடுதல்,(பரிசிக்கின்றகை). முத்தாரம் - முத்துக்கள், சந்தனக்கட்டை, (சாவித்திரி, காயத்திரி, சரசுவதி யென்னு மூன்று மனைவிகள். கல்லோலம் - அலை. [கம்-மேகம்.]

(கஎ) ஆலம் - விரிந்தபூ, (நஞ்சு). களங்கறுத்திடுதல் - குற்றத்தைக் கெடுத்தல்,(கண்டங்கறுப்படைதல்). அங்கண்பாலம் எய்ந்து - அவ்விடத்து நீர்மேல்நடக்கும்வழி பொருந்தி, (அழகிய கண் நெற்றியில் பொருந்தி). அளி பாண்டரங்கம் - வண்டு, இசை, அலை, (அன்பையுடைய பாண்டரங்கமென்னுங்கூத்து). கூர்ந்த - மிக்க. சங்காரம் - சங்கின்முத்து, (நல்லகரிய அழகு). மால் - பெருமை.

(கஅ) கயமுகந்துதிக்கை - குளங்களைமகிழ்ந்து தோன்றுதல், (யானைமுகம் துதிக்கை). கதுவி - பற்றி. அங்குசங்கொடு - அவ்விடத்துச்சங்கு

அடுக்க லைச்சிறை யழித்துமெய் யம்பக முறலாற்
றொடுக்கு மஞ்சுமேற் கொள்வதால் வச்சிரந் துணிவி
னெடுக்கை யாலயி ராணிமுத் தங்கொளு மியலான்
மடிக்குந் தெய்வநிட் சேபநன் னதியிந்த்ரன் மானும். (௧௯)

பலவி தச்சிலை யேந்தியஞ் சம்படுத் திடலான்
மலரி லஞ்சிமே வுகையினாற் பேரணி வகுக்குந்
தலைமை பெற்றுமா சைவலங் கொண்டிடுந் தகவா
னிலவு மேன்மைவைப் பாறெனு நதிமத னிகரும். (௨0)

இந்த மாநதி தோற்றிய முறைமையு மெழுந்து
வந்த காட்சியின் பெருமையும் வகுத்துரை செய்தேஞ்
சிந்தை யார்வமோ டிந்நதித் தீம்புனல் படிந்தோர்
முந்து பாவநீத் தடைந்திடும் பேறினி மொழிவாம். (௨௧)

வேறு.

ஜென்மநா ளினின்மூழ்கிற் சென்மங்க டொறுஞ்செய்த
கன்மநா மிங்கிருக்கக் கடவதன்று மெனவிலகுந்

---

டன், (அழகிய தோட்டிகைக்கொண்டு). ஆகுவாகனத்தால் - ஆகின்ற அழகிய அன்னப்பறவையால், (பெருச்சாளிவாகனத்தால்). தானம் - நீராடல், (மதம்). கொடியுரு - நீண்டவடிவம். கணேசன் - விநாயகர். இணையும் - போலும்.

(௧௯) அடுக்கலைச்சிறை - அடுக்குகின்ற அலைகளின்கட்டு, (மலைகளின் சிறகை) மெய்யம்பகம் - மெய்க்கப்படும் நீர் உள்ளிடம், (சரீரத்திற்கண்கள்). மஞ்சு - மேகம், (மேகவாகனம்). வச்சிரம் - ஒருவகை இரத்நம், (வச்சிராயும்). அயிராணி முத்தம் - நுண்மணல் ஆணிமுத்தம், (இந்திராணி முத்துதல்). மடிக்கும் - நிறைக்கும்.

(௨0) பலவிதச்சிலை - அநேகவிதமுழக்கம், (வலிமையுடைய இனிமைதங்கிய கருப்புவில்). அஞ்சம்படுத்திடல் - அழகிய நாவல்விருக்ஷத்தை நிறைத்திடல், (ஐந்து புட்பபாணம் பொருந்திடல்). மலர்இலஞ்சி - பூக்களையுடைய தடாகம். பேரணி - பெரியஅழகு, (பெரியபடை வகுப்பு). பெற்றுமாசைவலம் - அடைந்து பெரிய பாசிக்கொத்து, (அடைந்தும் திசைகளில் வெற்றி).

(௨௧) ஆர்வம் - அன்பு. நீத்து - நீக்கி.

(௨௨) சென்மநாள் - பிறந்த நக்ஷத்திரம். கடவது - தக்கது. தன்மன் - யமன். இரவிவன்மன் - சேரதேசத்தரசன்.

தன்மனாள் பதிகாணார் சாயுச்ய பதமிரவி
வன்மனார்க் கருள்சிந்தா மணியண்ணா லுலகாள்வார். (௨௨)

புண்ணியநன் னெறியறியாப் புலைஞரும்வன் கொலைஞருந்
தண்ணியநிட் சேபநதி சார்ந்துபுனல் படிகுவரே
னண்ணியமா பாதகமு நடுநடுங்கி யுடனேகு
மெண்ணியதோர் சிவபதவி யெளிதாக வெய்துவரால். (௨௩)

பொல்லாத துன்மரணம் புக்கிறந்தோர் புத்திரர்க
ளில்லாது தனியிறந்தோ ரென்பினையா ரேனுமணி
யெல்லார்நிட் சேபநதி யிடஞ்சேர்ப்பித் தாரவரைச்
செல்லார்வா னவர்புகழச் சேர்ப்பித்தார் சிவலோகம். (௨௪)

பொங்கியநிட் சேபநதிப் புனலென்ப கங்கைமுதன்
மங்கலமா நதிபலவும் வந்துகலந் துறைதலினாற்
கங்கைமுத னதியனைத்துங் கனிந்தாடு பலன்முழுது
மிங்கிதுவேயொருதினஞ்சென் றினிதாடில் வழங்கிடுமால். (௨௫)

தானஞ்செய் தவர்தமக்குஞ் சாற்றுமுழுந் தளவுசல
பானஞ்செய் தவர்தமக்கும் பார்த்தவர்க்கு நெஞ்சிடைத்தி
யானஞ்செய் தவர்தமக்கு மளறிழுக்கி வீழ்ந்தவர்க்கு
மீனஞ்செய் நரககற்றி யினியபர கதிதருமால். (௨௬)

தன்பொருட்டான் மூழ்காது தாங்கள்பலன் பெறக்கொடுக்கும்
பொன்பொருட்டான் மூழ்கினர்க்கும் புண்ணியநன் னெறியன்றி
யென்பொருட்டான் மூழ்கினர்க்குங் கதியுதவு மிடப்பாக
மின்பொருட்டா லுடல்பகிர்ந்தோர் மெய்யருள்சேர் நிட்சேபம். ()

---

(௨௩) தண்ணிய - குளிர்ந்த.

(௨௪) என்பினை - எலும்பை. மணியெல் - இரத்நங்களின்பிரகாசம். சேர்ப்பித்தார் - சேரச்செய்தவர். செல் - மேகம். வானவர் - வானிலுள்ள தேவர்.

(௨௫) என்ப - என்று சொல்லுவர்.

(௨௬) பானம் - குடித்தல். அளறு - சேறு. இழுக்கி - வழுக்கி.

(௨௭) என்பொருட்டு - (வேறு) யாதுநிமித்தம்; அஃதாவது - ஆருச நிவர்த்தி முதலியவை.

பொருவருபூந் திரைகொழிக்கும் வைப்பாற்றின் புனல்படிந்து
கருதுபிதிர்ப் பலிகொடுத்தா ரவர்களுக்கே கதிகொடுக்குந்
தருபலியின் றெள்ளுடனீர் தந்தாரெள் ளொன்றினுக்கு
வருடமொரு நூறுக வாழ்வுதந்தார் கயிலாசம். (உஅ)

தீதில்குரு பத்தினியைத் தீண்டியபா வமும்பயந்த
மாதுருமே லிச்சைவைத்த மாபாவ முஞ்சுருதி
வேதியரைக் கொலைபுரியும் வெவ்வினையுந் தீர்ந்துவிடும்
பாய்திரையி னதிபடியிற் பகலவன்முன் னிருள்போலும். (உகூ)

செந்நிறவெங் கதிரோனைத் திங்களோய்ந் திடுமந்நா
ணன்னர்கொண்மா தந்தோன்று நாளராக் கதிர்தீண்ட
மன்னுநா ணதிபடிந்தான் மற்றைநா டரும்பேற்றுக்
கின்னபே றென்றினுக்கொன் றுயிரங்கூ றிங்கதிகம். (௩0)

மேதகுமா யிரங்கதிரோன் மேடமதில் வருநாளுங்
கோதிறுலை வருநாளும் புனல்படிந்து குலமறையோர்க்
கேதொருதா னம்புரியி லேனைநாட் புனல்படிந்தார்க்
கோதுபலன் றனிலதிக மொருபதினு யிரமடங்காம். (௩க)

மகரமதிற் கடகமதின் மார்த்தாண்டன் வருநாளி
னிகரறுதென் முனியியற்று நிட்சேப நன்னதியிற்

---

(உஅ) பொருவரு - ஒப்பற்ற. பலியின்று - (பிதிர்) பூசையில்லாமல். வாழ்வுதந்தார் - (பிதிர்க்களுக்கு) வாழ்க்கைகொடுத்தவராவர். புனல்கதி கொடுக்குமெனக்கூட்டுக.

(உகூ) பயந்த - பெற்ற. மாதுரு - தாய். திரையின் - அலைகளையுடைய.

(௩0) அந்நாள் - அந்த அமாவாசி. நன்னர் - அழகு. அரா - பாம்பு. கதிர் - சூரிய சந்திரரை. தீண்ட - தொட. கூறு - பங்கு.

(௩க) மேதகு - மேன்மைதங்கிய. மேடம் - மேடராசி, சித்திரைமாதம். துலை - துலாராசி, ஐப்பசிமாதம். ஏது - யாதாவது. மடங்கு - பங்கு.

(௩உ) மகரம் - மகரராசி. கட்கம் - கற்கடகராசி. மார்த்தாண்டன் - சூரியன். வருநாள் - வருகின்ற தைமாதம், ஆடிமாதங்களில். தென்முனி - அகத்தியமுனிவர். இயற்று - (அர்ச்சகராகிய நம்பியார்பொருட்டு) உண்டாக்குகின்ற.

புகல்வருண மந்திரத்தாற் புனல்படிந்து பூசுரர்க்கே
யகமகிழ்தா னம்புரியிற் பலனனந்த மடங்கதிகம். (௩௨)

பிரியாம லொருவருடம் பிரயாகை தனிலுறைந்து
பரிவினொடு பரந்தபுனல் படிந்தபல னொருதினத்தில்
விரிவுறுமிந் நதிபடிந்தார் மேவுவரே யிந்நதிதாம்
புரிமகிமை யினைத்தென்று புகலவெமக் கரிதம்மா. (௩௩)

இன்னுமொரு நதியிந்தப் பதியுளதோன் றிதன்வடமேற்
கந்நதியின் பேர்தீர்த்த வாரியென்ப ரதனிடையே
மன்னுவபித் தியசிந்தா மணிநாத ரம்மையொடுந்
தென்னுலவும் விசேடதினஞ் சென்றுபுனல் படிகுவரால். (௩௪)

ஆதலா லதுவுமகா நதித்துறையா மதிற்படிந்தோர்
பாதகந்தீர்த் தரனுலகம் பாலிக்கு மென்றுரைத்த
சூதனைநீ நதிமகிமை சொற்றனைமூர்த் தியின்மகிமை
பேதமின்றி யுரைத்தியென்ற பின்னரவை யும்பகர்வான். (௩௫)

5 - நதிவிசேடச்சருக்கம் முற்றுப்பெற்றது.
ஆகத் திருவிருத்தம் ௧௭௧.

## ஆறாவது :—மூர்த்திவிசேடச் சருக்கம்.

மருமலி தருவா னீழன் மகபதி கயிலை யெம்மான்
றிருவடி பணிந்தென் பேராற் செகமெலாம் விளங்கும் வண்ண
மொருபதி தோன்ற வென்று முமையொடு நீயோன் றுயங்
கருளின்வந் தமைக வென்று மரிதின்முன் வரம்பெற் றானால். (௧)

வரத்தியல் வந்து தோன்றும் வான்பதி தேவை யாவுந்
தரத்தகுந் கடவு ளிச்சிந் தாமணி நாத னெங்கும்

(௩௩) பிரயாகை - கங்கையைச்சார்ந்த ஒருதீர்த்தம். பரிவு - அன்பு. புரி - செய்கின்ற.

(௩௪) ஒரு - ஒப்பற்ற. தென் - அழகு.

(௩௫) பாலிக்கும் - (அந்நதி) கொடுத்தருளும்.

(௧) மகபதி - இந்திரன். அமைக - தங்குக.

(௨) இயல் - தன்மை (ஆக.) தேவை - வாசவனல்லூர். கரத்தொகை - கிரணத்தின் கூட்டங்கள். விரித்தும் - விரித்தாலும். காந்தம் - சூரியகாந்தக்கல். அருட்பற்று - அருளாகப்பற்றுமிடம்.

கரத்தொகை விரித்தும்வெய்யோன் காந்தம்பற் றுதல்போலெம்மான்
றிரத்தல மனைத்துற் றூலுந் தேவையே யருட்பற் றுமால். (௨)

எந்தெந்தத் தேவ ரூப மெண்ணுகின் றார்நெஞ் சுள்ளு
மந்தந்தத் தேவ ரூப மாகிவந் தருள்பா லிக்குஞ்
சிந்தத்தண் ணிழலார் சிந்தா மணியண்ண றிருவ டிக்கீழ்க்
கந்தப்பூச் சொரிந்து வாழ்த்திக் காண்பவர் கயிலை காண்பார். (௩)

இந்திர னரந்தை மாற்றி யெழின்மணிக் கிரீட மீந்த
மந்திர சொரூப சிந்தா மணியண்ணன் மேனி வாய்ப்பச்
சந்தனக் குழம்பா லாட்டித் தண்ணல ரலங்கல் சூட்டி
யுந்துகர்ப் பூர தீப முதவினோர் பிறப்பை வெல்வார். (௪)

நடம்புரி தேவை யீச னண்ணுபொன் னாலயத்துட்
டடம்புனை கமல நூலாற் றகையநெய் விளக்கிட் டோர்தாம்
வடம்புனை முலையார் செங்கை மாமணித் தீபமேந்த
விடம்படு ஞால மெல்லா மினிதர சியற்றி வாழ்வார். (௫)

ஆவினை வதைத்த பாவ மந்தணர்க் கொன்ற பாவ
நாவினா லுபதே சிக்குங் குருமொழி நழுவும் பாவ
மீவினைத் தடுத்த பாவ மிரவிமுன் னிருளின் மாயு
மூவினை யியற்றுந் தேவை முதலடி பணிந்த போதே. (௬)

விரித்தசெந் தமிழ்கல் லாத வெள்ளறி வின ரேனும்
பரித்தகட் குடிக்கும் பொல்லாப் பழைஞரே யெனினும் வேழ

---

(௩) சிந்தத்தண்ணிழலார் - புளியமரத்தின் குளிர்ந்த நிழலிலுடைய வராகிய.

(௪) அரந்தை - துன்பம். மேனி - திருவுருவில். உந்து - செலுத்துகின்ற.

(௫) தடம் - குளத்தை. புனை - அலங்கரிக்கின்ற. கமலநூல் - தாமரைநூல். தகைய - அழகுடைய. இடம்படு - விசாலமாகிய.

(௬) நழுவும் - தவறும். ஈவினை - கொடுப்பதை. மூவினை - சிருட்டி, திதி, சங்காரமாகிய முத்தொழில்.

(௭) வெள் அறிவினர் - முழுமூடர். பரித்த - சுமக்கப்பட்ட. பழைஞர் - கட்குடியர். வேழம் - யானை. மோலி - கிரீடம்.

முரித்தவிம் முதல்வ ளுமை மொருதரம் புகன்றுன் மோலி
தரிக்கும்வேந் தாவார் மற்றேர் தரஞ்சொலிற் றேவ ராவார். (எ)

கன்றிய புலன்கள் வென்று கருத்துமொன் ருறு ராண்டு
ணின்றிவாய் வசனம் பண்ணி யிருக்குவாய் வசனஞ் சொல்லி
நின்றுசெய் தவத்தின் பேறு நிறையுண்டி சான்றோர்க் கீந்து
மன்றிலா டியையோர் வைகல் வணங்கினு ரெய்து வாரே. (அ)

விளங்கிய காசி யாதி பதிதொறு மேவுந் தேவை
யுளங்கசிந் துருகிப் பேரன் பொடுதெரி சித்தோர் பேறு
விளங்கமு கனைய கண்டத் தெழிலிடப் பாக வல்லி
வளங்கொள்பா தியனைக் கண்டு வலஞ்செய்தா ரெய்து வாரே. (௯)

பால்பழம் பனிநீர் தேவைப் பரமனை யபிடே கித்து
வாலிய மதிவா ரத்தின் மலர்சொரிந் தாயி ரத்தெட்
டாலுறு வில்வஞ் சாத்தி யகங்கனிந் திறைஞ்சு வோர்கள்
காலனும் பரவி நிற்கக் கயிலையி லூழி வாழ்வார். (௧௦)

மகரமா மதியிற் பானு வாரத்தை மருவி நிற்கும்
பகரரும் பூச நாளிப் பரனைமஞ் சனந்தோய் வித்து
நகைமல ரருச்சித் தேத்தி நாமமா யிரமு மோதி
யிகலறுஞ் சுவர்க்க மெய்தி யெண்ணிய போகந் துய்ப்பார். (௧௧)

சாற்றரு மோராண் டேகா தசிவிர தங்க ணோற்பார்
பேற்றினு மதிகப் பேறு பெறுகுவர் கும்ப மாதந்

---

(அ) கன்றிய - வாட்டிய. (பிறவினை) ஆண்டு - (ஒரு) வருடம். வாய்வு - பொருந்தியதாகிய, கிடைத்ததாகிய. அசனம்பண்ணி - உணவுண்டு. இருக்கு - வேதத்தை. வாய்வசனம் - வாய்ப்பேச்சாக. சான்றோர்க்கு - உயர்ந்தோருக்கு.

(௯) தேவை - கடவுளை. இளங்கமுகு,—

(௧௦) வாலிய - புனிதமாகிய.

(௧௧) பானுவாரம் - ஞாயிற்றுக்கிழமை. மஞ்சனந்தோய்வித்து-அபிடேகஞ்செய்து. நகை - ஒளி. இகல் - பகை.

(௧௨) நோற்பார் - செய்வார். கும்பமாதம் - மாசிமாதம். ஒரீஇ - நீங்கி.

தோற்றிய கிருட்ண பக்கந் தொடர்சதுர்த் தசிரா வொன்றிற்
போற்றுமிப் பரனை யுண்டி துயிலொரீஇப் பூசித் தோரே. (கஉ)

கதிரவ னுச்ச ராசி கலந்திடுந் திங்கள் வாய்ந்த
முதிர்நடு நாளி லெங்கண் முதல்வனைச் சுருதி யோதும்
விதிநிடே தங்க ளோர்ந்து மெய்யுன்பிற் பூசை செய்தோர்
பதியுறு கிளைக ளோடும் பரகதி புகுவர் மெய்யே. (கங)

மின்னிடப் பாக வல்லி மேனியோர் பாதி யானைப்
பன்னிய வொருபன் மூன்றும் பக்கமாம் பிரதோ டத்திற்
சென்னிமே லிருகை கூப்பித் தெரிசித்தோர் நன்ம கப்பேற்
றின்னறீர்ந் தின்ப மூழ்கி யீறிலாக் கதியிற் சேர்வார். (கச)

பன்னக விடமுந் தேவர் பருகிய வமுத மாகுந்
துன்னலர் பரவி நிற்பார் துட்டசெந் துவும்பிற் காட்டு
மன்னிய வெழுநா வானு மருவினுங் கனலான் றேவை
தன்னில்வாழ் பரம னுக்கந் தருந்திரு வருள்பெற் றோர்க்கே. (கரு)

ஆடக வில்லி தேவை யண்ணலே யானைந் தாட்டிச்
சோடச முகம னோடுந் தொடரன்பிற் பூசை செய்தோர்
நாடக மரம்பை நல்லார் நவிற்றவைந் தருவி னீழ
லீடரி யணைக்கீழ் வைகு மிந்திர போகந் துய்ப்பார். (கசு)

பையரா வணியுந் தேவைப் பானைமெய் யுறப்ப ணிந்தோ
ரெய்யும்வன் பவங்க ளியாவு மிரவிமுன் னிமம்போ லேகு

---

(கங) திங்கள் - சோமவாரம். நடுநாள் - உச்சிக்காலம். நிடேதம் - விலக்கு. பதியுறு - தங்குகின்ற.

(கச) இன்னல் - துன்பம். ஈறு - நாசம்.

(கரு) புன்னகம் - பாம்பு. துன்னலர் - பகைவர். துட்டசெந்து - பாம்பு முதலியவைகள். எழுநாவான் - அக்கினி. கனலான் - சுடமாட்டான்.

(கசு) ஆடகவில்லி - மேருவில்லையுடைய சிவபிரானாகிய. ஆனைந்து - பசுவிற்றோன்றும் பஞ்சகௌவியம். முகமன் - உபசாரம். நவிற்ற - செய்ய. நாடு - (தனக்குத்தானே) சமமாகிய.

(கஎ) பவம்-பிறப்பு. இமம்-பனி. மெய் - (புணிவார்) சரீரம். தூகள் - வெண்பொடி. மை - குற்றம்.

மெய்புறு துகளொன் றிற்கு விளம்புமோர் யுகங்க ளாக
மையில்வெண் கயிலை மேவி வாழ்வர்வா னவர்சூழ்ந் தேத்த. (௧௭)

அன்பெனுந் தேறல் பாய வருஞ்சிவ மணங்கு லாவு
மின்புறு பதிகத் தாரெம் மிறைவனைச் சூட்டித் தாழ்ந்தோ
ரொன்பது மணிகொள் பூணு முடம்புறப் புனைந்தி யாரும்
பின்பொதிந் தேவல் செய்யப் பெருஞ்செல்வந் திளைத்து வாழ்வார்.

கண்ணிறை நுதலோன் றேவைக் கடவுடன் றிருமுன் பாக
நண்ணியாழ் நரம்பின் மந்த மத்திம தார நாடிப்
பண்ணிசைத் ததனோ டன்பு பாயவுள் ளுருகித் தாழ்வோ
ரெண்ணிலாப் பரமா னந்த மெய்திநற் கயிலை வாழ்வார். (௧௯)

தக்கவா மிரவி வன்மன் றனைப்புரந் தன்னோன் சேய்க்குப்
புக்கவெம் பெருநோய் தீர்த்துப் புகல்கதி கொடுத்துக் காக்கு
மிக்கதித் தேவென் றன்னார் வேறொரு தெய்வந் தேட
லொக்கலை மகவி ருக்க வூரெங்குந் தேடு மாறே. (௨௦)

எந்தவா ரத்து மெந்த நாளினு மெவிசே டத்தும்
பந்தவா ரந்தோய் தேவைப் பரனைப்பூ சிக்கி னேசந்
தந்தவா ரத்தின் மட்டே தன்னரு ளுயர்ச்சி நல்கு
மந்தவா ரத்தின் வாவி நீர்மட்டா மாம்பல் போலும். (௨௧)

எனப்பல வுரைக்க மூர்த்தி மகிமையை யிந்த வண்ண
மனக்கொள வுரைத்தாய் கேட்டு மகிழ்ந்தன மியாங்க ளின்னுங்

---

(௧௮) தேறல் - தேன். பதிகத்தார் - பத்துப்பாட்டாகியமாலை. பொதிந்து - சூழ்ந்து. திளைத்து - அநுபவித்து.

(௧௯) நுதல் - நெற்றி - மந்தம், மத்திமம், தாரம் - இசைப்பேதங்கள். பண் - இசைப்பாட்டு.

(௨௦) புரந்து - காத்து. சேய்க்கு - புத்திரனுக்கு. பெருநோய் - குட்டவியாதி. தேவு - கடவுள். ஒக்கலை - இடையில். ஆறு - விதம் (போலும்).

(௨௧) பந்த - கட்டாகிய. வாரம் - அன்பு. மட்டே - அளவே. வாரம் - நீர்க்கரை. வாவி - குளம்.

(௨௨) மனக்கொள - மனம்பொருந்த. கனத்திரள் - மேகக்கூட்டம் கதுவும் - பற்றும். உனற்கரு - நினைத்தற்கரிய.

கனத்திரள் கதுவுஞ் சிந்த வனத்தியல் கனிவிற் சொல்கென்
றுனற்கருந் தவத்தோர் கேட்பச் சூதனங் குரைப்ப தானான். (உஉ)

6 - மூர்த்தி விசேடச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம். ககஙு.

---

## ஏழாவது :—சிந்தவனச் சருக்கம்.

பகவ னேயுமை பங்கனே யருள்பரந் திடுமை
முகவ னேயென மாலயன் முதலிம யவருஞ்
சகல லோகரும் பதந்தொறுந் தனித்தனி புகழும்
புகழெ லாந்திரண் டுயர்ந்தது போலும்வெண் பொருப்பு. (க)

தண்ணி றப்பனி வரைக்கிறை தவத்தினிற் பயந்த
வொண்ணு தற்கொடி தனையெந்தைக் குதவின தன்றி
வெண்ணி றப்படாத் துயர்ந்ததோர் கிருகம்வீற் றிருக்கைக்
கெண்ணம் வைத்தொன்று செய்துதந் தாங்கெழிற் கயிலை. (உ)

மூக்க ணுனுறை யிடமெனத் தன்னைமுன் னுமற்
றக்க கம்பத்தும் புயமிரு பதுங்கொள்சத் துவத்தாற்
புக்கெ டுத்துவீழ்ந் திடுநிரு தன்புய பெலந்தான்
மிக்க நன்றென நகைத்தல்போல் விளங்கும்வெண் கயிலை. (ங)

அண்டர் நாயக னுறையிட மீதென வறிந்து
தொண்டர் கண்புன லுகுப்பநின் றலர்சொரி வதுபோற்

---

(க) பரந்திடும் - விரியும். ஐ - ஐந்து. பதம் - இடம். வெண்பொருப்பு - கயிலாயமலை.

(உ) தண் - குளிர்ச்சி. நிறம் - ஒளி. பனிவரை - இமயமலை. பயந்த- பெற்ற. படாத்து - போர்வையால். ஓர் - ஒப்பற்ற. கிருகம் - வீடு. தந்தாங்கு - கொடுத்தது போலும்.

(ங) மூன்னுமல் - நினையாமல். கம் - தலை. சத்துவம் - வலிமை. நிருதன் - அரக்கனாகிய இராவணன். நகைத்தல் - சிரித்தல்.

(ச) அலர் - மலரை. தண்டலைக்குலம் - சோலைக்கூட்டம். குவடு - மலை.

றண்ட லைக்குலஞ் சூழ்ந்துகண் ணீர்சிந்தத் தளிர்க்கை
கொண்டு பன்மலர் சிதறிட நிற்கும்வெண் குவடு. (ச)

ஆண்ட வன்றிரு மேனியி லம்புவே டூண்டி
மாண்ட னன்னெனக் கவனம்பா மதுவுள தகல
வீண்ட ரற்குரைத் தெமைரட்சி யென்றுவெண் பொருப்பை
வேண்டி நிற்பபோற் பிண்டிக ளரும்பர்வாய் விரியும். (ரு)

இத்த லம்பயில் கயிலையங் கிரிமிசை யிமைக்கும்
பைத்த பொன்னிறற் பணிபல சமைத்தவா லயத்து
ளுய்த்த மாமணி யொன்பதும் பதித்தொளி தழைக்க
வைத்த பேரணி திகழரி யாசன மருங்கில். (சா)

பவள நாகமு மொருபுடை பச்சைமால் வரையுங்
கவர்சி கைத்தழற் பிழம்புமோர் புறங்கனை யிருளு
மிவர்செந் தாமரை கருநெய்தன் மலரிரு புறமுந்
தவல ருஞ்சிறப் பினிற்கண்ட காட்சிபோற் றயங்க. (எ)

ஒப்ப ருந்திறல் வெஞ்சின வுருத்திரர் கணமு
மைப்பு யற்கிணை மேனிகொண் மாயவர் கணமுந்
தப்பி லாமறைப் பிரமரு மிந்திரர் தளமுஞ்
செப்பும் வானவர் குழாங்களு முனிவரர் திரளும். (அ)

---

(ரு) வேள் - மன்மதன். தூண்டி - செலுத்தி. அவன் அம்பாம் அது- அம்மன்மதன் பாணமாயிருக்கும் அச்செய்கை. உளது - இருப்பது. ஈண்டு- இவ்விடத்து. நிற்ப - நிற்பன. அரும்பர்வாய்விரியும் பிண்டிகளெனக்கூட்டி, நிற்குமென்னும் ஒருசொல் வருவித்துமுடிக்க. (பிண்டி - அசோகு.)

(சா) இத்தலம் - (மேற்கூறிய) இந்தஇடம். பைத்த - பசுத்த. பணி- வேலை. பதித்து - பதிக்கப்பட்டு. அணி - அழகு.

(எ) பவளநாகம் - பவளமலைபோலுந் திருமேனி. ஒருபுடை - ஒரு பக்கம். பச்சைமால்வரை - பசிய பெரியமலைபோலுந்திருமேனி. கவர் - பிளவுபட்ட. சிகைத்தழற்பிழம்பு - குடுமியாகிய அக்கினிக்கூட்டம். கனை - மிகுதியாகிய. தவலரு-கெடுதலற்ற. தயங்க-(அர்த்தநாரீசவடிவம்) விளங்க.

(அ) தளம் - சேனை. திரளும் - கூட்டமும்.

சித்தர் சாரண ரியக்கர்கள் திருவரெண் வசுக்கண்
முத்தர் மேதகு வயிரவர் முழுதுளங் கரையும்
பத்தர் மாசுண நிலத்தவ ரனைவரும் பரிவின்
மெத்து செங்கரங் குவித்தெங்கு மிடைந்துநின் றேத்த. (கூ)

ஆயி ரம்புய வாணன்கைக் கடிப்பினுங் கெறியுஞ்
சேயி ருங்குட முழவொடு தேவதுந் துபியும்
பாய வாரியின் முழங்கிட விண்புவி பயந்த
தாயொ டுங்கொலு விருந்தருள் சதாசிவ மூர்த்தி. (கO)

மாயை காரிய மனைத்தினு மருவியு மருவா
நாய காமுக்க ணம்பரா நான்முக னறியாத்
தூய காரணு துதித்துள முருகிய தொண்டர்
தாய காவென வரும்மறை துதிசிவ சம்பு. (கக)

கயத்து ளாமயக் கிரீபனைக் காய்ந்தமீன் விழியு
நயத்த பாற்கடல் கடைந்தநா ளமிழ்ந்துமந் தரத்தை
வயத்தி னேற்றவெந் நாமையோ டும்புனை வரையெண்
புயத்த வன்பர போதக பூரணன் றனக்கே. (கஉ)

வியப்பி னிற்செயும் பூசனைப் பரிகலம் விளக்குஞ்
செயற்கை வைகலும் பூண்டுளா னொருவன்வச் சிராங்க

(கூ) மேதகு - மேன்மை தங்கிய. மாசுண நிலத்தவர் - ஆதிசேடனிவத்திலுள்ள நாகர். பரிவின் - அன்புடன். மெத்து - மெச்சுகின்ற. மிடைந்து - நெருங்கி.

(கO) வாணன் - வாணாசுரன். கைக்கடிப்பின் - கைக்கோலால். எறியும் - அடிக்கும். சேய் - நீளம். இரு - பெரிய. குடமுழவு - ஒரு வாச்சியம். வாரியின் - கடல்போல.

(கக) மாயை காரியம் - மாயை காரணமாகத்தோன்றிய காரியப்பொருள்கள்; அவை:—சராசரங்கள். தாயகா - ஆதாரமாயுள்ளவனே.

(கஉ) கயம் - ஆழமாகிய கடல். (ஆகுபெயர்) அயக்கிரீவன் - (பிரமனுறங்கும்போது வேதங்களைத் திருடிக்கொண்டு சென்ற) ஓரசுரன். இதைச் சங்கம் பதிப்பு அபிதான சிந்தாமணியிற் காண்க. காய்ந்த - கெடுத்த. மீன்விழி - மச்சாவதாரமாகிய விஷ்ணுவின் கண். அமிழ்ந்தும் - ஆழும். வயத்தின் - வலிமையால். ஏற்ற - தங்கிய. ஆமைவெந் ஓடும் - கூர்மாவதாரமெடுத்த விஷ்ணு முதுகின் ஓடும். வரை - மலைபோலும்.

(கங) பரிகலம் - போசன பாத்திரம். வைகலும் - தினமும். அயர்ச்சி - (ஒருதினம்) சோர்வு.

னியற்கை யன்பிறு னெவளவும் பணிக்குறை யில்லா
னயர்ச்சி கொண்டனன் விதியின்றி மதியினுண் டாமோ. (௧௩)

கையி னுய்ந்ததோர் பரிகலஞ் சிந்தவுங் கருத்து
மைய கோதிகைப் புற்றன னுங்கவை யுணர்ந்து
வைய மியாவையும் படைத்தவர் விளைவழி புரக்குந்
தெய்வ நாயகன் வாய்மலர்ந் தொருமொழி தெரித்தான். (௧௪)

வேறு.

எந்த முன்பய மின்றிப் பரிகலஞ்
சிந்த லான்மரம் போனிற்குஞ் செய்கையா
லந்தண் வார்கடல் சூழும் புவிக்கணே
சிந்த நீண்மர மாகென்று செப்பினன், (௧௫)

என்ற சொற்க ளிருசெவி யூடுபோய்ச்
சென்ற போதவன் சிந்தை துணுக்குறீஇ
யன்று மேனி நடுக்கமுற் றையகோ
வின்றி தெய்திய தென்கொலென் றஞ்சியே. (௧௬)

வாயு நாவு முலர்ந்து மதிமறந்
தோயு நெஞ்சம் பதைப்ப வொடுங்கியே
தீயின் வீழ்ந்த மலரெனச் செம்முகங்
காய முந்தனி வாடிக் கலங்கினன். (௧௭)

சங்க வெண்குழைச் சங்கர சம்புவின்
பங்க யப்பதந் தன்னிற் பணிந்தெழுந்
தெங்க ளையக னேயரு ளீசனே
கங்கை வேணியின் வைத்த கடவுளே. (௧௮)

---

(௧௪) உய்த்தது - செலுத்தியதாகிய. சிந்தவும் - தவறிவிழவும். ஐயகோ - ஐயோ. படைத்து - உண்டாக்கி. அவர் - அப்படைக்கப்பட்டவர்.

(௧௫) எந்தம் - எம்முடைய. சிந்தமரம் - புளியமரம். ஆக - ஆவாய்.

(௧௬) துணுக்குறீஇ - நடுக்கமுற்று.

(௧௭) காயம் - சரீரம்.

(௧௮) குழை - தோடு.

ஆல கால மணிந்த களத்தனே
பால லோசன நாத பரமனே
கால கால கபால கரேசனே
மூல காரண மான முதல்வனே. (கக)

உன்ன டித்தொண்டு செய்திங் குறைந்திடு
மென்னை யிப்படி நீமுனி வெய்திடிற்
பின்ன ரேது பிதற்றுவ னியானரு
டுன்னு நாதவென் றேபின்னுஞ் சொல்லுவான். (உ௦)

வேறு.

கோவே யரனே முனியேன் முனியேல் குணமே குறியே முனியேன் முனியேல், பாவே பதமே முனியேன் முனியேல் பகையே யுறவே முனியேன் முனியேல், பூவே மணமே முனியேன் முனியேல் பொருளே முனியேன் முனியேன் முனியே,றேவே பரமே முனியேன் முனியேல் சிவனே சிவனே முனியேன் முனியேல். ()

வரைமான் மணவா சரணஞ் சரணம் வரதா விரதா சரணஞ் சரணந், திருமால் பணிநா யகனே சரணஞ் சிவனே சிவனே சரணஞ் சரணந், தருணோ தயமே னியனே சரணஞ் சலசே கரனே சரணஞ் சரணங், கருணா கரனே சரணஞ் சரணங் கயிலா சபதீ சரணஞ் சரணம். (உஉ)

---

(கக) ஆலகாலம் - விடம். பாலலோசன - நெற்றிக்கண்ணுடைய. காலகால - யமனுக்கு யமனே. கபாலகரேசனே - பிரமகபாலத்தைக் கையிலுடையவனே.

(உ௦) முனிவெய்திடில் - கோபமெய்தினால். பிதற்றுவன் - சொல்லுவன்.

(உக) முனியேல் - கோபஞ்செய்யாதே. குறி - அடையாளப் பொருளா யுள்ளானே. பாவே - செய்யுளே. பதமே - சொல்லே.

(உஉ) மணவா - விவாகத்தையுடையவனே. சரணம் - அடைக்கலம். வரதா - வரங்கொடுப்பவனே. விரதா - ஆணையுடையவனே. தருணோதய - மோட்சம் பிறத்தற்கிடமாகிய. சலசேகரனே - கங்கையணிந்த தலையுடையவனே. கருணாகரனே - கருணைக் கிருப்பிடமாயுள்ளவனே.

கொங்கா ரிதழிச் சடையாய் சரணங் கொலைவா ரணநீ ளுரியா
ய் சரணம், பொங்கா பரணு சரணஞ் சரணம் புரகோ பநகைப் புனி
தா சரணஞ், சங்கார் திருவெண் குழையாய் சரணஞ் சதுர்வே தமு
தற் பொருளே சரணங், கங்கா தரநா யகனே சரணங் கயிலா சப
தி சரணஞ் சரணம். (உ௩)

அநகா வபயா சரணஞ் சரணம் மரனே பரனே சரணஞ் சர
ணம், பனகா பரணு சரணஞ் சரணம் பரநா தையனே சரணஞ் சர
ணம், புனமான் மழுவாய் சரணஞ் சரணம் புலியா ருரியாய் சரண
ஞ் சரணங், கனகா சலநீள் சிலையா சரணங் கயிலா சபதீ சரணஞ்
சரணம். (உச)

எனவே பலகூ றனுநா யகனும் மினிமே லயரேல் பதறேல் பத
றேன், மனமார் கவலைத் துயரம் விடுதி மனம்வாய் முறையோ டெ
னையே யெழுதா, முனவே தமதின் படிநீ துதியே மொழியா றத
னுன் மகிழ்வா யினமின், றனையா முனிவா னுரைசா பமதே யொ
ழியா தெனினும் மொழியா றுளதால். (உரு)

வேதாந் தமதின் னளவே விளங்கும் வியப்பார் தலமொன் று
ளதத் தலமே, நாதாந் தமொரு பமதா மதிலே நளினு சனனே முத
லா யுளவோர், போதார்ந் திடுநீண் மரமாய் விலங்காய்ப் புல்லாய்ப்
புழுவாய்க் கல்லாய்ப் பிறத்தற், கேதாய் விரும்பித் தவமே புரிவா
ரெனிலப் பெருமை யியம்பற் கெளிதோ. (உகா)

---

(உ௩) கொங்கு - வாசனை. பொங்கு - மேலெழுகின்ற. ஆபரணு - (சர்ப்) பாபரணத்தையுடையவனே. புரகோபநகை - திரிபுரத்தைக் கோபிக்கின்ற புன்சிரிப்பு. கங்காதர - கங்கையின் அன்புள்ள.

(உச) அநகா - பாவமில்லாதவனே. அபயா - பயந்தீர்ப்பவனே. பனகாபரணு - பாம்பாபரணத்தையுடையவனே. கனகாசலம் - மகாமேரு மலை.

(உரு) அயரேல் - தளராதே. விடுதி - விடுவாய். முனவேதம் - பழையவேதம். மொழி - சொல்கின்ற. ஆறதனுன் - விதத்தால். ஒழியாறு - நீங்கும் விதம்.

(உகா) வியப்பு - மகிழ்ச்சி. நாதாந்தம் - நாததத்துவத்தின் முடிவாகிய சிவம். போது - மலர். ஏது - காரணம்.

வேறு.

சிந்தவன மெனப்புகல்வ தல்லாது கொங்குதனிற் றிருச்செங் கோட்டூர், நந்துலவு நகர்தனிலோர் காரணத்தா லெழுந்ததெனு நவி ரண்டின், முந்துதலந் தேவைநக ராகுமென மொழிகுவதான் மு த்தி யாகுஞ், சிந்தையுட்கொண் டித்தலத்தைத் தெரிசிக்க வென்றி டமுஞ் செப்ப வன்றோ. (உஎ)

கவலைபெரி தாகிநின்று தேவைநகர் காண்பதென்றோ கருணை வாழ்வே, பவமகல வுனதுசர ணிணைவணங்கு மெனக்கருணீ பாலி யென்று, தவசுபுரிந் தேமனது முருகிமிகத் தியானநிலை சாரத் தோன்றிச், சிவன்மகிழ்ச்சி யாகியவன் சொப்பனத்தில் வந்துணர் விற் றெரிக்க லுற்றான். (உஅ)

தீர்த்தவரை நதியெனவுங் குடதிசையில் வருமதனிற் சென்று மூழ்கிக், கீர்த்தனங்கொண் டேகருடன் வட்டமிடுந் தெரிசித்துக் கிழக்கு நோக்கிப், பார்த்துவிரைந் தோடுமதற் பின்றொடரச் சிந்த மரம் பலவாய்நிற்கக், கார்த்திகெயன் றுணைவனையுஞ் செண்பகமா வனமதனிற் காண லாமே. (உகூ)

திருநடனங் கண்டவரி கரனுறையு மிந்நகர்த் தேவை தன்னி லுருவாகு மர்த்தநா ரீசருறைக் திருக்கையிலை லும்பர் கோமான்

---

(உஎ) அல்லாது - அல்லாமல். கொங்கு - கொங்குநாடு. திருச்செங் கோட்டூர்,—(ஆகிய) நந்து உலவு நகரில் - சங்கங்கள் சஞ்சரிக்கும் நகரத் தில். எழுந்தது - (மேற்செய்யுளிற் கூறிய க்ஷேத்திரம்) தோன்றியது. தே வைநகர் - சிந்தவனமாகிய வாசவனூர்.

(உஅ) பாலி - அருளுவாய். தியானநிலை - யோக நிலைமை. சார - அடைய. உணர்வில் - அறிவினிடத்து.

(உகூ) குடதிசை - மேற்றிசை. அதனில் - அந்நதியில். கீர்த்தனங் கொண்டு - தோத்திரஞ் (செய்து) கொண்டு. அதற்பின்றொடர - அக்கரு டன்பின் விடாதுசெல்ல. கார்த்திகெயன் றுணைவன் - விநாயகக்கடவுளை. [கார்த்திகேயன் - கார்த்திகெயனென விகாரமாயிற்று.]

(௩௦) அரிகரன் - ஐயனர். வாய்த்தது - கிடைத்தது. நனவில்-சாக் கிரத்தில்.

மருமலியுங் கிரீடமது பெற்றவிட் மூன்றவத்தால் வாய்த்த தென்ன வொருமுனிபோ லுரைக்கவறி துயிலுணர்ந்தான் பினுநனவி லுரைப்ப தானுன். (கo)

வேறு.

அந்தத் தலத்தை யெவர்க்கும் முரையோ மன்புற் றவனென் றுனக்கியா முரைத்தேஞ், சிந்தத் தருவா யவணு குதிநீ செயலிங் கதலா லுமைமா தொருகா, லிந்தப் படிநின் றிருமே னியும்வே றெனதா கமும்வே றுளதொப் பிலவா, லுந்தற் பொடுநா மிருவோர் களுமோ ருருவா யுறையும் வரநல் கெனவே. (கக)

கேட்டுத் தொழலுந் தவநீ புரியிற் கிட்டும் மலதிங் கெளிதில் லையென, மீட்டுந் தவஞ்செய் யிடமியா தெனவே வினவுற் றிடச் சிந் தவனத் திடமென், றீட்டுத் தரவா லுமைமா தவத்துக் கெழு வாள் காட்சிக் கவண்யாம் வருவோந், தாட்டுன் மனசஞ் சலம்போ மரமாஞ் சாடஞ் சிலநா ளவணின் றகலும். (கஉ)

ஏகென் றிடவச் சிராங்கன் பணிந்தே யிருமான் கரத்துஞ் சிரத்துந் தரித்தோய்; சோகந் தவிர்த்துக் கதியே கருமத் துகடீர் தல மெவ் விடமவ் விடமும், பாகங் கவிரு ரடையா ளமுநீ பகர்ந்தே யெளியேற் கருள்வா யெனலு, நாகர் தருகங் கணநா யகனு மவையும் வகையாய் நவிலுற் றனனல். (கங)

வேறு.

தெக்க ணத்தரசர் மூவ ருக்குளுயர் தென்ன வன்னரசு செய்திடு, மிக்க பொற்புமலி பாண்டி நாடதனில் வேந்தர் வேந்தர்கள்

(கக) சிந்தத்தருவாய் - புளியமரமாகி. அவண் - அவ்விடத்தில். ஆகுதி - விருத்தியடைந்திருப்பாய். செயல் - செய்கை. அதலால் - அஃதல்லாமல். இந்தப்படி - இவ்விதம். வேறுளது - வேறாயிருக்கிறது. ஒப்பில - சம்மதமில்லை. ஆல் - ஆதலால். (விகாரம்) உந்து - செலுத்துகின்ற.

(கஉ) மீட்டும் - திரும்பவும். ஈட்டு - (நாம்)சொல்கின்ற. (தாற்பரியம்) தாட்டு - குழப்பம். (ஆகிய) சஞ்சலம் - துன்பம்.

(கங) இருமான் - மானுங், கங்கையும். பாகம் - பகுப்பு.

(கச) தெக்கணம் - தென்றிசை. தென்னவன் - பாண்டியன். பொக்கம் - பொய். கூடல் - மதுரை.

வணங்கயாம், பொங்க மற்றரசு செய்த கூடனக ருக்கொர் தெக்
கண புறத்திலே, தக்க நெல்லைநக ருக்கு முத்தர மதிற்பொ லிந்தி
சை தழைக்குமால். (௩௪)

சீர்பொ லிந்துவளர் செங்கத் தாரிவனத் தீசு ரர்க்குநிரு திக்
கணே, யேர்பொ ருந்தியுயர் வில்வ வாரணியத் தீசு ரர்க்குமொரு
வாயுவிற், றூர்கொள் வன்னிவனத் தீசு ரர்க்கெதிர் தழைத்த தெக்
கண மதற்குநீள், பார்பு கழ்ந்திடு களாவ னத்தமல ருக்கு நேர்வரு
ண பாகமாம். (௩௫)

துறைமு கத்துறைவே லப்ப ருக்கனலி திசைய தாயெழி றுல
ங்குமா, பொறைபொ ருந்தியமந் தாச லம்மது தனக்கு ருத்ரதிசை
பொலியுமே, றுறைபு மின்பமலி போதகாரணியத் தீசு ரர்க்குமெதி
ருத்தர, மறைபு கன்றிடு பராசர் வாசமரு காக மேற்றிசை வயங்
குமால். (௩௬)

அத்த லத்தினுறை கற்க ளியாவுமெம தணிகொண் மேனியவ
ணெல்லையி, லெத்தி சைக்கணு மிருந்த புன்புன லுமெமது செஞ்ச
டையி னிசையுநீர், சுத்த முற்றபற வைக்கு லந்தெரி தருக்கு லம்பு
தர்க ளியாவுமெம், பத்தி யுற்றநரர் நக்க ணதிபர்க ளாமெ னிற்ப
கர வேணுமோ. (௩௭)

---

(௩௫) செங்கத்தாரிவனம் - தென்மலை. நிருதிக்கண் - தென்மேற்கு மூலையினிடம். வில்வ வனம் - கடையம். வாயுவில் - வடமேற்றிசையில். வன்னிவனம் - மடவார் விளாகம். தெக்கணமதற்கு - தெற்பக்கத்திலுள்ள. களாவனம் - கருவைநல்லூர். வருணபாகம் - மேற்றிசைப்பக்கம்.

(௩௬) துறைமுகத்து - (குலசேகரப் பேரிக்குளத்துக்கு வருகிற பாலையாற்றுப்) பக்கத்தின் வழியிடத்து. வேலப்பருக்கு - வேலப்பர் கோயிலுக்கு. அனலி திசை - அக்கினிதிக்கு, தென்கிழக்கு. மந்தாசலம் - பொதியமலை. ருத்ரதிசை - வடதிசை. போதகாரணியம் - தாருகாபுரம். பராசர் வாசம் - பராசமுனிவரிருப்பிடம்.

(௩௭) புன்புனலும் - சிறுசலமும். தருக்குலம் - கற்பகக் கூட்டம். புதர்கள் - குத்துச்செடிகள். நரர் - மனிதர்.

என்று பற்பலவு மெம்பி ரான்மிக வெடுத்து ரைத்திட விறை ஞ்சியே, நன்று நன்றிதென வச்சி ராங்கன்விடை கொண்டு வெள் ளியெனு நகமொரீஇத், துன்று நீளிமய வரைக டந்துதுதி சொல்லி யேத்திய பகீரதற், கன்ற ளித்தருள்செய் கங்கை தங்கிவளர் காசி யம்பதி யடைந்தனன். (௩அ)

அவணை மன்னையுட னத்த னைப்பரவி யங்க கன்றுபுக ழும்பிகை தவசு செய்தவொளிர் கச்சி யோடிமமி குந்தி டும்பதி தனைப்பணிந் துவகை கூர்கனக சபைப ணிந்துபல பலத லங்களினு முற்றுநஞ் சிவனை வந்தனை புரிந்து மிஞ்சுபல தீர்த்த மாடியு மகன்றனன். (௩௯)

மிக்க மாமதுரை தன்னி லெய்தியுயர் மீன லோசன மடந்தையைச் சொக்க நாயகரை யும்ப ணிந்துதுதி தோகை வாகனெனு மூவிரண் டக்க ரத்துறையும் வேள்ப ரங்கிரியின் வேல னைப்பரவி யருளுடன் றக்க சீர்பெருகு தேவை யென்றசிவ லோக பூமியது சார்ந்தனன். ()

மயில்க ணின்றுநட மாட வோடிவரு வான ரங்கள்பல வின் கனி, பயிலு மத்தளமி தென்று செங்கைகொடு கொட்ட வண்டிசை கள் பாடவே, குயில்கண் மாகத ரெனத்து திக்கவுயர் கொன்றை யின்மல ருதிர்ந்திடச், செயிரில் காந்தளது தாங்கல் வள்ளறரு செம் பொ னேந்தியகை சிவணுமால். (௪க)

அறையி டிக்குரலி னிமிர்பு லிக்கணமு மாவி னங்களு மிசைந் தொரு, துறையி னிற்புனல் குடிப்ப தன்றியுமொர் புலிமு லைத்தலை

---

(௩அ) நகம் - மலை. ஒரீஇ - நீங்கி.

(௩௯) இமம் - பனி. பதி - திருக்கழுக்குன்றமாகிய தலம்.

(௪0) மீனலோசனமடந்தை - மீனாக்ஷியம்மை. தோகைவாகன் - மயில்வாகனத்தை யுடையவன். அக்கரம் - எழுத்து.

(௪க) மாகதர் - புகழ்ந்து பாடுவோர். செயிர் - குற்றம். வள்ளல் - கொடையாளி. சிவணும் - போலும்.

(௪உ) அறை - மோதுகின்ற. நிமிர் - உயர்ந்த. ஆவினம் - பசுக்கூட் டம். மீளும் - திரும்பும். மஞ்ஞை - மயில். கறை - கறுப்பு.

சுரந்தபா, னிறைவி னிற்பசு வளித்த கன்றுகள் சுவைத்து மீளு நெடு மஞ்ஞையுங், கிறைப டைத்தவிட வரவு மோர்புடை கலந்து லாவிவிளை யாடுமால். (௪௨)

அருவி யின்புனல் சொரிந்து மந்திக ளநேக மாமலர் பறித்து முற், பொருளொ னுஞ்சிவ லிலிங்க ரூபசிலை தனைய ருச்சனை புரிந் துடன், பருவ மாமதுர சூத மென்கனி யரம்பை யின்கனி படைத் துமே, பெரிய வன்பொடு நிவேத னஞ்செய்து வணங்கி நின்றுபு டை பெயருமால். (௪௩)

வேறு.

இன்ன வாறுபல் வளங்களுங் குறியுங்கண் டிதயந்
தன்னி லேயமை யாததோர் மகிழ்ச்சியுந் தாங்கிப்
பன்னு பேரடை யாளமுங் காட்டியெம் பரமன்
சொன்ன தோரெல்லை தானிது வாமெனத் துணியா. (௪௪)

மூறைத வாதவச் சிராங்கனு முன்னைய வுருவை
யிறைவ னார்தம தருளினு லிகந்தச ரமதாய்ப்
பொறைகொ டேவரும் பிறந்திட விரும்புமிப் புரத்து
ணிறையு மாம்பிர மரவுரு வாகியே நின்றான். (௪௫)

ஆம்பி ரத்தரு வாகிவச் சிராங்கனின் றாவிற்
பாம்ப ணிந்தசுற் பரனெரு பாதியை வேண்டிக்
காம்பி ணங்குதோட் கௌரியுங் கயிலைநீத் தினிதி
னோம்பு மாதவம் புரிவதற் குன்னினு ளுளத்தில். (௪௬)

---

(௪௩) சிலை - கல். சூதம் - மாமரம். அரம்பை - வாழை. புடைபெயரும் - பக்கமேசெல்லும்.

(௪௪) குறி - அடையாளம். அமையாதது - அடங்காதது. துணியா - துணிந்து.

(௪௫) தவாத - கெடாத. இகந்து - நீங்கி. அசரம் - நிலையியற்பொருள். பொறை - பொறுமை. ஆம்பிரமரம் - புளியமரம்.

(௪௬) காம்பு - மூங்கில். இணங்கு - போன்ற. ஓம்பும் - பாதுகாக்கும்

கடைக்க ணோக்கறிந் தேவல்செய் பாங்கியர் கண்முந்
தொடைக்கொள் கொந்தள வரம்பைமா தரும்புடை சூழு
முடுக்க ளாயிவண் மதியென விமானமூர்ந் தும்ப
ரடுக்கும் வார்பொழிற் சிந்தநீள் வனத்தில்வந் தணைந்தாள். (சஎ)

தாம மென்கனி முதலிய கற்பகந் தரவின்
காம தேனுநெய் பான்முத லியதரக் கங்கை
யாம ரம்பையர் வேண்டிய தருகுசின் றளிப்பக்
கோம டந்தையா மலைமகள் பூசனை குறித்தே. (சஅ)

கொந்த ளஞ்சடைக் கோலமாக் குயிற்றிவெண் ணீற்றாற்
சுந்த ரத்திரு மேனியுத் தூளனஞ் செய்து
கந்த ரஞ்சிரஞ் செவிகரங் கண்டிகை பூண்டு
தந்து போன்றநுண் ணிடையிடை மரவுரி தாங்கி. (சகூ)

ஊசி மேலொரு கான்மலர் நிறுவிநெஞ் சுள்ளு
மாசி லாமணி தன்கழ னிறுவிமா தவந்தா
னேசில் பஞ்சமாக் கினியிடை நின்றியற் றினளா
னேசி மாதவந் தனக்குறு பயனென நின்றாள். (ருo)

யோக மாதவம் புரிசெயல் காண்கவு முவக்கு
மேக வாகன னுறுதுயர் விலக்கவு முயிரா
யாக மெங்கணு நிறைந்தரு ளம்பிகைக் கர்த்த
பாக நல்கவுந் திருவுளஞ் செய்தனன் பரமன். (ருக)

---

(சஎ) தொடை - பூமாலை. கொந்தளம் - கூந்தல். உடுக்கள் - நக்ஷத்திரங்கள். ஆய் - ஆக. மதி - சந்திரன். வார் - நீண்ட. பொழில் - பூமியில்.

(சஅ) தாமம் - மாலை. கோ - தலைமை.

(சகூ) குயிற்றி - செய்து. உத்தூளனஞ் செய்து - குழையாமற் றரித்து. கந்தரம் - கழுத்து. கண்டிகை - உருத்திராக்கமாலை. தந்து - நூல். இடையிடை - இடையிடத்தில்.

(ருo) நிறுவி - நிறுத்தி. உள் - நடுவில். உ - சாரியை. ஏசு - நிந்தை. நேசி - அன்புவைக்கின்ற.

(ருக) மேகவாகனன் - இந்திரன். ஆகம் - சரீரம்.

சொந்த நாயகி பிரிவையாற் ருதவர் தொகைபோ
னந்தி யாதியாம் பூதர்விண் ணவர்குழா நண்ண
மூந்து மந்த்ர துந்துபி நான்மறை முழங்க
வந்து தோன்றினன் விடையின்மே லரனுமவ் வனத்தில். (ருஉ)

நந்தி நாயகன் றிருவுருக் காண்டலு நாரி
சிந்தை யும்புதி தாமணஞ் செய்குவா னெண்ணி
வந்த போன்மகிழ் வுற்றன ணீசெய்மா தவத்தாற்
றந்த மென்றன னர்த்தபா கஞ்சிவ தாணு. (ருங)

சொற்ற தோருமுன் னொருபுறஞ் சூழ்சடை யொருசார்
கற்றை வார்குழல் குழையொரு காதொன்று தோடே
யுற்ற மாறொரு கரமொன்று தொடிகழ லொருகான்
மற்றொர் கால்சிலம் பாகவோ ருருக்கொண்டு மகிழ்ந்தே. (ருச)

வேறு.

நின்றவிச் சிந்த நீழ னெடுவட வாலி னீழ
லொன்றுமித் தேவை யூரே கயிலையென் றுமையா ளோடு
மன்றறிந் திடப்பேர் சிந்தா மணியிடப் பாக வல்லி
யென்றுரு வொன்று யிங்க னுறைதுமென் றிருந்தா னெம்மான். ()

ஆதலா லிந்தத் தேவை நிட்சேப மாடி யெம்மான்
பாத பூசனைசெய் தோர்கள் பரகதி யடைவார் மெய்யே
யீதின்மே லுமையா டக்க னிடத்தவ தரித்துப் பெற்ற
தாதைத னரசும் வாழ்வுந் தடிந்தவா றெடுத்துச் சொல்வாம். (ருசு)

7- சிந்தவனச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் உசக.

---

(ருஉ) தொகை - கூடுதல். குழாம் - கூட்டம்.

(ருங) நந்திநாயகன் - இடபாரூடராகிய சிவபிரான். நாரி - உமாதேவி. செய்குவான் - செய்தற்பொருட்டு. வந்த - வந்தது. (முற்றிறுதி தொக்கது) தந்தம் - கொடுத்தோம். தாணு - பிரான்.

(ருச) } ஒரும் - உணரும். ஒருசார் - ஒருபக்கம். கற்றை - திரண்ட.
(ருரு) } தொடி - வளையல். உரு - திருமேனி. உறைதும் - இருப்போம். ஒருமுன் என்பதை - இருந்தானென்பதனோடு கூட்டுக.

(ருசு) நிட்சேபம் ஆடி - நிட்சேபநதியில் நானஞ்செய்து. தக்கன் - பிரமபுத்திரரிலொருவன். தடிந்த - கெடுத்த.

## எட்டாவது:—திருவவதாரச் சருக்கம்.

சகல லோகமு மொடுக்குறப் பிரளய சலதி
மிருதி யாகவே பெருகிய நாளினில் விரிஞ்சன்
றிகிரி மாலுருத் திரன்மகே சுரன்சதா சிவமுந்
தகைமை விந்துநா தமும்பரா சத்திபி னடங்கும். (க)

மெத்து சத்தியும் பரசிவத் தொடுங்குமவ் வளவி
னித்தி யானந்த போதமாய் நிட்கள மாகிப்
புத்தி யுட்படர் பரவெளிச் சொருபமாய்ப் பொருந்தித்
தத்து வங்களை யுந்தணி கடந்துசஞ் சரிக்கும். (உ)

பின்னு மம்முறை யாய்ப்பர சிவத்தினுட் பிறந்து
துன்னு மொன்பது பேதமு மரபினிற் றோன்று
மன்ன வாறதா யொடுங்கிய நாளினி லாழி
மன்னு மாலயன் முதலினர் முறைமுறை வந்தார். (ந)

வந்த பேரவ ரவர்தொழின் முயன்றனர் வனசக்
கந்த நாண்மல ரவன்படைத் திடுந்தொழில் கருதிச்
சிந்தை கூர்தசப் பிரமரைப் படைத்தனன் சிறந்த
மைந்தர் மைந்தர்கண் மதிகதிர் கிரகங்கண் மழைமின். (ச)

சுரர்க ளுகரெண் வசுக்கள்கந் தருவர்க டொகைசேர்
விரத மாதவர் விஞ்சையர் மற்றுளோர் விருக்க
நரர் விலங்குபுண் முதிர்சரா சரங்களாய் நயந்தே
யரிதி னல்வெகு விதங்களாய்ப் பிறந்தன வநேகம். (ரு)

---

(க) சலதி - சமுத்திரம். விரிஞ்சன் - பிரமன். விந்து - அமுதத்துளி. நாதம் - ஒலி.

(உ) மெத்து - மெச்சுகின்ற. நிட்களம் - உருவில்லாமை. புத்தி - அறிவு. படர் - செல்கின்ற. பரவெளி - ஞானகாயம்.

(ந) ஒன்பதுபேதம் - மேற்பாடல்களிற் சொல்லிய பிரமன் முதலியநவபேதம். மரபினில் - முறையாக.

(ச) முயன்றனர் - செய்தனர். வனசம் - தாமரை. தசம் - பத்து. மைந்தர் - புத்திரர்களின்.

(ரு) தொகை - கூட்டம். விருக்கம் - மரங்கள். அரிதின் - அருமையாக.

பிரம னீன்றிடும் பதின்மருட் பெருவிரற் பிறந்த
வரிய தக்கனுந் தந்தைத னடியிணை தொழுதே
தெரிவ ருங்கலை தெரிந்துமியான் றெளிகிலேன் றெளிய
வுரிய தோர்தனி யுறுதிநீ புகலென வுரைப்பான். (௬)

எங்க ளுக்கெலாங் காரண மூர்த்தியா யிருப்போன்
றிங்கள் சூடிய தேவனே யாதலாற் சிந்தை
யங்க வன்பதஞ் செலுத்திநீ யருந்தவ மியற்றி
யிங்கி தந்தரு முத்திபுக் கிருத்தியென் றிடலும். (௭)

எவ்வி டத்திலவ் வகைசெய லெனவவ னிசைப்பக்
கொவ்வை வாயிதழ்க் கலைமகள் கொழுநனுங் கூறு
நவ்வி நேர்விழி யம்பிகை நண்பனைத் தொழுதே
செவ்வ னூர்கதிர் மதியெவ ரென்னலுந் தேவன். (௮)

அவர்க ளெம்மிரு கண்ணென வம்புயக் கரத்தாற்
புவன நாயகன் விழியிணை யுமைபுதைத் திடலு
மவனி யெங்கணு மந்தகா ரங்களா னதனாற்
றவமி யாகநித் தியத்தொழி லியாவருந் தவிர்ந்தார். (௯)

சீத னன்முத லினருட னியானுமே சென்று
வேத நாதனே புவியெலா மிருட்குழா மிடைந்த
தாத லாலுயி ரிறக்குமென் றஞ்சினே மென்றுங்
கோதி லாநுதல் விழிதிறந் தனனெழில் குலவ. (௧0)

அதிக வந்தகா ரங்கணீங் கியதிறற் புதைத்த
பதும மென்கர நீக்கியே யுமையவள் பதறி

---

(௬) பதின்மர் - பத்துப்பேர்.

(௭) புக்கு - புகுந்து.

(௮) செயல் - செய்தல். கொவ்வை - கொவ்வைப்பழம் போன்ற. கொழுநன் - நாயகன். நவ்வி - மான். செவ்வன் - ஒழுங்கு.

(௯) அவனி - உலகம். அந்தகாரம் - இருள். நித்தியத்தொழில் - கன்மாநுட்டானம்.

(௧0) மிடைந்தது - நெருங்கினது. என்றும் - என்றுசொன்னேம். குலவ - விளங்க.

(௧௧) பதுமம் - தாமரை. எது - யாது. கொல் - அசை.

யெதுகொல் செய்தன மென்னவே மனம்புழுங் கிடலுந்
துதிசெ யுங்கதிர் மேனியில் வெயர்வுதோன் றினதால். (கக)

தோன்று கின்றமெய்ந் நீர்கரத் தணிவிர றோறுங்
கான்று நீள்பெருங் கயிலையி னருவியாக் கான்று
மூன்று லோகமு முடிக்குநாட் கடல்களோ ரேழு
மேன்று பொங்கிய வாமெனப் பெருக்கெடுத் தெழுந்த. (கஉ)

எங்க னும்பிர ளயமெனப் பெருகல்கண் டியாங்க
ளங்க ணன்றனைத் தொழுதிருட் காகவிங் கடைந்தே
முங்கு சங்கரி செங்கரத் தொழுகிய வெயர்வை
பொங்கு நீத்தத்தின் பெருக்கையென் புகலுவே மெனலும். (கங)

கையி லுலகை வாரியே செஞ்சடைக் காட்டின்
மெய்ய னோர்சடை நுனியினிற் றிவலையா மிலைந்து
மையை நேர்குழ லுமையவள் கரத்தின்வந் ததனாற்
றுய்ய மாபெருங் கங்கையென் றொருபெயர் சொன்னான். (கச)

மதிமு கத்தம்மை கரத்துற நீண்முடி வனைந்த
புதிய நீத்தத்தை யெங்கட்குத் தருகெனப் போற்றக்
கதிசெய் நாயகன் கங்கையி னுவள வளித்தா
னதைமுக் கூறுசெய் தவரவர் புரத்திற்கொண் டமைந்தேம். (கரு)

வேறு.

ஒன்றை யிந்தி ரன்றன்வா னுலகில் வான கங்கையாய்
மன்ற வைத்த னன்பினே வண்டு கிண்டு தண்டுளாய்

---

(கஉ) கான்று - கக்கப்பட்டு. கான்று - வெளிப்பட்டு. [தாற்பரியம்] என்று - எதிர்த்து. எழுந்த - எழுந்தது.

(கங) பிரளயம் - யுகாந்தகாலவெள்ளம். இருட்காக - இருள் நீக்கத்தின் பொருட்டு. உங்கு - இவ்விடத்து.

(கச) திவலையா - துளியாக. மிலைந்து - அணிந்து. மை - மேகம்.

(கரு) நீத்தத்தை - வெள்ளத்தை. முக்கூறு - மூன்றுபங்கு. புரம் - ஊர். அமைந்தேம் - அடங்கியிருந்தோம்.

(கசா) மன்ற - நிலைபெற. வாவியில் - தடாகத்தில்.

துன்று மார்ப னென்றினைத் துகள றுந்தன் னூரிலே
நன்றி சேரொர் வாவியி னிரப்பி யுண்ண யந்தனன். (கசு)

பின்னு மொன்றை யான்கொடு பெயர்ந்து வந்து மானதத்
துன்னி வாவி யொன்றுசெய் துவந்ததிற்பெ ருக்கலா
லின்னு மான தத்தட மென்றபேர்து லங்குமா
லன்ன வாவி போலவே யெங்குமில்லை யாமரோ. (கஎ)

தயங்கு மந்த மானதத் தடாக தீர மெய்தியே
வியன்பொ ருந்து தவசுரீ புரியி னம்பன் வெளிவரு
மியைந்த நல்வ ரங்கள்கேட் டழிவி லின்ப மெய்தியே
புயங்க பூணன் கழனிழற் புகுந்து வாழ்தி யென்றனன். (கஅ)

அந்த வாறு மானத வாவி தன்னை யணுகியே
சிந்தை கூர்ந்த மடுவினிற் றீர்த்த மாடி யோரிடை
நந்தில் பஞ்ச மாக்கினி நடுவிற் றுளோன் றான்றியே
யிந்து சேக ரன்பத மிதய மூன்றி நின்றனன். (கக)

சதுர்மு கற்கு மரியதோர் தவசி வன்பு ரிந்திட
விதுவ ணிந்த சேகரன் விமலை யோடு தோன்றியே
யெதுகொல் வேண்டும் வரமென விறைஞ்சி யேத்தி மொழிகுவான்
றுதிசெய் தேவ ரியாருமென் சொல்லி னேவல் செய்யவே. (உ0)

ஒப்ப கன்ற பேரர சுதவி யுன்ற னிடமுறை
துப்பி சைந்த விதழுமைத் தோகை யென்றன் சுதையதா

---

(கஎ) மானதத்து - மனத்தில்.

(கஅ) தயங்கும் - விளங்கும். தீரம் - கரை. வியன் - பெருமை. வரும் - வருவான். புயங்கபூணன் - சர்ப்பாபரணன்.

(கக) அ மடுவினில் - அந்தத்தடாகத்தில். நந்தில் -குறைவில்லாத. இந்துசேகரன் - சந்திரனையணிந்ததலையுடைய சிவபிரான்.

(உ0) விது - சந்திரன்.

(உக) துப்பு - பவளத்தை. இசைந்த - ஒத்த. சுதை - மகள். பணித்தி - செய்வாய். இருத்தி - இருப்பாய்.

கப்ப ணித்தி யான்றரக் கவுரி தன்னைப் பின்புநீ
ச்செப்பு வேத முறைமணஞ் செய்தி ருத்தி யென்றனன். (உக)

தக்க னிந்த வாறதாய்த் தனக்கு வேண்டும் வரஞ்சொல
முக்க ணீச னவையெலா மளித்து வெள்ளி முதுகிரிக்
கக்க ணத்தி னேகினு னதன்பின் யமுனை யருகிலே
மிக்க தக்க புரமென்றோர் நகர்செய் தங்ஙன் மேவினான். (உஉ)

சுரரி யாரு மாங்கவன் சொல்வி னேவல் செய்யவே
யுரவு மேவு தாதையு முரிய தாதை தாதையுங்
கரவி லாத வன்மனங் கருது மாறு புரியவே
யரசு செய்து மகிழ்வுட னவணு றைந்தி ருந்தனன். (உங)

வேறு.

இந்தவா றரசு செய்தே யிருக்குநா ளினிலோர் நாட்பூங்
கொந்துசேர் நானந் தோய்ந்த கோதைய ராட லாலே
நந்துலா வியநீள் வாரிப் புலவினை யகற்றி நாளுங்
கந்தமே யாகச் செய்யுங் காளிந்தி நதிக்க ணுற்றான். (உச)

அன்னமா நதியி னோர்பொன் னம்புய மலரிற் சங்கா
மென்னவுற் றனளெம் மன்னை தக்கன்கண் டிதென்கொ லென்று
தன்னெடுங் கரத்தாற் றீண்டக் குழந்தையா யினட னில்லாண்
மின்னுபூங் கரத்தி னல்க விமலையைப் பெற்று ளொத்தாள். (உரு)

தன்னருஞ் சேயா மென்ன வளர்த்துப்பின் றக்கன் வேதஞ்
சொன்னவாற் றுலே யீசற் கொணர்ந்தவற் களித்தான் றோகை

(உஉ) யமுனை - யமுனாநதி.

(உங) உரவு. வலிமை. தாதைதாதை - பிரமன். கரவு - கள்ளம். அவன் - அத்தக்கன்.

(உச) நானம் - கஸ்தூரி. கோதையர் - கூந்தலையுடைய பெண்கள். ஆடல் - மூழ்குதல். வாரிப்புலவு - கடற்புலால் நாற்றம்.

(உரு) எம் அன்னை - எங்களுக்குத்தாயாகிய உமாதேவி. பெற்றாள் - பெற்றதாய்.

(உசு) ஆற்றால் - முறைப்படி. கொணர்ந்து - கொண்டுவந்து.

தன்னைமா மணஞ்செய் தோங்கும் வெள்ளியங் கிரியிற் சார்ந்தே
யென்னையா ளுடையோ னெங்க ளன்னையோ டிருந்தா னாதோ.

சிலபகல் கழிந்த பின்னர்த் திருமகட் காண்பா னெண்ணி
யலர்மணி மகுட மின்ன வரம்பையர் கவரி வீச
வலன்மிகு முரச மேங்க மாமணிச் சிவிகை யூர்ந்து
சலதிபோற் பதாதி சூழத் தக்கன்வெண் கயிலை புக்கான். (உஎ)

புக்கிய தக்க ராசன் புராரிக்கெம் வரவு சொல்கென்
றக்கண நாத நந்திக் கறைதர வவனுஞ் சென்று
நக்கனார் திருமுன் கூற நாதனும் வணங்கு வானேற்
றக்கனிங் கணுக வின்றேற் றன்னகர்க் கணுக வென்றான். (உஅ)

திருவுளப் படியே நந்தி சிறுவிதிக் குரைக்க வுந்தான்
மருகென வுணரா னென்னை மாமனென் றுணரான் கொல்லோ
பெருநிலத் தரசே னும்பெற் றவருக்குப் பிள்ளை யென்ப
கருதிலன் கொல்லோ வென்னக் கனன்றுள முருத்துச்சொன்னான்.

பிணஞ்சுடு காடு வீடு பேயெலாந் தனது சுற்ற
மிணங்குறு வைய முண்டி யிடுகலன் றலையோ டாகு
முணங்குதோ லாடை யூர்தி யொருநரை யெருது பெற்றான்
வணங்கென்றானென்னையன்றோ ன்வாழ்வுக்கென்வாழ்வுதாழ்வோ. ()

சாதியொன் றில்லான் றாயுந் தந்தையு மின்மை யாலே
நீதியொன் றில்லான் மாதர் நெறிகொள்கற் பழித்த தாலே
யோதியொன் றறியா னாசா னின்மையா லிவனை யொப்பி
லாதிநா யகனென் றேத்த லடாதும்பர் முதலெல் லோர்க்கும். (கூக)

---

(உஎ) வலன் - வெற்றி. ஏங்க - முழங்க. சலதி - கடல். பதாதி - சேனை.

(உஅ) புக்கிய - புகுந்த. கணநாதநந்தி - கணங்களுக்குத்தலைவராகி யநந்திதேவர். அணுக - நெருங்கிவருக.

(உகூ) சிறுவிதி - தக்கன். மருகு - மருமகன். என்ப - என்பது. கருதிலன் - நினைத்திலன். கனன்று - வெம்பி. உருத்து - கோபித்து.

(கூ0) ஐயம் - பிச்சை. இடுகலன் - இடப்பட்டபாத்திரம். உணங்கு- காய்ந்த. ஊர்தி - வாகனம். நரை - வெள்ளை.

(கூக) ஓதி - படித்து. அடாது - கூடாது.

இந்தவுத் தரவு தப்பி யிமையவர் முதலா னோனுஞ்
சிந்தையு ளவனை யுன்னிச் சிவாவென்றே தினுங்கை கூப்பி
வந்தனை செயினு மியாகம் வளர்க்கினு மொறுப்ப னென்று
வந்தமி லமர ரஞ்ச வாக்கினை புரிந்தான் றக்கன். (௩௨)

அன்றுதொட் டியாகஞ் செய்தே யரற்கவிப் பாக நல்க
லின்றெனிற் றண்ட மெய்து மென்னுளத் தெண்ணி யாரு
நன்றிசேர் வேள்வி செய்யா திருந்தன ரதனை நாடிப்
பொன்றுமா றேயோ வேள்வி புரிந்திடத் துணிந்தான் றக்கன். ( )

வேறு.

ஒன்று நெஞ்சகத் திருவர்முப் புவனர்கோ டியர்நான்
கென்ற தும்பியைந் தருவுளோ ரறுதொழி லிமையோர்
நன்றி சேரெழு தீவுளோ ரெண்வசு நவமாய்
நின்றி டுந்தசப் பிரமர்பன் னொருவர்பன் னிருவர். (௩௪)

மற்று ளோர்களுஞ் சூழவோர் வேள்வியை வகுத்தான்
கற்றை யங்குழ லுமையவ ளன்னது கருதிப்
பொற்றை வில்லியை யடிதொழு தெந்தையம் புவியி
னுற்றி யாகஞ்செய் திருந்திடல் காண்பதற் குவந்தேன். (௩௫)

அருள்செ யென்னலு மம்பிகைக் கம்பிகா பதியோ
ருரைபு கன்றிடு முன்றந்தை யவமதித் துள்ளான்
றெருளி லானவண் சென்றிடே லென்னவே சிறந்த
கருணை நாயகி பரவியின் னனசில கழறும். (௩௬)

---

(௩௨) ஒறுப்பன் - தண்டிப்பன்.

(௩௩) அவிப்பாகம் - தேவர்கட்குக் கொடுக்குமுணவு. தண்டம் - (சிவபிரானாலே) தண்டனை.

(௩௪) இருவர் - பிரமன், விஷ்ணு. கோடு - கொம்பு. தும்பி - யானை. அறுதொழிலிமையோர் - பிராமணர். நவம் - புதுமை. தசப்பிரமர்-பத்துப்பிரமாக்கள். பன்னொருவர் - பதினொருருத்திரர். பன்னிருவர் - பன்னிரண்டு சூரியர்.

(௩௫) வேள்வி - யாகம். பொற்றை - மலை. எந்தை - என் பிதாவாகிய தக்கன்.

(௩௬) சென்றிடேல் - செல்லாதே. கழறும் - சொல்லுவள்.

சிறிய ரெண்ணமும் புலவர்செய் குற்றமுஞ் சிந்தை
நெறியில் கொஞ்சர்செய் வினையும் வெம்புன்மொழி னீச
ருறுதி யின்றிய நியமமும் பித்தர்சொல் லுரையு
மறிஞ ரியாவரும் பொருளென மதித்திடா ராமால். (௩௭)

பொன்னை வேண்டிய புகழினை நல்குபொற் பைங்கூழ்
தன்னை வேண்டினோர் முட்டரும் வேலியைத் தடியார்
நின்னை வேண்டியே பணிவிடை நித்தமும் புரியு
மென்னை வேண்டிநீ யதுபொறுத் தருளுத வியல்பே. (௩௮)

எனப்பு கன்றிடப் புன்னகை புரிந்திரு மேருக்
குனித்த நாயகன் விடைகொடுத் தருளலுங் குலவு
கனத்தை நேர்குழ லுமையவ டந்தையோர் கரும
நினைத்தி யாகஞ்செய் நெடுந்தலங் கடிதினி னேர்ந்தாள். (௩௯)

வந்தெ மன்னைத னன்னைமுன் னின்றன ளவடன்
சிந்தை கூர்ந்துடன் றழுவுறு திருந்தன டைய
தந்தை யாகிய தக்கனைச் சார்ந்தன ளவனு
நிந்தை பற்பல நிகழ்த்தியே யவணிருந் தனனால். (௪0)

இகழ்ந்த செய்கைகண் டம்பிகை யுண்முனி வெய்த
மகிழ்ந்து நீவிர்செய் வேள்வியு நுங்கடம் வாழ்வு
மிகுந்த பேய்திரி பிணம்படு சுடலையாய் விடவென்
றகங்க றுத்துரை புகன்றுடன் மறைந்தன ளாமால். (௪௧)

---

(௩௭) நெறி - நீதி. கொஞ்சர் - அற்பர். நியமம் - தவம்.

(௩௮) வேண்டிய - விரும்பப்பட்ட. முட்டரும் - முள்ளைத்தரும். தடியார் - விலக்கமாட்டார். அது-தக்கனவமதிப்பு.

(௩௯) இரு - பெரிய. குனித்த - வளைத்த. கனத்தை - மேகத்தை. ஓர்கருமம் - ஒரு வஞ்சகத் தொழிலை. கடிதினில் - விரைவில். நேர்ந்தாள் - வந்தாள்.

(௪0) நிந்தை - பழிமொழி. அவண் - அவ்விடத்தில்.

(௪௧) முனிவு - கோபம். கறுத்து - கோபித்து.

வேறு.

வேலிசை நெடுங்கண்மட மின்செய லறிந்து
காலனை யுதைத்தருள்செய் காலன்மனம் வெம்பி
மூலவழ லாமென முனிந்தவள வன்றேன்
பாலமதி னின்றிரண பத்திர னுதித்தான். (சஉ)

கார்நிற மிசைந்தகரு மேனியொளி காட்ட
வேர்பெருகு திண்புயம தெண்டிசை யடைப்ப
மேருவிரு கால்கொடெதிர் வந்ததென விண்ணும்
பார்களு நடுங்கரண பத்திர னுதித்தான். (சங)

மச்சவிழி யுந்திறல் வராகவெயி றும்பொற்
கச்சபம தோடுமகன் மார்பினணி காட்ட
வச்சமகல் சிங்கவுரி யுத்தரிய மாக
வுச்சித மிருந்தசெய பத்திர னுதித்தான். (சச)

செப்புறு கணிற்கடை யனற்பொரி தெறிப்ப
நிப்பரிய பட்டமணி நெற்றிமெய் கொதிப்ப
மற்பொடு கடுத்திதழ் கடித்துவரி தங்கு
பற்பணி துலங்கரண பத்திர னுதித்தான். (சரு)

இழுக்கக தரக்குரி யிடைக்குடைய தாக
வழுத்துமிடி யேறுதன் முழக்கமென வாய்விட்

(சஉ) இசை - ஒத்த. காலன் - காலையுடையசிவபிரான். மூலவழல் - மூலாக்கினி. பாலம் - நெற்றி. இரணம் - போர்செய்கின்ற. பத்திரன் - வீரபத்திரர்.

(சங) கார் - மேகம். மேரு - மேருமலை. கொடு - கொண்டு.

(சச) மச்சவிழி - விஷ்ணுவாகிய மீன்கண். திறல் - வலி. வராக எயிறு- விஷ்ணுவாகிய பன்றிக்கொம்பு. பொன் - அழகு. கச்சபம்-விஷ்ணு வாகிய ஆமை. ஓடு - முதுகின்ஓடு. அகன் - விரிந்த. சிங்கவுரி - நரசிங்கத் தின்றோல். உச்சிதம் - உயர்ச்சி.

(சரு) கடையனல் - ஊழித்தீ. நிப்பரிய - நீத்தற்கரிய. (விகாரம்) மற்பு - வலிமை. (தாற்பரியம்) கடுத்து - கோபித்து. வரி - கீனம்.

(சசு) இழுக்கு - ஈனம். தரக்கு - புலி. உரி - தோல். உடை - ஆடை. வாய்விட்டு - ஒலித்து.

டழைத்ததெ னெனச்சொலென வஞ்சல புரிந்தே
பழிப்பிலதி வீரசெய பத்திர னுதித்தான். (சுசா)

காலவழ லாமென முனிந்துகடி தேகிச்
சீலமக றக்கனமை வேள்வியது சிந்திப்
பாலவரு கென்றிறை பகர்ந்திட வணங்கி
யேலுமுயர் பூதரொ டெழுந்தவ ணகன்றான். (சுஎ)

வடவரையை யங்கைகொ டெடுக்கும்வலி தங்கு
மிடல்கொள்சத பூதர்பெரு விசிறியது வீசக்
கடல்சுவற வுண்டுமதி தாகமக லாத
விடிகுரலி னுயிரவர் கவிரிக ளிரட்ட. (சுஅ)

அடற்புய பிலத்தர்பதி னுயிரவ ரண்ணல்
படைக்கலம தேந்தியிரு பாலும்வர விட்டுக்
கடக்கரியை யம்மனை யெனக்கையி னெடுக்குந்
திடத்தர்பல கோடியரி நாதம திசைப்ப. (சுகூ)

பணைத்துடி மலாரிமுழ வாதிப வியங்கள்
விணிற்கடை யுகத்திடி யொலித்ததென மேவ
வணித்தொரு புறத்தினட லாயிர மியானை
யிணைத்ததொரு தேரின்மிசை யேறினன்மன் மாதோ. (ருo)

சிற்சில கணங்களுயர் தேர்களென வான
சிற்சில கணங்கண்மத சிந்துரம தான

---

(சுஎ) காலஅழல் - யுகாந்தகாலாக்கினி. அமை - அமைக்கப்பட்ட. பால - புத்திரனே. இறை - சிவபிரான். ஏலும் - பொருந்தும்.

(சுஅ) வலிமிடல் - மிக்கவன்மை. சதபூதர் - நூறுபூதர், சுவற-வற்ற. இரட்ட - வீச.

(சுகூ) அடல் - வலிமை. பிலத்தர் - பாதலத்திலுள்ளவர். கடக்கரி - மதயானை. அம்மானை - அம்மானைவிளையாடுங்காய். அரிநாதம் - சிங்கத்தொனி.

(ருo) பணை - பருத்தலையுடைய. விணில் - ஆகாயத்தில். அணித்து - சமீபத்தில். இணைத்தது - பொருந்தியதாகிய. மன் - வீரபத்திரன்.

(ருக) ஆன - ஆயின.

சிற்சில கணங்கள்விசை சேர்குதிரை யான
சிற்சில கணங்கள்பல சேனையென வான. (ருக)

வாரிமுழு துஞ்சுவற வாய்கொடு மடுக்கும்
பாரையொர் கணத்தின்வல மாய்வருமொர் பாவி
சீரில்புரி வேள்வியெவ ணென்றுதிசை தேடுங்
கார்நிற மிசைந்துமு னடந்தகண பூதம். (ருஉ)

காலன்மகி டத்தினையோர் கைகொடு பிடிக்கு
மாலும்வரு ணன்சுறவை யச்சுற வடிக்கு
நாலுமுக னூரினிடை புகைகெழுவ நண்ணு
மேலுமதி வேகமோ டெழுந்தகண பூதம். (ருந)

அட்டகய முற்றையுமொர் வாயினு ளடக்கு
மட்டவரை யைத்திகிரி யென்றுகையின் வாங்குங்
குட்டநெடு வாரியள றும்படி குமைக்கு
நட்டமிடு வான்விட நடந்தகண பூதம். (ருச)

வேறு.

இன்னண மாகவே யெழுந்த பூதர்கள்
பன்னுமா பாவியாந் தக்கன் பாரினு
ளுன்னரும் வேள்விசெய் துறையுஞ் சாலைகண்
டங்கிலை மகிழ்ந்துதோள் கொட்டி யார்த்தனர். (ருரு)

ஆர்த்தபல் லியத்துட னியாக சாலையைப்
போர்த்தெழும் பூதருட் புகுந்து தாம்வரல்

---

(ருஉ) மடுக்கும் - குடிக்கும். பாவி - பாவமுடையதக்கன்.

(ருந) மகிடம் - எருமைக்கடா. ஆலும் - அசையும். சுறவை - சுறு மீனை. அச்சுற - பயப்பட. கெழுவ - பற்றும்படி.

(ருச) அட்டகயம் - திக்குயானைகள். திகிரி - மூங்கில். வாங்கும் - வளைக்கும். குட்டம் - ஆழம். அளறு - சேறு. குமைக்கும் - கலக்கும்.

(ருரு) இன்னணம் - இவ்விதம்.

(ருசு) போர்த்து - வளைந்து. விரட்டல் - ஓட்டல்.

பார்த்துப்பார்த் தயர்ந்துளம் பதைப தைத்துமெய்
வேர்த்துறை தேவரை விரட்டன் மேயினார். (ருரு)

மண்ணினிற் கால்கொடு தேய்த்து வாய்ப்பெய்தும்
விண்ணிடை வீசியும் வெற்பி டங்தொறுந்
திண்மைசேர் காத்திரஞ் சிதைய வெற்றியு
கண்ணுறு தேவரை நலிவித் தாரரோ. (ருஎ)

தேவர்க ளலிதலைக் கண்டு சீறியே
காவலிந் திரன்கன லியமன் கன்னியங்
கோவரு ணன்வளி குபேர னீசனென்
றேவரு மெண்மரு மெதிர்த்தன் மேயினார். (ருஅ)

மையுடன் றகர்கடா மனிதன் மெய்ச்சுற
வெய்தருங் கலைதிகழ் விமான மேறென
வையமீ துரைக்குமெண் வாகர் வந்துவந்
தையன்சே னையினுட்சென் றார வாரித்தே. (ருக)

வச்சிரந் திகிரிவாள் மழுவு லக்கைவேன்
முச்சிரக் கழுப்படை முதல வாயுதம்
பொச்சமி லான்விடும் பூத சேனைமே
லச்சுற வீசியே யமரிற் றாக்கினார். (சுo)

---

(ருஎ) காத்திரம் - உடல். நலிவித்தார் - மெலியச்செய்தார்.

(ருஅ) கனல் - அக்கினி. கன்னி-தென்மேற்கு மூலைக்கு. அங்கோ - அழகியதலைவனாகிய நிருதி. வளி-காற்று. ஈசன் - ஈசானியன். எண்மர்-எட்டுப்பேர். இவர் - அட்டதிக்குப்பாலகர்.

(ருக) மை - மேகம். தகர் - ஆடு. கடா - எருமைக்கடா. மனிதன்-நரவாகனம், சிவிகை. சுறவு - முதலை. வெய் - கொடுமை. கலை - கலைமான். விமானம்,— ஏறு - இடபம். வாகர் - வாகனத்தையுடைய மேற்கூறிய திக்குப்பாலகர். ஐயன் - வீரபத்திரர். ஆரவாரித்து - முழங்கி.

(சுo) பொச்சமிலான் - பொய்யில்லாத வீரபத்திரர். அச்சுற - பயப்பட.

வேறு.

அடுத்தெறி படைக்கல மடர்த்திடவ யர்ந்து
கடுத்ததி சினத்தொடெதிர் பூதர்கள் கலங்கித்
திடுக்கொடு வெருண்டிடுதல் கண்டுதிகழ் வாகை
தொடுத்ததிசை காவலர்கள் சூடினர்கண் மாதோ. (சுக)

அன்னவர்கள் வாகைமலர் சூடுத லறிந்து
துன்னவரு பூதரினு ளெண்மர்க டுணிந்து
மன்னுமவர் தம்மையட லூர்தியொடும் வாரி
யின்னலுறு மாறுநெடு விண்ணிடை யெறிந்தார். (சுஉ)

வாரியெனு மேகலை யுடுத்திய மடந்தை
யேருலவு மம்மனை யெறிந்ததென வேகிப்
பாரினடை தேவர்கள் பதிக்கணுறை தாரு
வேரினுட னிற்றுவிழு மாறென விழுந்தார். (சுங)

விழுந்தவரு ளிந்திரன் வெருண்டெதிர் செருத்தான்
றொழுந்தகைய வீரனொர் வடிக்கணை தொடுத்தா
னழுந்துதுயர் பொங்கியொரு கோகிலம தாகிப்
புழுங்கியிமை யோரிறை பொருக்கென வொளித்தான். (சுச)

ஈசனள காபுரியின் வாழுமிறை வாயு
வாசில்வரு ணேசனுட னிருதியம ராடிப்
பேசரும் வயாவொடு பெயர்ந்தனர்கள் சண்டன்
மாசகலு வோன்விடுமோர் வாளியின் மடிந்தான். (சுரு)

---

(சுக) வெருண்டு - பயந்து.

(சுஉ) ஊர்தி - வாகனம். இன்னல் - துன்பம்.

(சுங) மேகலை - மேன்மையாகியசேலை. மடந்தை - பூமிதேவி. தாரு - கற்பகமரம்.

(சுச) செருத்தான் - யுத்தஞ்செய்தான். வடி - கூர்மை. கோகிலம் - குயில்.

(சுரு) ஈசன் - ஈசானியன். ஆசில் - குற்றமில்லாத. வயா - நோக்கம். சண்டன் - யமன்.

கனற்கட வுளன்னது கருத்தினி லறிந்து
சினத்தொடெதிர் சென்றுசமர் செய்தனனெ மையன்
மனத்தினதி கோபமொடு வார்சிலையை வாங்கி
யினற்செயோர் வடிக்கணை யெடுத்தனன் விடுத்தான். (௬௬)

ஈதல்புரி யாதுமிக வீட்டுநிதி போலுங்
கோதில்பெரி யோர்களிடை கூடுதுயர் போலு
மாதியடி யார்பிறவி யாமென வனற்கோ
வாதைசெயு மேழ்கையு மறுத்தனவவ் வாளி. (௬௭)

ஏரில்கர மேழுமறு பட்டவுட னெய்த்துப்
பாரிடை புரண்டிடுதல் பார்த்தவ னகன்று
றூர்கொடெதிர் பாற்கரன் மணிப்பலை யுதிர்த்தான்
சீர்மதியை மண்ணிடை பதங்கள்கொடு தேய்த்தான். (௬௮)

வேறு.

கலைமடந்தையொரு துண்ட மாகியது துண்ட மாகும்வகை கண்டனன், மலைமடந்தைதனை மகளெனச்சொல்பெரு மகிமை பெற்றுமறி வற்றவெங், கொலைமடந்தையிரு காதி லாதவகை காதியங்கணிடை கொய்தன, னிலைமடம்பெருகு தக்க னுருறையு நீளிருக்கையை நெருக்கினான். (௬௯)

தேரும் வீரனு நெருங்கல் கண்டவ னெதிர்ந்த தக்கனுயர் சிரசையோர், கூரும் வாளிகொ டறுத்து வேள்விபுரி குண்ட வங்கியதி

(௬௬) வாங்கி - வளைத்து. இனல் - துன்பம். (விகாரம்)

(௬௭) ஈட்டும் - சம்பாதிக்கும். ஆம் - போலும். வாதை - வருத்தம்

(௬௮) புரண்டிடுதல் - உருளுதல். அவன் - அவ்வீரபத்திரர். ஊர் - சூரியனைச்சூழவிருக்கும் பரிவேடம். பாற்கரன் - சூரியன்.

(௬௯) துண்டம் - மூக்கு. துண்டம் - துண்டு. கொலைமடந்தை - கொலைக்கேதுவாகிய தக்கன்மனைவி. காதி - மோதி. இடை - நடுவில். நிலை - நிலைத்த. மடம் - அறியாமை.

(௭0) குண்டம் - ஓமக்குழி. அங்கி - அக்கினி. அன்று - அல்லாமல். உன்னில் - நினைத்தால். அ - அந்த. ஏரில் - அழகில்லாத.

ணிட்டனன், பாரு ளோர்களெவ ரேனு மவ்வசுரர்கள் பண்பை யண் றதிக முன்னில, வேரில் காரியம தாவி றப்பர்க ளெனுஞ்சொ லவ் விடை தெரிந்ததால். (௭0)

இறந்த தேவர்க டிரும்ப வுஞ்சம ரியற்ற வேவிதி படைத்தனன்
பிறந்து வந்தெதி ரடர்ந்து வெஞ்சமர் பெருக்கி னார்களை நெருக்கியே
துறந்து வையமதை வையமீதினந்தி துரித மாய்மிக நடத்தியே
யறங்கொ ளாதபெரு வேதனைப்படவும் வேதனைக்கர மறுத்தனன்.

மலரி னாயகன் முனம்ப டைத்தபெரு மைந்த ரானபதின் மர்க ளெனுந், தலைவர் தங்கடலை முத்த லைக்கொள்படை யால றும்படி- தடிந்துபின், குலவு தண்டுளவ மாலை மாலையெதிர் குறுகி னானது குறித்தொரு, சிலையை யேந்தியெதிர் வந்து வெஞ்சமர் திருத்தி னமு தருத்தினான். (௭௨)

பாக மீதிலிரு சிறையோர் துண்டமு மிசைந்த மேருவன பான் மைசேர், நாக கோபிமிசை நாக மோடினன நாக சத்ரனுயர் நாக மார், மேக மொன்றுபொரு வில்லொ டெய்தலென வெய்தி யம்மு கில் விடாதுபெய், சோக மற்றதுளி யப்பு மாரியென வப்புமாரிகள் சொரிந்தனன். (௭௩)

வேறு.

மதுசூதனன் விடுவாளியை மதுசூதமன் விடுத்த
கதமேவிய வீரன்சில கணையாலவ ணறுத்தே

---

(௭௧) துறந்து - நீக்கி. வையம் - தேர். துரிதம் - விரைவு. வேதனை- துன்பம். வேதனை - பிரமனை.

(௭௨) முத்தலைகொள்படை - சூலம். மாலை - விஷ்ணுவை. அமுதருத்தினான் - (தேவர்கட்) கமுதமூட்டிய விஷ்ணு.

(௭௩) பாகம்-பக்கத்தில். சிறை- சிறகு. துண்டம்-மூக்கு. நாககோபி-சிங்கத்தின். மிசை - மேல். நாகம் - யானை. ஓடினன - ஓடினாலொத்த. நாகசத்ரன் - மலைக்குடை யுடைய விஷ்ணு. நாகம் - ஆகாயம். சோகம் - துன்பம். அப்புமாரி - சலமழை. அப்பு - பாணம். (விகாரம்)

(௭௪) மதுசூதனன் - விஷ்ணு. மதுசூதமன் - தேனையுடைய (காஞ்சிபுரத்தில்) மாமரத்தின்கீழிருக்குந் தலைவராகிய சிவபிரான். கதம்-கோபம். கற்கியன் - குதிரையவதாரமாகிய விஷ்ணு. அடுத்தான் - அடுத்தவனாகி.

துதிகற்கியன் மீதோர்கணை தொடுத்தானெதி ரடுத்தான்
முதியோரென வளைவில்லையு மொருவாளியின் முடித்தான். (எச)

கைவில்லறு படலும்மறு சிலைசெங்கரத் தேந்தி
யெய்வில்லம ரர்கடம்படை யெடுத்தானுடன் விடுத்தான்
றெய்வில்லவ னவ்வாளிக டொடுத்தேயது முடித்தான்
செவ்வில்லரி வாள்கொண்டெதிர் செறுத்தானவ னறுத்தான். (எரு)

கட்கம்பொடி படவேயிரு கட்கந்தர மிகவும்
வெட்கம்பெரு கிப்பற்பல வேடங்கொ டெதிர்த்தான்
மட்கும்பம நேகத்தையொர் கதைமாற்றுதன் மான
வுட்கும்படி மாய்த்தானிறை யுடன்மாயவன் வெகுண்டு. (எசு)

அருவாளியை யெரித்தான்முன மன்பாயரு ளியகூர்த்
திருவாளியை விடுத்தானது சென்றேபணிந் ததுவாற்
செருவாளிதா ளினில்வீழ்ந்தது கண்டேமிகு சீத
மருவாழியி லொருசேலென மாமாயவன் மறைந்தான். (எஎ)

அஞ்சக்கரத் தவனேவிய வவனுன்மன மழுங்கி
யஞ்சக்கரப் படையாளொரு சேலாயுரு வமைந்தே
யஞ்சக்கரத் திடைபுக்கலு மவனுற்றவ ரியாரு
மஞ்சக்கரத் துறைமுத்தலை யயில்வீசின னமலன். (எஅ)

---

(எரு) மறுசிலை - சேமவில். எய் - எய்யப்பட்ட. அமரர்கள் - தேவர்கள். படை - ஆயுதம், தேவாஸ்திரம். எடுத்தான் - எடுத்தானாகி. தொய்வில்லான் - தாழ்வில்லாத வீரபத்திரன். அரி - விஷ்ணு.

(எசு) கட்கம் - வாளாயுதம். கட்கந்தர-கண்ணீர்சொரிய. மட்கும்பம்-மண்குடம். கதை - தண்டாயுதம். மான - ஒப்ப. உட்கும்படி - பயப்படும் விதம்.

(எஎ) அருவாளி - மன்மதன். வாளி - பாசுபதாஸ்திரம். செருவாளி-போரையாளுதலை யுடைய வீரபத்திரர். சீதம் - குளிர்ச்சி. ஆழியில் - கடலில். சேல் - கெண்டைமீன்.

(எஅ) அஞ்சக்கரத்தவன்- பஞ்சாக்கரத்தையுடைய சிவபிரான். அம்-அழகிய. அம் - நீரையுடைய. சக்கரம் - கடல். புக்கலும் - புகுதலும். (விகாரம்) கரத்துறை - நஞ்சோடுவசிக்கின்ற.

அடுத்தேபோரும் பெருபூதருக் கச்சுற்று ளிலச்சை
விடுத்தேபெரும் பேயாயுரு மேவித் தமதுடலை
யெடுத்தேயொளித் தலைதேவரை யெம்மான்விடுஞ் சூலம்
முடித்தேகின பேயாயுரு முடிந்தாரென்று முடியார். (எகூ)

சுரர்சாரணர் திசைகாவலர் துகடீர்முனி வரரோ
டிரமீறிய நிலவாதிய ருளுள்ளோருட னுயிரைக்
கரவாநெறி யவனேவிய கதிர்மேவிய சூலந்
திரமாயொரு கணத்தேயதி செயமாகவுண் டதுவால். (அ0)

வீங்குங்குரற் குறுந்தாட்பெரு வெம்பூதரு ளொருவ
ணுங்கன்புறு மெள்ளோடுநெற் பொரியாவையு மருந்திப்
பாங்கொன்றுநெய்க் குடம்வாய்ப்பெயும் போதும்பசி யுதரத்
தோங்கும்பெரு மூலாக்கினி யோமாக்கினி நிகரும். (அக)

இறந்தோருடற் புண்டோறும்வந் தெழுந்தோங்குசெம் புனலாம்
பிறங்கார்கட லினையோர்கைகொ டணைசெய்தொரு பெரும்பேய்
மறங்கூரெயிற் றகன்வாயிடை மடுத்துண்டிடன் மதுரைப்
புறம்போம்வைகை தனைமுன்புனு குண்டோதரன் போலும். (அஉ)

வேறு.

தேவ ரோடு முனிவர் மிக்க சித்தர் வேத வித்தியர்
யாவ ராயு ளோரையு மெடுத்தெ டுத்த ருந்தியே
கோவ மீறி யுலவு மோர்பேய் குண்ட மொத்த வுதரமே
பாவ காரி செய்த யாக சாலை யோடொப் பாகுமால். (அங)

---

(எகூ) அச்சுற்று - பயந்து. ஒளித்து - மறைந்து. ஏகின - சென்றது. (விகாரம்) முடியார் - இறவாததேவர்.

(அ0) சாரணர் - தேவரிலோர்பிரிவார். நிலவு - சந்திரன். கரவா - கள்ளமில்லாத.

(அக) வீங்கும் - பருக்கும். குறுந்தாள் - சிறியபாதம். பாங்கு - பக்கம். ஒன்று - பொருந்திய.

(அஉ) செம்புனல் - இரத்தம். பிறங்கு - விளங்குதல். மறம் - வீரம். அகன் - விரிந்த. மடுத்து - கலந்து.

(அங) வித்தியர் - வித்தியாதரர். (விகாரம்) யாவர் - எவர். கோவம்- கோபம். குண்டம் - யாககுண்டம். பாவகாரி - பாவத்தையுடைய தக்கன்.

மண்டை யோட்டி லமர ரூனை வாரி வைத்தங் கவர்சிர
மண்டை யால டுப்பமைத் தனல்கொ ளுத்தி யவியல் செய்
துண்ட பூத ருண்ட தன்றி யொழிந்தி டாத வும்பரைக்
கண்ட தில்லை யவர்கண் மேனி கண்ட துண்டு கண்டதே. (அச)

தக்க னூர்செய் வேள்வி தன்னை யிந்த வாறு சங்கரித்
தக்க ணத்தின் முக்க ணீச னடிப ணிந்தன் னவையெலா
மிக்க வீர பத்திரன் விளம்பி நிற்க விண்பொலி
செக்கர் மேனி யண்ணலுஞ் சினந்த விர்ந்தி ரங்கியே. (அரு)

இலகு தீயை யன்றியங் கிறந்த பேரி யார்க்குமே
குலவு மாவி யோடுமுன் பதங்களுங் கொடுத்தலா
னிலவ ணிந்த நம்பர் தாளை நெஞ்சு வந்து பரவியே
தலைமை மேவி யவர்க டங்க டங்களூர் புகுந்தனர். (அசு)

ஆறி ரண்டி னவம்புரூர மாறி ரண்டி னைந்திடை
யாறி ரண்டி னடுவ தாமெ னன்னையைப் பயந்தவ
னாறி ரண்டி னுபய நாத னன்று ரைத்த மொழியினு
லாறி ரண்டி னென்ற தான வானனம் பொருந்தினன். (அஎ)

எங்க ணாத முதலைமுன் னிகழ்ந்த தக்கன் மகளெனத்
தங்கு பேர்த விர்ந்திடத் தனுமம் விட்டொர் தமனியத்

---

(அச) அண்டையால் - பக்கத்தில். ஒழிந்திடாத - இறவாத. கண்ட துண்டு - கண்டமாகிய துண்டம். கண்டது- செய்யப்பட்டது. (ஆல்-உருபு மயக்கம்.)

(அரு) செக்கர் - செவ்வானம். இரங்கி - இரக்கஞ்செய்து.

(அசு) தீயை அன்றி - அக்கினியை அல்லாமல்.

(அஎ) ஆறிரண்டின் - பன்னிரண்டிராசிகளின். நவம் - ஒன்பதாகிய தநுசு. புரூரம் - புருவம். ஐந்து - அஞ்சாகிய சிங்கம். இடை,— நடுவது- நடுவிலுள்ளதாகிய கன்னி. ஆமென் - ஆகுமென்றுசொல்லப்பட்ட. ஐயை யை - உமாதேவியை. பயந்தவன் - பெற்றவனாகிய தக்கன். உபயநாதன் - இரண்டாகிய இடபத்தின் நாயகனாகிய சிவபிரான். ஒன்றதான - முதலா வதாகிய மேடத்தினது. ஆனனம் - முகத்தை. [மேடம் - ஆடு]

(அஅ) நாதமுதலை - நாதனாகிய தலைவனை. தன் நாமம் - தன்பெயர், தாக்ஷாயணி. தமனியம் - பொன். துங்கம் - உயர்ச்சி.

துங்க மீறு மிமய வேந்தன் றுகளில் கற்பு மேனையா
ரங்கி யற்று தவசினாலு மவத ரிக்க லாயினாள். (௮௮)

வெற்பி னுச்சி மீது வேந்தன் மிருதவம் புரிந்தவ
ணிற்ப தற்கொர் பாங்க ரான நெடுந்த டாக வனசமே
லற்பு மேவோர் சேய தாக வமைதல்கண் டெடுத்துடன்
கற்பு மேனை யென்னு மாது கைம்ம லர்க்க ணல்கினான். (௮௯)

குன்ற வேந்த னல்க மேனை குலவு சேயை வாங்கலு
மின்ற னைப்ப யந்து ளாள்பொன் மேனி வேற தாயினா
ளன்று தன்ற னத்தி னூறு மமுத மூட்டி யாட்டியே
துன்று நீரு மாட்டி யாரம் பூட்டி மாலை சூட்டினாள். (௯0)

உச்சி மோந்து தொட்டி லேற்றி மடியிருத்தி யுவகையாய்
மெச்சு திங்க ளாண்டு தோறு மிருவிழா வியற்றியே
வெச்ச ராச ரங்களும் பயந்த தாயை யின்சுதை
வைச்சி லங்கு வாலசோம னென்னவே வளர்த்தனர். (௯௧)

ஈங்கி வாறு வளரு நாளின் மதனனெந்தை யோடுபோர்
பாங்கு டன்செய் கென்று தேவ மன்னவன் பணித்திட
வாங்கு விற்கை மார னண்ணல் மீதுபோர் மலைந்தது
நீங்கள் கேண்மி னென்றுசூத னெறிவழாம லோதினான். (௯௨)

8 - திருவவதாரச் சருக்கம் முற்றுப்பெற்றது,

ஆகத் திருவிருத்தம் ௩௪௧.

---

(௮௯) வனசம் - தாமரைப்பூ. அற்பு - அன்பு. சேய் - பிள்ளை. அமைதல் - அமைந்திருத்தல்.

(௯0) சேய் - இளமையுடைய பிள்ளை. மின் - (சேயாகிய) மின்னல் போன்ற அப்பெண். பயந்துளாள் - பெற்ற அந்தமேனை.

(௯௧) திங்கள் - மாதம். சுதை - அமுதம். வைச்சு - வைத்து. வாலசோமன் - இளஞ்சந்திரன்.

(௯௨) மதனன் - மன்மதனை. செய்க - செய்வாய். தேவமன்னவன் - இந்திரன். அண்ணல் - தலைவனாகிய சிவபிரான்.

கன்ன லின்சொன் மேனை மேவு காதல்வேந் திடத்தினிற்
பன்னு வேத நார தனோர் பகலின்வந் தடைந்தனன்
றுன்னு மெச்ச ராச ரங்கண் முழுவதுந் தொகுத்தவைக்
கன்னை யான மின்னி லக்க ணங்க டேர்ந்தி தறைகின்றான். (க)

நெற்றிமீ தரைக்க ணுண்டு நெடிய கூந்த லோர்புறங்
கற்றைமேவு சடைக ளாமொர் காதின் மின்னு சங்கமே
துற்று மோர்கை வளைக ளொன்று சூலமேந்து மிதுவலான்
மற்று முற்ற தனமி ரண்டி லொன்றுபின் மறைந்திடும். (உ)

கச்ச மற்ற சிலம்ப கன்றோர் கால்கழல் புனைந்திடும்
பச்சை வன்ன மற்றோர் பாதி பவளவன்ன மேனியா
மிச்செ யல்பொ ருந்து மாதை யீன்றெடுத்த நின்னைநேர்
முச்ச கத்தி லுள்ள பேரி னெவர்தவங்கண் முற்றினார். (௩)

வேறு.

என்றுரைத் தினிய கீத நாரத னகன்றா னிப்பாற்
றுன்றுசீ ரமரர் கோவுஞ் சுரர்களுங் குழூஉக்கொண் டெய்தி
மன்றலங் கமலத் தண்ணன் மனோவதி நகரந் தன்னுட்
சென்றவர் பணிந்தா ரன்னோர்க் கிருக்கையீந் தனத்தோன் செப்பும்.

பரசுவாய் மடிந்துங் கூர்பொற் பரிதியெம் படைமட் குற்றும்
விரசுமுத் தலைவேல் பின்ன மாயுநீர் மெலிந்து நுங்கள்

---

(க) கன்னல் - கரும்பு. பகல் - நாள். தொகுத்து - சேரப்படைத்து வைத்து. மின்-உமாதேவி.

(உ) அரைக்கண் - (சிவபிரான் திருமேனியொரு பாதியிலிருக்கும் போது) பாதிநேத்திரம். கற்றை - திரட்சி. துற்று - நெருங்குகின்ற.

(௩) கச்சம் - (விலை) அளவு. கழல் - வீரக்கழல். வன்னம் - நிறம். மாதை - உமாதேவியை. நின்னைநேர் - உனக்கொப்பாக.

(௪) கீதம் - இசை. குழூஉ - கூட்டம். மனோவதி - பிரமலோகம். அனத்தோன் - பிரமதேவன்.

(௫) பரசு - மழுவாயுதம். வாய்மடிந்தும் - வாய்தேய்ந்தும். கூர் - கூர்மை. மட்குற்றும் - மழுங்கியும். விரசு - கலந்த. பின்னமாயும் - உடைந்தும். சொல்வான் - (பிரமன்) சொல்லுவான்.

சிரசிடை மகுட நீத்த வாறுமென் னெனலுந் தேவர்க்
கரசுளான் முழுதுஞ் சூர னழித்தன னெனலுஞ் சொல்வான். (ரு)

அன்னவன் றன்னை யென்று லரியினு லமர்செய் வோமென்
றுன்னினு நெஞ்ச மஞ்சிப் பதறுமே லுரைப்ப தென்னே
பொன்னெடு வரைவில் லாள னருளினுற் பொருப்பின் மாது
தன்னிடத் துதிக்குஞ் செவ்வேள் சத்தியா லவனை மாய்க்கும். (சு)

ஆதலா லாலி னீழ லமர்ந்தருண் மறைமெய்ஞ் ஞான
போதமே யுணர்த்தி மேவும் புண்ணிய முதல்வன் வெற்பின்
மாதினை மணக்கு மாறு மதனனு லியற்று மென்றுன்
வேதனை விபுதர் நாதன் பணிந்தகன் றிருக்கை மேவி. (எ)

மருத்துவன் மதனன் றன்னை மனத்தினு னினைந்தா னந்தக்
கருத்தவ னறிந்து வந்தான் வரவுகண் டெழுந்து காதல்
பொருத்துவு னீயே யென்னப் புகழ்ந்துடம் பிறுகப் புல்லி
முருத்துவன் மூர லிந்தி ராணிகோன் முகமன் சொன்னுன். (அ)

எந்தமா தரைம யக்க வெத்தவ மழிக்க நீவிர்
சிந்தனைத் துயரா லென்னை யழைத்ததென் செப்பு மென்னுச்
சுந்தரக் கருப்பு வில்லான் சொல்லலுஞ் சுரர்கோ னிந்தச்
சந்திர மௌலி யான்றன் றவத்தினைத் தவிர்த்தி யென்றுன். (கூ)

பாகசா தனன்சொல் வார்த்தை பனிமதிக் குடையோன் கேளாச்
சோகமாய் வெருவி வீழ்ந்து சோர்ந்தெழுந் துரைப்பா னன்றேன்

---

(சு) பொருப்பின்மாது - இமயமலையிற்றோன்றிய பார்வதி. சத்தி - வேலாயுதம். மாய்க்கும் - கொன்றருளுவன்.

(எ) ஆலின் - கல்லாலவிருக்ஷத்தின். போதம் - அறிவு. இயற்றும் - செய்யும். வேதனை - பிரமனை. விபுதர்நாதன் - இந்திரன்.

(அ) மருத்துவன்-இந்திரன். காதல்- (காமத்தின்) ஆசை. முருத்து - மயிலிறகினடிபோலும். வன் - வலிய. மூரல் - பற்களையுடைய. முகமன் - உபசாரவார்த்தை.

(கூ) என் - யாது. சந்திரமௌலி - சந்திரனைச்சடையிற்றரித்த சிவபிரான்.

(கய) பாகசாதனன் - இந்திரன். வெருவி - பயந்து.

மோகமும் வெறுப்பு மில்லான் மூவுல களிக்க வல்லா
னேகநா யகன்மெய் வாக்கு மனத்தினுக் கெட்டா னுமால். (௧௦)

ஆணலான் பெண்ணு மல்லா னலியலா னுருவ மில்லான்
றோணுரு வருவ மில்லான் றுன்பிலா னின்ப மில்லான்
காணரும் பொருளா யாவுங் கண்டளித் தழிப்பான் வேண்டித்
தாணுமாலயனாய்த் தோன்றித்தலைமைசெய் துறையுந்தொல்லோன்.

கையுமோ வழலா யுள்ளோன் கண்ணுமோ வழலா யுள்ளோன்
மெய்யுமோ வழலா யுள்ளோன் வெண்ணகை யழலா யுள்ளோன்
பொய்யுடன் மெய்யி லான்மேற் பொருந்துமென் மலரம் பைந்து
பெய்யினும் புன்கைந்து தீந்து கரியுமா லன்றென் செய்யும். (௧௨)

என்னவே பயந்து வில்வேள் சாற்றலு மகவான் சொல்வான்
மன்னுவே தன்ற னாவில் வாணியை மாலோன் மார்பிற்
பொன்னையீ சுரன்கம் மீதிற் புனலினைப் பொறித்தென் மெய்யிற்
றுன்னுமா யிரங்கண் செய்த செயலுமுன் சூழ்ச்சி யன்றோ. (௧௩)

மதியுயர் குருவின் மாதை மணந்திடப் புரிந்தா யந்த
விதியொரு சிரசு பின்ன மேவவும் பொருதாய் நீயே
மதுமலர்ப் பகழி யேந்தும் வள்ளலே நின்னை யல்லாற்
றுதிசெய்பல் லுயிர்க ளியாவுந் தொகுத்தளித் தழிப்பார் யாரே. ()

ஆசிலான் றன்னை வென்று மீள்வதற் கைய மென்கொன்
மாசிலா யெனது வார்த்தை மருவிநீ யுவகை மேவி

---

(௧௧) கண்டு - சிருட்டித்து. அளித்து - காத்து. அழிப்பான் - சங்காரஞ்செய்யும் பொருட்டு. தாணுமாலயன் என்பதை - அயன்மால்தாணுவெனமுறையாக வைத்துப்பொருள் கொள்க. தொல்லோன் - பழையோன்.

(௧௨) அழல் - அக்கினி. நகை - புன்சிரிப்பு. மெல் - மெல்லிய. ஆல் - அசை. அன்று - அல்லாமல்.

(௧௩) மகவான் - இந்திரன். பொன்னை - இலக்குமியை. கம் - தலை. பொறித்து - சேர்த்து. (தாற்பரியம்) சூழ்ச்சி - உபாயம்.

(௧௪) மதி - சந்திரன். குரு - வியாழபகவான். விதி - பிரமன். பகழி - பாணம். தொகுத்து - படைத்து.

(௧௫) ஆசிலான் - குற்றமில்லாத சிவபிரான். மாசு - களங்கம். தீர்த்து - நீக்கி. இந்தவரம் - (தீர்ப்பதாகிய) இவ்வரம்.

யீசனார் தவத்தைத் தீர்த்திங் கெமக்கிந்த வரந்தா வென்று
பேசியே தழுவிச் செங்கை பிடித்தனு மதன்பின் செப்பும். (கரு)

கன்மலை யெடுத்தோன் றந்த காமன்கா மனையே பாரப்
பொன்மலை வளைத்து நின்ற செம்மலை மலைந்து பொற்பார்
நின்மலை தன்னை யந்த நிருமல னணையச் செய்திங்
குன்மலை வொழிப்பே னென்ன வுரைத்தடி பணிந்து போனான். ()

வேறு.

மந்திரி யெனுந்திறல் வசந்தன்வந் தனன்கா
மந்திரிந் தல்லைதரு மணம்பிரிந் தவர்கள்
சந்திர வினிலுறங் காவகை தழல்கால்
சந்திர மணிக்குடை சார்ந்தது மாதோ. (கஎ)

கரும்பனை யிவணினிக் காண்பரி தெனல்போற்
கரும்பனை தருஞ்சன்ம காகள மொலிக்க
தரும்பரி வணிச்சுமக் குவலென வணிசே
ரரும்பரி யெனுங்கிளி யடைந்தது மாதோ. (கஅ)

---

(கசு) கன்மலை - கல்லாகியமலை, கோவத்தனகிரி. எடுத்தோன் - (குடையாகத்) தூக்கிய விஷ்ணு. காமனை - இந்திரனை. செம்மலை - சிவபிரானை. நின்மலை - பார்வதி. மலைவு - வருத்தம். காமனைப்பணிந்தெனக் கூட்டுக.

(கஎ) திறல் - வலிய. வசந்தன் - வசந்தகாலமானவன். காமம் - விரகத்தால். திரிந்து - சுழன்று. அல் லைதரு - இருளில் வருந்துகின்ற. மணம் பிரிந்தவர்கள்-(தமதுகணவர்)சேர்க்கையைநீங்கியமாதர்கள். சந்து-(அக்கணவர்க்குத்) தூதர்களைச்(செல்லுத்தும்). இரவினில்-இராக்காலத்தில். உறங்காவகை - நித்திரைசெய்யாத விதம். தழல்கால் - அக்கினியைக்கக்குகின்ற. சந்திரமணிக்குடை - சந்திரனாகிய அழகியகுடை.

(கஅ) கரும்பனை - கருப்புவில்லுடைய மன்மதனை. இவண் - இவ்விடத்து. கரும்பனை - கரியபனைமரம். தரும் - கொடுக்கும். சன்மம் - பிறப்பையுடைய. காகளம் - (குயிலாகிய) சின்னம். அரும்பர் - பூவரும்பையுடையவாகிய. இவரை - இம்மன்மதனை. சுமக்குவல் - தாங்குவேன். அணிசேர் - அழகுபொருந்திய. பரி - வாகனம். குயிலுக்குக்கரும்பனை கொடுக்குஞ்சன்மமாவது:— பனைமரத்திலுள்ள காக்கைக்கூட்டிற் குயில் முட்டையிட்டுச்செல்லக் காக்கை தன்முட்டையென்று குஞ்சுபொரித்து வளர்வி

கருவரி யெனுந்திறற் கயமும்வந் ததுமேற்
கருவரி முரசமுங் கறங்கின கணையாற்
பொருகயற் கேதன தடலெனப் புகழ்மாண்
பொருகயற் கேதனம் பொருந்தின மாதோ. (கக)

அரவிந்த முதற்கணை யைந்தும்விற் கரும்பு
மரவிந்த நிகர்முலை யிரதிகொண் டணைந்தாள்
புருவவில் விழிக்கணை பொருந்தியிந் திரைமாண்
புருவவின் மணிமுகப் படைஞரும் புகுந்தார். (உ0)

திருத்தத்தை மொழிரதி சேர்மகிழ்த் தாமர்
திருத்தத்தை யரனுடன் புரிந்தின்று சிதைய
வருத்திதென் றலைவிதி யெனவுரை வழங்கா
வருத்திதென் றலையிர தமும்வந்த மாதோ. (உக)

---

த்து ஓசைவேறுபாட்டாற் றன்குஞ்சன்றென்று துரத்த வெளிப்பட்டு வருதலால் ஊகித்தறிக., இதனை "வருந்தியீன்றுண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள்" என்னும் ஆன்றோர் செய்யுளாலுங்காண்க.

(கக) கருவரி - இருள். திறல் - வலிய. கயமும் - யானையும். மேல் - உயர்ந்த. கரு-கரிய. உவரி-கடலாகிய. கறங்கின-ஒலித்தது. கணையால்-(புட்ப) பாணத்தால். பொரு - சண்டை செய்கின்ற. கயற்கே - கையையுடைய மன்மதனுக்கே. தனது - தன்னுடைய. அடலென - வெற்றியென்று சொல்ல. புகழ்மாண் - புகழின்மாட்சிமையுடைய. பொரு - (தனக்குத் தானே) சமமாகிய. கயற் கேதனம் - மீனக்கொடி. பொருந்தின - வந்துசேர்ந்தது. கயற்கு - போலி. கறங்கின, பொருந்தின என்பனவற்றில் முற்றிறுதி தொக்கது.

(உ0) அரவிந்தம் - தாமரை. அரவிந்தம் - குகையையுடைய விந்தமலை. இந்திரை - இலக்குமிபோலும். மாண்பு உருவ - மாட்சிமைதங்கிய வடிவத்தையுடைய. இன்மணி - இனிய அழகுதங்கிய. முகப்படைஞர் - முகத்தையுடைய சேனைகளாகிய மாதர்.

(உக) திரு - இலக்குமிபோன்ற. தத்தைமொழி - கிளிபோலுஞ் சொல்லையுடைய. மகிழ்த்தாமர் - மகிழம்பூமாலை யணிந்தமன்மதனார். திரு-சிறந்த. உத்தத்தை - சண்டையை. சிதைய - அழிய. வருத்து - வருத்தப்படுத்துகின்ற. உரைவழங்கா - பேச்சுப்பேசி. அருத்தி - ஆசையுடைய. தென்றல் - தென்றற்காற்றாகிய. ஐ இரதமும் - அழகிய தேரும். யானை,

கண்டலம் வாண்மருங் கசைத்தெவ ரேனுங்
கண்டலம் வரும்வகை கவசமும் பூட்டிப்
பெண்டெனும் படையைமுன் னேவின னுடன்பின்
பெண்டரும் பேரணி யாமதன் பெயர்ந்தான். (உஉ)

வேறு.

கருப்புவில் லிறைவன் சென்று காஞ்சனப் பார மேருப்
பொருப்புவில் லிறைவன் முன்னர்ப் புகுந்தன னுடனே நெஞ்சம்
வெருக்கொடு கலங்கி முன்பின் விரைவுட னொளித்தா னந்தத்
தருப்புரந் தரனுர் சொல்லை யெண்ணிப்பின் முன்னர்ச் சார்ந்தான்.

தீபத்திச் சுடர்போ லன்பர் சிந்தையுட் டிலங்கு மெம்மான்
கோபதீ யதனால் வீயிற் கூறரும் பதவி யுண்டாஞ்
சோபத்திச் சுடவே கோர சூரனுன் மெலிந்த போகி
சாபத்தீ யதனால் வீயிற் றளர்வலா திலையென் றெண்ணி. (உச)

கரும்பினை வளைத்து நாணுங் கடிமலர் நறவ மாந்து
கரும்பினைப் பூட்டி வாசக் கஞ்சமே முதலா கத்தாங்
கரும்பினை யேற்றி வெள்ளிக் கஞ்சமண் டபமின் சேர்மோ
கரும்பினை கேள்வர் தாமுங் காணரு மமலன் மீதே. (உரு)

---

ஆனையெனப்படுதல் போல, யுத்தம்-உத்தமெனப்பட்டது. அருத்தி தென்றல், சந்தநோக்கி யொற்றிரட்டிக்கவில்லை. வந்த, முற்றிறுதி தொக்கது.

(உஉ) கண்டல் - தாழம்பூவாகிய- அலம்வரும் - சுழலும். பெண்டு - பெண்கள். பின்பு - பின்னர். பேரணி - நடுச்சேனை.

(உஙு) காஞ்சனம் - பொன். வெருக்கொடு - பயங்கொண்டு. தரு - கற்பகம். முன்னர் - (சிவபிரா)னெதிர்.

(உச) வீயில் - இறந்தால். போகி - இந்திரன்.

(உரு) நாண் - கயிறு. நறவம் - தேன். மாந்து - உண்ணுகின்ற. கரும்பு-வண்டு. தாங்கு-சுமக்கப்பட்ட. அரும்பு - பூவரும்பு. வெள்ளிக்கஞ்சமண்டபம் - வெண்டாமரைமாடம். மின் - சரசுவதி. மோகரும் - ஆசையுடையபிரமனும். பினைகேள்வர்-இலக்குமிநாயகனுகிய விஷ்ணுவும். [பினை-பின்னையென்பதன் விகாரமொழி. கரும்பு - வண்டு என்பதை மயூரகிரிக்கோவை அரும்பதவுரையிற் காண்க.]

தேக்கணை வாரிப் பேரிச் செம்மதிக் குடைமான் போன்ற
நோக்கினை யுடைய ளென்றே நுவலெழி லிரதி கோமான்
பூக்கணை விடுத்தான் பூவைப் பொருந்ததாட் கணையோன் சற்றே
தீக்கணை விடுத்தான் வில்வே ளுடலெலாஞ் செந்தீ யான. (உசு)

திரிபுரந் தன்னி லூட்டுஞ் செந்தழ லெனவே மார
னொருபுரந் தனிற்றீப் பற்றி யுறுசிகை புகைகண் டங்கண்
வருபுரந் தரனே யாதி வானவ ரியாரு மஞ்சிப்
பருவர லோடும் பார்த்த திசைதொறும் பரந்து போனார். (உஎ)

ஆலமுண் டிருண்ட கண்டத் தமலனு மெழுந்து வெள்ளிக்
கோலமால் வரையிற் செம்பொற் கோயிலுட் புகுந்தா னந்த
வேலையில் வேலைப் பேரி வேந்தனவ் விமலன் செந்தீப்
பாலநேத் திரத்தாற் பட்ட பாடெலா மிரதி கண்டாள். (உஅ)

ஐயகோ வைய கோபொன் னணியிழைப் பணைமென் கொங்கைத்
தையலோர் பாக னார்கட் டழலிவ ணெனது கோமான்
மெய்யெலாம் பற்று தேகோ வேகுதே கூகூ வென்று
மையுநுண் ணிடையாண் மேனி நடுக்கமுற் றயர்ந்து வீழ்வாள். ()

சோருவா ளெழுவா ளுள்ளந் துணுக்கமுற் றிடுவாள் செங்க
ணீர்தரப் பாரக் கொங்கை முலையினைத் தழுவி நிற்பாள்

---

(உசு) தேக்கு - நிறைகின்ற. அணை - கரை. வாரிப்பேரி - கடலா கிய முரசு. தாட்கு - முயற்சிக்கு. அணையோன் - அத்தன்மையுடைய சிவ பிரான். கணை - (கண்ணை) பாணம்.

(உஎ) ஒரு - ஒப்பற்ற. புரம் - சரீரம். சிகை - தீக்கொழுந்து. பரு வரல் - துன்பம். பரந்து - வியாபித்து.

(உஅ) ஆலம் - விடம். வேலை - காலம். வேலைப்பேரி - கடல்வாச்சி யம். பாலநேத்திரம் - நெற்றிக்கண்.

(உகூ) இழை - ஆபரணம். பணை - பருத்த. கோ - ஐயோ. கூகூ - அச்சத்தாற் பிறரை யழைக்கு மொழி. பற்றுது, வேகுது என்பன - பற்று கின்றது, வேகின்றதென்பவற்றின் மரூஉ.

(௩0) துணுக்கம் - நடுக்கம். கொங்கைமுலை,-(இருபெயரொட்டு) அ லமந்து - சுழன்று. நீப்பாள் - விடுவாள்.

கார்குழ லவிழ்ந்து தாழக் கைநெறித் தலமந் தேங்கிப்
பார்மிசைப் புரண்டு நெஞ்சம் பதைபதைத் தாவி நீப்பாள். (௯௦)

மங்கையோர் பாகன் சற்று மாதர்மேற் றயவின் றென்பாள்
செங்கையால் வயிற லைத்துச் செம்முகத் தெற்றிப் பாரக்
கொங்கைமீ தறைவா ணெஞ்சங் குலைந்திவ்வா றுகத் துன்பம்
பொங்குவார் கடலின் மூழ்கிப் புழுங்கிவெய் துயிர்த்து நொந்தாள்.

படியுண்ட திருமால் காணாப் பாதனோர் பார்த்தன் வில்லா
லடியுண்ட மெய்யன் கண்ணி லழலுண்டென் றறிந்தும் வந்து
பொடியுண்டாய் மெய்யென் றோதிப் புண்ணுண்ட மனத்தா ளாகி
யிடியுண்ட வரவ மென்ன வெய்த்திவை புலம்ப லுற்றாள். (௯௨)

வேறு.

உன்னுயிரை யீந்தே யுயருலகத் தார்மகவான்
றன்னுயிரைக் காக்கவென்றே சங்கரனார் கட்டழற்குத்
துன்னுமிரையாயிருந்தாய் தோலாப் பெருவலியோ
யென்னுயிரை யாரே யினிமேற் புரப்பவரே. (௯௩)

காமனார் சொற்கேட்டுக் காமனை ரென்றுசொலச்
சோமனை ரென்றகுடை தோற்றுயிருந் தோற்றாயே
மாமனார் பெற்ற மகவே மலர்க்கடுக்கைத்
தாமனார் செங்கண் டழலென் றறியாயோ. (௯௪)

முன்னாளோர் பெண்ணை முடிமீது சேர்ப்பித்தா
யந்நாண் முதலா யமலருக்குன் மேற்பகையீ

(௯௧) அலைத்து - அடித்து. எற்றி - அடித்து. வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு.

(௯௨) படி - பூமி. பார்த்தன் - அருச்சுனன். பொடியுண்டாய் - பொடிபட்டாய். மெய் - உடல். இடியுண்ட - இடிவிழுந்த.

(௯௩) மகவான் - இந்திரன். தழல் - அக்கினி. இரை - உணவு. தோலா - தோல்வியடையாத. புரப்பவர் - காப்பவர்.

(௯௪) காமன் - இந்திரன். காமன் - மன்மதன். ஆர் - (இனிமேல்) எவர். சோமன் - சந்திரன். தோற்று - இழந்து. மாமன் - இலக்குமிநாயகன். கடுக்கைத்தாமன் - கொன்றைமாலையுடைய சிவபிரான்.

(௯௫) அமலருக்கு - நின்மலராகிய சிவபிரானுக்கு. உன்னாது - நினையாது.

துன்னு துவந்திங் குயிரிழந்தா யேயிதற்குப்
பின்னு யினுந்தான் பெரும்பகைக டீர்ந்தாரோ. (௩௫)

துயரான் மிகப்புலம்பிச் சோர்ந்தேன் றனைப்பார்த்
தயரே லெனவு மறைந்திலா யீசன்
மயறீர் விழியான் மடிந்தவுடன் மாளாச்
செயலாச்சோ பழிக்கஞ்சி யென்றுமனஞ் சிந்தித்தோ. (௩௬)

முத்தர் செயும்பிழையு முத்தமரோர் செய்பிழையும்
பத்தர் செயும்பிழையும் பாலகர்தாஞ் செய்பிழையும்
பித்தர் செயும்பிழையும் பேதையர்கள் செய்பிழையு
மித்தனையுங் குற்றமென வெண்ணு ருணர்ந்தோரே. (௩௭)

எக்குற்ற மியானே யிழைத்திடினு மென்கோவே
யக்குற்ற நீபொறுத்திங் கொன்றறைய லாகாதோ
மெய்க்குற்றந் தேவாம் விமலர்விழி யாலெரிந்து
கைக்குற்ற வில்லாங் களைகளைந்து நீங்கினதோ. (௩௮)

விண்ணு டருக்கு மிருகளைக ணென்றே
மண்ணுதி யாம்புவன மூன்றிடத்து வாழ்பவர்தங்
கண்ணேறு பட்டுவனற் கண்சுடுமென் றீதுவரை
யெண்ணு திருந்தேன்யா னிப்போ தறிந்தேனே. (௩௯)

என்று புலம்பி யழுதிரங்கி யேங்கியம்பொற்
குன்ற முலையிரதி கூறருந்துன் போதுங்காற்
பின்றையுன்ற ஞயகனை நல்குதுமியாம் பேதுறே
லென்றொர்மொழி மின்கேட்ப வந்தரத்தி னுற்றதுவால். (௪௦)

---

(௩௬) அயரேல் - சோர்வடையாதே. எனவுமறைந்திலாய் - என்றுஞ் சொன்னுயில்லை. ஈசன்பழிக்கஞ்சி யென்றுமனஞ் சிந்தித்தோ எனக்கூட்டுக. (ஆதலால்) மடிந்தவுடல் - இறந்தசரீரம். மாளாச்செயலாச்சோ - இறவாத செயலாயிற்றே. ஆயிற்றேவென்பது, ஆச்சோவென மரூஉவாயிற்று.

(௩௭) பேதையர் - அறிவில்லாதவர்.

(௩௮) மெய்க்குற்றம் - உடலின்குற்றம். எரிந்து-வேகப்பட்டு. கைக் குற்ற - கையினிடத்துப் பொருந்திய.

(௩௯) களைகண் - ஆதாரம். கண்ணேறு - திட்டி. அனல் - அக் கினி. [பட்டு என்னுங் குற்றியலுகரந் திரியாது நின்றது.]

(௪௦) பின்றை - பின்னர். பேதுறேல் - மயங்காதே. மின் - இரதி.

அம்மாற்றங் கேட்டா ளரியயற்கு மெட்டாத
வெம்மான் றனக்கிதுவு மோர்விளையாட் டென்றேத்தி
விம்மாத் துயரமெலாம் விட்டு மகிழ்வோடுஞ்
செம்மா விழியிரதி தன்னிருக்கை சேர்ந்தனளால். (சக)

இவ்வண்ண மங்க ணிகழ்ந்தபரி சிங்கிதற்பின்
மைவண்ணக் கண்டர்மழை வண்ணவரை மின்னைமணஞ்
செய்வண்ணஞ் செய்ததுவு நுங்களுக்குச் செப்புதுமென்
றுய்வண்ணஞ் சூதமுனி மாதவருக் கோதுவனால். (சஉ)

9-சம்பராரிச் சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் ௩அரு.

## பத்தாவது:—திருக்கல்யாணச் சருக்கம்.

இரச தத்தவ ளப்பொ ருப்புறை யெந்தை நந்தியை நோக்கியே
வருதி யென்றிட வன்ன வன்னுடன் வந்து தாண்மலர் பணிதலு
மரிய மாதவ ரெழுவர் தம்மை யழைத்தி யென்றிட வவ்வுரை
சிரமி சைக்கொ டெழுந்து போயவர் சேரி ருக்கையி னெய்தினான்.

நும்மை யெம்மை யளிக்கு மாதி நுதற்க ணனுமை யழைத்தனன்
வம்மி னென்றலு முடனெ ழுந்தவர் வந்து வந்தரி கஞ்சன்மா
றம்மை யீன்றரு ளம்மை பாகர் பதாம்பு யத்திடை தாழலும்
பம்மு வண்டுகள் கிண்டு கொன்றை யணிந்த தேவிது பகருமால். ()

---

(சக) விம்மா - (உடல்) பூரித்து. செம் - (அழுதலாற்) சிவந்த. மா - மாவடுப்போலும். விழி - கண்.

(சஉ) பரிசு - தன்மை. கண்டர் - கழுத்துடைய சிவபிரான். மழை - மேகங்கள் சூழும். வண்ணம் - அழகுடைய. செய்வண்ணம் - செய்யும் விதம்.

(க) இரசதம் - வெள்ளி. தவளம் - வெண்மை. வருதி - வருவாய். எழுவர் - சத்தருஷிகள்.

(உ) அளிக்கும் - காக்கும். ஆதி - முதன்மையாகிய. வம்மின் - வாருங்கள். அரி - இந்திரன். பம்மு - (உள்) ளடங்குகின்ற.

இமய வெற்புறை சூங்கு மக்கள பப்ப டாமு மிசைந்தபொற்
சிமய மொத்திறு மாந்து வாரணி திதலை பூத்தலர் பணைமுலைக்
குமரி யைக்கூடி மணமு வந்தன மென்று பூதர கோமகற்
கமைவி னோடு புகன்று மீளுதி ரென்று நாயக னருளினான். (ங)

அந்த வாறு புகன்று மீளுது மைய வென்றவர் கைதொழூஉச்
சிந்தை யானது பின்ப டும்படி சென்று தண்பனி மொய்த்தலான்
மூந்து செங்கன கங்கு வித்ததன் மீது வெண்பட மூடினு
லெந்த வாறுள தந்த வாறொளி ரிமய வேந்திடை யெய்தினார். (ச)

நண்ணு மாதவ வேட மேவுபு ராத னாதிய நான்மறைப்
புண்ணி யப்பொரு ளென்னு மாமுனி வரர்த மக்கெதிர் போந்துசீ
ரண்ணன் மாதவ நாதர் நீரிவ ணடைவ தற்குமு னெத்தவம்
பண்ணி னேனென வேபு கழ்ந்தடி பரசி னன்வரை யரசினான். (ரு)

ஆச னத்தி விருத்தி யன்பொ டருக்கி யங்களை யாதிய
பூச னைத்தொழின் முற்றி யேமுக மன்பு கன்று பொருப்பிறை
நேச மோடிவண் வந்த தென்ன நிகழ்த்து மென்று நிகழ்த்தலு
மாசில் வேந்த விருத்தி யென்ன விருந்த பின்னவ ரறைகுவார். (சா)

ஆதி நாயகன் வண்டு கிண்ட வலர்ந்து தேன்மழை சிதறியே
தாது லாவிய கொன்றை வேணிய னுன்ற னக்கொரு தனையளா
யாது காரண மாகியோ வெம தன்னை யாகிய விமலிதன்
மாத வத்தினை யேயுணர்ந்து மணம்பு ரிந்திட வெண்ணினான். (எ)

---

(ங) படாம் - மேற்போர்வை. சிமையம் - மலை. திதலை - தேமல். பூதரகோமகன் - மலையரசன். மீளுதிர் - திரும்புங்கள்.

(ச) கனகம் - பொன்மயமான தேமல். குவித்த - மூடிய. ஒளிர் - விளங்குகின்ற.

(ரு) புராதன - பழைய. அண்ணல் - பெருமை. நாதர் - பெரியவர்.

(சா) ஆதிய - முதலிய. முகமன் - உபசாரவார்த்தை. இருத்தி -இருப்பாய்.

(எ) தாது - மகரந்தம். தனையள் - புத்திரி. வேணியன் மணம்புணர்ந்திட எனக்கூட்டுக.

அனைய வாசக நின்ற னக்கு மொழிந்து மீளுதி ராமெனத் [சொல்
துனைவி லெம்மை விடுத்த னன்னுன தெண்ணா மென்கொ றுணிந்து
லெனலு மம்பர னுக்கி யான்பெறு மாளை யீந்திடற் கெத்தவ
முனமி யற்றின னென்று ரைத்திது மேனையோடு மொழிந்தனன்.

ஊரு மில்லையோர் பேரு மில்லை யுவந்த நற்கிளை தந்தைதா
யாரு மில்லை மிருங்கு லங்குடி யொன்று மில்லை யருக்கமே
தாரெ னும்பணி கச்ச ராநிறை சாம்பர் பூச்சுடை புல்லதாம்
போர்வை யுங்கரி யீம மேகுடி விடம தேயதி போசனம். (௯)

மண்டை யோட்டினி லையை மேற்றிடு மன்றி யின்றதன் மகளைமுன்
பண்டர் போற்றிட நல்கி மாதுல னென்ற தக்க னடைந்தபே
றெண்டி சாமுக மும்பு கன்றிடு மீத றிந்தும மேந்திழை
யொண்டொ டிக்கொடி தன்னை யீந்திட லெந்தவாறெனவோதினள்.

வேறு.

மேனையிது கூறுதலும் வேதியர்கள் சொல்வா
ரானவுயிர் யாவுமு ளடங்குபர லோகந்
தானினிய வூர்திலம தோடுதயி லம்போன்
மாநில சராசரமு மியாவையினு மன்னும். (௧௧)

சகத்திர நெடும்பெயர தன்றியள வின்றுந்
திகழ்ச்சியுறு பூந்துளவ மான்முதல தேவர்க்

(அ) மீளுதிர் - திரும்புங்கள். துனைவில் - விரைவில். அம்பரன் - அழகிய சிவபிரான். மேனை - மலையரசன் மனைவி.

(௯) அருக்கம் - எருக்கம்பூ. தார் - மாலை. அணி - ஆபரணம். கச்சு - அரைநாண். பூச்சு - பூசுதல். உடை - ஆடை. புல்லதாம் - புலித்தோலாம். கரி - யானைத்தோல். ஈமம்-மயானம். புல், கரி - ஆகுபெயர்கள்.

(௧௦) ஏற்றிடும் - ஏற்பான். முன்பு - பண்டைக்காலம். மாதுலன் மாமன்.

(௧௧) பரலோகம் - பாரமார்த்தியவுலகம். திலம் - எள். தயிலம் - எண்ணெய். மன்னும் - பொருந்தி நிற்பன்.

(௧௨) சகத்திரம் - ஆயிரம். திகழ்ச்சி - விளக்கம். உகப்பு - மகிழ்ச்சி. ஈதின் - இதனால். மெய்யாம் - (உள்ளது) உண்மையாம்.

குகப்புறு பிதாவினுட னன்னையிவ னீதின்
மிருத்தகுல முங்குடியு நற்கிளையு மெய்யாம். (கஉ)

திவ்விய மணம்பெருகு கொன்றைதிகழ் செந்தா
ரொவ்வுதிரு மான்முத லொடுங்குமொரு காலத்
தெவ்வமி னுதற்கணி னெரித்ததி னடிக்குங்
கவ்வையக லன்னவர்க ளென்புகல னுமால். (கங)

தாருக வனத்தர்விடு வெம்புலி தனைக்கொன்
றோர்தரு கயாசுரனை யுந்தனி யொறுத்தே
யீருரி புனைந்தமரர் தம்முயிரை யீவான்
கார்நிற மிசைந்தவிட முண்டதுமெய் காணும். (கச)

அம்புயனோர் செஞ்சிரசை யங்கைகொடு கிள்ளி
யிம்பரின் முகுந்தனவ னுதிய ரிடும்பை
வெம்பிய வுயிர்ப்பலிகொண் மேன்மையிவை யெல்லா
மம்புவியி னிற்சில விகழ்ச்சியென லாமோ. (கரு)

ஆதியினோர் பேதைதனை யன்புட னளித்த
மாதுலனை வேரொடு முடித்ததென மாதே
யோதினை யவன்செய லுணர்ந்திலை மனைக்கண்
மூதுறை விளக்கெனினு முத்தமிட லாமோ. (கசு)

ஈதறிகி லாய்கொலென வேதிய ரியம்பப்
போதமில னிவ்வுரை பொறுத்தருடி ரிவ்வா

---

(கங) ஒவ்வு - பொருந்துகின்ற. எவ்வம் - குற்றம். அதில்-(எரித்த) மயானத்தில். நடிக்கும் - நடனஞ்செய்வன். கவ்வை - துன்பம். அன்னவர்- அத்திருமால் முதலியவர்கள். கலன் - ஆபரணம்.

(கச) ஈர் - பிளக்கின்ற. உரி - தோல். ஈவான் - கொடுக்குநிமித்தம். காணும் . காணுங்கள்.

(கரு) இம்பரின் - இவ்வுலகத்தில். இடும்பை - அக்கிரமம். வெம்ப - கெட.

(கசு) என - என்று. அவன் - அந்தத்தக்கன். மூது - பழமை (யாக).

(கஎ) வேதியர் - சத்தருஷிகள். போதம் - ஞானம். அருடிர் - அருஷிகள். எதும் - எதுவும். மின் - மேனே.

றேதுமிது நாள்வரை தெரிந்தில னெனுமின்
னோதியவர் தாளிணை யுவப்பொடு துதித்தே. (௧௭)

அந்திமதி வேணியர னார்க்கெம தணங்கைத்
தந்திடுவ லென்றிசை தலுந்திகழ் தவத்தோர்
முந்துகணி தத்தரை யழைத்துநன் முகூர்த்தஞ்
சிந்தைகளி கூர்ந்துரைமி னென்னவுரை செய்தார். (௧௮)

நாளைநன் முகூர்த்தமென நற்கருணை வேந்தே
கோளில்பெறு மன்றல்புரி கோயின்முத லாதி
யாள்வினைசெ யென்றுசொலி யவ்வுழி தணந்து
நீளிர சதக்கிரி நெடுந்தவ ரடைந்தார். (௧௯)

வெள்ளிவரை வாழும்விம லேசனரு ளான
கள்ளுலவு தாண்மலர் பணிந்துகளி கூர்ந்தே
யெள்ளிலிம யத்தவர்கள் பேசிய வியாவும்
வள்ளறிரு முன்புசொலி மாதவர்க ணின்றார். (௨0)

வேறு

ஓகை பொருந்திம கிரியிறை மகண்மண வோலை பொறித்துநெடுஞ்
சாகர மேழுழு தீவுறை மன்னவர் சத்த குலக்கிரியு
மேக நிறத்தரி பிரம ருருத்திரர் விண்ணவர் தங்கணமு
நாக நகர்க்கதி பதிமுத லாயிரு நாலு வசுக்களுமே. (௨௧)

சித்தர் மருத்துவர் தும்புரு நாரதர் தெய்வத முனிவரரு
முத்தம முத்தர்கள் கருட ரியக்கர்க ளொன்பது கோண்முதலாச்

(௧௮) கணிதத்தர் - சோதிடர்.

(௧௯) கோள் - குற்றம். இல்பெறு - இன்மைபெற்ற. கோயில் - மணவறை. ஆள்வினை - (அலங்காரஞ் செய்யு) முயற்சி. அவ்வுழி - அவ்விடத்தை. தணந்து - நீங்கி. இரசதக்கிரி - கயிலாசமலை.

(௨0) கள் - தேன். எள் - இகழ்ச்சி.

(௨௧) ஓகை - மகிழ்ச்சி. இமகிரி யிறைமகள் - பார்வதி. பொறித்து-எழுதி. சாகரம் - கடல். சத்தகிரி - ஏழுமலை; அவை:—கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி யென்பன. நாகநகர் - தேவலோகம்.

(௨௨) முத்தர்கள் - மகாஞானிகள். உரகதலத்தவர் - நாகலோகத்திலுள்ளவர். வருக - வந்துசேருங்கள்.

சத்திய விஞ்சையர் தானவ ருரக தலத்தவர் மற்றுளரு
மித்தினம் வருகென விடலு முறைப்படி யின்பொடு வந்தனரால். ()

அனைவரும் வந்து செறிந்தன ரென்றலு மகமகிழ் வானவமா
மினமணி யிற்செயு மன்றலின் மண்டப மெங்கு மலங்கிருதம்
புனைகென வமுதினை யின்சுவை செய்தன பொன்னி னியற்றுபடா
மனவு பதித்த படங்கு விசித்தனர் மதிரவி யஞ்சிடவே. (உங)

தண்டிர சதமுடன் மரகத மிலைகாய் தருதுகிர் பூவெனவும் [போன்
கொண்டுசெய் வாழை நிரைத்தனர் தூணிடை கூத்தயர் மங்கையர்
மிண்டிய செம்பொற் பாவை யமைத்தனர் வெள்ளிநனிதிகொடுசெய்
முண்டக மாமலர் மாலிகை சூழ்வர முழுதும் விசிக்குவரால். (உச)

வேறு.

இணைகயொ ரெட்டையுந் தேர்களி னுலுமா
மகிழ்செய் தோரணத் தாலு மறைத்தனர்
மிகுதி யாகிய வீதி யடங்கலுந்
திகழ்ம ணிக்குலத் தாற்பந்தர் செய்தனர். (உரு)

சாந்து வாசச் சவாது புழுகினல்
வேய்ந்த பொற்றரை முற்று மெழுகினர்
பூந்து ணர்கள் பொலிதர நாற்றினர்
வாய்ந்த பொற்றுகில் கொண்டு வனைந்தனர். (உசா)

---

(உங) செறிந்தனர் - நெருங்கினர். நவம் - ஒன்பது. மன்றல் - கலியாணம். அலங்கிருதம் - அலங்காரம். புனைகென - செய்களென்று. செய்தன - செய்தாற்போல. படாம் - திரைச்சீலை. மனவு - சங்குமணி. படங்கு - மேற்கட்டி.

(உச) இரசதம் - வெள்ளி. துகிர் - பவளம். நிரைத்தனர் - வரிசைபடுத்தினர். அயர் - செய்கின்ற, ஆடுகின்ற. மிண்டிய - நெருங்கிய. முண்டகம் - தாமரை. மாலிகை - மாலை. விசிக்குவர் - கட்டுவர்.

(உரு) பந்தர் - பந்தல்.

(உசா) சாந்து - சந்தனம். வேய்ந்த - அணிந்த. பூந்துணர் - பூங்கொத்து. நாற்றினர் - தொங்கவிட்டனர். பொற்றுகில் - பீதாம்பரம்.

காண்டொ றுங்கண் கவரு நவமணித்
தூண்க டோறுஞ் சுவைமிக வேதரு
மாண்க ரும்பு நிரைத்தனர் மாமணி
பூண்கொள் பாவை நிரையிற் பொருத்தினர். (உஎ)

கமுகி ேைடு கதலி நிறைத்தனர்
விமலன் றன்னை மருகென மேவலா
விமய வேந்த னிமையவர் வேந்தென்றே
யமுத பூரண கும்பம்வைத் தாரரோ. (உஅ)

விரிப தாகை விளக்கம்வைத் தாரெழி
றருக ணுடிவெண் சாமரை சேர்த்தினர்
முரச நன்முழைப் பாலிகை மொய்ம்மணி
யரிய மங்கல மியாவு மமைத்தனர். (உகூ)

வேறு.

அமரா பதியும் மளகா புரியும்
மிமயா சலம்வந் திதுகா ணுறுமேற்
கமைநா ணுறவிவ் வரையே கவினேர்
சுமையா யுறவே தொகுசெய் தனரால். (௩o)

கலைமா னொடுசெங் கமலா சனன்மா
னிலமான் முதனே ரிழையார் குழுமிக்
குலமால் வரைமா மயிலைக் குளிர்சீர்
மலிபூம் புனன்மஞ் சனமாட் டினரால். (௩க)

---

(உஎ) மாண் - மாட்சிமையுடைய. மாமணி - மாணிக்கம். பூண் கொள் - அணிந்த.

(உஅ) மருகு - மருமகன்.

(உகூ) பதாகை - கொடி. முரசம்-அட்டமங்கலத்தொன்று. மொய்-கூட்டமாகிய.

(௩o) அமராவதி - தேவலோகம். அளகாபுரி - குபேரபட்டணம். கமை - பொறுமையோடு. இவ்வரை - இந்த இமயமலை. கவின் - அழகை. தொகுசெய்தனர் - சேர்த்துவைத்தனர்.

(௩க) குழுமி - கூடி. மஞ்சனம் ஆட்டினர் - ஸ்நானஞ்செய்வித்தனர்.

எம்மன் னையின்மேல் விடைநோ வரவே
பொம்மென் கலையே புனைந்தார் திகழ்கார்
பம்முங் குழலிற் பகர்சீ ரகிலின்
கம்மென் மணமார் புகைகட் டினரால். (கூஉ)

பிறைநேர் நுதலிற் பொருநீ றணிந்து
அறுசீர் மலிசிந் துரந்தீட் டினர்கூர்
கறைவே லனகட் கடைக்கஞ் சனம்வைத்
தறனோர் குழலா ரணிசெய் தனரால். (கூகூ)

களபப் புளகக் கனகச் சைலத்
திளமைத் தனமா மிருசெப் பநிலே
வளமைத் தொயில்செவ் வகையா யெழுதி
விளர்கச் சும்விசித் தனர்மெல் லியலார். (கூச)

மதியொன் றிருபா லினும்வன் கிரணப்
பதிவந் ததெனப் பகர்தோ டுபுனைந்
ததிற்செவ் வரியம் மதியைக் கவரா
தெதிர்செம் மணிச்சுட் டியிசைத் தனரால். (கூரு)

கொடியிற் பவளக் கொடிசுற் றியசெய்
வடிவுற் றிடுதா மரைமா மலரி

(கூஉ) நோவர - துன்பமுற. பொம்மென் - பொம்மென்றொலிக்கும். கலை - மேகலாபரணம். பம்மும் - பதுங்கும். கம் - நல்வாசனைக்குறிப்பு.

(கூகூ) துறு - நெருங்கிய. கறை - கறுப்பு. அஞ்சனம் - மை. அறல் கருமணல்.

(கூச) களபம் - கூட்டுச்சந்தனம். புளகம் - மயிர்க்கால்.நடிப்பு. கனகச்சைலத்து - மகாமேருமலைபோன்ற. வளமை - அழகு. விளர் - இளமை, புதிது. விசித்தனர் - கட்டினர்.

(கூரு) மதியொன்று - (முகமாகிய) ஒருசந்திரனது. வன்-வலிய - கிரணப்பதி, சூரியன். அதில் - அத்தோட்டிலுள்ள. அரி - ஒளி. அம்மதியை- அந்த (முகமாகிய) சந்திரனை. கவராது - கிரகியாமல். எதிர் - நேரே.

(கூசு) கொடியின் - கொடிபோலும் பார்வதியினது. சுற்றிய - சுற்ற. செய்வடிவு - செய்த அழகு. தாமரை - (கையாகிய) தாமரை. அடியில் -

ணடியிற் சுடர்சூழ்ந் தடைந்தா லெனவே
தொடிபொற் கடகந் துணிவிற் புனைந்தார். (௩௬)

அக்கா லணைவென் றவனோ டழலை
முக்கால் வலம்வந் திடுமா முளரி
யிக்கா லெனவோ துதல்போ லொலிசேர்
மிக்கா மறைநூ புரமிட் டனரால். (௩௭)

வேறு.

அழகி னுக்கழ கான வணங்கினுக் கரிதி னிவ்வகை யாயணி செய்தலு, மொழிவ ருங்களி மான்முத லோரடைந் தும்ப ராதியர் தம்பெரு மான்பதம், வழுவி லாது பணிந்து நினக்கியா மன்னு மாமணக் கோலஞ்செய் கேமெனு, மொழிகு றிப்பிற் புகன்றுட் கருத்தினை மூரல்காட் டமகிழ்ந்து முயன்றனர். (௩௮)

குலவு கங்கையை யாதிய தீர்த்தங்கள் கொணர்ந்து நீடுரு மஞ்சன மாட்டியேவம், புலியின் றோலுடை நீக்கி யெழிறரு பொற்பீதாம்பரஞ் சேர்த்திப் பொலிவின, விலகு நீறு நுதலணிந் தோங்குசீ ரிசைசகத் தூரித் திலக மெழுதியே, மலியுஞ் செஞ்சடை முற்று மறைத்துமா மணியி சைத்த மகுடந் தரித்தனர். (௩௯)

அன்பி னற்சந்த னுதி களபமெய் யையன் மேனி முழுது மணிந்தன, ரென்பி னுபர ணங்களை நீக்கியே யிரத்தி னுபர ணங்க டரித்தனர், வன்ப லுகத்தின் கங்கண மாற்றிமா மணியின் வாகு வலயம் புனைந்தனர், புன்பு லான்மழுச் சூல மகற்றியே பொருவின் மந்திர வாள்கரம் பூட்டினர். (௪௦)

---

அடிப்பாகத்தில். சுடர் - (நாயகனாகிய) சூரியன். தொடி - வளையல். கடகம் - கங்கணம்.

(௩௭) முளரி - தாமரை. மறைநூபுரம் - வேதமாகிய பாதசரம்.

(௩௮) ஒழிவரு - கெடுதலற்ற. களி - மகிழ்ச்சி. செய்கேம் - செய்வோம். மூரல் - புன்சிரிப்பு.

(௩௯) திலகமெழுதி - பொட்டிட்டு.

(௪௦) என்பின் - எலும்பின். வன்பல் - வலியபற்களையுடைய.

மத்த மோடெருக் கந்தொடை யாற்றியே வாச மார்தரு மாலை வனைந்தன, ரத்தி யாருரிப் போர்வை யகற்றியே யம்பொற் போர்வை யழுகுறச் சாத்தினர், முத்தொ ழிற்கு முதல்வனுக் கிவ்வகை முகுந்த னாதி யவரெழில் செய்தெதிர், நுத்தி யஞ்சொலி நிற்க வெழுந்தரன் சுடர்செய் கோயிலின் வாயிலிற் றுன்னினன். (௪௧)

தேவர் மாமலர் மாரிகள் சிந்தவே சித்தர் சாரணர் வாழ்த்தொலி பொங்கவே, தாவி லாமணி மால்விடை யேறினன் சந்தி ராதித்தர் வெண்குடை தாங்கினர், பூவை மெய்ய னடைப்பைகொண் டெய்தினன் போத னாலவட் டங்கொடு போந்தனன், காவினீழ லுறைந்தரு ளிந்திரன் கனக ரத்னக் களாஞ்சிகொண் டுற்றனன். (௪௨)

தரும ராசன் சரணத்திற் சேர்த்திய தமனி யத்திருப் பாதுகை தாங்கியே, விரைவி னெய்தினன் றும்புரு நாரதர் வீணை கொண்டிரு பாலினு மேவினர், முருடு மல்லரி சல்லரி காகள முற்று மெற்றிய பம்பை குடமுழா, வரிய சங்கு தடாரி முரசுட னமரத் துந்துபி யார்ப்பரித் தோங்கின. (௪௩)

வேறு.

விந்தைப்பெரு வொள்வா
ளெந்தைக்குழு னெந்தி
நந்திக்கண நாதன்
வந்துற்றனன் மன்னோ. (௪௪)

அடர்பூதர்க ளண்ணல்
சடைமேவிய தண்ணார்

---

(௪௧) மத்தம் - ஊமத்தம்பூ. எருக்கந்தொடை - வெள்ளருக்கலம்பூமாலை. அத்தி - யானை.

(௪௨) தா - கேடு. பூவைமெய்யன் - காயாமலர்போலுஞ்சரீரமுடைய விஷ்ணு. போதன் - பிரமன். ஆலவட்டம் - விசிறி.

(௪௩) தருமராசன் - யமன். பாதுகை - பாதரக்ஷை. எற்றிய - அடிக்கப்பட்ட. துந்துபி - தேவவாத்தியம். ஆர்ப்பரித்து - முழங்கி.

(௪௪) விந்தை - ஆச்சரியம்.

(௪௫) நீர்மை - குணமுடைய.

நெடுமாமதி நீர்மைக்
குடைகோடி கொணர்ந்தார். (சரு)

கரமார்மணிக் கவரி
யிருபாலினு மிரட்டிப்
பெருமாமுலைப் பேதைச்
சுரர்மாதர்க ளடுக்கார். (சசு)

வருசாரணர் மடவார்
விரிமாமணி விசிறி
யிருபாலினு மேந்தித்
திருமாதெனச் சேர்ந்தார். (சஎ)

அரவப்பதி யணங்கார்
கரபொற்கம லத்தே
தெரிரற்றின தீபம்
விரைவிற்கொடு மிடைந்தார். (சஅ)

அகனீரர மகளிர்
மகிழ்கூர்தர வாழ்த்த
மிகுகின்னரர் மின்னார்
பகர்வீணை பயின்றார். (சகூ)

மதியேழ்மட வாருந்
துதிசோபனஞ் சொன்னார்
புதிதார்களை கொடுபொற்
பதிமாதர் படர்ந்தார். (ருo)

---

(சசு) கரம் - ஒளி. இரட்டி - அசைத்து.

(சஎ) மணி - இரத்நம்பதித்த.

(சஅ) அரவப்பதி - நாகருலகம். மிடைந்தார் - நெருங்கினார்.

(சகூ) அகல் - விரிந்த. பயின்றார் - பாடினார்.

(ருo) மதி - மதிக்கப்படுகின்ற. எழ்மடவார் - சத்தகன்னியர். பொற்பதி - பொன்னுலகு.

இடர்தீர்தரு மியக்கர்
மடவார்நவ மணிப்பொற்
சுடரார்பணி சுமந்தே
பிடியாமெனப் பெயர்ந்தார். (ருக)

வேறு.

கள்ளிடவு மிடமின்றி விண்ணுமண்ணு நெருங்கியொன்றா யிமய வெற்பும், வெள்ளிவரை யுஞ்சரியா நிரைத்தபெருஞ் சேனை நடு விடைநடாத்தித், தள்ளலரும் வழியெலாங் கடந்திமய வரை நகரிற் சார்த லோடும், வள்ளறிரு வழகுகண்ட மாநகரின் மாதர்சிலர் வகுப்ப தானார். (ருஉ)

மெய்க்கோல விழிக்கௌரி மணக்கோலந் தனக்கிணங்கு மேன்மை யான, விக்கோலந் தனையறியா திருக்கோல மிடுவதென்கொ லென்பார் வாசக், கைக்கோலஞ் சரிநாணின் கரும்புவில்லி யுடனெடு நாட் காய்ந்த நோன்மை, வைக்கோலி னனல்கொளுவுந் தன்மை யெனப் பொடித்ததந்த வகைகா ணென்பார். (ருஙு)

இத்தனைநாள் வரைவரைவேந் தியற்றுதவ மேயதிக மென்பா ரன்றேன், புத்திரியாஞ் செந்துவர்வாய்க் கௌரிதவ மதிகமெனப் புகல்வ ரிந்தக், கத்தனிவ டனைப்புணரப் புரிந்ததவ மதிகமென்பார் கருது போழ்தின், மெத்துமிவர் மணக்கோலங் காணுறுமெம் மருந் தவமே வியப்பென் பாரால். (ருச)

கந்தமத னம்பெறுநன் கரும்பினொடு கரும்பிசைத்த கரும்புந் தாங்கு, மந்தமதன் முடிவாக வந்தமதன் முடிவாறு னழித்த வா

(ருக) பிடி - பெண்யானை.

(ருஉ) தள்ளல் அரு - நீங்கற்கரிய. வள்ளல் - கொடையாளியாகிய சிவபிரான்.

(ருஙு) கோலம் - அழகு. இக்கோலம் - இந்தக்கலியாணக்கோலம். ஓலமிடுவது - அலறுவது. கை - கையிலுள்ள. கோல் - பாணம். அஞ்சு,— அரிநாண் - வண்டாகிய கயிறு. நோன்மை - வலிமை. வகை - விதம்.

(ருச) வரைவேந்து - மலையரசன். துவர் - பவளம்போன்ற. மெத்தும் - மிகும்.

(ருரு) கந்தம் - மணம். மதனம் - பஞ்சபாணவத்தைக்குணங்களி னென்று. நன்கு,— அரும்பு - பூவரும்பு. கரும்பு - வண்டாகிய கயிறு.

றங், கெந்தமதம் வெந்தமதன் மீட்டுவர வளித்தவகை யென்கொ லென்று, தந்தமதன் பெவ்வளவு ளவ்வளவு மம்மடவார் சாற்றி னூரால். (௫௫)

எட்டிலே யெழுதாத மறையிலே யன்பர்தம திதயக் கஞ்ச
வீட்டிலே நாதாந்த வெளியிலே தெளிதமிழின் வியந்த மூவர்
பாட்டிலே யரியபரா பரத்திலே யிருக்குமுதற் பரம ரின்றோர் [ரூர்௬
மாட்டிலே யேறிவருந் தன்மையென்கொ லென்றுபலர் வகுத்துநின்

வேறு.

நிடத வெற்பனு ரேரியாம் வெற்பனுந் திகிரி
வடிவு வெற்பனும் வழுதியாம் வெற்பனு மிமயக்
கடவுள் வெற்பனுங் கயிலைவெற் பிறையெதி ரெய்தி
யடிம லர்க்கணிற் பணிந்தெழுந் தருகுவந் தனரால். (௫௭)

பெற்ற வாகன மணப்பந்த ருகிடை பெயர
மற்ற வாகன மாலயன் கரம்பிடித் திழிந்தின்
கொற்ற வாகன மேவுகு ணூதிபா நீற
துற்ற வாகநம் பரமவென் றணைவருந் தொழுதார். (௫௮)

பந்த ரிற்சென்று மண்டபத் திடைபெரி தமைத்த
சுந்த ரத்தம னியவரி யாசனத் தும்ப
ரந்த ரத்தம ரர்கடொழ வமலனு மிருந்தான்
றந்த ரத்தவர் தனத்தவ ரவரிருந் தனரால். (௫௯)

இசைத்த - பொருந்திய. மதன் - வலி, முடிவாக. அந்த,— மதன் - மன்ம தன். மதம் - நோக்கம்.

(௫௬) நாதாந்தவெளி - ஞானகாயம். மூவர்பாட்டு - தேவாரம். பரா பரம் - அநாதி. வகுத்து - பிரித்துப்பேசி.

(௫௭) திகிரி - சக்கரம். வழுதி - பாண்டியன். கடவுள் - தெய்வத் தன்மை. கணில் - இடத்தில்.

(௫௮) பெற்றவாகனம் - இடபவாகனம். பெயர - பெயர்ந்துசெல்ல. மற்று - அசை. அவா - ஆசையும். கனம் - மேன்மையுமுடைய. இன் - இனிய. கொற்ற - வெற்றியுடையாய். வா - வருவாய். கனம் - நிறைவு ஆக - திருமேனியுடையாய்.

(௫௯) தமனிய - பொன்னாற்செய்த. உம்பர் - மேல். தந்தரத்த - தங் கள் தகுதியுடைய. ஆதனத்து - ஆசனத்தில்.

வெற்பு மாதர்கணீ மேனைய ரீன்றமென் குதலைக்
கற்பு மானினைத் தாங்கினர் கொணர்ந்துகண் ணுதலா
மற்புராதனன் வலப்புறத் திருத்தினர் வாசப்
பொற்பு நாண்மல ரான்மறைச் சடங்குகள் புரிந்தான். (௯௦)

வேறு.

மாமத்தை யணிந்த வேணி வள்ளலார் முன்பு செய்த
வோமத்தீ வளர்த்தா னெல்லும் பொரியுமற் றுதவி யெங்குந்
தூமத்தை யெழுப்பி நெய்யுஞ் சொரிந்தவ னீரைஞ் ஞாறு
நாமத்தைப் புகன்றான் வாச நளினத்தை யிருப்பா யுற்றான். ( )

தமாபதி சடையிற் சூடித் தழைத்திடு முயிர்கட் கெல்லாஞ்
சுமாபதி பசுபா சங்க ளாகவே தோன்றி நின்ற
உமாபதி கரத்தா லெங்க ளுமைதிருக் கரத்தைப் பற்றி
யமாபதி யுடனே மத்தை மும்முறை வலஞ்செய் தானால். ( )

நற்கர கத்திற் றூங்கு நன்புனல் கொணர்ந்து பார
வெற்பிறை புதல்வி கையை விமலர்கை யுடனே சேர்த்தி
யற்புதம் பெருக வார்த்துக் கொடுத்தன னதன்பி னண்ணல்
பொற்புமங் கலநா ணம்மை கழுத்தினிற் புனைந்தான் மன்னோ.

வேறு.

ஆர்த்தன பல்லிய மமரர் பூமழை
தூர்த்தனர் வாழ்த்தினர் துகளின் மாதவச்

---

(௯௦) மல் - வளந்தங்கிய. சடங்கு - கிரியை.

(௯௧) மத்தை - ஊமத்தம்பூ. தூமம் - புகை. நாமம் - பெயர். நளினத்தை - தாமரைமலரை.

(௯௨) தமாபதி - இருட்காலத்தின் தலைவனாகிய சந்திரன். (தமபதி யென்பது எதுகைநோக்கி நீட்டல் விகாரம்பெற்றது) சுமா - பயன்கருதாது. (விகாரம்) பதி பசு பாசம் - திரிபதார்த்தங்கள். அமா - அசை. பதி - அன்பு. (பத்தியென் பதனிடைக்குறை)

(௯௩) கரகம் - சலபாத்திரம். பொற்பு - அழகு.

(௯௪) தூர்த்தனர் - நிறைத்தனர். சீர்த்தி - கீர்த்தி. அறு - நீங்காத.

சீர்த்திமா முனிவர்கள் சென்று மாமணம்
பார்த்தரு மகிழ்ச்சியுட் பரவ வேத்தினர். (சுச)

பேதையாங் கௌரியும் பெற்ற தாயுடன்
றாதையைப் பணிந்தன ளண்ண றன்னையே
சீதரன் முதலினோ ரியாருஞ் சென்றுசென்
றாதரம் பெருகநின் றடிவ ணங்கினர். (சுரு)

மைந்தனைப் பணிந்துநம் பரன்ம கிழ்ந்தன
னிந்தவிக் கதையிவ்வா றீது நிற்கமுன்
பந்தரிக் கிடப்புற மளித்த காதையைப்
புந்திசால் முனிவர்க்குப் புகல்வ தாயினன். (சுசு)

10-திருக்கல்யாணச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சஉக.

## பதினொராவது:— இடப்பாகம்பெற்ற சருக்கம்.

மலைமகளை மணமுடித்து வெள்ளிமலை தனின்மகிழ்வாய் மத்தந் தோடு, கலைசெறிசெஞ் சடைதாங்கு கண்ணுதல்வீற் றிருந்தானக் காலை மேருச், சிலையனெறில் பதம்பரவித் தேவர்கோன் குறையுரைக்கச் செலுமுன் னாகத், தொலைவறுநன் மறைபயிலு நாவினாற் பிருகிறையைத் தொழுவந் தானால். (க)

வந்தமுனி யருகிருக்கு முமையவளை யலதுவலம் வந்து வேகத்
தந்தியுரி போர்த்துழுக்கட் சயம்புவடி தொழுதானீள் சயில மீன்ற

(சுரு) ஆதரம் - அன்பு.

(சுசு) மைந்தன் - புத்திரனாகிய விநாயகக்கடவுள். அந்தரிக்கு -உமாதேவிக்கு. புந்திசால் - அறிவுமிக்க.

(க) மத்தம் - ஊமத்தம்பூ. செறி - நெருங்கிய. முன்னாக -முன்னம். பிருகு - பிருகுமுனிவர். இறை - சிவபிரானை.

(உ) தந்தியுரி - யானைத்தோல். போர்த்தும் - மூடிக்கொண்டிருக்கும். சயம்பு - சுயம்புவடிவாகிய சிவபிரான். சூழ்ச்சி - தந்திரம். கந்தரம் - கழுத்து.

சுந்தரியார்த் திதுவரையுங் காண்கிலாப் புதுமையிவன் சூழ்ச்சி யெ
ன்றே, கந்தரத்தில் விடமுறையுஞ் சங்கரற்குச் சிற்சின்மொழி கழறி
னாளால். (௨)

உலகமெலா முவந்தெனையு முன்னையுமே பணியுமிவ னோரா
தென்னை, விலகியெனைப் பணியும்வகை விளம்புதியென் றுளதற்கு
விரிஞ்சன் றன்னோ, டலர்கமல மின்கேள்வ னறியாத சுடர்வடி
வொன் றாகி மேருச், சிலைகுனித்துப் புரமெரித்த தேவதே வன்மலர்
வாய் திறந்து சொல்வான். (௩)

வேறு.

சத்தி யென்பது சிவமெனும் பொருளொளி தழைத்து
நத்து மின்பதுன் பங்களுக் கிடமதாய் நடத்திச்
சித்தி யாவையும் விளைத்தற மயக்கலாற் றேர்ந்த
மூத்த ரானவ ருனையெண்ணு ராதலான் முனிவன். (௪)

வேறு.

சிவசத்தி யிரண்டு செறிந்திடலா
னவசத்திக ளிவ்வகை நண்ணிநெடும்
புவனத்தொழின் முற்றுறு போழ்தினிலே
தவசத்தி சிவத்திடை சாருறுமே. (௫)

சிவமேபொரு ளன்றியு மேதுசெய
னவமேயது வென்று நயந்ததனு

(௩) ஓராது - உணராமல். விளம்புதி - சொல்வாய். ஆகி - ஆனவன். குனித்து - வளைத்து.

(௪) ஒளிதழைத்து - பிரகாசத்தால் விருத்தியாகி. நத்தும் - விரும்பப்படும். அற - மிக.

(௫) செறிந்திடல் - நெருங்கல். நவசத்திகள் - (மற்றை) ஒன்பதுசத்திகள். புவனத்தொழில் - சிருட்டித்தொழிலை. முற்றுறுபோழ்தினில் - முடிக்குங்காலத்தில். தவ - தவத்தையுடைய.

(௬) செயல் - செய்கை. நவமே - சிநேகமே. அது - சிவத்தோடு சத்தியிருத்தல். நயந்ததனல் - விரும்பியதனல். கவலா - கவலையடையாமல். கண்டனை - தெரிவாயாக.

லிவனீது தெரிந்துனே யன்றியெனேக்
கவலாவலம் வந்தது கண்டனேயால். (௬)

பிடிபோனடை பானெ பேசுமொழித்
துடிமின்னிடை யென்றின சொற்றிடலும்
வடிகொண்டு மதர்த்தயி லொத்தெழிலே
குடிகொண்டக ணம்பிகை கூறுவளால். (எ)

வேறு.

நித்த மாகி நிகழ்பரத் துக்குமே
சத்தி யன்றியோர் தாபர மில்லேயாற்
பத்தி யன்று படிவ முழுவதுஞ்
சுத்த மார்சத்தி கூறென்று சொல்வரால். (அ)

பன்னு நாத பராசத்தி தன்னிடந்
துன்னு மொன்பது சத்திக டோன்றுமா
லன்ன வொன்பதி லொன்றிறை யாமென
மன்னு வேதம் புகல்வது மாயமே. (௯)

ஏரு லாவிய சத்தி யினிற்சிவஞ்
சேரி லத்தொழி லியாவையுஞ் செய்யுமா
லாருஞ் சத்தி யகன்றிடி லச்சிவம்
பேரு தற்கு மரிதெனப் பேசுமால். (க0)

விந்து நாதத்தின் மேவ லிலாதெனி
லிந்த மன்னுயி ரியாவுமின் றுய்விடு

---

(எ) துடி - உடுக்கும். மின் - மின்னும்போன்ற. இடை - இடையை யுடையவளே. இன - இந்தவார்த்தைகள். வடி - கூர்மை. மதர்த்து - கருவங்கொண்டு.

(அ) நித்தம் - அழியாமை. தாபரம் - ஆதாரம். பத்தியன்று - (இம் முனிவன் செய்கை) அன்பல்ல. படிவம் - (உம்முடைய) திருமேனி.

(௯) நாதம் - ஒலிவடிவாகிய. இறை - சிவம். மாயமே - பொய்யா.

(க0) எத்தொழில்யாவையும் - எல்லாத்தொழில் முழுதும். பேருதற் கும் - அசைதற்கும். அரிது - முடியாது. (தாற்பரியம்)

(கக) விந்து - சத்தி. நாதம் - சிவம். வருக்கும் - (சிவம்) சிருட்டிக் கும்.

மந்த நாதத்தில் விந்து வணுகுங்கால்
வந்த யாவையுந் தோன்ற வகுக்குமால். (௧௧)

ஈதெ லாமுண ராதெனை நீக்கிநிற்
காத லோடு பணிந்தது கண்டுமிப்
போது நீயும் புகழ்ந்தனை யென்றுமை
மாது கோப மனத்தினி லாகியே. (௧௨)

சென்று மற்றொ ரிடத்தினிற் சேர்ந்தன
ளன்று விண்டோ டயன்முத லோரெலா
நின்ற காய நிரம்ப வொடுங்கியே
பொன்று மாறு பொறையுற் றிருந்தனர். (௧௩)

ஈச னங்கது கண்டிமை யோர்கண்மே
னேச னாகி நிலைபிரிந் தேகிய
மாசி லாவுமை தன்னிடம் வந்துவிற்
காசு மாதிர சாபன் கழறுவான். (௧௪)

வேறு.

நீவில கித்தனி நின்றிடி லண்டத்
தாவி கடத்தை யகன்றிடு மென்பூத்
தூவி வழுத்து சுராதிபர் காணப்
பூவினின் மன்றல் பொருந்துதல் போலும். (௧௫)

சீருற வுன்னொடு சேர்ந்தெழி றங்கு
மீருரு வெள்ளுமவ் வெண்ணெயு மென்ன

(௧௨) நின் - உன்னை.

(௧௩) விண்டு - விஷ்ணு. காயம் - சரீரம். பொறையுற்று - சுமந்து கொண்டு.

(௧௪) வில் - ஒளியுடைய. காசுமாதிரம் - பொன்மலை. சாபன் - வில்லுடையவன். ஈசனாகிய மாதிரனெனக்கூட்டுக.

(௧௫) அண்டத்து - அண்டங்களில். ஆவி - உயிர். கடத்தை - சரீரத்தை. மன்றல் - வாசனை.

(௧௬) இணங்கி - சம்மதித்து.

வோருரு வாகி வுறைந்தன மாகில்
யாரு மிணங்கி யிறைஞ்சுவர் மாதே. (கரு)

என்ன வுரைத்துல கீன்றரு ளன்னை
தன்னை மகிழ்ந்தக லத்திடை தங்க
முன்னி யணைத்திட மொய்குழல் வேணிச்
சென்னிய னோடு செறிந்தன ளன்றே. (கஎ)

வேறு.

சென்னியிலோர் புறங்கூந்த லோர்புறங்கோ டீரமிரு செவியி லொன்றிற், றுன்னியசங் கொன்றின்மணித் தோடுகராம் புயத்தி லொன்றிற் றொடிமற் றொன்றில், வன்னியுறு மருவிரண்டு காலிலொ ன்று கழலொன்று மணிச்சி லம்பு, வின்னவடி வால்வாம விமயவல்லி வலப்பாகத் தீச னானார். (கஅ)

அவ்வுருவோ டிரசதமா திரமீதி லரியணையி லமர்ந்தார் செய்ய, கொவ்வையித ழுமைபாகங் கொண்டதுரைத் தனமமரர் குழுவுக் குள் யாருஞ், செவ்வனசப் பதம்பரவு மிந்திரனுக் கிரவழுதித் தென் னனோடும், வெவ்வமர்செய் துறுமகுட பங்கமினி யுரைத்துமென விளம்ப லுற்றான். (ககூ)

11 - இடப்பாகம்பெற்ற சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம். சஅ.

---

(கஎ) அகலத்திடை - மார்பினிடத்தில். மொய்குழல் - நெருங்கிய கூந்தலையுடையவுமாதேவி. செறிந்தனள் - (ஒன்றுசேர்ந்து) நெருங்கியிருந் தனள்.

(கஅ) கோடீரம் - சடை. கராம்புயம் - கையாகியதாமரை. தொடி - வளையல். வன்னி - அக்கினி. கழல் - வீரக்கழல். இன்ன - இத்தன்மையா கிய. வடிவு - திருமேனி.

(ககூ) இரசதமாதிரம் - கயிலாசமலை. வனசம் - தாமரைப்பூ. வெவ் அமர் - கொடியசண்டை. மகுடபங்கம் - கிரீடமிழத்தல்.

பன்னிரண்டாவது:—

## இந்திரன் மகுடபங்கம் பெற்ற சருக்கம்.

மதுரையி லுக்கிர வழுதி மண்ணெலாந்
துதிசெயப் பாய்ந்தெதிர் சுருட்டு நீடிரை
நதிபதி சுவறவேல் விடுத்து நன்மனு
விதிமுறை யுலகெலாம் விளங்கக் காக்குநாள். (க)

மாரியற் றுலகினில் மலிந்து நீர்செறி
யேரிவா யெரியெழ விணங்கு நற்குடி
சீரியல் கெட்டது சிறுமை யுற்றது
பாரெலா மிம்முறை பரி சழிந்தவே. (உ)

இன்னண நிகழவிவ் விழிவு தீர்ப்பதற்
குன்னியே யுதியர்கோன் வளவ னுக்கிர
தென்னனிம் மூவரு மலயஞ் சேர்ந்துவான்
மின்னெறிர் சடைக்குறு முனிமுன் மேவியே. (ங)

உற்றடி பணிந்துதம் முளக்கு றிப்பெலாஞ்
சொற்றனு மம்முனி துளங்குங் கோணிலை
முற்றுமோர்ந் தரசர்மூ வருக்கு மோதுவான்
மற்றது கரதலா மலக மென்னவே. (ச)

அருக்கன்முன் கவிபின்ன ரார விவ்வகை
நெருக்கமை மாரிபெய் யாது நீங்குமென்

---

(க) மண் - பூமி. சுருட்டும் - மடக்கும். நீள்திரை - நீண்ட அலை. நதிபதி - கடல். சுவற - வற்ற.

(உ) மாரி - மழை. மலிந்து - நிறைந்து. ஏரிவாய் - குளத்தினிடத்தில். எரி - அக்கினி. பரிசு - தன்மை.

(ங) இன்னணம்-இவ்விதம். உதியர்கோன் - சேரன். வளவன்-சோழன். உக்கிரதென்னன் - உக்கிரபாண்டியன். மலயம் - பொதியமலை.

(ச) துளங்கும் - அசையும். கோள்நிலை - நவக்கிரகங்களினிலைமை. அது - அந்நிலைமை. கரதல ஆமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி.

(ரு) அருக்கன் - சூரியன். கவி - சுக்கிரன். ஆரல் - செவ்வாய். நெருக்க - நெருக்கிச்செல்ல. மை - மேகம். இருக்கு - வேதம்.

றிருக்கதே முதன்மறை யெடுத்துக் காட்டிய
பெருக்கமா நூலெல்லாம் பேசு கின்றதே. (ரு)

அம்முறை கோளெலா மடுத்துச் செல்வதா
லிம்மகி தனின்மழை பொழித லின்றியே
வெம்மைசேர்ந் ததுமழை வேண்டி லிந்திரற்
கும்மனக் குறையெலா மறிய வோதுவீர். (சு)

எகுமென் றனதற் கிசைந்து வானுறை
போகிபாற் செல்வழி புகலு வாயெனத்
தோகைபங் கானனைச் சோம வாரத்தின்
மோகமாய்ப் பூசனை முறையி னுற்றிறல். (எ)

எண்ணிய பயனெலா மெய்து மென்றுமுக்
கண்ணிறை சோமவா ரத்தின் காட்சியு
முண்ணிறை யுவகையோ டுற்ற பூசனை
பண்ணிடும் விதிகளும் பகர்தன் மேயினன். (அ)

மலைகளிற் சிறந்தது வடகுன் றன்களிற்
றொலைவிலா வருளொடு துலங்கு தேநுவே
தலைமையாந் தானத்தி னன்ன தானமே
நிலைதருக் களிற்சுரர் தருநி னைக்கின்மேல். (கு)

நரர்களின் மேன்மையந் தணர்பொன் னாட்டினிற்
சுரர்தமி லதிகனுஞ் சோம சேகர
னுரைசெய்மந் திரத்திலஞ் செழுத்த தன்மையாம்
விரதமுள் ளேசசி வார மேலதாம். (க0)

---

(சு) மகி - பூமி. உம் - உங்களுடைய.

(எ) போகி - இந்திரன்.

(அ) காட்சி - தோற்றம். உவகை - மகிழ்ச்சி.

(கு) வடகுன்று - மகாமேருமலை. ஆன்கள் - பசுக்கள். தேநு - காம தேநு. தரு - மரம். சுரர்தரு - கற்பகம்.

(க0) சுரர் - தேவர். சோமசேகரன் - சந்திரனைத்தலையிற்றரித்தசிவ பிரான். சசிவாரம் - சோமவாரம்.

இல்லறக் கிழமைபூண் டவரில் வாழ்க்கைவிட்
டல்லறீர் துறவறத் தவர்தங் காந்தனே
டெல்லையில் வாழ்வின பதியி றுந்தவ
ரொல்லையிவ் விரதநோற் றொழுகிற் சீர்தரும். (கக)

மங்கைபங் காளனை வணங்கிப் போற்றுநாட்
டிங்கள்வா ரமதலா தில்லைத் திநெறிப்
பங்கமாம் பிறவிநோ யொழித்துப் பார்புக
ழுங்கணன் பதமல ரடைய வுய்க்குமால். (கஉ)

என்றவ னுரைத்தலு மிருசெ விக்கொளா
நன்றெந விருகர முகிழ்த்து நன்முனி
தன்றுணைப் பதமலர் தாழ்ந்து வந்துபின்
வென்றிவேன் மன்னர்மூ வருமெய் யன்பினை. (கங)

துங்கமால் விடைவருஞ் சொக்க நாயகன்
பங்கய மலரடி மனம்ப தித்துமேற்
றிங்களோன் பியற்றவுஞ் செய்த வத்தினான்
மங்குறோய் வான்புகும் வழிகண் டாரரோ. (கச)

வேறு

விண்ணெறிச் சென்ற மூன்று வேந்தரு நூற்றுப் பத்துக்
கண்ணெறி யுடைய கோமான் கனிந்துறை கொலுவிற் புக்கார்

---

(கக) கிழமை - உரிமை. அல்லல் - துன்பம். காந்தன் - நாயகன். எல்லை - அளவு. வாழ்வின - வாழ்வையுடைய. பதி -நகரம். ஒல்லை - விரைவில். நோற்றொழுகில் - செய்துவந்தால்.

(கஉ) உய்க்கும் - (அவ்விரதம்) செலுத்தும்.

(கங) செவி - காதுகளில். கொண்டு - ஏற்று. முகிழ்த்து - குவித்து.

(கச) துங்கம் - உயர்ச்சி. மங்குல் - மேகம்.

(கரு) நெறி - வழி. எறி - வீசுகின்ற. பெண்ணை - பனம்பூமாலை. புயத்தன் - புயத்தையுடைய சோழன். கோழிவேந்து - உறையூர்க்குத் தலைவனாகிய சோழன். தண் - குளிர்ச்சியை. எறி - வீசுகின்ற. காமன் - சற்ப சத்துக்கிறைவன்.

புண்ணெறி செவ்வேற் பெண்ணைப் புயத்தனுங் கோழி வேந்துந்
தண்ணெறி காமன் காட்டுந் தவிசிடை யினிது வைக. (கரு)

அம்புவி யொருகோ லோச்சு மடலுக்ர வழுதி யென்பான்
கிம்புரி மகுட ரத்னக் கிளரொளி பரப்பத் தேவர்
தம்பிரான் றவிசி லேறிச் சரியணை யிருக்க விந்த்ரான்
வெம்பியுட் புழுங்கி மற்ற வேந்தர்தம் முகத்தை நோக்கா. (கசு)

யாதுநீர் கருதி வந்த தியம்புமி னென்னப் பாக
சாதனு வெங்க ணாட்டின் மழையின்றிச் சார்ந்தீ தென்றார்
காதலுற் றன்னார் நாட்டிற் கருமுகில் சுரக்க நல்கி
யோதரும் பலபூ ணுடை யுதவிநீர் சென்மி னென்றான். (கள)

மனத்தில்வே றெண்ணங் கொண்டு வரிசைபோ லநேகர் தாங்கிக்
கனத்ததோண் மெலியு மொற்றைக் கடியவா ரத்தை யின்னே
யுனக்களித் தனங்கொள் ளென்று னும்பர்கோன் வழுதி வாங்கித்
தனக்குரித் தான நிம்பத் தாமம்போற் கழுத்தி லிட்டான். (கஅ)

தாதவிழ் தார்போல் வேய்ந்த தடம்புய வலிகண் டிந்த்ரன்
மேதகு மனமுங் கொள்ளா விம்மித மெய்தித் தென்றற்
பூதலத் தரசே யாரம் பொறுத்தபாண் டியனென் றன்னை
மேதினி யின்று தொட்டு விளம்புக வென்று சொன்னான். (கக)

இன்னணந் தேவர் கோமா னிசைக்கயா வனும்வா ளாமே
தென்னவன் மதுரை சேர்ந்தான் சிலபகல் கழிந்தபின்ன

---

(கசு) ஓச்சும் - செலுத்தும். அடல் - வலி. கிம்புரிமகுடம்,— (இரு பெயரொட்டு) சரியணை - சரியாசனம் (ஆக). வெம்பி - வாடி. புழுங்கி- வருந்தி.

(கள) யாது - எது. பாகசாதனு - இந்திரனே.

(கஅ) கடிய - கொடிய. ஆரத்தை - முத்துமாலையை. இன்னே -இப் பொழுதே. வழுதி - பாண்டியன். நிம்பத்தாமம் - வேப்பமாலை.

(கக) மேதகு - மேன்மைதங்கிய. விம்மிதம் - ஆச்சரியம். தென்ற ற்பூதலம் - தென்றற்காற்றுவீசும் பாண்டியநாடு. மேதினி - பூமி.

(உo) யாவனும் - ஒன்றும். வாளாமே-பேசாமல். (தாற்பரியம்) அவிர்- விளங்கும்.

ரன்னதிதென் பொதிகை வேட்டை யாடுவா னெண்ணிச் சென்றான்
பின்னவிர் மேக நான்கும் வெற்பிடை மேயக் கண்டான். (உ௦)

அடுத்தபுட் கலாவ ருத்த மாதியா மேக நான்குந்
தொடுத்துடன் பிடித்து நெஞ்சந் துணுக்குறத் தளைகால் யாத்துப்
படுத்தவா ரணம்போற் கூடற் பதிகொண்டு சென்று தென்னன்
விடுச்சிறை வைத்தா னீது மகபதிக் கொற்றர் சொன்னார். (உக)

சொல்லிய கொடுஞ்சொற் காற்றுத் துருத்தியாஞ் செவிவா யோடி
யொல்லையிற் கோபச் செந்தீ யுருத்தெழக் கனன்று சொல்வான்
றொல்லைநீர் வறப்ப வென்று ஞாலத்தைச் சுமந்தான் காரை
வல்லதாச் சிறையிட் டானோர் மனிதற்கிவ் வலியா தென்னா. (உஉ)

வீங்கிய மான மூள விண்ணவர் கோமா னான்கு
பாங்குறு படையுஞ் சூழப் பஞ்சவன் மதுரை புக்கா
னீங்கருஞ் செழியன் சேனை நிலையுமவ் வண்ணஞ் சூழத்
தாங்கிரு படையு மொன்றிச் சமர்புரிந் திளைக்க லுற்றார். (உ௩)

இற்றவெம் படைக ளன்றி யிருந்தவெம் படைகள் சூழ
மற்றிரு வரும்வில் வாங்கி வடிக்கணை விடுத்துந் தாங்கள்
கற்றவெம் படைக ளியாவுங் கணக்கிலா தோச்சி யோச்சி
யுற்றபோர் விளைத்து நின்றா ரொருவருக் கொருவர் தாழார். (உ௪)

அன்னது தெரிந்து தேவர்க் கரசன்வச் சிரம்விட் டார்ப்பத்
தென்னவன் வளைகைக் கொண்டு திரித்துவீ சுதலு மன்னோன்

---

(உக) தொடுத்து - பற்றி. துணுக்குற - நடுங்க. தளைகால்யாத்து - காலில்விலங்கிட்டு. படுத்த,— வாரணம் - யானை. ஒற்றர் - தூதர்.

(உஉ) காற்று - காற்றாக. ஒல்லையில் - விரைவில். உருத்து - கோபித்து. கனன்று - (உடல்) வெதும்பி. வறப்ப - வற்ற. என்றான் - என்று சொன்னவனாகி. வல்லதா - வல்லமையுடையதாக. என்னா - என்று.

(உ௩) நான்குபடை - ரத கச துரக பதாதிகள். பஞ்சவன் - பாண்டியன். ஒன்றி - சேர்ந்து.

(உ௪) ஓச்சி - எறிந்து.

(உ௫) வச்சிரம் - வச்சிராயுதம். வளை - சக்கரம். திரித்து - சுழற்றி. குலிசம் - வச்சிராயுதம். சாய்த்து - கெடுத்து. மகுடபங்கம் - கிரீடமிழத்தல். புரிந்தது - செய்தது.

றன்னது குலிசந் தன்னைச் சாய்த்தருத் தழல்போற் சீறிப்
பொன்னவிர் மகுட பங்கம் புரிந்தது தேவர் கோனை. (உரு)

மணிமுடி சிதைந்து போன வாசவன் வழுதி நம்மூர்க்
கணிபெற மழைபெய் விப்பே மெம்முகில் விடுத்தி யென்றப்
பணிவரைத் தோலை போக்கப் பாசா மனத்தி லோர்ந்து
துணிவுடன் வழுதி காரைச் சூழ்தளை நீக்கா னகம். (உசு)

அந்தவா சவற்கு நட்டோ னமெனு வொருவே ளாளன்
வந்தியாம் பிணையென் றேற்று மஞ்சுசூழ் சிறைமீட் டான்மே
லிந்திரன் மகுட பங்கத் தியலுமா பதிபாற் செப்பிச்
சிந்தைநோய் தணித்த வாறு முனிவர்க்குத் தெரிப்பான் சூதன். ()

12 - இந்திரன் மகுடபங்கம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். சகரு.

## பதின்மூன்றாவது:— இந்திரன் வரம்பெற்ற சருக்கம்.

வாசவ னந்தி பாதம் வணங்கியான் வரவீ சற்கு
நேசமா யுணர்த்து கென்றே நிகழ்த்தினு னதனை நந்தி
தேசுறு மரன்பா லெய்திச் செப்பலுந் தருதி யென்றான்
மாசிலா தவனுங் குற்ற வலாரியைச் சிவன்மு னுய்த்தான். (க)

வந்துநா ரியுமே தானும் வடிவொன்று யிருந்த நீல
கந்தரன் றனைத்தன் கண்ணுற் களிப்புறக் கண்டு மேலாந்

(உக) அணி - அழகு. விடுத்தி - விடுப்பாய். பணி - வாசகம். பாசு
ரம் - ஓலையை.

(உஎ) நட்டோன் - சிநேகன். பிணை,— ஏற்று - ஏற்றுகொண்டு.
மஞ்சு - மேகம். தெரிப்பான் - தெளிவிப்பான்.

(க) யான்வரவு - என்வருதல். உணர்த்துக - சொல்லுவாய். தேசு -
அழகு. தருதி - அழைத்துவருவாய். வலாரியை - இந்திரனை. உய்த்தான் -
செலுத்தினன்.

(உ) நாரி - பார்வதி. கந்தரன் - கண்டத்தையுடையவன். பொறி -
இந்திரியம்.

சிந்தைவாக் குடன்மெய் மூன்று பொறிகளு மொருங்கு சேரச்
சந்தமார் பதங்க டம்மிற் றாழ்ந்தெழுந் தினைய சொல்வான். (௨)

சங்கரா போற்றி பிள்ளைச் சசிபுனை மாலா போற்றி
கங்கையார் சடையாய் போற்றி காய்மழுப் படையாய் போற்றி
துங்கமால் விடையாய் போற்றி தோகைபங் குடையாய் போற்றி
யெங்குமா கியமெய்ச் சோதி யிறையவா போற்றி போற்றி. (௩)

ஆதிநள் ளீறி லாத வருட்பெருங் குணத்தாய் போற்றி
பாதிமெய்ப் பச்சை சேர்ந்த பவளமா மலையே போற்றி
தாதிடை யுதிர்பொற் கொன்றைத் தாமனே போற்றி கஞ்ச
வேதியன் மாலுக் கெட்டா விண்ணவா போற்றி போற்றி. (௪)

கரும்பனைக் காய்ந்த நெற்றிக் கண்ணனே போற்றி யன்பர்
விரும்பிய தனிக்கு நேம விரதனே போற்றி முல்லை
யரும்பினை நகையார் செங்கை யணிவளை கவர்ந்து பின்னுந்
தரும்பெரி யவனே போற்றி சயம்புவே போற்றி போற்றி. (௫)

என்றுநற் றுதிகள் செய்தே யிருகையுஞ் சென்னி மேலாய்
நின்றவன் றன்னை நோக்கி நீயக மகிழ்ந்தீண் டென்பா
லுன்றனி வரவே தென்ன வுரைத்தது மாறன் போரிற்
சென்றுதன் மகுட மிற்ற திறனெலாந் தெரியச் சொல்வான். (௬)

வேறு.

சேரல னெடும்பணை சிறந்தபுன லூரன்
வீரமிகு மாறனிவர் மெய்ம்மகிழ விருப்பின்

---

(௩) பிள்ளைச்சசி - இளஞ்சந்திரன். மாலா - ஆசையுடையவனே.

(௪) நள் - நடு. ஈறு - கடை. இடை - நடுவில். தாமனே - மாலையையுடையவனே.

(௫) நேமம் - நியதி. இனை - வருந்துகின்ற. நகையார் - பல்லையுடையபெண்கள். வளை - வளையல். கவர்ந்து - கிரகித்து. [வளைகவர்ந்த சரிதம். திருவிளையாடற்புராணம் வளையல்விற்ற படலத்துட்காண்க].

(௬) ஈண்டு - இவ்விடத்து. தனிவரவு - தனியேவருதல். மாறன் - பாண்டியன். இற்ற - பங்கமடைந்த.

(௭) சேரலன் - சேரன். பணை - வயல். புனலூரன் - நீர்நாட்டையுடைய சோழன். சாரம் - இனிமை.

சாரமுட னென்னருகு சாரவவர் தங்கட்
கேரணியு மாசன மிருந்திட வளித்தேன். (எ)

ஆங்கிரு வருந்தவி சடைந்தனர்க ணிம்பத்
தேங்கிளரு மாலைபுனை தென்னவன் விரைந்தென்
பாங்குற விருக்கவது பார்த்தெதி ரிருக்கும்
வீங்குபுய மன்னவர் விரும்பிய தளித்தேன். (அ)

அப்பொழுது தென்னவ னகன்றுபுய லைத்தன்
கைப்பட வடர்த்துமிகு காவலி லமைத்தே
யொப்பில்வளை யாலென்மகு டத்தையு முடைத்தா
னப்பரி செலாமுன தருட்டிறமை யன்றோ. (கூ)

வன்பகை புகுந்திடையு மையையொரு மேழி
யன்பிணை கொடுத்துவிடு வித்தவத னாலே
தென்பெருகு பாண்டிவள நாட்டிடை சிறக்க
வென்பெயர்கொ டோர்நகரி தோன்றவரு ளீவாய். (கo)

அத்தலம் வியப்புறவெ னம்மையொடு நீயு
மித்தகைய கோலமொ டெழுந்தருளி யாங்கே
கத்துபுய லின்சிறை களைந்துவிடு வித்த
வுத்தமர்க ளொடொரு முவப்புடன் விளங்க. (கக)

நின்கிருபை செய்கவென நித்தனு மகிழ்ந்தே
நன்கமலை சேர்ந்திலகு பாண்டிவள நாட்டிற்

---

(அ) நிம்பம் - வேம்பு. தேம் - வாசனை. கிளரும் - விளங்கும். பாங்கு - பக்கம்.

(கூ) புயலை - (புட்கலாவர்த்தமுதலிய) மேகங்களை. அடர்த்து - பொருது. வளை - சக்கரம். பரிசு - தன்மை.

(கo) பகை - பகைவனிடத்தில். இடையும் - வருந்தும். மையை - மேகங்களை. மேழியன் - கலப்பைத்தொழிலுடைய வேளாளன். தென் - அழகு. கொடு - கொண்டு. நகரி - நகரம்.

(கக) வியப்பு - மகிழ்ச்சி. கோலம் - தோற்றம். கத்து - முழங்குகின்ற. உத்தமர் - (வேளாளராகிய) நன்மையுடையவர்.

(கஉ) கமலை - இலக்குமி. பொன்கிரி - மகாமேருமலை. தென்கிரி - பொதியமலை.

பொன்கிரி தனக்குநிக ராகியெழில் பூண்டே
தென்கிரி சிறக்குமத னுத்தர திசைக்கண். (கஉ)

தாமரையி லிந்திரை தழைக்கும்வயல் சூழுஞ்
சேமநதி யின்கரை சிறந்தவட பாலாய்ப்
பூமருவு பொன்னகரி போனகரி யொன்றுன்
னாமமொடு தோன்றுமதி னாமினி திருப்போம். (கங)

வேறு.

அங்கோதரு வேளாளரென் னருள்பெற்றக மகிழ்வாய்ப்
பொங்கோதநற் கலையேபுனை புவியுள்ளள வுஞ்சீர்
மங்காதெழி லுடனேமிக வாழ்வாரவ ணீபோய்ச்
செங்காவியி னறைசேருநிட் சேபப்புன றோய்ந்தே. (க௪)

அன்புற்றணி வடவீதியி லமர்குஞ்சர முகனை
முன்பிற்றுதி செய்தெம்மையு முன்னித்தொழு தேயுன்
றன்பற்றுவின் முடிபெற்றுயர் தொன்மைப்படி யான்மே
வின்புற்றுறை வாயென்னவு மிசைத்தான்மக பதிக்கே. (கரு)

விடைகொண்டொரு துகிர்மாதிர மீதேபடர் பச்சைக்
கொடிதுன்றுதல் போலங்குறை கோமானடி பரவிக்
கடிதங்கிர சதவெற்பிணை காட்டித்தமிழ் முனிவன்
குடிகொண்டுயர் பொதியத்திறை கூடற்பதி சேர்ந்தான். (கசு)

வைகைப்புன றோய்ந்தேயவண் வளர்சொக்கரை மாதோ
டுய்கைக்கருள் செய்வாயென வோதித்தொழு தேகிக்

(கங) இந்திரை - இலக்குமி. சேமநதி - (இந்திரன் மகுடம்) புதையல்கொண்டிருக்கும் ஆறு. பூ-அழகு. போல் நகரி-போலநகரம். உன்நாமம்-உன்பெயர், வாசவன்.

(க௪) ஓதரு - சொல்லுதற்கரிய. ஓதம் - கடலாகிய. கலை - சேலை. நறை - தேன். நிட்சேபப்புனல் - நிட்சேபநதியினீர்.

(கரு) வில் - ஒளியுள்ள. முடி - மகுடம். மகபதிக்கு - இந்திரனுக்கு.

(கசு) துகிர்மாதிரம் - பவளமலை. துன்றுதல் - நெருங்குதல். கடி - காவல். இரசதவெற்பு - வெள்ளிமலைக்கு. இணை - ஒப்பு. குடிகொண்டு - குடியிருக்கப்பெற்று. காட்டியுயரெனக்கூட்டுக. இறை - பாண்டியன்.

(கஎ) உய்கைக்கு - பிழைத்தற்கு. குலிசம் - வச்சிராயுதம். செய்கட்கு - வயல்களுக்கு. எழுபுனல் - மேல்வருநீர்.

கைபற்றிய குலிசத்திறை கண்டான்வளநகரைச்
செய்கட்கெழு புனல்பாயுநிட் சேபக்கரை யருகே. (கஎ)

மறைவாணர்க ணெறியாலுயர் வளவீதிக ளொருபா
லிறையோர்செறி வொடுமேவிய வெழில்வீதிக ளொருபான்
முறைதோன்றுவை சியர்தந்தொழின் முயல்வீதிக ளொருபா
னிறைவாழ்வுறு வேளாளர்க ணெடுவீதிக ளொருபால். (கஅ)

மயனைப்பொரு வியகம்மியர் வாழ்வீதிக ளொருபா
னயமுற்றிட வெழுதோவியர் நண்ணுந்தெரு வொருபாற்
செயமுற்றபல் குடிபண்கொடு செறிவீதிக ளொருபாற்
குயவெற்பொடு விலைமாதர்கள் குலவுந்தெரு வொருபால். (கக)

வேறு.

ஆவ ணத்தின் சிறப்பையோ ராயிர
நாவி னானு நவில வரியவாப்
பூவிற் பாதலத் திற்பொன் னுலகிலித்
தேவை மாநகர் சீர்பெற வோங்குமால். (உ0)

இந்த மாநகர் நாப்ப ணிலங்கிய
சிந்த கத்தரு நீழலிற் செக்கர்வா
னிந்த்ர சாபத் திணங்கிய கோலமாய்
வந்த முக்கண் வரதனை யுங்கண்டான். (உக)

இந்து சூடு மிறையவன் முன்னநற்
கந்த மார்புட் கரிணியு மாதியாய்

---

(கஅ) இறையோர் - க்ஷத்திரியர். செறிவு - நெருக்கம்.

(கக) பொருவிய - ஒத்த. கம்மியர் - தச்சர். ஓவியர் - சித்திரமெழுதுவோர். பண் - இசையுடையயாழ். குயவெற்பு - முலையாகியமலை.

(உ0) ஆவணம் - கடைவீதி. ஆயிரநாவினான் - ஆதிசேடன். அரியவா - அருமையுடையனவாக. பூவில் - பூமியில். தேவைமாநகர் - வாசவனல்லூர்.

(உக) நாப்பண் - நடுவிடத்தில். சிந்தகத்தரு - புளியமரம். செக்கர்வான் - செவ்வானம். இந்த்ரசாபம் - இந்திரதநுசு. இணங்கிய - பொருந்திய. கோலமாய் - அழகாக.

(உஉ) இந்து - சந்திரனை. கந்தம் - வாசனை. புட்கரிணி - ஒரு தீர்த்

வந்து செண்பக மாநிழல் வைகிய
தந்தி யானனன் றாள்களுங் கண்டனன். (உஉ)

மாத வத்துக் குறுமுனி வாய்மையாற்
பூத லத்திற் புகுநதி மாந்தர்செய்
பாத கத்தைப் படிந்து விலக்கநீள்
காதல் வைக்குநிட் சேபமுங் கண்டனன். (உ௩)

அங்கு பூம்புன லாடி மடந்தையர்
கொங்கை மீதணி குங்கும முஞ்சந்துஞ்
செங்கண் மையுங் கரைத்தெழில் சேரலாற்
கங்கை சோணை யமுனையைக் காட்டுமால். (உ௪)

அங்க மாசையுற் றாடிடு மெண்ணிலா
ரங்க மாசை கடுக்குமன் னார்நகை
சங்க மீனுந் தரள மெழில்வரால்
சங்க மீன்விழி தந்தரங் காட்டுமால். (உ௫)

கந்த ரத்தவை வேலெனுங் கண்ணியர்
கந்த ரத்தரங் கம்புகள் காட்டின
மந்த ரத்தனங் காட்டின மஞ்சுசு
மந்த ரத்த வனச முகைகளே. (உ௬)

---

தம். ஆதியாய் - முதற்பொருளாகி. செண்பகம்-ஒருமரம். தந்தியானனன்- யானைமுகவிநாயகக்கடவுள்.

(உ௩). நிட்சேபநதியெனக்கூட்டுக.

(உ௪) சந்தும் - சந்தனமும். கங்கை - வெண்ணிறமுள்ள கங்காநதி. சோணை - சிவப்புநிறமுள்ள சோணைநதி. யமுனை - கறுப்புநிறமுள்ள யமுனாநதி.

(உ௫) அம் கம் - அழகியநீர். அங்கம் - சரீரம். மாசை -பொன். கடுக்கும் - போலும். நகை - பற்கள். சங்கம் ஈனும் - சங்குகளாற்பெறப்படும். தரளம் - முத்துக்கள். சங்கம் - கணைக்கால். விழி - விழிகளுடைய. தரம் - உவமை.

(உ௬). கந்தர் - முருகக்கடவுள். அத்த - கையிலுள்ள. வை - கூரிய. கந்தர - கழுத்தினது. தரம் - உவமானத்தை. கம்புகள் - சங்குகள். மந்தரத்தனம் - மந்தரமலைபோன்றமுலைகளை. மஞ்சு - அழகு. சுமந்த - தாங்கிய. ரத்த - சிவந்த. வனசமுகைகள் - தாமரையரும்புகள்.

குவளை யோசை வலத்தழ கோகைதங்
குவளை யோசைசெய் மாதர்கண் கூந்தன்மோ
கவளை யாருங் கரத்தரி பாங்குதங்
கவளை யாரு மவர்க்கிணை காட்டுவார். (உஎ)

ஈசன் ருனன் றியம்புவ ரப்படி
தேசு சூழு நகருஞ் சிவனிடம்
பாச மாகப் பரைநண்ணும் வண்ணமும்
பேச ருந்தென் னதியின் பெருக்கமும். (உஅ)

கண்டு கண்டு மிகவுங் களிப்புளங்
கொண்டு வாசக் குடிஞையு ளெய்தியே
யண்டர் நாயகன் பேர்பகர்ந் தாடினன்
பண்டு வெற்பின் சிறையரி பான்மையான். (உகூ)

புனலி லாழ்ந்தெழும் போதினி லொண்மணிக்
கனக மாமுடி கையினி லெய்தலாற்
பனக வாரப் பரனருள் பாடியுள்
ளினன்முன் கஞ்ச மெனமலர்ந் தானரோ. (௩0)

திரையின் மாமணி சேருநிட் சேபநீள்
கரையு றக்கக னத்தச ரீரியோ
டுரையிம் மோலி யுனதெனக் கூறவே
விரைகொள் பூமழை விண்ணவர் பெய்தனர். (௩க)

---

(உஎ) குவளையோ - நீலோற்பலமோ. சைவலத்து - பாசிக்கொத்தின். கைதங்கு - கையினிடத்துத்தங்கிய. வளை - வளையல். மோகம் -விரகமுடைய. வளை - சங்கு. பாங்கு - பக்கத்தில். தங்கு அவளை - தங்குகின்றஅந்த இலக்குமியை. அவர்க்கு - அம்மாதருக்கு.

(உஅ) வரப்படி - வரத்தின்படி. பாசம் - அன்பு. தென் - அழகிய.

(உகூ) குடிஞை - நிட்சேபநதி.

(௩0) முடி - (பாண்டியனாற் பங்கம்பெற்ற) கிரீடம். பனகவாரம் - சர்ப்பமாகியமாலை. இனன் - சூரியன். கஞ்சம் - தாமரை. மலர்ந்தான் -மகிழ்ச்சியுற்றான்.

(௩க) திரையின் - அலையில். ககனத்து - ஆகாயத்தில். மோலி - மகுடம். விரை - வாசனை.

மந்த ரத்துணைத் தோளுடை மன்னவன்
சிந்து மோலி திரும்ப வெனக்கெனத்
தந்த தென்னுளந் தித்திப்புச் சாரலா
லிந்த வாற்றினை யேதென வெண்ணினான். (கூஉ)

தம்பல் கண்ணிற் றரளங்க டோன்றலா
லிம்பர் நல்லுரு விற்றது காணலாற்
பம்பல் வாடும் பரிசில்கண் டோங்கலாற்
கம்பு நேர்களந் தார்மொழி காட்டலால். (கூகூ)

கருப்ப மாநதி யென்னவிக் காசினி
விருப்ப மாக விளம்புகென் றோதியே
சுரும்பின் மாலையன் சூடிகை சென்னியிற்
பொருப்பின் மேற்கதிர் பூத்தெனச் சூடினான். (கூச)

அந்த ரத்தி லறைபடு துந்துபி
சிந்து விற்கம் பலைமிகச் செய்யவே
வந்து செண்பகத் தைங்கை வரதற்கு
முந்தப் பூசை முறையி னியற்றினான். (கூரு)

---

(கூஉ) மந்தரத்துணை - மந்தரமலைபோலும் இரண்டு. திரும்ப - மறுபடி. ஏது - யாது.

(கூகூ) தம் - தன்னுடைய. பல்கண்ணில் - பலஇடத்தில், (பலகணுக்களில்). தரளங்கள் - முத்துக்கள். இம்பர் - இவ்விடத்து. நல் - நல்ல. உருவிற்றது - வடிவினையுடையதாகிய அது, (வடிவம் உடைபடுவது). பம்பல் வாடும் பரிசில் - (பயிர்கள்) வாட்டமடையுந்தன்மை, (நெருங்கிய இருளில்) (காமுகர்கள்) (வாட்டமடையுந்தன்மை). கண்டு - பார்த்து. ஓங்கலால் - உயர்ச்சியடைதலால். கம்பு - சங்கு. மொழி-சொல்லைக்காட்டலால், (சுவையாற்) காண்பித்தலால். தம் என்பது எதுகைநோக்கித் தன்னென்னலாயிற்று.

(கூச) கருப்பநதி - கரும்பாறு. விளம்புக - சொல்லுக. சுரும்பில் - வண்டுகளில்லாத. மாலையன் -கற்பகப்பூமாலையணிந்த இந்திரன். சூடிகை- மகுடம். கதிர்பூத்தென - சூரியனுதித்தாற்போல. கரும்பென்பது கருப்பு எனவிகாரப்பட்டு அம் சாரியைபெற்றது.

(கூரு) அறைபடும் - முழங்கும். சிந்துவில் -கடல்போல. செண்பகம்- ஒருமரம்.

ஆங்கு நின்றெவ ராயினுஞ் செண்பகப்
பாங்கு வைகும் பரைசுத ருகிய
தூங்கன் மாமுகன் றுடொழு தாயவ
ரோங்கு செல்வம் பெறுவர்க ளுண்மையே. (ருசு)

என்று கூறி யிறையவர் கோயிலுட்
சென்று சென்னியிற் செஞ்சடை சூழியந்
துன்று கையிற் றொடிபணிக் கங்கண
மொன்றி யாக மிரண்டுமொன் றுகவே. (ருஎ)

ஒளிகொள் வெண்ணகை நித்தில மொக்கலை
வெளிநி கர்த்திடு மின்னொரு பாதியாய்ப்
புளியி னீமுறப் பொருந்துகங் காளனை
யளிநி ரம்ப விருக்குமுக் கண்ணனை. (ருஅ)

கம்பு பாணியி லேந்தரி காண்கிலா
நம்ப ரஞ்சுடர் நாதனைக் காணவே
யம்ப கங்களொ ராயிர மேயலா
லிம்ப ரெண்ணில் விழியெனக் கில்லையே. (ருகூ)

இகழ்ந்த தக்க னியாகந் தொலைந்துமேற்
றிகழ்ந்த சோதியைச் சிந்தைசொன் மெய்களாற்
புகழ்ந்து ரோமம் பொடிப்பநின் றேத்தியே
மகிழ்ந்து பாத மலர்களிற் றாழ்ந்தனன். (சா)

---

(ருசு) பாங்கு - பக்கம். தூங்கல் - யானை.

(ருஎ) சூழியம் - உச்சிக்கொண்டை. தொடி - வளையல். பணி - பாம்பு. ஒன்றி - பொருந்தப்பட்டு. ஆகம் - திருமேனி.

(ருஅ) நகை - பல். நித்திலம் - முத்து. ஒக்கலை - இடை. வெளி - ஆகாயம். மின் - உமாதேவி. கங்காளனை - முழுவெலும்பணிந்தவனை. அளி - கருணை.

(ருகூ) கம்பு - சங்கு. பாணி - கை. அம்பகம் - கண். இம்பர் - இவ்விடத்தில்.

(சா) திகழ்ந்த - விளங்கிய.

வேறு.

பரையொரு பாகனைப் பணியுங் காலையும்
விரைகமழ் கொன்றையான் மெய்தன் கண்களிற்
புரையறத் தெரியலாற் புளக மோங்கவே
வரைசிற கரிந்தவன் மகிழ்ந்து கூறுவான். (சுக)

ஆயிரம் விழியெனக் கமைந்த தாதலின்
மாயிரு ஞாலத்தின் மல்கு பொன்னுல
காயவூர்த் தேவையு மதிலித் தேவையுந்
தூயமா வளங்களுந் துலங்கக் கண்டனன். (சுஉ)

என்றெழுந் தாடினு னிறையைக் காண்டொறுந்
துன்றிய பெருங்களி துலங்கிப் பாண்டியன்
வன்றிறல் புரிந்துசெய் மகிமை யீதென
நின்றவன் றுதிபல நிகழ்த்தி னனரோ. (சுங)

நன்றிசெ யுத்தம நாரி யர்த்தராய்
வென்றிசேர் தேவையில் விளங்கு மீசனே
பன்றியு மெகினமும் பரந்து தேடிட
நின்றமெய்ச் சோதியே நீல கண்டனே. (சுச)

உருவமிச் சகந்தனி லுள்ள யாவுமா
யருவமே வெளியொளி யாகி நிற்பதாற்
பெருகிய மறைகளாற் பேணிப் பேசுதற்
கரியமெய்ப் பொருளதா யமர்ந்த தாணுவே. (சரு)

---

(சுக) புரை - குற்றம். தெரியல் - காணல்.

(சுஉ) மாயிரு - மிகப்பெரிய. ஞாலத்தில் - பூமியில். மல்கு - நிறைந்த. ஊர்த்தேவை - ஊராகியதேவை. அதில் - அதைப்பார்க்கினும். (உயர்ந்த) இத்தேவையும் - இந்தவாசவனூராகிய தேவையும். கண்டனன் - பார்த்தேன்.

(சுங) வன்திறல் - மிக்கவலிமை. நின்றவன் - நின்றவனாகி. நிகழ்த்தல் - சொல்லுதல்.

(சுச) அர்த்தர் - பாதியுடையவர். எகினம் - பிரமாவாகிய அன்னம்.

(சரு) யாவும் - எல்லாச்சராசரங்களும். வெளி - ஆகாயம்.

ஈன்பெருங் கவலையை யிறுத்துச் சூடிகை
தென்பெறக் கொடுத்தரு டேவ தேவனே
யன்பொடு பூசைசெய் பாலற் காகவே
முன்பொரு காலனை முடித்த காலனே. (சசு)

கோவையிற் சிவப்புறு மிதழ்க்கொங் காநனம்
பூவையொத் திலங்கிய புவன நாயகி
தேவையிற் பொலிவுறச் சிவன்மெய் யொன்றிய
பாவையே யறத்தொழில் பயிலுஞ் செல்வியே. (சஎ)

ஆதிநள் ளீறிலா தகண்ட மாகிய
கோதின்மெய்ப் பொருளினைக் குறித்துப் பேசவே
போதினுன் முகத்தயன் புயன்மெய் யாரிவ
ரேதிகைப் பாரெனி லெவர்சொல் வார்களே. (சஅ)

என்றுநற் றுதிசொலி யிமய மென்றசீர்க்
குன்றுத வியபசுங் கொடிதங் கொண்சுடர்
துன்றுசெம் மணிவரைத் தோற்ற மென்னவே
நின்றதற் பரன்கழ லினைவொ டேகியே. (சகூ)

வானுல கடைந்தக மகிழ்வொ டிந்திரன்
பூநிறை கற்பக நிழலிற் போந்துசெங்
கோனிறை முறைமைகைக் கொண்டு வைகினன்
ரனவ ரானவர் தலைந டுங்கவே. (ரு0)

(சசு) இறுத்து - அழித்து. சூடிகை - மகுடம். தென் - அழகு. பாலற்கு - குழந்தையாகிய மார்க்கண்டருக்கு. காலனே - திருவடியுடையவனே.

(சஎ) கோவையின் - கோவைப்பழத்தைப் பார்க்கினும். இதழ் - அதரமும். கொங்கா - கொங்கையும். ஆநனம் - முகமும். பூவை - தாமரைமலரை. நாயகி - தேவியே. அறத்தொழில் - முப்பத்திரண்டு தருமச்செயல்.

(சஅ) நள் - நடு. ஈறு - கடை. அகண்டம் - கண்டிக்கப்படாமை. புயல் மெய்யார் - மேகம்போன்ற சரீரமுடைய விஷ்ணு. இவரே,—

(சகூ) செம்மணிவரை - மாணிக்கமலை. தோற்றம் - காட்சி.

(ரு0) போந்து - வந்து. முறைமை - நீதி. தானவர் - அசுரர்.

இந்திரன் வரத்தில்வந் திலங்கு தேவையிற்
சிந்தகத் தருவுருச் சேர்ந்து முன்னமே
வந்துதந் தியநெடு வச்சி ராங்கன்மைக்
கந்தர னென்றுரை கழறும் வாய்மைபோல். (ருக)

மரவுருக் கரந்துதொல் வடிவ மாகியே
பரனுமை யொன்றிவாழ் பதம்ப ணிந்துபோ
யுரமிகு கயிலையி லுற்றுத் தன்றொழில்
வரன்முறை புரிந்தர னிடத்தில் வைகினான். (ருஉ)

மகபதி வேண்டிய வரமும் பெற்றுத்தன்
னிகரறு மணிமுடி நிலைமை பெற்றது
மிகலற விளக்கினே னிரவி வன்மன்வா
னகமகிழ் பதம்பெறு மாற்றல் செப்புவாம். (ருங)

13 - இந்திரன் வரம்பெற்ற சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம் ருசஅ.

## பதினான்காவது:—
## இரவி வர்மன் பதம்பெற்ற சருக்கம்.

திருமருவுங் குல்சைவளம் பதிபுரக்குஞ் சீர்வேந்த
னுருமருவு காமனென வுரைக்கவுறும் பேரெழிலான்
றருமநெறி வழுவாதான் சகலகலை யுந்தெரிந்தோன்
மருமருவி வரைகளென வளர்ந்தோங்கு மணிப்புயத்தான். (க)

பரிதிகுலத் தவன்வெகுண்ட பற்றார்வெந் நிடச்சீறிப்
பொருதிறலான் கருணைபொழி புராரிதனை நினைந்துபதந்

---

(ருக) சிந்தகத்தருவுரு - புளியமரவடிவம். உரைகழறும் -சொல்லும்.

(ருஉ) கரந்து - மறைத்து. வரன்முறை - கிரமமாக.

(ருங) மகபதி - இந்திரன். நிலைமை - நிலைத்திருத்தல். இகல்-பகை. இரவிவன்மன் - சேரர்களிலோரரசன். பதம் - பதவி. ஆற்றல் - வலிமை.

(க) குல்சை - சேரதேசத்திலொரு நகரம். மரு - வாசனை.

(உ) பரிதி - சூரியன். பற்றார் - பகைவர். வெந்நிட - புறங்காட்ட. திறலான் - வலிமையுடையான். தருதி - கொடுத்தருளுவாய். நாலுவான் - நாவுடையவன்.

தருதியென வேதுதிக்குந் தாலுவான் சிவனடியார்
வருதிசைபார்த் தெதிர்சென்று வணங்குமிகு பத்தியினான். (உ)

ஆறிலொன்று குடிகளிறை தரவாங்கி யரசாள்வோ
னீறுவந்து சேரினுந்தா னியம்புமொழி யதுதப்பி
வேறுமொழி பகரான்பார் வேல்வேந்தர் முடிமாலை
நாறுகழ லானெளியோர் நவையகற்று மன்புடையான். (௩)

வாணியருள் பெற்றுயர்ந்த பாவலர்க்கும் வாரிபுனை
நீணிலத்தின் மறையவர்க்கு நிதிமாரி சொரிகரத்தான்
முணிழற்கீழ்ச் சகம்புரக்கு முமையவள்செய் தருமங்கள்
பேணிரவி வருமனெனப் பேர்தாங்கு மன்னவனே. (௪)

இத்தகைய மன்செங்கோல் வளைவின்றி யியற்றுநாட்
டத்தையிளம் பார்ப்பினுக்குப் பருந்திரைகள் கொணர்ந்துதருஞ்
சித்திரகா யமுமானுஞ் சேர்ந்தொருபா லினில்வாழு
மத்திறமே கடைமணிநா வசையாம லரசாண்டான். (௫)

அன்னவன்றன் றேவிவயிற் றுதித்தவரிக் குருளையொப்பாய்
மன்னுகுல சேகரன்முன் வளர்ந்தோங்கி யிளவரசே

(௩) இறை - வரிப்பொருள். ஈறு - நாசம். நாறு - மணக்கின்ற. நவை - குற்றம்.

(௪) வாணி - சரசுவதி. வாரி - கடல். செய்தருமங்கள் - செய்தமுப்பத்திரண்டு தருமங்கள்.

(௫) வளைவு - கோணுதல், நீதிதவறுதல். தத்தை - கிளிகளின்: பார்ப்பினுக்கு - குஞ்சுகளுக்கு. இரை - உணவுப்பொருள். சித்திரகாயம் - புலி. ஆன் - பசு. பால் - பக்கம். அத்திறமே - அந்தமுறையே. கடைமணிநா - தலைவாயிற்கட்டிய மணியின் நாக்கு. அசையாமல்,— அஃதாவது:- யாராவது இடையூறுற்றால் அது தீர்க்கும்பொருட்டுவந்து அரசன் வாயிற் கட்டிய மணியையசைத்தால் அம்மணியோசையாலரசனறிந்து விசாரித்து அவ்விடையூற்றை நீக்குவது பண்டைவழக்கு; ஆதலால் இவனிடையூறுவாராமற் காப்பதனால் மணியசைத்தற்கிடமில்லை யென்பது.

(௬) அரிக்குருளை - சிங்கக்குட்டி. சூழ்ச்சி - ஆராய்ச்சி. அமைச்சு - மந்திரி. சாற்றும் - சொல்வான்.

யென்னுமெழிற் பருவமிவ னெய்துதலு மவ்வரசன்
றன்னுளத்தி லொருசூழ்ச்சி யெண்ணியமைச் சுடன்சாற்றும். (சு)

வேறு.

தனையனுக் கரசை யீந்து தவஞ்செய நினைப்ப தற்குக்
கனைகட லுடுத்த பாரிற் காசியே முதலாப் பண்டை
வினையறுந் தலத்துக் கெல்லா மேலதாந் தலமி யாதோ
நினைவொடு பகர்தி யென்ன நிருபனுக் கமைச்சன் சொல்வான். (எ)

காசியம் பலந்தென் சோணை காளத்தி முதுகுன் றாரூர்
பேசருங் காஞ்சி யானைக் காச்சிரா மலையாம் பேரூ
ராசறு கராவாய்ப் பிள்ளை யழைத்தபுக் கொளிசெங் கோடு
மாசறு கழுக்குன் றீசன் மன்னிடை மருதூ ரோடு. (அ)

பாண்டிநாட் டினிற்றென் கூடல் களாவனஞ் சேறை பாங்கே
நீண்டமர் வனமாம் புன்னை வனநெல்லை யிலங்குந் தேவை
பூண்டிக முமைகோன் வைகும் புதியமா நகர்குற் றால
மீண்டிநம் பரன்வாழ் கின்ற தின்னமுந் தலமுண் டாமால். (கூ)

இப்பெருந் தலங்க டம்மு ளீசனே டிறைவி கூடி
யொப்பிலா தேக மாகி யுவந்தினி திருக்கு மூதூர்
செப்பருந் திருச்செங் கோடு தேவையென் றிரண்டு மேலா
மப்பதி தனினு மிந்தத் தேவையே யதிக மாமால். (கo)

வாசவன் வருத்தந் தீர்த்து மகுடமீந் ததுமீ சற்குப்
பூசனை புரியும் வேத நம்பியான் பொரும றீரத்

---

(எ) தனையனுக்கு - புத்திரனாகிய குலசேகரனுக்கு. கனை - முழங்கு கின்ற.

(அ) அம்பலம் - சிதம்பரம். சோணை - அருணசலம். முதுகுன்று - பழமலை. சிராமலை - திரிசிரபுரம். கரா - முதலை. புக்கொளி - அவிநாசி.

(கூ) களாவனம் - கருவைநல்லூர். சேறை - சேற்றூர். புன்னைவனம் - சங்கரனூர்கோயில். நெல்லை - திருநெல்வேலி. தேவை - வாசவனல்லூர். புதிய மாநகர் - புதுவையென்னும் புளியங்குடி.

(கo) ஈசனேடிறைவிகூடி - அர்த்தநாரீச்சுரராகி.

(கக) பொருமல் - துன்பம். தேம்பி - வாடி.

தேசுறு மன்னோன் றேவி தேம்பிமாய்ந் தவனை மீட்டு
மாசற வழைத்து நல்கி யதுவுமித் தலமே யாமால். (கக)

எங்கெங்குஞ் சென்று தீராப் பழவினை யெல்லாங் காட்டந்
தங்குசெந் தழலி னீங்காத் திமிரமா கியது சான்றோன்
வெங்கிர ணத்தி னாலே விலகல்போ லுமையோர் பாங்கா
யங்கணன் வாழுந் தேவை நினைப்புழி யகலு மாதோ. (கஉ)

அத்தலைச் சிலைக ளெல்லா மரன்வடி வாகு மாந்தர்
சுத்தவிண் ணவர்நீ ரெல்லாந் துலங்கிய தீர்த்த மாம்பூங்
கொத்தலர் சோலை யாவுங் குளிர்சுர தருவே யாகு
மித்தக வாலே தேவை யெழிற்சிவ லோக மாமே. (கங)

ஆதலா லவண்போந் தீச னருச்சனை புரித னன்றாங்
கோதறு குணத்தா யென்று கூறவங் கதனைக் கேட்டு
வேதமு மறியா முக்கண் விண்ணவன் கமல பாதப்
போதினை மனத்தி லெண்ணிப் புறப்பட வொருப்பட் டானால். (கச)

வேறு.

மனைவி யோடுதிறன் மைந்த னோடுமணி வைய மேறினன் வரைப்புயன், கனைகு ரற்கய மநேக நீளிரத கந்து கத்திர ளநேகம் வான், முனைகொள் வீரர்க ளநேக ரிந்தமுறை மொய்த்து முன்பினு நடக்கவே, வினைய மெண்ணுந லமைச்சர் கைதொழுது வேந்து தன்னருகு போதவே. (கரு)

கொற்ற வன்புகழை யெந்த நாளுநனி கூற நீள்கலைகள் கோதறக், கற்ற பாவலர்கள் சிவிகை மீதொரு கணத்தின் வந்தருகு சார

---

(கஉ) காட்டம் - விறகு.

(கங) அத்தலை - அவ்விடத்தில். சிலை - கல். மாந்தர் - மனிதர்.

(கச) ஒருப்பட்டான் - ஒருமனப்பட்டான்.

(கரு) வையம் - தேர். கனைகுரல் - மிகுந்தமுழக்கம். கயம் - யானை. கந்துகத்திரள் - குதிரைக்கூட்டம். வினையம் - சூழ்ச்சி, ஆலோசனை. போத - வர.

(கசு) கொற்றவன் - அரசன். இலகு - பிரகாசிக்கின்ற. மிழற்ற - வாசிக்க. (தாற்பரியம்)

வே, குற்ற மற்றில ரம்பை யென்னவரு கோல மாதர்புடை சூழ வே, சுற்று மேழிசையின் வல்ல மாதர்பலர் சூழ்ந்தி யாழ்தனை மிழ ற்றவே. (கசு)

வார்க டற்கனொலி முகின்மு ழக்கெனவும் வாய்த்த பல்லிய மு ழங்கவே, தேர்க டத்தியெழி லூர்க டந்துமிகு சீர்கொ டேவைநகர் குறுகினான், கார்வ ழங்கலென நல்கும் வண்மைபுனை கையினானா கை யமரர்பே, ரூர்ம னென்னவளர் பேர்கொண் மன்மெய்மொழி யுடைய கோனிரவி வர்மனே. (கஎ)

கோகி லத்தொகுதி மாம ரத்தில்விசை கொண்டு செல்லமிகு கொம்புசேர், மோக நற்கனி யநேக மிக்குகண் முறிந்து சாயவவண் மோதவே, வாகு றக்கிரண வார மெங்கணும் வயங்கு செய்மருவு தேவையிற், பாக டுத்தமொழி பாக னாலய வலப்பு றத்தினதி பார் த்தனன். (கஅ)

அங்கு தண்புனல் படிந்து பூசுரர்க ளங்கை மீதினி லளிப்பிலாப் புங்க மீறுகன கங்கொ டுத்தடிகள் போற்றி நற்றுதிகள் பேசியே சிங்க வேறனைய கொற்ற வன்பெரிய தெருவ ணாந்திலகு வல்லவை மங்கைபங்கன்வளர்செண்பகத்தினிழல்வைகுமையனடிதொழுதனன்

கங்கை துன்றுசடை வேணி யன்சின கரத்தில் வந்தவ ணிலங் குபூஞ், சங்கு வாழ்ந்துலவு கும்ப புட்கரிணி தன்னி லுண்மகிழ்வொ

(கஎ) வார் - நீண்ட. முகில் - மேகம். குறுகினான் - அணுகினான். வழங்கல் - கொடுத்தல். வண்மை - கொடை. பேர் - பெரிய. ஊர் - தேவ லோகம். பேர் - கீர்த்தி. மன் - அரசன்.

(கஅ) தொகுதி - கூட்டம். கொம்பு - பூங்கொம்பு. மோகம் - ஆசை யுடைய. இக்கு - கரும்பு. கண் - கணுக்கள். அவண் - அவ்விடத்தில். வா கு உற - அழகுபொருந்த. கிரணஆரம் - ஒளியுடைய முத்துக்கள். வயங்கு- விளங்குகின்ற. செய் - வயல். பாகு - கருப்பம்பாகு.

(கக) புங்கம் மீறு - உயர்ச்சிமிகுந்த. சிங்கவேறு - ஆண்சிங்கம். பங் கனுகிய ஐயனெனக்கூட்டுக.

(உ0) துன்று - நெருங்கிய. சடைவேணி,— (இருபெயரொட்டு). சினகரத்தில் - ஆலயத்தில். கும்பபுட்கரிணி - ஒருதீர்த்தம். கொங்கு - வா சனை. ஐயன் - ஐயனார்.

டாடியே, கொங்கு தங்குகுழல் பங்கன் மேவிவளர் கோயி றன்னை வல மாகவே, செங்கை சென்னிமிசை தொழுதி போங்தொரு திசைக்க ணையனுழை சேர்ந்தனன். (உ௦)

செண்டு தன்கர மெடுத்து வாரண முயர்த்த கோனடன தெரிசனங், கண்ட வாரியன் மலர்ப்ப தங்தொழுது காரி பாலிலகு கன்னிமார், முண்ட கச்சரண் வணங்கி யொண்கிரண மொய்த்த பிஞ்சுமதி நதியுடன், வண்டு கிண்டிதழி கொண்ட வார்சடை மதாரி முன் மன்விரை வாகவே. (உக)

வந்து மும்முறை பணிந்து வில்வமொரு பத்து நூறிடப வாகனத், தெந்தை தேவையிறை பூச னைக்குரிய நம்பி யாலிய லருச்சனை, சந்த நாறுகழன் மீது செய்யவுரை சாற்றி மிக்கதுதி பேசினன், கொந்து லாவுகுளிர் சோலை வாய்மருவு கோல மாநகர் புரந்தகோன். (உஉ)

வேறு.

இந்தார் சடிலத் திறைவா சரண மிபகல் லுரியாய் சரணஞ் சரண, நொந்தார் குறைதீர்த் தருள்வாய் சரண நுதலம் பகனே சரணஞ் சரணம், வந்தார் பொழிலின் மலர்வாய் மதுவுண் வண்டா னதுகா மரமோ தமலர்ச், செந்தா மரைமீ தனம்வாழ் பழனத் தேவைப் பதியாய் சரணஞ் சரணம். (உங)

கங்கா தரனே சரணஞ் சரணங் கருணைக் கடலே சரணஞ் சரணம்,வெங்கார் விடமார் மிட றுய் சரணம் வேதா வறியா விமலா சரண,

---

(உக) செண்டு - செண்டாயுதம். வாரணம் - வெள்ளையானைக்கொடி. கண்டு - பார்த்து. அவ்வாரியன் - அந்த அரிகரபுத்திரர். காரி - ஐயனார். பால் - பக்கம். கன்னிமார் - பூரணை, புட்கலையென்னுமிருவர். சரண் - பதம். இதழி - கொன்றைமாலை. மதாரி - மன்மதன் பகைவனாகிய சிவபிரான். மன் - அரசன்.

(உஉ) நம்பி - அருச்சகர். கொத்து - பூங்கொத்து. புரந்த - காத்த.

(உங) இந்து - சந்திரன். சடிலம் - சடை. சரணம் - அடைக்கலம். இபம் - யானை. நுதலம்பகனே - நெற்றிக்கண்ணுடையவனே. வந்து - தென்றல். காமரம் - ஓர்பண். பழனம் - வயல்.

(உச) மிடறு - கண்டம். உய்த்து - செலுத்தி. வளர் - வளர்கின்ற.

மங்கா தறமோங் கவளர்த் ததனால் வையத் தூபிரியா வையுமுய்த் துவளர், செங்கா வியையவெல் விழிமா துமைசேர் தேவைப் பதியா ய் சரணஞ் சரணம். (உச)

மருவா ரிதழித் தொடையாய் சரண மழுவேந் தியகை வரதா சரணம், பொருகார் முகமா மலையாய் சரணம் புரதீ றெழுபுன் னகையாய் சரண, முருவே னமுமன் னமுமாய்ப் பதினா லுலகுங் கடிதே கியுமுன் றுவருந், திருவாழ் மருமன் விதியா லறியாத் தே வைப் பதியாய் சரணஞ் சரணம். (உரு)

வேறு.

என்றென்று துதித்தரி யேறனையான்
மின்றங்கிய வேணிய னாலயவாய்
நின்றம்பிகை யோடுறை நித்தனைநீண்
மன்றந்தனி லாடிய வானவனை. (உசு)

காமாரியை யுள்ள மிருங்களியாற்
பூமாரி பொழிந்து வணங்கிமலர்
தேமாரி சொரிந்திடு தேவைநகர்க்
கோமானமர் கோயின் மருங்கொருசார். (உஎ)

மன்னித்துயில் காலையில் வந்திமயக்
கன்னிக்கிறை நம்பி யெனக்கனவிற்
றுன்னிச்சக மீதுறு தொண்டர்களி
லென்னைப்பணி யன்பி னுனக்கிணையார். (உஅ)

தாயன்பு தழைத்த தெனப்புவியுன்
சேயன்பொடு சென்று புரக்கமனு

---

(உரு) கார்முகம் - வில். புரம் - திரிபுரம். ஏனம் - பன்றி.

(உசு) அரியேறு - ஆண்சிங்கம்.

(உஎ) காமாரி - மன்மதனைக்கொன்ற சிவபிரான். மலர் - பூக்கள். தேம் மாரி - தேன்மழை. ஒருசார் - ஒருபக்கம்.

(உஅ) மன்னி - பொருந்தி. நம்பி - அருச்சகர். துன்னி - நெருங்கி.

(உகூ) சேய்-புத்திரனாகிய குலசேகரன். புரக்க - காக்கும்பொருட்டு.

வாயுந்தோ லமைச்சுட னேகிடவே
நீயிங்குறை யென்ன நிகழ்த்தினனால். (௨௯)

அக்காலை யெழுந்தட லோடவனு
மிக்காளை யெரித்தரு ளெந்தைபதம்
புக்காசை பொருந்திய வேலிறைவன்
முக்கோவிறை நாம மொழிந்தனனே. (௩௦)

வேறு.

ஆங்கெழின் மகன்றனை யழைத்தரச னன்பாய்ப்
பாங்குற விருத்திமனு வின்மறை பகர்ந்தா
னோங்குபுகழ் பெற்றபெரி யோர்களை யொறுத்தே
நீங்குபல புரிகுதல் சிறப்பல விறைக்கே. (௩௧)

அலைகடல் வளைந்தபுவி யந்தணர்க ளாதி
தலைமைபெறு நான்குவரு ணத்தவர்க டம்மை
யலைமகள் புணர்ந்தபக வன்னுரு வெடுத்துத்
தொலைவிலர சாய்மகிழ்வு தோன்றிட வளிக்கும். (௩௨)

மன்முறை திறம்பின்மறை வாய்முறை திறம்புங்
கன்னியர்கள் கற்புநெறி யானது கரக்குந்
துன்னியவில் வாழ்வுகெடு மாமழை சுருங்கித்
தென்னில மனைத்துமிகு சேதம்வரு மன்றே. (௩௩)

அல்லறவிர் வேள்விபுரி யந்தணர் பசுக்கள்
வல்லபிணி யாளர்சிறு மைந்தர்கள் விருத்தர்

---

(௩௦) அவனும் - அந்த இரவிவர்மனும். இக்கான் - கரும்பையுடையமன்மதன். முக்கோ - மூன்றுகண்.

(௩௧) பாங்கு - பக்கத்தில். மனுவின் - மநுதருமசாத்திரத்தின். மறை - இரகசியங்களை. ஒறுத்து - தண்டித்து.

(௩௨) அலைமகள் - இலக்குமி.

(௩௩) மன் - அரசன். முறை - நீதி. திறம்பின் - மாறுபட்டால். கரக்கும் - ஒளிக்கும். தென் - அழகிய.

(௩௪) அல்லல் - துன்பம். தவிர் - நீக்கப்பட்ட. நோன்பினர் - விரதிகள். அளிக்கும் - காப்பன்.

மெல்லியர்க ளேனும்பினர் மெலிந்தவர்க டம்மை
நல்லவனை போலிறைவ னன்குற வளிக்கும். (ஙச)

பூதல நடுங்கமிகு புன்றொழில பொருந்தார்
மாதர்கண் முயக்கின்மனம் வைத்தயர மாட்டார்
காதலுட னேபிறர்பொ ருள்கவர்தல் செய்யார்
சூதினை விருப்பொடு துணிந்துவிளை யாடார். (ஙரு)

இகன்மிகு பெரும்படை யியன்றதுணை பைங்கூழ்
தகவுபெறு நன்குடிகண் முன்வரவு சாற்றும்
புகழ்பெருகு மந்திரி புறத்தெயில் பொருந்தி
மகிபதி சகந்தனை வளம்பெற வளிக்கும். (ஙசா)

காலையி லெழுந்துபுன லாடியொளிர் கண்ணூர்
பாலவிறை யோனடி பணிந்துமறை யோர்கள்
சாலமகி ழக்கனக தானமுத விப்பின்
கோலமுறு போனகநெய் பாலொடு கொடுத்தே. (ஙஎ)

அடிசினல் விருந்துட னயின்றுமகிழ் வோடு
கடிகமழ் செழும்பிள வருந்திமிகு கான்சேர்
வெடிகொண்மலர் சூடிநறு மென்கலவை பூசி
முடிமுதல வன்பணி முறைப்படி யணிந்து. (ஙஅ)

அரியணையி லன்புற விருந்துமன மஞ்சித்
தரியலர் கொணர்ந்துதிறை தந்தடி வணங்க

(ஙரு) முயக்கு - கலப்பு. அயர - சோர.

(ஙசா) இகல்-வலி. துணை-அளவு. பைங்கூழ்-பசியசெல்வம். தகவு-தகுதி. முன்வரவு - பின்வருங்காரியம். புறத்தெயில் - வெளிக்கோட்டை. முன் என்பது - கலைமுன்.

(ஙஎ) ஒளிர் - விளங்குகின்ற. பாலம் - நெற்றி. கோலம் - அழகு. போனகம் - சோறு.

(ஙஅ) அடிசில் - சோறு. அயின்று - உண்டு. கடி - மணம். பிளவு - வெட்டுப்பாக்கு. வெடி - நல்லமணம். முடிமுதலவன் - மகுடமபுனைந்த அரசன். பணி - ஆபரணம்.

(ஙகூ) தரியலர் - பகைவர். திறை - கப்பம். அரி - சிங்கம். கழல் - வீரக்கழல்.

வரியொலி நிகர்க்குமுர சானது முழங்க
விரியொளி பெருங்கழல் பதத்தினில் விளங்க. (௩௯)

படியிட ரொழித்துவரு பற்றலர்க டங்கண்
முடிபதம் வணங்கிட முனைந்தெதி ரடர்த்துக்
குடியுநிதி யும்பெருகு மவ்வகை குறித்தே
மிடியுடைய ரந்தணர்க டங்குறை விலக்கி. (௪0)

அறம்பகரு நூல்கடமை யாய்ந்தவிர் பசும்பொன்
னிறம்பெறு மடந்தையர் நிருத்தவெழில் கண்டு
சிறந்தமணி யாழிசைகள் கேட்டுமிருள் சிந்திப்
புறம்படு பகற்பொழுது போமிறை வருக்கே. (௪௧)

நகரடையு மாதுலர் தமக்கடிசி னல்கித்
துகளற விருந்தினொடு துய்த்தமுத மென்சொற்
பகழிவழி மாதர்கல விக்கடல் படிந்து
மகிழ்வுடனிராப்பொழுது போக்குவர்கண் மன்னர். (௪௨)

வேறு.

இவ்வகைநீ புனைந்துசெங்கோன் மைவழுவா திருந்தியற்றி யேதான் பூவாழ், தெவ்வரசர் பதம்பணியச் செய்தரசா ளுதிகயிவ ணியான் சிறப்புற் றோங்கும், பௌவமிசை வருமால நுகர்ந்தசிந்தா மணிநாதன் பதத்தைப் போற்றிச், செவ்வனசங் கமழ்பழனத் தே வைநகர் தனிலிருக்கச் சிந்தித் தேனல். (௪௩)

---

(௪0) படி - உலகிலுள்ளார். பற்றலர் - பகைவர். முனைந்து - பொருது. மிடியுடையார் - தரித்திரமுடையவராகிய.

(௪௧) அவிர் - விளங்குகின்ற. நிருத்த எழில்-நடனத்தினழகு. மணி-அழகிய. இருள்சிந்தி - இருளைக்கெடுத்து. புறம்படு - வெளிப்படுகின்ற.

(௪௨) ஆதுலர் - யாசகர். அடிசில் - சோறு. துய்த்து - உண்டு. பகழி - பாணம் போன்ற.

(௪௩) புனைந்து - (மகுடம்) தரித்து. தெவ் - பகை. பௌவம் - கடல். ஆலம் - விடம். நுகர்ந்த -உண்ட. வனசம்-தாமரை. பழனம்-வயல்.

என்னமகன் றனக்குமகு டஞ்சூட்டிச் செங்கோலு மீந்துவாச, மன்னுதொடை வயவரொடு மந்திரிகண் மறைவாணர் மகிழ்ந்து சூழத், தென்னிலகு குலசைநகர்க் கேகவிடுத் தான்கோயில் சென்று நாக, கன்னிபுணா ரிறைவனடிக் கமலதெரி சனங்கண்டு களிப்பின் வைகி. (சச)

சாலமடங் குளமன்ன சாலேமுத லானவெலாஞ் சமைத்து வேதக், கோலமுறு மந்தணருஞ் சிவனடியார் களுமகிழக் கொடுத்துச் செய்ய, பாலவிழி யான்பணிகள் கோபுரங்கண் முதலாகப் பல வாய்ச் செய்தே, சீலமுட னரன்பதத்தைச் சிந்தைவிடா தமைத் துண்மை செலுத்து நாளில். (சரு)

ஒருவைக றனிலிறைவர்க் குயராரா தனைசெய்வித் துவந்து தா ய்பாற், கருவைகு மெழுபிறவிக் கடல்கடத்து வாயெனவே கசிந்து நின்றான், றிருவைகு மணிமார்பன் றேடியறி யாப்பதத்தான் செய லாலன்றோ, னுருமின்னின் வடிவாகி யோடியரன் கமலபதத் துற் றதன்றே. (சசு)

நத்தலையி னதிகொழிக்குங் குலசைநக ராதிபன்போ னாட்டிப் பூவி, லெத்தலைமை பெற்றோரு மெய்தலரி தெனமகிழ்ந்தே யிடப மூர்ந்த, முத்தலையம் படைக்கரத்தான் றேவைநக ரிறைசரண முளரி போற்றி, யத்தலையி னின்றசிவ னடியார்க ளதிசயங்கொண் டாடுங் காலே. (சஎ)

அந்தரத்தோ ருமையிரவி வருமனுக்குப் பதங்கொடுத்தோ மவ ன்போ லிங்கு, சுந்தரஞ்சேர் திருவுருச்செய் தென்பாலாக் கிடுமெ

(சச) தொடை - மாலை. வயவர் - வீரர். தென் - அழகு. நாககன்னி- யார்வதி.

(சரு) பாலவிழியான் - நெற்றிக்கண்ணுடைய சிவபிரான்.

(சசு) வைகல் - நாள். இறைவர்க்கு - சிவபிரானுக்கு. ஆராதனை - பூசை. வைகும் - தங்கும். உரு - வடிவம்.

(சஎ) நத்து - சங்கங்களை. நாட்டு - நிறுத்தப்படுகின்ற. இப்பூவில் - இந்தப்பூமியில். முத்தலைப்படை - சூலாயுதம். அத்தலை - அந்த இடம்.

(சஅ) பதம் - திருவடி. ஆக்கிடும் - வையுங்கள். (தாற்பரியம்) சுந்திரம் - பொன். கண்டு - செய்து. சினகரத்துள் -கோயிலுக்குள். விழா-திருவிழா. கவின் - அழகு.

னவே சொல்லக் கேட்டுச், சந்திரத்தாற் றிருவுருக்கண் டதனையிட
ப் பாகவல்லி தங்கு நீல, கந்தரத்தான் சினகரத்துள் வைத்துவிழா
முதலான கவின்செய் தாரால். (சஅ)

சங்கெழில்வார் குழைக்கணிந்த தாணுசிந்தா மணிநாதன் றுள்
சேர்ந் துய்ந்தான், செங்கமலை செறிமருமன் றிறலிரவி வருமனென
ச் செப்பக் கேட்ட, புங்கவர்தம் முளமகிழப் புத்திரரா மெங்களுக்
குப் புவனி யாண்டே, யங்கவன்சேய் புரிந்ததுரை யாயெனலு மது
குதனறைவ தானுன். (சகூ)

கச - இரவிவர்மன்பதம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ருகஎ.

## பதினைந்தாவது :—

## குலசேகரனுக்குக் குட்டரோகந்தீர்ந்த சருக்கம்.

தந்தை புரிந்த வரசுரிமை தாங்கி நீளக் கவிகையின்கீ
ழிந்த வுலகெ லாந்தழைக்க வியற்று நாளி லிந்திரற்காய்
வந்த புராரி பதத்திரவி வரும னடைந்த செயல்கண்டே
சிந்தை களிப்பா யிரவிவன்ம வீச ரெனப்பேர் செப்பினனுல். (க)

இவ்வா றுலகெ லாமிசைக்கு நவையா விரவி வன்மன்சேய்க்
கொவ்வாக் குட்ட நோயுடலி லுறலாற் பலவா கடநூல்கள் [ம்
செவ்வாய்த் தேர்ந்த வாகடர்கள் சேர்ந்தோ ராண்டு மருந்தனைத்து
வெவ்வாய் நோய்க்குத் தக்கபடி மீட்டு மீட்டு மருத்தினரால். (உ)

---

* (சகூ) குழைக்கு - காதில். மருமன் - மார்பையுடையவனுகிய. புங்கவர் - உயர்ந்தவராகிய ருஷிகள். மகிழ - மகிழ்ச்சியடைய. சேய் - புத்திரனுகிய குலசேகரன்.

(க) கவிகை - குடை. புராரி - சிந்தாமணிநாதர். (அவருக்கு) இரவிவருமவீசர்,— செப்பினன் - (குலசேகரன்), சொன்னுன்.

(உ) நவை - குற்றம். ஒவ்வா - பொருந்தாத. வாகடநூல் - வயித்தியசாத்திரம். வாகடர் - வயித்தியர். வெவ்வாய் - வெப்பம் வாய்ந்த. அருத்தினர் - உண்பித்தார்.

எந்த மருந்தை யருத்தவுந்தீ யிழுது சொரிய வளர்வதுபோ
லந்த மன்னன் றன்னுடலை யறவே கருக்க வாகடர்கள்
வந்த நோயைத் தீர்க்கவெம்மால் வலியின் றென்றே மனஞ்சலித்துத்
தந்த மூர்க்கே கவுமந்நோய் தாங்க லரிதாய்த் தளர்ந்தனனால். (ந)

அல்லும் பகலுங் கண்ணுறங்கா தழுங்கி யாகஞ் சோர்ந்துமலை
வில்லு மழுவுந் தரித்தகர விமலர் தேவை வளர்சிவனே
வல்லு மஞ்சுந் தனத்திமய வல்லி பாகா நொந்தடியேன்
சொல்லு மொழிநின் றிருவுளத்திற் றோற்று வகைநீ சொல்வாயே.()

என்று புலம்பித் தனிகிடக்க வீச னருளா லானந்தத்
தொன்றி யதுவாய் நிறைந்தசிவ யோகி யொருவ னங்குறலுங்
கன்று பசுவைக் கண்டதெனக் கண்டு குலசே கரனெழுந்து
சென்று பதத்தில் வீழ்ந்திறைஞ்சிச் சிறக்குந் தவிசி னிடைவைத்தே.

இந்நா ளடிக ளெழுந்தருளப் பெறலாற் றமியேற் கீடேற்ற [ன்
முன்னாற் கிடைத்த தெனமுகம னுரைத்துப் பின்னு மூரைசெய்வா
பன்னா ளிந்த நோயையனு பவித்தே னிதுதீர்த் துலகாளு
மன்னா கியவர் வகைகூறு வகைநீ புரிந்து காப்பாயால். (சு)

வேறு.

உன்னையான் விழியிற் கண்ட வுடன்பிணி தீரக் கண்டே
னென்னமன் னுரைக்க வெல்லா முணர்ந்தவ னிதனை யெண்ணி
மன்னனுக் குரைப்பா னிந்த வருத்தமுன் றனக்கு வந்த
பின்னரா கிலுமெந் தேவைப் பிரானரு ளானந்தே ராயே. (எ)

---

(ந) இழுது - நெய். அரிது ஆய் - கூடாமையாகி.

(ச) அழுங்கி - வருந்தி. தேவை - வாசவனல்லூர். வல் - சூதாடு கருவி.

(ரு) அதுவாய - அவ்வானந்தமயமாய்.

(சு) அடிகள் - சுவாமிகள். ஈடேற்றம் - துக்கநிவிர்த்தி. உம்மாலென் பது - உன்னாலென எதுகைநோக்கிவந்தது.

(எ) உணர்ந்தவன் - அறிந்த சிவயோகி.

பெரியவ ரமைத்த கோவிற் பிரித்துநா தனமாச் செய்தல்
பெரியவர் நடத்த றன்னைப் பேதித்து நடத்த லியார்க்கும்
பெரியவ ரிடும்பேர் தள்ளிப் பின்னொரு நாமங் கூறல்
பெரியவர் மனது கன்றப் பிழையுரை நகைத்துப் பேசல். (௮)

இதுவெலா நவைநற் றேவை யெம்பிரான் கோயிற் காக
விதுமுக வுமையோர் பாகம் விளங்கவே தோன்றி மேலாஞ்
சதுமறை யர்த்த நாரீ சுரரென நன்கு சாற்ற
மதுமலர் சூழ்நிட் சேப நதிவட கரையில் வந்தார். (௯)

அன்னது மறந்துன் றந்தைக் கருள்கொடுத் ததனு லன்றே
யின்னமு மிரவி வர்ம விசனென் றுலகுக் கெல்லாஞ்
சொன்னது பொறும விந்தச் சுடுபிணி யுன்னைச் சார்ந்து
மின்னிக ருடம்பு கன்ற வாட்டிய வீறு கண்டாய். (௧௦)

ஆதலா லிதற்கு வேறே யருமருந் துண்ண வேண்டா
சீதமா மதிசேர் தேவைச் சிவன்வளர் கோயி னண்ணிக்
கோதறு தீர்த்தமான கும்பபுட் கரிணி தன்னிற்
காதலா யாடி நெஞ்சிற் கடவுளஞ் செழுத்தை யெண்ணி. (௧௧)

பானிற வெண்ணீ றகம் பாங்குறச் சாத்திச் செம்பொன்
மேனியா மக்க மாலை விதிமுறை யடைவே பூண்டு
பூநிறை சண்ப கத்திற் பொலிந்தவைங் கரனைப் போற்றி
மோனமாய்ச் சினக ரத்துண் முன்னிநீ வலமாய் வந்தே. (௧௨)

---

(௮) பேதித்து - வேறுபடுத்தி. கன்ற - வாட. பிழையுரை - குற்றமாகிய வார்த்தை.

(௯) நவை - குற்றம். விது - சந்திரன். சதுமறை - நான்குவேதங்கள். எம்பிரான் வந்தாரெனக்கூட்டுக. இவையெலாமென்பது எதுகைநோக்கி இதுவெலாமென வந்தது.

(௧௦) வாட்டிய - வருத்திய. வீறு - பெருமை.

(௧௧) கும்பபுட்கரிணி - கோயின் முன்னிருக்குந்தீர்த்தம்.

(௧௨.) பாங்கு - அழகு. பொன்மேனி - பொன்னிறவடிவம். அக்கம் - உருத்திராக்கம். அடைவே - கிரமமாக. மோனம் - மௌனம்.

அவ்வுழி நடனங் கண்ட வரிகர குமரன் றன்னை
நவ்விநோக் குடைய மாத ரிருவரை நயந்து போற்றிப்
பௌவமா ரால முண்ட பரனுட னறங்கள் செய்யுங்
கொவ்வைவா யுமைபொன் றூன கோலத்தைக் கண்டு போற்றி. ()

இம்முறை தினமெண் ணைந்து மிறைவன்சன் னிதிவிட் டேகா
தீம்மையி லடியேன் கொண்ட விழிவுதீர்த் தருள்வா யென்று
செம்மையாய்த் துதிக்க விந்நோய் தீருமென் றுரைத்துக் கால
மும்மையுந் தேர்ந்த ஞான முனிவர னேகி னுறல். (கச)

அக்கண மதிவல் லோரை யழைத்துமுன் னனுப்பி யாங்கு
செக்கர்வா னனைய மெய்யான் சினகர மெங்குங் கோயிற்
பக்கமுந் தெருவு மூரும் பாங்குறச் செய்மி னென்றுன்
மிக்கதந் திரிக ளந்த வேந்துரை தலைமேற் கொண்டே. (கரு)

ஆலய வாய்மற் றெல்லா மந்தமே வோ வியராற் சித்ர
வேலைக ளிரப்பித் தூணின் மேற்கரும் பரம்பை சேர்த்து
மாலைக ளிறைத்துச் செய்ய வாசநீர் தெளித்து வாகார்
நூலைநே ரிடையா ரென்னப் பதுமைநோக் குறச்செய் தாற்றி. ()

தோரணஞ் சேணின் வண்ணந் தோன்றிட நாட்டிச் செம்பொற்
பூரண கும்ப தீபம் புரையற வைத்து வெள்ளை
வாரண னியக்கர் கோமான் வாழ்நகர் தனக்கு மேலா
யாரண முழங்குந் தேவை நகரமா மெனச்செய் தாரால். (கஎ)

---

(கரு) அவ்வுழி - அந்த இடத்தில். நடனங்கண்ட - நடனமாடிய. அரிகரகுமரன் - ஐயனார். நவ்விநோக்கு - மான்போன்றகண். இருவர் - பூரணை, புட்கலையென்பவர்; இவ்விருவரும் ஐயனார் மனைவிகள். பௌவம்- கடல்.

(கச) மும்மை - மூன்று.

(கரு) அக்கணம் - அந்தக்ஷணம். ஆங்கு - அவ்விடத்தில். செக்கர் வான் - செவ்வானம். சினகரம் - கோயில். தந்திரிகள் - மந்திரிகள்.

(கசு) வாய் - இடம். ஓவியர் - சித்திரகாரர். அரம்பை - வாழை. வாகு - அழகு. பதுமை - பொம்மை. நோக்கு - அழகு. ஆற்றி - கட்டி (தாற்பரியம்)

(கஎ) சேணின் - உயரத்தில். வண்ணம் - அழகு. புரை - குற்றம். இயக்கர் கோமான் - குபேரன். ஆய் -ஆராயப்படும். மேலாமெனக்கூட்டுக.

வேறு.

காமன் பணியும் வாமன் குலசே கரனென்போன்
பூமன் றளவந் தாமன் காணுப் புகழோனைத்
தாமங் கமழு மளகத் துமையைத் தானெண்ணிச்
சோமன் கமழும் வேணிய னுமைந் துதிசெய்தே. (கஅ)

சிவிகை தடந்தேர் மாமுத வின்றித் திருவாருங்
கவிகையு மின்றிப் பாதுகை காலிற் காணுதே
குவிகை விடாது சென்னியி லேற்றிக் கும்பிட்டே
நவிகைப் பரமன் கோயின்முன் வந்தா னலிவற்றுன். (கக)

வடபாற் கும்ப புட்கரி ணிக்குண் மன்போந்தே
யிடபாற் பரைசே ரீசன் பூவடி யிணையெண்ணி
யடைவே வழுவா தறைசங் கற்ப மதுகூறித்
தடமார் புனலிலாடின னந்நோய் சாய்ந்தோட. (உ0)

நன்னீ ராடிக் கரைதனில் வந்தே நற்றாசு
தன்னாற் கேசத் தீரம கற்றித் தளிமஞ்சேர்
மின்னார் மெய்யி னீறு புனைந்து வேதத்தின்
முன்னு கியபஞ் சாக்கர நாவான் மொழிகின்றான். (உக)

சென்னி களங்கை தோள்விரல் கன்னஞ் சேடார்ந்து
பொன்னிற மொக்கு மக்கு மணிப்பூண் பூண்டேகித்
தன்னிக ரின்றிச் சண்பக நீழ றனில்வைகுங்
கன்ன மதஞ்சே ரானை முகத்தோன் கழல்கண்டே. (உஉ)

---

(கஅ) வாமன் - அழகுடையவனுகிய. பூமன் - பிரமன். அளகம்-கூந்தல். சோமன் - சந்திரன்.

(கக) மா - குதிரை. கவிகை - குடை. பாதுகை - பாதரக்ஷை. குவிகை - ஒன்றுசேர்த்தகை. நவிகை - மானையுடையகை. நவிக்கையென்பது எதுகைநோக்கி நவிகையென வந்தது. நலிவு - வருத்தம்.

(உ0) மன் - அரசன். அடைவே - முறையாக. நோய் - குட்டவியாதி.

(உக) கேசம் - முடிமயிர். தளிமம் - அழகு. மின் - ஒளி.

(உஉ) களம் - கழுத்து. கன்னம் - காது. சேடு - பெருமை. அக்கு-உருத்திராக்கம். கழல் - திருவடி.

மும்முறை தாளில் வீழ்ந்து பணிந்தே முன்பெய்திக்
கொம்மை முலைப்பெண் வல்லவை பாகங் கொண்டோனே
யம்மை யறஞ்செய் சங்கரி முன்ன மருள்பாலா
செம்மையி லிந்த வன்பிணி தீரச் செய்வாயால். (உ௩)

வேறு.

இன்னண முறைத்துப் பதம்பணிந் தேகி யிடபநீள் கேதன முயர்த்த, பன்னகா புரணன் பரையொரு பாகப் பரனினி துறையுமாலயத்தின், சன்னிதி நண்ணிப் பணிந்தவண் வலமாய்ச் சார்ந்தொரு பாலமர் சாத்தன், பொன்னடி தொழுது பாங்குறை செல்வப் பூரணை புட்கலை தனையும். (உ௪)

தொழுதுமுன் போந்துள் ளணைந்தரி யோடு தூயபங் கேருகனறியாப், பழுதிலா தவனோ டுமைகலந் திடது பாகமாய் விளங்கிய கோல, முழுதுமம் பகத்திற் கண்டுமெய் புளக மூடினன் வீழ்ந்தெமுந் தனல்சேர், மெழுகென வுள்ள மிளகினன் பாடி விமலனைத் துதித்தன னன்றே. (உ௫)

ஆதிமா லவனும் வேதனுந் தேடி யறிவுறு தொருபெருங் கோலச்
சோதிமா மலையா கியபரம் பரனே சொல்லவு மெண்ணவு மரிதாய்ப்
பாதிமெய் யம்மைக் களித்தவ ளோடு பாங்குற விருந்தசங் கரனே
கோதிலா விசையன் வில்லடி யுவந்த கொற்றவா நின்பதந் துணையே.

வாசவன் வேண்டச் சிந்தக வனத்தில் வல்லியோர் பாகமாய் வந்[நி
வாசினற் குணத்தோய் தாருகா வனத்தி னந்தணர் மாதர்கை வளையா
காசொடு நாணங் கலையெலாங் கவர்கங் காளனே நாடொறும் பணியு
நேசரா னவர்க ளிருதய மகலா நின்மலா நின்பதந் துணையே. (உ௭)

---

(உ௩) கொம்மை - இளமை. அம்மை - தாயாகிய. இல் - இல்லாத.

(உ௪) இன்னணம் - இவ்விதம். கேதனம் - கொடி. உயர்த்த - உயர்த்திக்கட்டிய. பரை - உமாதேவி. அவண் - அவ்விடத்து. சாத்தன் - ஐயனார்.

(உ௫) பங்கேருகன் - தாமரையிலிருப்பவனாகிய பிரமன். அம்பகத்தின் - கண்களால்.

(உ௬) கோலம் - அழகு.

(உ௭) ஆசில் - குற்றமில்லாத. காசு - பொன்.

புத்தியி றக்கன் மகம்புறங் காடாய்ப் போய்விட்வதனிடையருக்கன் முத்துநேர் நகைக ளுகமதி தரையி லறைபட முன்னுபா வகன்செங் கைத்தல மொடியச் சிறுவிதி யாட்டுக் கம்பெற வடர்த்தவா கருணை வைத்துமார்க் கண்டர்க் காய்நம னைக்காய்வல்லவாநின்பதந்துணையே.

சங்கரா விமலா தாணுவே யரனே தழன்மழு மானுட னேந்து, மங்கரா பேயோ டாடல்செய் பரமா வம்பிகைக் கொருபுற மளித்து, வெங்கரா சலத்தோல் போர்த்துநஞ் சருந்தி விண்ணவர் பயங்கெடுத் தோனே, பொங்கரா மதிய நதியொடு புனைந்த பூரண நின்பதந் துணையே. (உ௯)

சிறுதொழின் முயலும் புல்லர்க ளென்றுந் தீமையே புரிகுவ ரதனை, மறுவறு பெரியோர் பொறுப்பரப் படியான் வன்பிழை புரிந்தது பொறுப்பாய், முறுவலிற் புரங்க ணீறெழ முனிந்த முன்னவ வல்லல்செய் தொறுக்கு, மறுபகை யொழித்தோ ரிதயம தகலா வங்கண நின்பதந் துணையே. (௩0)

வேறு.

இந்தமுறை வந்தனைசெய் தேயொரு தினம்போற்
சிந்தைமகிழ் வாயெழில்கொ டேவைநகர் வாழு
மெந்தையை வணங்கியுறை யெண்டினமு மால
கந்தரன்மன் னுலய முகப்பைநனி காத்தான். (௩௧)

பொன்னமலி னிற்படு புடத்தினவை தீர்ந்து
நன்னிற மடுக்குமது போலுடலி னண்ணித்

---

(உ௮) புத்தியில் - அறிவில்லாத. புறங்காடு - சுடுகாடு - அருக்கன் - சூரியன். நகை - பல். உக -உதிர. பாவகன் -அக்கினி. சிறுவிதி -தக்கன். கம் - தலை.

(உ௯) அங்கரா - அழகிய கையையுடையவனே. கராசலம் - யானை. போர்த்து - மூடி.

(௩0) முயலும் - செய்யும். முறுவலில் - சிரிப்பால். அறுபகை - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியமாகிய விரோதம்.

(௩௧) உறு ஐ எண் தினம்- பொருந்திய நாற்பதுநாள். ஆலகந்தரன்- நீலகண்டத்தையுடைய சிவபிரான். மன் - பொருந்திய. முகப்பை - முன் வாயிலை.

(௩௨) நவை - குற்றம். அடர் - நெருக்குகின்ற. துயங்கியது - விளங்கியது.

துன்னியடர் வன்பிணி தொலைந்துபுவி யாரு
மன்னனுடன் மின்னெளி தயங்கியதூ மாதோ. (௩௨)

சத்தியொரு பாதிமெய் தரித்துவளர் தேவை
யத்தனடி நெஞ்சுற வமைத்தவ ணகன்றே
நத்துலவு தென்குலசை யூரதனி னண்ணி
முத்தநகை யார்மகிழ மொய்ம்புட னிருந்தே. (௩௩)

சத்திர நிழற்குண்மகி தங்கிவள மல்க
வெத்திசையு ளோர்களு மிசைந்தடி வணங்க
நித்திய மடைந்தவர்க டங்கவலை நீக்கி
வைத்தமனு நீதிவழி வையமது காத்தான். (௩௪)

வேறு.

அன்னவ னெடுநா ளிந்த வவனியாண் டரன்பா தத்தின்
மன்னிவாழ்ந் திருந்தா னென்று வழுத்தினன் புராணமெல்லாஞ்
சொன்னசீர் முனிவ னைகுஞ் சூதனங் கதனைக் கேட்டு
முன்னவன் றுளை யெண்ணி முனிவரர் மகிழ்ச்சி பூத்தார். (௩௫)

15 - குலசேகரனுக்குக் குட்டரோகந் தீர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - சு௩௨.

---

(௩௩) மொய்ம்பு - வலிமை.

(௩௪) சத்திரம் - குடை. மகி - பூமி. வளம் - செல்வம். மல்க - நிறைய. நித்தியமடைந்தவர் - முனிவர்.

(௩௫) முன்னவன் - அநாதிமுத்தனுகிய சிவபிரான்.

---

கரு. குலசேகரனுக்குக் குட்டநோய்தீர்த்த சருக்கம் முற்றிற்று.

வாசவனூர்ப்புராணம் முற்றுப்பெற்றது.

சிந்தாமணிநாதர் திருவடிகளே சரணம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧ | ௨௨ | பிராணைத | பிராணைத் |
| ௮ | ௧௧ | லாலய | லாய |
| ௧௬ | ௯ | பணம | பணம் |
| ௧௭ | ௩௨ | சனமம் | சன்மம் |
| ௧௯ | ௧ | சருச்க | சருக்க |
| ,, | ௩௨ | கிஷ்ண | கிருஷ்ண |
| ௩௮ | ௨௪ | ராயும் | ராயுதம் |
| ,, | ௩௧ | களில் | ளில் |
| ௪௬ | ௨௧ | பதம | பதம் |
| ௫௫ | ௧௦ | தீாத்த | தீர்த்த |
| ௭௨ | ௩ | செயத | செய்த |
| ௮௦ | ௨௯ | வியாள | வியாழ |
| ௮௧ | ௨௪ | செல்லுத் | செலுத் |
| ௯௪ | ௧௯ | னோநதி | னோந்தி |
| ௧௦௫ | ௧௫ | குழூ | குழூ |
| ,, | ௨௮ | கிரீ | கிரீ |
| ௧௧௦ | ௩௧ | சூலி | குலி |
| ,, | ,, | கிரீ | கிரீ |
| ௧௧௧ | ௨௩ | எற்றுகொ | எற்றுக்கொ |
| ௧௨௬ | ௩௨ | சணை | சணை |
| ௧௩௫ | ௬ | பிரர | பிரா |